بسم الله الرحمن الرحيم

# அந்-நஜ்த்

தொகுப்பு :

ஜம்இய்யது இஷாஅதி

அஹ்லிஸ் ஸுன்னா அறிஞர் குழு


جمعية إشاعة أهل السنة

**JAMIYATU-ISA-ATHI-AHLIS-SUNNA**

No.105, Second Cross Street,

Colombo - 11. Sri Lanka.

Tel : 466113 Fax : 449055

® Copyright Reserved
பதிப்புரிமை ஆசிரியருக்கே

இந்நூல்
அன்பளிப்புக்குரியது
விற்பனைக்கு அல்ல



நூலின் பெயர் : **அந் - நஜ்த்**

தொகுப்பு : ஜம்மிய்யத்து இஷாஅத்தி அஹ்லிஸ் ஸுன்னா அறிஞர் குழு

பக்கம் : 192

தொடர் இலக்கம் : 24

முதற் பதிப்பு : மார்ச் 2003
1424 முஹர்ரம்

வெளியீடு : ஜம்மிய்யத்து இஷாஅத்தி அஹ்லிஸ் ஸுன்னா
105, 2-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11. போன் : 01466113
E-Mail: seyedina@hotmail.com

அச்சிட்டோர் : ரப்பானியா பிரிண்டிங் பிரஸ்
12/25, காந்தி தெரு, ஜீவா நகர், திருச்சி-8.
இந்தியா. போன் : 91-431-701685
E-Mail: rabbaniapress@yahoo.com

## Following are the Addresses where the Book is Available (Free of cost)

**INDIA**

KHANKQA - HE _ KHUSHALIYA
Chillagah Shariff Bihar Gad, Mourna Post
Dist. Muzafar Nagar, U.P. India

MUASKAR WOMEN'S ARABIC COLLEGE
Cholukkar Street,
KAYALPATNAM - 628 204. S. India

RABBANIA PRINTING PRESS
No.12/25, Gandhi Street, Jeeva Nagar,
TRICHY-620 008. S.India

**SRI LANKA**

JAMEEATU-ISHA-ATHI AHLIS SUNNAH
105, Second Cross Street, Colombo-11
Sri Lanka. Phone : 466113, Fax : 449055

**U.S.A.**

JAMEEATU-ISHA-ATHI AHLIS SUNNAH
436, Broad Street, Bristol Canaticut-06010
U.S.A.

**CANADA**

M. YUSUF VHQRA
15, Windsomg Court Markham, Ontario
Canada. L3r-8n7, 1-905-479-9483

**SOUTH AFRICA**

DARUL ULOOM PRETORIA
P.o. Box : 14296, Laudim-0037, Pretoria
Tel : (27-12-3741721



## சமர்ப்பணம்

إلى الحقيقة الفردية روح الوجود وسر كل موجود سيد الثقلين وإمام
الحضرتين سيدنا محمد صلى الله عليه وآله وسلم
إلى كل ولي وولية لله تعالى في مشارق الأرض ومغاربها حيث ما حلوا وحلت
أرواحهم في سر علم الله القديم
إلى الذين تحيا الأرض بجاههم إلى أحباب رسول الله صلى الله عليه وآله وسلم
إلى الأقطاب والأفراد والأوتاد والأبدال والأطراز والأنجاب
والأغواث والأخيار والعرفاء والنقباء إلى هؤلاء جميعا

## எமது வெளியீடுகளில் சில :

1. பாங்கில் திருநபியின் திருநாமம் கேட்டு விரல்களை முத்த வேண்டுமா?
2. கப்ருகளின் மீது கட்டிடம் கட்டலாமா?
3. இறைநேசர்களின் கப்ருகளை முத்தமிடலாமா?
4. ஸியாரத்தை நோக்கிப் பயணம்
5. வஸீலா
6. தராவீஹ் தொழுகையின் எண்ணிக்கை
7. அண்ணலாரின் அகமியம்
8. உத்தமர் உதயம்
9. மௌலிது ஓதுவோம் வாருங்கள்
10. முத்தமிடல்
11. சுந்தர நபியின் சுவனத்துப் பெற்றோர்
12. ஷியாக்களும் அவர்தம் கொள்கையும்?
13. எத்தி வைப்போம் வாரீர்
14. இன்னல்களை நீக்கிடும் இனிய திருநாமம்
15. தப்ஸீர் ஆயத் அந்நூர்
16. செம்மல் நபியைக் காணச் செல்வோம்!

**JAMIYATU-ISA-ATHI-AHLIS-SUNNA**
No.105, Second Cross Street, Colombo - 11. Sri Lanka.
Tel : 466113 Fax : 449055

தமிழ்நாடு மஜ்லிஸு உலமாயி அஹ்லிஸ் ஸுன்னத்தி வல்
ஜமாஆவின் செயலாளரும், அஹ்லெ சுன்னத் ஆசிரியரும்,
திருச்சி பஜ்மே ரப்பானியாவின் செயலாளரும்,
திருச்சி கபாடி மஸ்ஜித் பிரதம கதீபுமான மௌலானா
மௌலவி ஹாபிழ் அல்ஹாஜ் F.M. இப்ராஹிம் ரப்பானி
ஹழ்ரத் அவர்கள் மனமுவந்தளித்த

## மதிப்புரை

தனக்குத்தானே ஆதாரமாய், சிருஷ்டிகள் அனைத்துக்கும் மூலமாய், பிரபஞ்சத்தின் ரட்சகனாய், சுத்த சதோதயப் பொருளாய் விளங்கும் சர்வ வல்லமை கொண்ட சக்தனாகிய அல்லாஹ்வுக்கே சர்வ புகழும் புகழ்ச்சியும் உண்டாவதாக.

அடுத்து அவ்வல்லோனால் வடிவமைக்கப்பட்ட, அவனுடைய ஹபீபும் மஹ்பூபுமான, நமக்கெல்லாம் ஸையிதும் ரஸூலுமாகிய மறையை அறிவித்துத் தந்த மாநபி தாஜ்தாரே தோ ஆலம், ஸையிதே ஃபக்ரே பனீ ஆதம், ஸர்காரே மதீனா, ஷஃபீவுல் முத்னிபீன், தாஹா வயாஸீன், மகாலீதும், மஃபாதீஹுமான அஹ்மதுல் முஜ்தபா, முஹம்மதுல் முஸ்தபா ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஆலிஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் இல்லத்தினரான நிறைவான பரிசுத்தவான்களாகிய அஹ்லெ பைத்துக்கள் மீதும், அவர்களை வணங்கி வழிப்பட்டு நின்ற அவர்களின் உற்ற தோழர்கள் மீதும், அவர்களை வரையும் உளமாற நேசித்த நேசர்கள் மீதும் ஸலாத்தென்னும் கருணையும் ஸலாமென்னும் ஈடேற்றமும் சதா காலமும் சுரந்துப் பொழிவதாக. ஆமீன்.

இதுவரை இப்பூவுலகில் தோன்றிய எந்தவொரு சமூகத்தாரை நமது சிந்தனைக்கு நாம் எடுத்தாலும் அச்சமூக மக்களுக்குப் பின்னால் அவர்களை

வழிநடத்திய ஒரு வழிகாட்டியை நாம் கண்டிப்பாகப் பார்க்கலாம். அவ்வாறு வழிநடத்திய அவ்வழிகாட்டிகள் தமது சமூகத்தாரது வாழ்க்கை தரத்தை செம்மைபடுத்தியது மட்டுமின்றி, அவர்களை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் சென்றது மட்டுமின்றி அச்சமூகம் மீண்டும் சரிந்து விடாதிருக்கும் பொருட்டு அச்சரிவைக் குறித்த எச்சரிக்கையையும் அவர்களுக்கு தந்தே சென்றுள்ளனர் என்பதை நாம் அவர்களுடைய வரலாறுகளிலிருந்து பார்க்கலாம்.

இந்த வகையில் இப்பூவுலகின் இறுதித்தூதராக உலக மக்கள் அனைவரையும் ரட்சிப்பதற்காக வருகைதந்த வள்ளல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது சமூக மக்களின் வாழ்க்கை தரத்தை வானளாவிய அளவுக்கு உயர்த்தியதோடு மட்டுமல்லாது தனது மறைவுக்குப் பின் தமது சமூகம் எந்தவொரு பேராபத்திலும் சிக்கிச் சீரழிந்து விடக்கூடாது என்பதற்காக அவர்களுடைய மகோன்னதமான உயர்வைச் சரியவைப்பதற்குரிய நிலைகளையும் எச்சரிக்கை செய்தே சென்றுள்ளனர்.

இப்படி மாநபியவர்களால் செய்யப்பட்ட எச்சரிக்கைகளில் ''கஹ்தா னுடைய ப்குதியிலிருந்து வெளிப்படும் தரிகெட்ட வாலிபர்களின் ஒரு கூட்டம் தமது தடியைக் கொண்டு மக்களை ஆட்டுவிக்காத வரை மறுமைநாள் தோன்ருது'' எனக்கூறிய எச்சரிக்கையையும், ''எனது சமூகம் தரிகெட்ட குறைஷிகளை சேர்ந்த வாலிபர்களின் கரத்தால் அழியும்'' என்ற எச்சரிக்கையையும், ''புராத்துடைய நதிக்குள்ளிருந்து தங்கமலை வெளிப்படாத வரை மறுமை ஏற்படாது'' என்ற முன்னறிவிப் பையும், இன்னும் இதுபோன்ற எண்ணிலடங்கா முன்னறிவிப்புக்களை யும் எச்சரிக்கைகளையும் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தமது சமூகத்தாருக்குத் தந்து சென்றுள்ளனர்.

இதற்கிடையே உலகில் பல்வேறு பிரச்னைகளும் குழப்பங்களும் சச்சரவுகளும் சண்டைகளும் அவ்வப்போது ஆங்காங்கே தோன்றி நடை பெற்றுக் கொண்டிருந்தாலும், அவ்வாறு தோன்றுகின்ற இவைகளெல் லாம் ஒருசில நாட்களில், அல்லது ஒருசில மாதங்களில், அல்லது ஒருசில வருடங்களில் முடிவுக்கு வந்து விடுகின்றன. எந்தவொரு குழப்பமும், பிரச்னையும், சண்டையும், சச்சரவும் முடிவே காணமுடியாத அளவுக்கு நீடித்திருப்பதில்லை. இவைகள் நாம் உலக வரலாறுகளில் பார்க்கின்ற உண்மைகளாகும். அதேநேரம் இப்படித் தோன்றும் இப்பிரச்னைகளால் ஒரு சமூகமே நிர்மூலப்படுத்தப்பட்டு விட்ட தென்ரே, அல்லது ஒரு சமூகம் தனது வழிகாட்டியை விட்டு முகம் திருப்பிக் கொண்டதென்ரே பார்க்க முடியாது.



ஆனால் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது வாழ்வில் ஒருமுறைக்குப் பலமுறை தமது சமூகத்தாருக்கு எந்த பேராபத்தைக் குறித்து எச்சரிக்கை செய்தார்களோ, எந்தக் குழப்பம் இறுதிநாள் வரை முடிவுக்கே வராதென்று முன்னறிவிப்புச் செய்தார் களோ, எந்தப் பிரச்னையால் நபியவர்களுடைய சமூக மக்கள் பெருவாரி யான குழப்பத்திற்கு ஆளாகி சிதைந்து சின்னபின்னமாகி துண்டு துண்டாகப் பிரிந்து போவார்களோ அப்பேராபத்திற்குரிய முன்னெச்சரிக் கையை இஸ்லாமிய அறிஞர்களின் உலகம் ஒவ்வொரு காலக்கட்டத் திலும் தமது கூட்டத்தாருக்கு அறிவித்து அதைப்பற்றிய எச்சரிக்கை செய்யாமல் ஏன் விட்டு விட்டனர்?

எந்தக் குழப்பத்தால் ஒரு சமூகத்தின் ஒட்டுமொத்தமான ஒற்றுமையும் சீர்குலைந்து போகுமோ, எந்தக் குழப்பம் காலாகாலத்திற்கும் இஸ்லாமிய சமூக மக்களை அலைகழித்துக் கொண்டே இருக்குமோ, எந்தக் குழப்பம் ஒரு சமூகத்தின் ஒருங்கிணைந்த நம்பிக்கையில் வெந்நீரை ஊற்றி அதை வேரறுக்குமோ, எந்தக் குழப்பம் தனது மறுமைக்குரிய வாழ்க்கைக்கே உலைவைக்குமோ அந்தக் குழப்பத்தைக் குறித்த எச்சரிக் கையை ஏன் இந்த அறிஞர்கள் நினைவூட்டாமல் விட்டு விட்டனர்?

ஒரு குழப்பம். அது தோன்றிய சில காலத்தில் அழிந்துபோய் விடும் என்றிருந்தால் அதைப்பற்றி அதிகமாக கவனம் எடுத்து எச்சரிக்க வேண்டுமென்ற அவசியமில்லை என்று சொல்லி விடலாம். ஆனால் எந்தக்குழப்பம் இப்பூமியில் தோன்றி அது தஜ்ஜாலோடு இணையும் என்று நபியவர்களால் எச்சரிக்கப்பட்டதோ அந்தக் குழப்பம் நபியவர் களின் காலத்திற்குப் பின்னல்தோன்றி இவ்வுலகின் அழிவுநாள் நெருங் கும்வரை நீடித்திருக்கும் என நபியவர்களால் எச்சரிக்கை செய்யப் பட்டதோ அந்தக் குழப்பத்தை பற்றிய விஷயத்தில் இஸ்லாமிய அறிஞர் களின் உலகம் எத்தனை முன்னெச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும்?

அப்படி இல்லாமல் போனதன் விளைவு! இன்று இஸ்லாமிய சமூக மக்கள் அக்குழப்பத்தால் தமது ஒற்றுமையை இழந்து, தமக்குள்ளேயே பல்வேறு பிரிவினைக்குரிய நிலைகளை உருவாக்கி, ஒரே நம்பிக்கை என்னும் நிலைமாறி, இஸ்லாத்தின் எழிலார்ந்த நம்பிக்கை சிதைந்துபோய் கல்வி, பொருளாதாரம், நற்குணம், நல்லொழுக்கம் போன்றவைகளில் பின்தங்கிப்போய் இன்று உலக அரங்கில் மானமிழந்து மதிப்பிழந்து சீந்துவாரற்றவர்களாக நின்று கொண்டுள்ளனர்.

பின்னும் இச்சமூக மக்களின் சிதைவுக்குரிய அஸல் காரணத்தை யாராவது சொல்லித்தர மாட்டார்களா என ஏங்கிக் கொண்டிருந்த என்

போன்றவர்கள் இப்போது அக்குறை நீக்கப்படுவதை கண்டு உண்மையில் அக்குறையை நீக்குவதற்குரிய முயற்சியில் இறங்கியுள்ள இலங்கை இஷாஅத் அஹ்லிஸ் ஸுன்னாவின் உலமா சபையை சார்ந்தோருக்கு உளமார நன்றி கூறுகிறோம். இந்நூலை எவ்விதக் காழ்ப்புணர்வுக்கும் சார்பு நிலைக்கும் உட்படாது நடுநிலையோடு வாசிக்கும் ஒவ்வொருவரும் இச்சமூகத்தின் சிதைவுக்குரிய காரணத்தை எளிதாக விளங்கிக் கொள்வார்கள் என்பதில் அறவே சந்தேகமில்லை. இது அவர்களின் உயிருக்கும் மேலான அவர்களுடைய ஈமானை வலுப்பெறச் செய்யும் என்பதையும் நிச்சயமாக நாம் கூறுவோம்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அவனது ஹபீபாகிய அண்ணலெங் கோமான் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களது மகத்துவத்தின் பொருட்டால் இந்நூலை இஸ்லாமிய சமூகத்திற்கு இன்றுள்ள குழப்பங்களிலிருந்து விடுபடுவதற்குரிய ஒரு வழிகாட்டும் கலங்கரை விளக்காக ஆக்கி வைப்பதோடு, இந்நூலை வெளிக் கொணர்வதில் யாரெல்லாம் தமது பொருளாலும் தேகத்தாலும் எண்ணத்தாலும் ஆதரவாலும் உதவி புரிந்துள்ளார்களோ அவர்களுக்கு அவனுடைய அருமை நபியவர்களின் ஷபாஅத்தையும் நேசத்தையும் அருள் புரிவானாக. அத்துடன் இந்நூலுக்கு மதிப்புரை எழுதுவதற்குரிய வாய்ப்பை இச்சிறியேனுக்குத் தந்த இலங்கை இஷாஅத் அஹ்லிஸ் ஸுன்னா உலமா சபையைச் சேர்ந்தோருக்கும் நமது உளமார்ந்த நன்றியைக் கூறி இந்நூலை ஒவ்வொருவரும் அவசியம் கண்டிப்பாக படிக்குமாறு வேண்டிக் கொள்கிறேன். ஆமீன். பிஜாஹி ஸையிதில் முர்ஸலீன். ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஆலிஹி வஸல்லம்.

கி.பி. 10.3.2003
ஹிஜ்ரி 06.1.1424
திங்கள்

***F.M. இப்ராஹிம் ரப்பானி***
திருச்சி.

# முகவுரை

الحمد لله الذي حفظ الحامدين من الزيغ والضلال واشهد ان لا اله الا الله مرام الوسيلة الحق ومطلبها واشهد ان محمدا صلى الله عليه وآله وسلم عبده ورسوله حقيقة الدين الخالص والسبب الموصول الموصل الى حقائق الإيمان ومقامات الاحسان بتوحيد الديان وجعله الواسطة العظمى في كل ما يصل منه الى خلقه من نعيم الدنيا والأخرة ورضى الله عن اتباعهم الذين أقاموا منار ملته ونصبوا اعلام محبته.

உலகின் எந்தப்பகுதியில் வாழும் இஸ்லாமியரிடமும் கியாமம் - யுகமுடிவை குறித்து வினவுவோமாயின் அவர் அந்நாள் அண்மித்து விட்டதாகவே கூறுவார். நாமும் அவ்வாறே சொல்லிக் கொண்டிருக்கிறோம். பின்னும் இறுதிநாள் நெருங்குவதற்குரிய அடையாளமாக அருளின் முழுவடிவமான அண்ணலெங் கோமான் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களது பொன் வாக்குகள் கூறும் எத்தனையோ விஷயங்களை நாம் பார்த்த வண்ணமாயும் கேட்ட வண்ணமாயும் உள்ளோம். அதுகுறித்த ஒரு விஷயத்தை பாருங்கள்,...

لا تقوم الساعة حتى يغلب على مسجدي هذا الكلاب والذباب والضباع فيمر الرجل ببابه فيريد ان يصلي فيه فما يقدر عليه

*"எனது பள்ளிவாயிலாகிய மஸ்ஜிதுன் நபவிக்கு வருகைதரும் ஒருவர் தொழுவதற்கு இடம் கிடைக்காத அளவுக்கு நாய்களும், கொசுக்களும், முள்ளம்பன்றிகளும் அவ்விடத்தை கைப்பற்றுத வரை இறுதிநாள் ஏற்படாது என்கின்றனர் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்."*

நூல்: அத்துரருஸ் ஸமீனு ஃபீ தாரீகில் மதீனு, பக்கம்-152.

இந்த ஹதீதை தற்கால உலக வளர்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இது சாத்தியமாகுமா என்றொரு சந்தேகம் நமக்குள் எழுகிறது. உலகையே அழிக்கக்கூடிய அணுகுண்டுகள் தயாரிக்கப்படும் கால மல்லவா இது. அவ்வாறாயின் நபியவர்களால் மேற்கண்ட ஹதீதில் சொல்லப்பட்ட மிருகங்கள் என்பவை உண்மையிலேயே மிருகங்களா? அல்லது,...

***"குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் தமக்குத் தோதாக பொருள் கூறும் கவாரிஜிய்யீன்களை ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நரகத்தின் நாய்கள் என்று கூறுகிறார்களே"*** அதுபோல தோற்றத்தில் மனிதர்களாக வும் செயல் முறையில் கவாரிஜிய்யீன்களாக இருப்பவர்களையும்,...

***"இந்த உலகமாகிறது ஒரு செத்த பிணமாகும். அதைத் தேடுபவர்கள் நாய்களாகும்"*** என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களால் சொல்லப்பட்ட ஆத்மத் தோற்றத்தின் மிருகங்களா? எனக் கேட்கத் தூண்டுகிறதல்லவா!

கவாரிஜிய்யீன்கள் தான் இன்று நமக்கு மத்தியில் பல்வேறு தோற்றங் களில் பலவகை பெயர்களில் உலவுகின்றனர் என்றும் அவர்களுடைய கொள்கை கோட்பாடுகள் போன்றவை குர்ஆனுக்கு சுயமாக முன்னோர் களை பின்பற்றாது பொருள் தருவது ஒன்றே என சதா நாம் சொல்லிக் கொண்டிருந்தாலும் இந்த கவாரிஜிய்யீன்கள் குர்ஆனுக்கு எவ்வாறு மாற்றம் செய்தார்கள் என்பதை விளக்கிக் காட்டுவதன் மூலமாக தற்போது நம்மிடையேயுள்ள அனைத்து பிரிவினைவாதிகளுடைய உண்மை நிலையையும் வெளிக்கொண்டு வரலாமென நினைக்கிறோம்.

அதற்குமுன் ஒரு உதாரணத்தை பாருங்கள். அதாவது, திருமணமான ஒருவன் விபச்சாரம் செய்தான் என்பது உறுதிப்படுத்தப்பட்டால் அவனை கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் எனக்கூறுகிறது இஸ்லாமியச் சட்டம். இச்சட்டத்தை நமது நாட்டில் நடைமுறைபடுத்த முடியாது என்று தீர்ப்பளித்தால் அதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா? அல்லது குர்ஆனுடைய தீர்ப்பின் படி நீங்கள் செயல்படுவீர்களா? இதில் குர் ஆனுடைய தீர்ப்பு அதுதான். ஆதலால் அதைத்தான் அமுல்படுத்த வேண்டுமென்று கூறுவீர்களாயின் தேசத்திலுள்ள எல்லா முஸ்லிம்களும் குர்ஆனுக்கு மாற்றம் செய்ததாக குற்றஞ்சாட்ட வேண்டி வரும். இல்லையெனில் எல்லோராலும் குர்ஆனைக் கொண்டு தீர்ப்புச் சொல்ல முடியாது என்பதை ஏற்கவேண்டி வரும். இந்த உதாரணத்தை உங்களின் கவனத்தில் வைத்துக் கொண்டவர்களாக அடுத்து கவாரிஜிய் யீன்களின் தோற்றம் குறித்து நாம் சொல்லப்போகும் விஷயத்தின் பக்க மாக உங்களின் கவனத்தைதிருப்புங்கள். அன்று என்ன நடந்தது தெரியுமா?



அன்று நான்காம் கலீபாவாகிய ஹழ்ரத் ஸெய்யிதுனா அலி ரழியல் லாஹு அன்ஹு அவர்கள் ஆட்சியிலிருந்த காலமாகும். அப்போது நிகழ்ந்த ஒரு காரியத்தை குறித்து அதற்குத் தீர்ப்பு தருமாறு கலீபா அவர்களின் சபைக்குச் சென்றிருந்தது குழுவொன்று. தீர்ப்பை கேட்டுச் சென்றவர்களும் இஸ்லாமியர்கள்தான். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த தற்கு ஒப்ப கலீபா அவர்கள் தீர்ப்பளிக்காததால் "தீர்ப்பளிக்கும் அதிகாரம் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு யாருக்கும் இல்லையாதலால் இப் பிரச்னையில் அல்லாஹ்வுடைய தீர்ப்பின்படி தான் நாங்கள் செயல்படு வோம் எனக்கூறி கலீபா அவர்களின் தீர்ப்பை அவர்கள் ஏற்க மறுத்து விட்டனர். ஏன் தெரியுமா?

"இனில் ஹுக்மு இல்லா லில்லாஹ்" தீர்ப்பளிக்கும் உரிமை அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே உரியதாகும் என்கிறது குர்ஆன். இப்போது ஒருவர் குர்ஆனுடைய தீர்ப்பை ஏற்பதா? அல்லது ஹழ்ரத் அலியவர்களின் தீர்ப்பை ஏற்பதா? என்னும் நிலைக்கு தள்ளப்பட்டால் இந்நிலையில் நீங்கள் குர்ஆனுடைய தீர்ப்பைத் தான் ஏற்க வேண்டு மென்று கூறுவீர்களாயின் நீங்கள் என்னதான் வணக்க வழிபாடுகளை செய்பவராக இருந்தாலும் ஈட்டியிலிருந்து அம்பு விரைந்து வெளியாவ தைப் போல இஸ்லாத்தை விட்டும் நீங்கள் வெளியேறிப்போய் விடுவீர்கள். காரணம் என்னவென்று யோசிக்கிறீர்களா?

அல்லாஹ்வுடைய நேசர் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் தோழர் பெருமக்கள் குர்ஆனுக்கு மாற்றமாக தீர்ப் பளிப்பார்கள் என்பதை நீங்கள் ஏற்கிறீர்கள். இது இஸ்லாம் கற்றுத்தரும் பாதையல்ல. ஆதலால் இனில் ஹுக்மு இல்லா லில்லாஹ் என்னும் குர்ஆனுக்குரிய வசனத்துடைய விஷயத்தில் நீங்கள் உங்களுடைய சுய விருப்பப்படி பொருள் கொண்டு விட்டீர்கள் என்பது இதன் மூலம் தெளிவாகிறது.

மேலும் குர்ஆனில் தெளிவான விளக்கம் சொல்லப்பட்ட பின் அதற்கு மாற்றமாக யார் என்ன விளக்கம் சொன்னாலும் அதை நாம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்றும், அன்று கலீபா ஹழ்ரத் ஸெய்யிதுனா அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களால் தரப்பட்ட தீர்ப்பு பிழைதானே என்றும் நீங்கள் கேட்கலாம்.

வாசகர்களே! ஒருவர் குர்ஆனுக்கு பொருள் கூறும்போது அதிலுள்ள ஒரு வாக்கியத்திற்கு பொருள் கூறுவதென்றால் அவர் அவ்வசனத்தின் முன் பின் தொடர் எது? என்பதையும், எதைப்பற்றி அது பேசுகிறது என்பதையும், அந்த வசனம் இறக்கப்பட்டதற்குரிய காரணம் என்ன? என்பதையும், அந்த வசனத்திற்கு நமது நாயகம் ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லமவர்கள் சொன்ன விளக்கம் என்ன? என்பதையும், அவர்களின் தோழர்களால் தரப்பட்ட விளக்கம் என்ன? என்பதையும், அந்த வசனத்திற்குரிய சட்டம் மாற்றப்பட்டதா? அல்லது மாற்றப் படாததா? என்பதையும்,அத்துடன் நபித்தோழர்கள் குர்ஆனுக்கோ அல்லது ஹதீதுக்கோ மாற்றம் செய்பவர்களல்ல என்றும், இமாம்களோ அல்லது நமது முன்னோர்களோ அவைகளுக்கு தவறான விளக்கம் தருபவர்களல்ல என்றும் அழுத்தமான நம்பிக்கை உள்ளவராக இருக்க வேண்டும். அதற்கு மாறாக கலீபா அவர்களிடம் தீர்ப்புக் கேட்டு சென்ற அக்குழு தங்களுக்குச் சாதகமான பதிலை கலீபா அவர்கள் தராததால் கலீபா அவர்கள் குர்ஆனுக்கு மாற்றமாக தீர்ப்பளித்ததாக கற்பனை செய்துகொண்டு நாங்கள் குர்ஆனுடைய தீர்ப்புப்படி செயல்படுவோம் என்றனர். அவர்கள் அன்று எடுத்த மோசமான இந்த முடிவால் விளைவு! அவர்கள் இஸ்லாமிய வட்டத்திலிருந்தே வெளியேறிப்போய் விட்டனர்.

சுருக்கமான இந்த விளக்கத்தை தெளிவாகப் புரிந்து கொண்டவர்களாக இப்போது ஸுன்னத் வல் ஜமாஅத்தை தவிரவுள்ள மற்ற பிரிவினை வாதக் கூட்டங்களாகிய தேவ்பந்தி ஜமாஅத், ஜமாஅத்தே இஸ்லாமி, தெளஹீத் ஜமாஅத், அன்ஸாருல் முஸ்லிமீன், இக்வானுல் முஸ்லிமீன் போன்ற இயக்கங்களனைத்தும்,...

''அல்லாஹ் அல்லாதவர்களை அழைப்பவர்களை விட வழிகேடர்கள் யாருண்டு'' என்னும் குர்ஆனுடைய வசனத்தை எடுத்துக் கொண்டு யா முஹ்யித்தீன் என்று சொல்லக்கூடாது. அவ்வாறு அழைப்பது கொடிய ஷிர்க்காகும் எனக்கூறி வருவதை நாம் அறிவோம். நீங்களும் இந்த வசனத்தை உங்களின் சிந்தனைக்கு எடுத்துக்கொண்டு நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களையும் வலிமார்களையும் அழைப்பதை சரியென்று சொல்வீர்களா? அல்லது தவறென்று சொல்வீர்களா?

இந்நிலையில் சுன்னத் வல் ஜமாஅத்தை தவிரவுள்ள மற்ற இயக்கங் களனைத்தும் இவ்வாறு அழைப்பதை வன்மையாகக் கண்டித்து பிரச்சாரம் செய்துவரும் வேளையில் இந்த ஒரேயொரு இயக்கம் மட்டும்தான் அவ்வியக்கங்கள் அனைத்தையும் எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறது. பின்னும் மேற்கண்ட இயக்கங்களெல்லாம் குர்ஆன் கூறுவதைத்தானே கூறுகிறார்கள் என்று அரைத்த மாவையே திரும்பத் திரும்ப அரைத்துக் கொண்டிருக்காமல் சொல்லப்படும் விஷயத்தை நடுநிலையோடு நின்று சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறோம்.

கவாரிஜிய்யீன்கள் உண்மையிலேயே குர்ஆனுடைய கூற்றுப்படி செயல்பட முடிவு செய்தாலும் கலீபா அவர்களின் தீர்ப்பை அவர்கள் புறக்கணித்து விட்டதைப்போல இன்று நம்மிடையே உள்ள இயக்கங்



களும் வேத வியாக்யானிகளால் குர்ஆனுக்குத் தரப்பட்ட விளக்கங்களை விட்டு விட்டு முன்னோர்களை புறக்கணித்தவர்களாக சுயவிளக்கம் தந்து வருகின்றனர். எனவே அன்றிருந்த கவாரிஜிய்யீன்கள் தான் இன்று நம்மிடையேயுள்ள வஹ்ஹாபிகளாகும். இக்கருத்தை அடுத்து வரும் நபிமொழியும் நமக்குத் துல்லியமாகக் காட்டித் தருவதை பாருங்கள்.

قال رسول الله صلى الله عليه وآله وسلم اخوف ما اخاف على امتي رجل يتأول القرآن يضعه في غير موضعه.

*''எனது உம்மத்தில் நான் எனக்குப்பின் வரும் ஒரு மனிதனை குறித்து அதிகமாக அஞ்சுகிறேன். அவன் குர்ஆனுடைய வசனங்களுக்குப் பொருத்தமில்லாத விளக்கங்களை சொல்பவனாகும் என்கின்றனர் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்.''*

நூல்: ஜாமிவுஸ் ஸகீர், பாகம்-1, பக்கம்-205.

கவாரிஜிய்யீன்கள் அன்று தாங்கள் சொல்வதுதான் சரியானதெனக் கற்பனை செய்து கொண்டதால் மாநபியவர்களின் மருமகனார், அன்னை பாத்திமாவின் அருமைக் கணவர், சுவனத்தின் வாலிபத் தலைவர்களான இமாம் ஹஸன் மற்றும் ஹுஸைனின் ஒப்பற்ற தந்தை ஹழ்ரத் அலியவர் களை மட்டுமல்ல. எண்ணிலடங்கா நபித்தோழர் பெருமக்களை எல்லாம் அவர்கள் காபிர்கள் என்றனர்.

ஹழ்ரத் ஸெய்யிதுனா கப்பாப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ரமழானுடைய மாதத்தில் நோன்பாளியாக கையில் குர்ஆனை வைத்துக் கொண்டிருக்கும்போது கொல்லப்பட்டார்கள். அவருடைய துணைவியார் கர்ப்பிணியாக இருக்கும்போது அவரது வயிற்றை கிழித்துக் கொன்றனர். இதே காரியத்தை தான் வஹ்ஹாபிகளும் செய்தனர். இனி கவாரிஜிய் யீன்களின் தோற்றத்திற்கு முஸ்லிமுடைய வேடத்திலிருந்த ஒரு யூதன் தான் காரணமாக இருந்தான். இதேபோல வஹ்ஹாபியத் தோற்றத்திற் கும் காரணமாக அமைந்தவர்களும் யூதர்கள் தான். அவர்கள் எப்படி எங்கேயிருந்து தோன்றினார்கள் என்பதற்குரிய விளக்கங்களை எல்லாம் உள்ளே நீங்கள் பார்க்கலாம்.

அன்புக்குரிய இஸ்லாமியர்களே! நல்லடியார்களான சுன்னத் வல் ஜமாஅத்தினரால் காலங்காலமாக நடைமுறை படுத்தப்பட்டு வரும் காரியங்களில் பலவற்றை இந்த வஹ்ஹாபிகள், இது நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களாலோ அல்லது அவர்தம் தோழர் பெருமக்களாலோ நடைமுறைபடுத்தப்பட்டவைகளல்ல என்று கூறுவர். இதற்குரிய ஆதாரத்தை நமது பெரியார்கள் எடுத்துக் காட்டினால் இது நம்பத்தகுந்த ஸஹீஹான ஆதாரமல்ல என்பர். ஸஹீஹானது தான்

என்பதையும் ஆதாரப்படுத்திக் காட்டிஞல் இதோர் தனி நபரால் செய்யப்
பட்ட காரியமேயன்றி ஏகோபிக்கப்பட்டதல்ல என்பர். இதற்கும் பதில்
சொல்லிவிட்டால் உடனே இது பித்அத்தான காரியம் என்று லேபிள்
ஒட்டுவர். ஆதாரம் தேடித்தான் ஒரு காரியத்தை செயல்படுத்த வேண்
டும் என்பது இவர்களுடைய நோக்கமேயல்ல. மாருக முஸ்லிம்களே
பிளவுபடுத்தி இஸ்லாத்தின் புனிதத்தையும் ஒற்றுமையையும் சிதைத்து
இஸ்லாத்தை இம்மண் பரப்பிலிருந்தே மறையச் செய்ய வேண்டுமென்
பதற்காக கங்கணம் கட்டிக் கொண்டுள்ள யூத கிறிஸ்தவர்களால் அற்பக்
கிரையத்திற்கு விலேகொடுத்து குலேப்பதற்காக ஏவி விடப்பட்ட உள
வாளிகள் இவர்கள் என்பதை நம்மவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இறுதியாக இந்த இடத்தில் நாம் சொல்ல விரும்பும் விஷயம்
யாதெனில் இறைநம்பிக்கையாளர்களாகிய முஃமின்கள் இன்று மதீன
முனவ்வராவிலுள்ள மஸ்ஜிதுன் நபவியில் அவர்களுடைய விருப்பம்
போல் அமல்செய்ய (வணக்கம் நிகழ்த்த) முடியவில்லே. அந்த இடத்தை
சுற்றி அடியாட்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். எனவே அவர்களேத்தான்
அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலேஹி வஸல்லமவர்கள் கொசுக்கள்,
நாய்கள், முள்ளம்பன்றிகள் என்று கூறினர்களோ!

மேலும் இந்த நூலில் பேசப்படும் கருத்துக்கள் முழுக்க முழுக்க
எந்தவொரு தனிநபரையோ அல்லது ஒருநாட்டையோ விமர்சிப்பதாக
எண்ணிக்கொள்ளக் கூடாது. மாருக இதில் கூறப்படும் கருத்துக்களே
ஆதரிப்பவர்கள் அனேவரையும் இது சாா்ந்ததாகும் என்பதை பணிவோடு
சொல்லிக்கொள்ள விரும்புகிரேம். இன்னும் இதைவைத்து சம்பாதிக்க
வேண்டாமென்றும் குறிப்பிட்டவர்களே நாம் எச்சரிக்கிரேம். இந்நூலே
தெளிந்த சிந்தனேயோடு அவர் எந்தக் கூட்டத்தை சாா்ந்தவராக இருந்தா
லும் அவைகளேயெல்லாம் ஒருபக்கமாக ஒதுக்கி வைத்துவிட்டு நடுநிலே
யோடு படித்து முடித்தபின் நீங்கள் எந்தக் கூட்டத்தில் இருக்க வேண்
டும் என்பதை குறித்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு வாருங்கள். பின்னும்
இந்நூலானது அல்லாமா இமாம் முப்தி மக்கா ஸைனீ தஹ்லான் ரஹிம
ஹுல்லாஹ் அவர்களால் தொகுக்கப்பட்ட "ஃபித்னத்துல் வஹ்ஹா
பிய்யா" என்னும் அரபி நூலே மையமாகக் கொண்டு எழுதப்பட்டதாகும்.
எல்லாம் வல்ல அல்லாஹ் நமது நாயகம் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்
லாஹு அலேஹி வஸல்லமவர்களின் பொருட்டால் இதுபோன்ற
இஸ்லாமிய சேவைகளே செய்து நம்மை அவர்களுக்கு அர்ப்பணித்த
நல்லடியார்களாக ஆக்கியருள்வாஞக. ஆமீன்.

بسم الله الرحمن الرحيم

اللهم صل وسلم على سيدنا ونبينا وشفيعنا ومولانا وحبيب رب
العالمين وانيس الغرباء ومحب الفقراء والمساكين وصاحب قاب
قوسين ومحبوب رب المشرقين ورب المغربين صلى الله عليه وآله
واصحابه واتباعه وجميع امته إلى يوم الدين.

அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலேஹி வஸல்லமவர்கள் "*ஆமுல்ஃபீல்*" என்னும் யானேப்படை கலகத்திற்குப் பின் அதே ஆண்டு இவ்வனியில் அவதரித்தார்கள். அதன்பின் தமது நாற்பதாவது வயதில் நபித்துவத்தை வெளிப்படுத்தினர்கள். பின்னர் ஹிஜ்ரி பத்தாம் ஆண்டின் இறுதிப்பகுதியில் மறுவுலகிற்கு பயணமானர்கள். அறுபத்திமூன்று ஆண்டுகள் வரை இப்பூலோகத்தில் வெளிப்படையான ஆட்சியை நடத்தியபின் மறைந்தார்கள். பின்னர் ஆமுல்ஃபீல் என்னும் யானேப்படை கலகத்திற்குச் சரியாக மூன்ருண்டுகள் கழித்துப் பிறந்த ஸெய்யிதுன ஸித்தீக்குல் அக்பர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிஜ்ரி பதினேராம் ஆண்டு ஆட்சியாளராக நியமனம் செய்யப்பட்டார்கள். இவர்கள் இரண்டு ஆண்டுகள் மூன்று மாதம் பத்து நாட்கள் ஆட்சிசெய்து தமது அறுபத்திமூன்ரும் வயதில் இவ்வுலகை நீத்தார்கள்.

இவர்களுக்குப் பின் ஹிஜ்ரி பதிமூன்ரும் ஆண்டு ஸெய்யிதுன ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு ஆட்சிப் பொறுப்பை ஏற்று பத்து ஆண்டுகள் ஆறு மாதம்வரை ஆட்சியை நடத்தி ஹிஜ்ரி இருபத்திமூன்ரும் ஆண்டு இறையடி சேர்ந்தார்கள். இவர்களும் அறுபத்திமூன்று ஆண்டுகளே வாழ்ந்தனர். பின்னர் கிலாபத்துப் பொறுப்பை ஏற்ற ஸெய்யிதுன ஹழ்ரத் உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பனிரெண்டு ஆண்டுகள் வரை ஆட்சிசெய்து ஹிஜ்ரி முப்பத்திஐந்தில் தமது நேசரை சந்திக்கப் பயணமானர்கள். இவர்கள் எண்பத்திரெண்டு ஆண்டுகள் வரை

வாழ்ந்திருந்தனர். அதன்பின் செய்யிதுனா ஹழ்ரத் அலீ ரழியல் லாஹு அன்ஹு அவர்கள் நான்கு ஆண்டுகளும் ஒன்பது மாதமும் ஒருநாளும் ஆட்சிசெய்து ஹிஜ்ரி நாற்பதாம் ஆண்டு தமது உலக வாழ்க்கையை முடித்துக் கொண்டார்கள். இவர்களும் அறுபத்திமூன்று ஆண்டுகளே வாழ்ந்தார்கள்.

அதன்பின் சுவர்க்கலோக வாலிபர்களின் தலைவரான செய் யிதுனா ஹஸன் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டு ஆறு மாதங்களும் ஐந்து நாட்களும் கடமையாற்றினார்கள். இவர்கள் நாற்பத்தேழு ஆண்டுகள் வரை வாழ்ந்து ஹிஜ்ரி ஐம்பதில் இவ்வுலகை நீத்தார்கள். இவர்களுக்குப் பின் செய்யிதுனா ஹழ்ரத் முஆவியா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிஜ்ரி நாற்பத்தோரும் ஆண்டு பதவிப் பிரமாண மேற்று பத்தொன்பது ஆண்டுகளும் மூன்று மாதமும் ஐந்து நாட்களும் ஆட்சி நடத்தி ஹிஜ்ரி அறுபதாம் ஆண்டு மறைந் தார்கள். இவர்கள் எழுபத்தேழு ஆண்டுகள் வரை வாழ்ந்திருந் தனர். இதன்பின் யஸீத் பின் முஆவியா மூன்று ஆண்டுகளும் ஒன்பது மாதங்களும் ஆட்சியில் இருந்தார். அதன்பின் முஆவியா பின் யஸீத் என்பார் மூன்று மாதமும் இருபத்திரெண்டு நாட்களும் ஆட்சியை நடத்தி ஹிஜ்ரி அறுபத்திநான்கில் மரணமடைந்தார்.

இதற்குப்பின் ஹழ்ரத் செய்யிதுனா அப்துல்லாஹிப்னு ஸுபைரிப்னு அவாம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பதவி யேற்று மூன்று மாதமும் இருபத்திரெண்டு நாட்கள் வரை மட்டுமே ஆட்சி செய்தனர். இவர்கள் எழுபத்திமூன்று ஆண்டுகள் வரை இவ்வையகத்தில் வாழ்ந்து ஹிஜ்ரி எழுபத்திமூன்றும் ஆண்டு மறைந்தார்கள். இதன்பின் மர்வான் பின் ஹகமுடைய குடும் பத்தார் ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர். ஹிஜ்ரி அறுபத்திநான்கில் துவங்கிய இவர்களின் ஆட்சி மர்வான் பின் முஹம்மதோடு ஹிஜ்ரி நூற்றி முப்பத்திரெண்டாம் ஆண்டு வரை நடைபெற்று பின்னர் முடிந்து போனது. இதனை உமைய்யாக்களின் ஆட்சிக் காலம் என்பதாக வர்ணிக்கப்படுகிறது.

உமைய்யாக்கள் வசமிருந்த ஆட்சி, அதிகாரமனைத்தும் பின்ன அப்பாஸிய்யாக்களிடம் போய் சேர்ந்தது. ஹிஜ்ரி நூற்றிமுப்பத்தி ரெண்டில் துவங்கிய இவர்களின் ஆட்சி ஹிஜ்ரி அறுநூற்றி ஐம்பத்தாறில் அப்துல்லாஹ் அல் முஃதஸிம் பில்லாஹ் என்ப ரோடு முடிவடைந்தது. சுமார் இந்த ஐநூற்றி இருபத்திநான்



ஆண்டுகளில் ஒருவர்பின் ஒருவராக முப்பத்தேழு 37 கலீபாக்களெனும் பெயரால் அழைக்கப்பட்ட உமராக்கள் ஆட்சி புரிந்தனர். இவர்களின் ஆட்சிக்காலத்தை தான் அப்பாஸிய்யாக்களின் ஆட்சிக்காலம் என்று அழைக்கப்படுகிறது.

அப்பாஸிய்யாக்களின் ஆட்சியை அடுத்து சுமார் நாற்பத்தி மூன்று வருடத்திற்குப் பின் ஹிஜ்ரி அறுநூற்றி தொன்னூற்றி ஒன்பதில் தான் உஸ்மானிய்யாக்களின் ஆட்சிக்காலம் ஆரம்பமாயிற்று. இவர்களில் முதலாவதாக மௌலானா அஸ்ஸுல்தான் உஸ்மான் அவ்வல் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். இவர் ஹிஜ்ரி அறுநூற்றி ஐம்பத்தாறில் பிறந்து இருபத்தேழு வருடங்கள் வரை ஆட்சிசெய்து ஹிஜ்ரி எழுநூற்றி இருபத்தாறில் இறையடி சேர்ந்தார். அதுபோது அவருக்கு எழுபது வயதாக இருந்தது.

இந்நூலில் பேசப்படப் போகும் விஷயமானது, இப்பூவுலகின் புண்ணிய பூமிகளான மக்கா முகர்ரமாவும், மதீனா முனவ்வராவும் உஸ்மானியர்களால் நியமனம் செய்யப்பட்ட துருக்கிய மன்னர்கள் ஆண்டு கொண்டிருந்த காலத்தில் ஏற்பட்ட பிரச்சனையாகும். அச்சமயம் ஷரீப் ஙாலிபிப்னு முஸாயித் என்பவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தார்.

அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குப் பின் ஏற்பட்ட ஆட்சிக்குரிய காலங்களில் ஆயிரமாயிரம் குழப்பங்களும் யுத்தங்களும் நடைபெற்றிருக்கலாம். இருப்பினும் ஆயிரத்து நூற்றைம்பது வருடங்களாக நடைபெற்ற அந்த ஆட்சிக்குரிய காலங்களில் எத்தனைதான் பெரும் பெரும் பிரச்சனைகள் ஏற்பட்டிருந்தாலும் ஹிஜ்ரி ஆயிரத்து நூற்றைம்பதுக்குப் பின்னர் உருவான பிரச்சனையை போன்ற ஒன்றை இஸ்லாமிய வரலாறு கண்டிருக்க முடியாது என்பதை மட்டும் திண்ணமாகச் சொல்லலாம்.

இஸ்லாமிய வரலாறு காணாத இப்பிரச்சனைக்குரிய மூலகாரணம் என்னவாகத்தான் இருக்கும் என்பதை யோசித்தால், அப்பிரச்னைக்குரிய கருத்தை ஆதரிக்கின்ற இந்திய தேசத்தைச் சார்ந்த மஸ்வூத் ஆலிம் நத்வி என்பார் தமது முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் என்னும் நூலின் 11ம் பக்கத்தில் பின்வருமாறு கூறுகிறார். இந்த நூல் முதல் பதிப்பாக மார்ச் மாதம் 1946ல் ஆயிரம் பிரதிகளைக்

கொண்டு தாருல் இஷாஅத்தி நஷாத் ஸானியா ஹைதராபாத் தக்கன் என்னும் அமைப்பின் மூலமாக அதே ஊரைச் சேர்ந்த ஸஹீபா பர்கீ மிஷின் பிரஸ் என்னும் அச்சகத்திலிருந்து அச்சிடப் பட்டு ரூபாய் 12க்கு விற்பனை செய்யப்பட்ட நூலாகும். அதில் அவர் இவ்வாறு கூறுகிறார்,...

**(முஸ்லிம்கள் குர்ஆன் ஹதீதை பின்தொடர்வதை விட்டும் விலகிப் போயிருந்தனர். அல்லாஹ் ஒருவனை மட்டுமே வணங்குவ தற்குப் பதிலாக நூற்றுக்கணக்கான பொருட்களை வணங்கிக் கொண்டி ருந்தனர். உதாரணமாக மிஸ்ரு தேசவாதிகள் பதவி என்பவரையும் ரிபாயி என்பவரையும், ஈராக் மற்றும் இந்திய தேசவாதிகள் அப்துல் காதிர் ஜீலானி என்பவரையும், மக்கா மற்றும் தாயிப் நகரவாசிகள் இப்னு அப்பாஸையும், எமன்தேச வாதிகள் இப்னு அல்வான் என்பவரையும் மதித்து அல்லாஹ்விடம் மட்டுமே கேட்க வேண்டியவைகளை அவர்க ளிடம் கேட்டுக் கொண்டிருந்தனர். (அதாவது மேற்கண்டோரின் கப்ருகளை அம்மக்கள் கடவுள்களாக எண்ணி செயல்பட்டுக் கொண்டி ருந்தனர்.) இன்னும் கல்லுக்கும் (கப்ருக்கும்) மரத்திற்கும் தலை வணங்குபவர்களாக இருந்தனர். ஆக மொத்தத்தில் முஷ்ரிக்குகள் சிலைகளிடம் தலைவணங்கி தமது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டு மெனக் கோருவது போல இஸ்லாமியர்கள் கப்ருகளுக்குத் தலைவணங்கி கப்ராளிகளிடம் தங்களின் நாட்ட தேட்டங்களை பூர்த்திசெய்து தருமாறு கேட்டுக் கொண்டிருந்தனர்.)**

அதாவது இந்தியா, பாகிஸ்த்தான், பங்களாதேஷ், இலங்கை, ஈராக், எகிப்து, மக்கா, மதீனா, தாயிப், போன்ற ஆசியப் பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருந்த இஸ்லாமியர்கள் முஸ்லிம்களெனும் பெயரில் சுமார் 600 வருடங்களாக அம்மக்கள் முஷ்ரிக்குகளா கவே வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பதாகக் கூறுகிறார்.

அத்துடன் இம்மாபெரும் பிரச்சனைக்குரிய மூலகாரணம் என்ன வெனில் அன்று அங்கே வாழ்ந்தவர்கள் எல்லாம் ஷைத்தா னுடைய வலையில் சிக்கி அல்லாஹ்வை வணங்குவதற்குப் பதிலாக கப்ருகளை வணங்கி வந்ததுதான் என்று கூறுகிறார். ஆனால்,...

إن الشيطان قد ايس أن يعبده المصلون فى جزيرة العرب
ولكن فى التحريش بينهم

**"நிச்சயமாக ஷைத்தான் அரபு தேசத்தைச் சேர்ந்தவர்கள் அவனை வணங்குவார்கள் என்பதை விட்டும் அவன் நம்பிக்கை இழந்து விட்டான், இருப்பினும் அவன் அவர்களுக்கு மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்தி**



**விடுவான்"** முஸ்லிம் ஷரீப். இக்மால், பாகம்-8, பக்கம்-349. என்றும்,.

إن الشيطان قد يئس أن تعبد الأصنام بأرض العرب

**"நிச்சயமாக ஷைத்தான் அரபு மண்ணில் சிலைகள் வணங்கப்படும் என்னும் விஷயத்தில் நம்பிக்கையற்றுப் போய்விட்டான்"** நூல்: முஸ்தத்ரக். என்றும் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களால் உறுதியாகச் சொல்லப்படும் வாக்கியத்தை நாம் இங்கே கவனத்தில் கொள்ளுதல் அவசியமாகும்.

ஆதலால் மக்கா, மதீனா, தாயிப் போன்ற பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருந்த அன்றைய மக்கள் கப்ருகளை வணங்கிக் கொண்டி ருந்தார்களென்று இவர்கள் சொன்னாலும் உண்மை அதுவல்ல என்பதை தெரிந்துகொண்ட நாம், இனி இப்படிச் சொன்ன அந்த நபர் யார்? அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? என்பதைப் பற்றி சற்று விரிவாகவே இப்போது பார்ப்போம். இன்ஷாஅல்லாஹ்.

இன்று உலகில் நடைபெற்றுக் கொண்டுள்ள ஒவ்வொரு பிரச்சனை பற்றியும் நீங்கள் யோசித்துப் பாருங்கள். அதிலும் குறிப்பாக எந்தவொரு தேசத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கே வாழுகின்ற முஸ்லிம்கள் ஒடுக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். காபிர்கள் அதிகமாக வாழும் நாடுகளில் மட்டுமல்ல. இஸ்லாமிய நாடுகள் கூட யூதர்களாலும் நஸாராக்களாலும் நசுக்கப்படுவதை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம்.

உதாரணமாக பாலஸ்தீனத்தில் பிரச்சனை. ஈராக்கில் பிரச்சனை. போஸ்னியாவில் பிரச்சனை. லிபியாவில் பிரச்சனை. சூடானில் பிரச்சனை. இந்தியாவில் பிரச்சனை. பாலஸ்தீனத்தில் நடைபெறும் பிரச்சனைகளைக் கண்டு இலங்கையில் வாழும் இஸ்லாமியரில் வேதனைப்படாதவர் யாருமேயில்லை. பாலஸ்தீனியர்களுக்குச் சார்பாக அதேநேரம் காபிர்களுக்கு எதிராக அல்லாஹ்வை பிரார்த்திக்காத முஸ்லிமே இருக்க மாட்டான். ஈராக்கில் நடை பெறும் பிரச்சனையைக் கண்டு உலகிலுள்ள அத்தனை முஸ்லிமும் வேதனையுறுகிறான். அத்துடன் அவர்களுக்கு வெற்றியைத் தருமாறும் பிரார்த்தித்துக் கொண்டே இருக்கின்றனர். இந்நிலையில் காபிர்களால் முஸ்லிம்கள் நசுக்கப்படுவதைக் கண்டு சந்தோஷ மடையும் ஒரு முஸ்லிமாவது இருப்பான் எனில், அவனை ஒரு முஸ்லிமாகவோ அல்லது ஒரு முஸ்லிம் நாடு என்றோ கண்டிப்பாகச் சொல்ல முடியாது. அதேநேரம் தனக்கு பாதகம் ஏற்படாதிருக்க

யூதர்களையும், கிறிஸ்தவர்களையும் அரவணைத்து ஆதரித்துக் கொண்டிருக்கும் இஸ்லாமியர்களை விட முதுகெலும்பில்லாத கோழைகள் இஸ்லாமிய சமூக மக்களின் விரோதிகள் மட்டுமல்ல. அல்லாஹ்வின் விரோதிகளாகவும் இருக்கின்றனர்.

ஆனால் இன்று பல இஸ்லாமிய நாடுகள் காபிர்களால் நசுக்கப் படுகின்றன எனில், அதற்கு உறுதுணையாக இருப்பவர்களும் தூண்டி விடுபவர்களும் இஸ்லாமியர்கள் தானென்று சொன்னால் அது மிகையாகாது. இதில் இஸ்லாமிய நாடுகளனைத்தும் ஒருங்கிணைந்து காபிர்களைத் தமது எதிரிகளாக கணித்திருப்பார்களாயின் இஸ்லாமியர்களை நசுக்குமளவுக்கு அவர்களுக்கு துணிவு ஏற்பட்டிருக்காது. ஆனால் சில இஸ்லாமிய நாடுகள் இதற்கு விதிவிலக்காக காபிர்களின் அரவணைப்பில் அவர்களின் உதவி ஒத்தாசையோடு இன்றும் வாழ்ந்து வருகின்றனர். இது ஏன்? இதற்குரிய பதிலை நாம் சொல்ல வேண்டுமாயின் இன்று எந்தெந்த இஸ்லாமிய நாடுகள் காபிர்களால் நசுக்கப்படுகின்றனவோ, அந்நாடுகளை இஸ்லாமிய நாடுகள் என்றும், அங்குள்ள மக்களை முஸ்லிம்கள் என்றும் நாம் கருதாமல் போனதேயாகும். இதற்குரிய விளக்கங்களை இன்ஷாஅல்லாஹ் பின்னால் நாம் விளக்குவோம். அதற்குமுன் ஒரு முஸ்லிம் காபிர்களிடம் உதவி தேடலாமா? காபிர்களை அரபு மண்ணில் விட்டு வைக்கலாமா? என்பது பற்றிய குர்ஆன் ஹதீதுகளை இப்போது பார்ப்போம்.

يايها الذين أمنوا لاتتخذوا اليهود والنصارى أولياء

"***விசுவாசிகளே! யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் உங்களின் காரியகர்த்தர்களாக நீங்கள் ஆக்கிக்கொள்ள வேண்டாம்.***" அல் மாயிதா, வசனம்-51.

لاتتخذوا الكافرين أولياء من دون المؤمنين

"***மு.:மின்களை அன்றி காபிர்களை உங்களின் அதிகாரிகளாக நீங்கள் எடுத்துக் கொள்ளாதீர்கள்.***" அன்னிஸா, வசனம்-144.

لاتتخذوا عدوي وعدوكم أولياء

"***என்னுடையவும் உங்களுடையவும் விரோதிகளை உங்களின்***



எனக் கூறுகின்றனர் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்.

இறந்து போய் விட்டவர்களிடம் உதவி தேடுவதை ஷிர்க் கென்று வாதிப்போர் அல்லாஹ்வின் விரோதிகளை மட்டும் தங்களின் அதிகாரிகளாக எடுத்துக் கொள்ளலாமா? பின்னும் குர்ஆன் ஹதீதை மட்டுமே பின்பற்றுவோமென வாதிப்போர் அந்த குர்ஆனுக்கு ஏன் வழிப்படாமல் போய்விட்டனர்? இறந்து போய் விட்டவர்களிடம் உதவி தேடுவது ஷிர்க்கென்றால் காபிர் களிடம் உதவி தேடுவதும் கூட ஷிர்க் தான். எப்படித் தெரியுமா?

سواء محياهم ومماتهم

"***அவர்களது ஜீவியமும் மரணமும் சமமே***" என்பதாகக் குர்ஆனும், "***எவனுடைய உள்ளத்தில் குர்ஆனுடைய வசனங்களில் ஒன்றுகூட இல்லையோ அவன் செத்தவனுக்குச் சமமாகும்***" என்பதாக நபி மொழியும் அழுத்தந் திருத்தமாக சொல்லிக் கொண்டிருக்கும் போது குர்ஆனுடைய தொடர்பு என்பது அறவே இல்லாத காபிர்கள் இறந்தோரை விட இன்னும் ஒருபடி மேலானவர்கள் இல்லையா? இது ஷிர்க்கை விட மிகக் கேவலமான ஒன்றில்லையா? இனி மத்திய கிழக்குப் பகுதியில் அவ்விஷ வித்துக்களுக்கு இடமளிப்பது தொடர்பாக இப்போது பார்ப்போம்.

أخرجوا المشركين من جزيرة العرب

"***முஷ்ரிக்குகளை அரபு தேசத்திலிருந்து வெளியேற்றுங்கள்***"
நூல்: புகாரி, முஸ்லிம், மிஷ்காத், பக்கம்-355.

لأخرجن اليهود والنصارى من جزيرة العرب حتى لا أدع إلا مسلما

"***அரபு தேசத்திலிருந்து யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் நான் வெளியேற்றி முஸ்லிம்களை மட்டுமே அங்கே வைக்கும்வரை விடமாட்டேன்***" நூல்: முஸ்லிம், இக்மால், பாகம்-6. பக்கம்-102.

لئن عشت إن شاء الله لأخرجن اليهود والنصارى من جزيرة العرب

"***அல்லாஹ்வின் உதவியால் இப்பூமியில் நான் வாழுவேனேயாயின்***

நூல்: கன்ஸுல் உம்மால், பாகம்-14, பக்கம்-166.

## لايبقى في جزيرة العرب دينان

"**அரபு தேசத்தில் இரண்டு மார்க்கம் இருக்காது**" என்றெல்லாம் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பகர்ந்துள்ளார்கள். நூல்: கன்ஸுல் உம்மால், பாகம்-14, பக்கம்-166. கஷ்புல் கிபா, பாகம்-2, பக்கம்-84.

இதில் குர்ஆனை பின்பற்றுவோர் காபிர்களை தமது தோழர்களாகவும், ஹதீதைப் பின்பற்றுவோர் அரபு மண்ணில் அவர்களுக்கு இடமும் அளித்திருக்க மாட்டார்கள். இரண்டையுமே பின்பற்றாத இவர்கள் மூன்றாவதான ஒன்றை பின்பற்றிக்கொண்டு நாம் அவ்விரண்டையுமே பின்பற்றுவோர் எனக் கூறுவது வினோதமல்லவா!

யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் இஸ்லாமியர்கள் தங்களின் நண்பர்களாக்கிக் கொள்ளக்கூடாது. இஸ்லாமியர்கள் அவர்களை தங்களின் காரியங்களுக்கு அதிகாரிகளாக நியமிக்கக் கூடாது என்றெல்லாம் குர்ஆன் வன்மையாகக் கண்டிப்பதோடு அவ்வாறு எடுத்துக் கொள்வோர் அவர்களைச் சார்ந்தவர்களே என்றும் தீர்ப்பளிக்கின்றது. இன்னும் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் அரபு மண்ணிலிருந்தும், அரபு தேசத்திலிருந்தும் வெளியேற்றுங்கள் எனக் கூறிய பின்னரும் கூட ஸவூதியும் குவைத்தும் குர்ஆன் ஹதீதுக்கு முழுக்க முழுக்க மாற்றமாக நடக்கின்றனர் எனில் 'அது ஏன்? என்பதுதான் இன்றுள்ள ஒவ்வொரு முஸ்லிமின் உள்ளத்தையும் நெருடிக் கொண்டுள்ள கேள்வியாகும்.

மேலும் இந்த யூத கிறிஸ்தவர்களுக்கும் இம்மன்னர்களுக்கும் என்ன தொடர்பு? ஒருவேளை அந்த வல்லரசுகளிடம் பெரும் பெரும் பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் இருக்கின்றன. ஆதலால் அவர்களை நாம் எதிர்த்தால் நிம்மதியாக வாழ முடியாது என்பதாலா? எனில், இதை எந்த முஸ்லிமும் ஒரு காரணமாகவே ஏற்றுக்கொள்ள மாட்டான். அப்படியானால் வேறு என்னதான் காரணம் என்று யோசிக்கிறீர்களா? அக்கேள்விக்கான பதிலை தெரிந்து கொள்வதற்காக நாம் நமது சிந்தனையை கொஞ்சம் பின்னோக்கிச் செலுத்தி அதனுடைய அஸ்த்திவாரத்திலிருந்து



அலசி ஆராய வேண்டும். அதற்குமுன் அப்பெரும் பிரச்சனை குறித்து அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை முதலில் பார்த்து விடுவோம்.

اني سمعت رسول الله صلى الله عليه وآله وسلم يقول سيخرج في آخر الزمان قوم حدثاء الأسنان سفهاء الأحلام يقولون من خير قول البرية لايجاوز إيمانهم حناجرهم يمرقون من الدين كما يمرق السهم من الرمية فاينما لقيتموهم فاقتلوهم فان في قتلهم أجرا لمن قتلهم يوم القيامة.

*"இறுதிக் காலத்தில் ஒரு கூட்டமொன்று வெளியாகும். அவர்கள் நாகரீகமாக பேசக் கூடியவர்களாகவும், குறைந்த வயதுடையவர்களாகவும், மடையர்களாகவும் இருப்பர். அவர்களும் அண்ணல் நபியவர்களின் ஹதீதுகளை எடுத்துச் சொல்வர். எனினும் அவர்கள் வில்லிலிருந்து பாய்ந்து செல்லும் அம்பைப்போல் இஸ்லாத்திலிருந்து வெளியேறி விடுவார்கள். அவர்களுடைய ஈமான் வாய்ப் பேச்சைத்தவிர அது தொண்டைக் குழிக்குக் கீழே இறங்காது. இத்தகையோரை கண்டால் அந்த இடத்திலேயே அவர்களை கொன்று விடுங்கள். அவ்வாறு கொல்பவருக்கு யுகமுடிவு நாளில் அதற்குரிய நன்மை கிடைக்கும் என்பதாக காத்தமுன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொல்ல நான் கேட்டேன் என்பதாக ஸெய்யிதுனா அலியுன் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் கூறுகின்றனர்."* நூல்: முஸ்லிம் ஷரீப், கிதாபுஸ் ஸகாத், பாபுத் தஹ்ரீழி அலா கத்லில் கவாரிஜி, இக்மால், பாகம்-3, பக்கம்-617.

سمعت رسول الله صلى الله عليه وآله وسلم يقول يخرج في آخر الأمة ولم يقل منها قوم تحقرون صلاتكم مع صلاتهم فيقرؤون القرآن لايجاوز حلوقهم أو حناجرهم يمرقون من الدين مروق السهم من الرمية-

*"இறுதிக் காலத்தில் ஒரு கூட்டமொன்று வெளியாகும். அவர்களின் தொழுகையை பார்க்கும் நீங்கள் உங்களின் தொழுகையை அற்பமாகக் கருதுவீர்கள். இன்னும் அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். அது அவர்களின் தொண்டைக் குழிக்குக் கீழே இறங்காது. அத்துடன் அவர்கள் வில்லில் இருந்து அம்பு வெளியாவதைப் போல மார்க்கத்தை விட்டும் வெளியேறிப் போய் விடுவார்கள் என்பதாக அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொல்லக் கேட்டேன் என்கிறார்கள் ஹழ்ரத் அபூ ஸயீதுல் குத்ரி ரழியல்லாஹு அன்ஹு*

அவர்கள்'' நூல்: முஸ்லிம் ஷரீப், இக்மால், பாகம்-3, பக்கம்-610.

عن ابى سعيد قال بينا النبي صلى الله عليه وآله وسلم يقسم جاء ذوالخويصرة التميمي فقال إعدل يارسول الله صلى الله عليه وآله وسلم فقال ويلك ومن يعدل إذالم أعدل قال عمر بن الخطاب رضى الله عنه دعني أضرب عنقه قال دعه فإن له أصحابا يحقر أحدكم صلاته مع صلاتهم وصيامه مع صيامه يمرقون من الدين كمايمرق السهم من الرمية - الحديث.

"அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் எங்களிடையே (போரிலிருந்து கைப்பற்றப்பட்ட) கனீமத்துப் பொருட்களை பங்கீடு செய்து கொண்டிருந்தனர். அப்போது தமீமுடைய வம்சத்தைச் சார்ந்த துல் குவைஸரா என்பவன் நபியவர்களைப் பார்த்து, அல்லாஹ்வின் ரஸூலே! நீதமாக பங்கீடு செய்யுங்கள் என்று சொல்ல, அதுகேட்ட நபியவர்கள்; நீ ஒழிந்து போ என்று சாபமிட்டவர்களாக நான் நீதமாக நடக்காவிட்டால் வேறு யார்தான் நீதமாக நடப்பார்கள் என்றனர். அதுபோது ஹழ்ரத் ஸெய்யிதுனா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அவனை கொல்வதற்கு நபியவர்களிடம் அனுமதி கோர, அதற்கு நபியவர்கள் பின்வருமாறு சொன்னார்கள்,...

அவனை விட்டு விடுங்கள். நிச்சயமாக அவனுக்குச் சில தோழர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவனுடைய தொழுகையை அல்லது நோன்பை உங்களில் ஒருவருடைய தொழுகைக்கும் நோன்புக்கும் ஒப்புநோக்கிப் பார்ப்பீர்களேயாயின் உங்களுடைய அமல்களை மிக மிக அற்பமான ஒன்றாகக் கருதுவீர்கள். ஆனால் அவர்கள் வில்லிலிருந்து பாய்ந்து செல்லும் அம்பைப்போல் மார்க்கத்திலிருந்து வெளியேறிப் போய் விடுவார்கள் எனக் கூறியதாக ஹழ்ரத் அபூ ஸயீதுல் குத்ரி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றனர்.'' நூல்: முஸ்லிம் ஷரீப், கிதாபுஸ் ஸகாத், இக்மால், பாகம்-3, பக்கம்-610., புகாரி ஷரீப், பாகம்-4, பக்கம்-196.

عن ابى سعيد الخدرى رضى الله عنه أنه قال سمعت رسول الله صلى الله عليه وآله وسلم يقول يخرج فيكم قوم تحقرون صلاتكم مع صلاتهم وصيامكم مع صيامهم وعملكم مع عملهم ويقرؤون القرآن لايجاوز حناجرهم يمرقون من الدين كما يمرق السهم من الرمية -



"உங்களில் ஒரு கூட்டம் வெளியாகும். அவர்களுடைய தொழுகைக்கு முன்னால் உங்களுடைய தொழுகைகளையும் அவர்களுடைய நோன்புக்கு முன்னால் உங்களுடைய நோன்பையும் அவர்களுடைய வணக்கத்திற்கு முன்னால் உங்களுடைய வணக்கத்தையும் நீங்கள் துச்சமாகக் கருதுவீர்கள். இன்னும் அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். அது அவர்களின் தொண்டைக் குழிக்குக் கீழே இறங்காது. வில்லில் இருந்து அம்பு பாய்ந்து செல்வதைப் போன்று அவர்கள் மார்க்கத்திலிருந்து வெளியேறி விடுவார்கள்''

ان من بعدى من أمتي قوما يقرؤون القرآن لايجاوز حلاقهم يقتلون اهل الاسلام ويدعون اهل الاوثان يمرقون من الاسلام كما يمرق السهم من الرمية لئن أدركتهم لاقتلنهم قتل عاد.

"எனக்குப் பின் எனது உம்மத்திலிருந்து ஒரு கூட்டம் வெளியாகும். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். அது அவர்களின் தொண்டைக் குழிக்குக் கீழே இறங்காது. அவர்கள் முஸ்லிம்களை கொலை செய்வார்கள். சிலை வணக்கத்தாரை விட்டு விடுவார்கள். அவர்கள் வில்லிலிருந்து அம்பு பாய்ந்து செல்வதைப்போல இஸ்லாத்தை விட்டும் வெளியேறி விடுவார்கள். நான் அவர்களைப் பெறுவேனாயின் ஆதுடைய கூட்டத்தாரை கொலை செய்தது போல கண்டிப்பாக அவர்களை நான் கொல்லுவேன் என்பதாக அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறியதாக ஹழ்ரத் அபூ ஸயீதுல் குத்ரி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றனர்.'' நூல்: புகாரி, முஸ்லிம், கன்ஸுல் உம்மால், பாகம்-11, பக்கம்-138.

ان ناسا من أمتي سيماهم التحليق يقرؤون القرآن لايجاوز حلاقهم يخرجون من الدين كما يخرج السهم من الرمية ثم لايعودون اليه هم شر الخلق والخليقة.

"எனது உம்மத்திலுள்ள சிலர், அவர்களது அடையாளம் தலையை சிரைப்பதாகும். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். ஆனால் அது அவர்களின் தொண்டைக் குழிக்குக் கீழே இறங்காது. அவர்கள் வில்லிலிருந்து பாய்ந்து செல்லும் அம்பைப்போல் மார்க்கத்திலிருந்து வெளியேறிப் போய் விடுவார்கள். அதன்பின் அவர்கள் இஸ்லாத்தின் பக்கமாக மீளவே மாட்டார்கள். அவர்கள் படைப்புக்களிலேயே மிகவும் மோசமானவர்கள் என்பதோடு இயற்கை அமைப்பிலேயே அவர்கள் கொடியவர்களாகும் என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நவின்றதாக ஹழ்ரத் அபூதர் கபாரி ரழியல்லாஹு

*அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றனர்.''* நூல்: கன்ஸுல் உம்மால், பாகம்-*11*, பக்கம்-*139*.

يخرج قوم من أمتي يقرؤون القرآن ليس قرائتكم الى قرائتهم بشيئ ولا صلاتكم الى صلاتهم بشيئ ولاصيامكم الى صيامهم بشيئ يقرؤون القرآن يحسبون أنه لهم وهو عليهم لاتجاوز صلاتهم تراقيهم يمرقون من الاسلام كما يمرق السهم من الرمية.

*''எனது சமுதாயத்தில் ஒரு கூட்டம் வெளியாகும். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள் அவர்கள் ஓதுவதை உங்களுடைய ஓதுதலோடும், அவர்களுடைய தொழுகையை உங்களுடைய தொழுகையோடும், அவர்களுடைய நோன்பை உங்களுடைய நோன்போடும் நீங்கள் ஒப்பிட்டுப் பார்ப்பீர்களேயானால் உங்களுடைய வணக்கங்களை நீங்கள் அற்பமானதாகப் பார்ப்பீர்கள். அத்துடன் குர்ஆன் அவர்களுக்கு சாதகமாக இருக்கும் என்ற எண்ணத்தில் அதை அவர்கள் ஓதுகின்றனர். ஆனால் அது அவர்களுக்கு பாதகமாகவே இருக்கும். இன்னும் அது அவர்களுடைய தொண்டைக் குழிக்குக் கீழே இறங்காது. வில்லில் இருந்து அம்பு பாய்ந்து செல்வதைப் போல் அவர்கள் இஸ்லாத்தை விட்டும் வெளியேறிப் போய் விடுவார்கள் என்பதாக அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நவின்றதை ஹழ்ரத் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் அறிவிக்கின்றனர்.''*

நூல்: முஸ்லிம் ஷரீப், கிதாபுஸ் ஸகாத், பாபுத் தஹ்ரீழி அலா கத்லில் கவாரிஜி, இக்மால், பாகம்-*3*, பக்கம்-*618*.

ஆக இதுவரை மேற்கூறப்பட்ட நபிமொழிகளைப் பார்த்த நீங்கள், இவையனைத்தும் ஹழ்ரத் ஸெய்யிதுனா அலிய்யுன் கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களின் காலத்திலிருந்த கவாரிஜிய்யீன்களைக் குறித்து சொல்லப்பட்டவைகளல்லவா என யோசிக்கலாம். நீங்கள் யோசிப்பது ஒருவகையில் நியாயமானது தான். அதே நேரம் கவாரிஜிய்யீன்கள் என்போர் நமக்குமுன் வாழ்ந்த ஓர் கூட்டத்தார் என்பதை தெரிந்து கொண்டுள்ள நீங்கள் அவர்கள் எதற்காக இத்தனை எதிர்ப்புக்களுக்கு ஆளாயினர் என்பதையெல்லாம் நீங்கள் தெரிந்து கொள்ளாத காரணத்தால் தான் இப்படியெல்லாம் யோசிக்கிறீர்களென்று நினைக்கிறோம். ஆதலால் இன்றுள்ளோரின் நடவடிக்கைகளை ஆழமாக நீங்கள் சிந்திப்பீர்களேயாயின் அவர்களுக்கும் இவர்களுக்குமிடையே கவாரிஜிய்யீன்கள் என்னும் பெயர் மட்டுமே மாறிப் போயுள்ளதே தவிர



மற்றபடி இரு சாராரின் நடவடிக்கைகளும் ஒரே மாதிரியாகத்தான் அமைந்துள்ளது என்பதை சிந்திக்கின்ற நீங்கள் தாமாகவே ஏற்றுக் கொள்வீர்கள் என்பதில் நமக்கு எவ்விதச் சந்தேகமும் இல்லை. அவ்வாறின்றி இதை நீங்கள் ஏற்க மறுப்பீர்களேயாயின்,...

''தொண்டைக் குழிக்குக்கீழே இறங்காமல் குர்ஆனை அவர்கள் வாயளவில் மட்டுமே ஓதிக் கொண்டிருப்பர் என்னும் அக்கூட்டம் தஜ்ஜாலுடைய வருகைவரை தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும்'' என்னும் நபிமொழியையும்,...

*''அக்கூட்டத்தில் இறுதியானவன் கொடியோன் தஜ்ஜாலாகும்''* என்னும் நபிமொழியையும் பொய்யாக்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு ஆளாக நேரிடும் என்பதை நாம் எச்சரிக்கிறோம். அடுத்து,...

وكان إبن عمر رضى الله عنهما يراهم شرار خلق الله وقال: انهم انطلقوا الى آيات نزلت فى الكفار فجعلوها على المؤمنين.

*''ஹழ்ரத் ஸெய்யிதுனா அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கவாரிஜிய்யீன்களை படைப்புக்களிலேயே மிகக் கெட்டவர்களாக கருதினர். காரணம் நிச்சயமாக அவர்கள் காபிர்களைக் குறித்து இறக்கப்பட்ட திருமறை வசனங்களை முஃமின்கள் மீது திருப்புகின்றவர்களாக இருந்தனர் எனக் கூறுகின்றனர்.''* நூல்: புகாரி. மேலும்,...

يحرفون معانيه وتأويله

*''(இந்த கவாரிஜிய்யீன்கள்) திருமறைக்குரிய பொருட்களை மட்டுமல்ல. அதன் விளக்கங்களையும் சூரையாடுபவர்களாகும்.''*

நூல்: ஷரஹ் முஸ்லிம், இமாம் நவவி, கிதாபுஸ் ஸகாத்.

மேற்கண்ட விளக்கத்தைக் கொண்டு தற்போதுள்ள சுன்னத் வல் ஜமாஅத்தைத் தவிரவுள்ள அனைத்து இயக்கங்களும் காபிர்களைப் பற்றி இறக்கப்பட்ட வசனங்களையெல்லாம் அல்லாஹ்வின் நல்லடியார்கள் மீது திருப்புவதன் மூலம் முஃமின்களை எல்லாம் முஷ்ரிக்குகளாக ஆக்குவதையும், திருமறை வசனங்களுக்குரிய பொருட்களுக்கும் விளக்கங்களுக்கும் வேத வியாக்யானிகளால் தரப்பட்டுள்ள கருத்துக்களையும் விளக்கங்களையும் ஒதுக்கி விட்டு தன்னிச்சையான பொருள் தரக்கூடியவர்களாகவும் இருக்கின்றனர். எனவே இப்போதுள்ள இயக்கங்களனைத்தும் கவாரிஜிய்யீன்களின் அவதாரங்கள் தானென்பதை தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். அதனால் தான் மேற்கூறப்பட்ட நபிமொழிகள் அனைத்தும் இவர்களையும் சாரும் என்பதாக நாம்

விளக்கமளிக்கிருேம். பின்னும் எமது இவ்விளக்கமானது இலங்கை மற்றும் இந்திய தேசத்துடைய உலமாக்களின் சுய விளக்கம் என்னும் குற்றச்சாட்டை முறியடிக்கவே குவைத் நாட்டின் முன்னுள் அமைச்சரான அஸ்ஸெய்யிது ஹாஷிம் அர்ரிபாயி என்பார் ''நஜ்திய உலமாக்களுக்கோர் உபதேசம்'' என்னும் தமது நூலின் 53ம் பக்கத்தில்,...

تعملون عمل الخوارج فاذاجائكم احد من المسلمين و خاصة طلبة العلم تبدؤون في عقيدته أصحيحة عندكم أم لا ما تقول في كذا؟ و كذا-----واين الله؟

*''நஜ்தின் உலமாக்களே! நீங்களெல்லாம் கவாரிஜிய்யீன்கள் செய்ததைத்தான் செய்கிறீர்கள். அதனுல் தான் உங்களிடம் வருகைதரும் இஸ்லாமியரிடம் அதிலும் குறிப்பாக மாணவர்களிடம் காணப்படும் கொள்கை விளக்கம் உங்களின் கொள்கை விளக்கத்திற்கு இசைந்ததாக இருக்கின்றதா? என்பதை பரிசோதித் துப் பார்ப்பதோடு அல்லாஹ் எங்கே இருக்கிருன்? என்பது போன்ற குதர்க்கத்தனமான கேள்விகளை எல்லாம் கேட்கிறீர்கள்''* எனக் கூறியுள்ளது கவனிக்கத்தக்க ஒன்ருகும். அத்துடன் சுன்னத் வல் ஜமாஅத்தைத் தவிரவுள்ள ஏனைய பெயர் மாற்றம் செய்யப் பட்ட இயக்கங்களனைத்தும் கவாரிஜிய்யீன்கள் தான் என்பது உலகிலுள்ள நல்லோர் அனைவரின் ஏகோபிக்கப்பட்ட முடிவாகும். அதனுல் தான் அஸ்ஸெய்யிது முஹம்மத் அலவிய்யுல் மாலிகி அவர்களும் தமது ''*மபாஹீம் யஜிபு அன் துஸஹ்ஹஹ*'' என்னும் நூலின் 178ம் பக்கத்தில் தபர்ருக் சம்பந்தமாகச் சொல்லி விட்டு அதனை கவாரிஜிய்யீன்களின் அபிப்பிராயத்திலிருந்தும் பித்அத்திகளிடமிருந்தும் பாதுகாக்குமாறு அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றனர். அதாவது தபர்ருக் சம்பந்தமான விஷயங்களை மறுப்பவர்கள் கவாரிஜிய்யீன்கள் எனக் கூறுகிருர். எனவே தற்போதுள்ள இயக்கங்களெல்லாம் பல்வேறு பெயர்களில் பல தரப்பட்ட இடங்களிலிருந்து தோற்றமெடுத்தாலும் இவர்களுக்கெல்லாம் மூலகர்த்தாக்களாக விளங்கியவர்கள் இப்பூமியின் எந்தப் பிரதேசத்திலிருந்து வெளிப்பட்டார்கள் என்பதை அடுத்து வரும் நபிமொழிகள் வெளிப்படுத்துவதைப் பாருங்கள்.

يخرج قوم من قبل المشرق يقرؤون القرآن لايجاوز تراقيهم يمرقون من الدين كما يمرق السهم من الرمية ثم لايعودون فيه حتى يعود



السهم الى فوقه سيماهم التحليق.

*''கிழக்குப் பிரதேசத்திலிருந்து ஒரு கூட்டம் வெளிப்படும். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். ஆனுல் அது அவர்களின் தொண்டைக் குழிக்குக் கீழே இறங்காது. வில்லிலிருந்து அம்பு பாய்ந்து செல்வதைப் போல அவர்கள் மார்க்கத்தை விட்டும் வெளியேறிப் போய் விடுவார்கள். எவ்வாறு வில்லை விட்டுச்சென்ற அம்பு மீண்டும் வில்லுக்குத் திரும்பாதோ அவ்வாறே அவர்களும் மார்க்கத்திற்குத் திரும்ப மாட்டார்கள். இன்னும் அவர்களின் அடையாளமானது தலையை சிரைப்பதாகும்.''*

நூல்: கன்ஸுல் உம்மால், பாகம்-11, பக்கம்-143.

يخرج من المشرق اقوام محلقة رؤوسهم يقرؤون القرآن لايعدو تراقيهم يمرقون من الدين كما يمرق السهم من الرمية.

*''கிழக்கிலிருந்து பல கூட்டம் வெளிப்படும். அவர்கள் தமது தலையை சிரைத்திருப்பர். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். ஆனுல் அது அவர்களின் தொண்டைக் குழிக்குக் கீழே இறங்காது. வில்லில் இருந்து அம்பு பாய்ந்து விரைந்தோடுவதைப் போல மார்க்கத்தை விட்டும் அவர்கள் வெளியேறி விடுவார்கள்.''*

நூல்: கன்ஸுல் உம்மால், பாகம்-11, பக்கம்-143.

يخرج قوم من قبل المشرق يقرؤون القرآن لايجاوز تراقيهم كلما قطع قرن نشأ قرن حتى يخرج في بقيتهم الدجال.

*''கிழக்கிலிருந்து ஒரு கூட்டம் வெளியாகும். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். அது அவர்களின் தொண்டைக் குழிக்குக் கீழே இறங்காது. ஒவ்வொரு கூட்டமும் மறையும் தருவாயில் இன்னெரு கூட்டம் தோற்றம் எடுக்கும். இவ்வாறு அவர்கள் தஜ்ஜால் வெளிப்படும்வரை தோன்றிக் கொண்டிருப்பார்கள்.''*

நூல்: முஸ்னத் அஹ்மத், பாகம்-2, பக்கம்-692. எண்: 6952., முஸ்னத் அப்திர்ரஸ்ஸாக், எண்: 20790.

أن رسول الله صلى الله عليه وآله وسلم قال: وهو مستقبل المشرق: ها إن الفتنة ههنا ها إن الفتنة ههنا من حيث يطلع قرن الشيطان.

*''அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கிழக்குத் திசையை முன்னேக்கி நின்றவர்களாக இங்கிருந்து தான்*

ஷைத்தானுடைய கொம்பு உதயமாகும். இங்கிருந்து தான் குழப்பம் தோன்றும். இங்கிருந்து தான் குழப்பம் தோன்றும். இங்கிருந்து தான் குழப்பம் தோன்றும் எனக் கூறினர்." நூல்: முஸ்லிம் ஷரீப், கிதாபுல் பிதன், இக்மால், பாகம்-8, பக்கம்-447.

خرج رسول الله صلى الله عليه وآله وسلم من بيت عائشة رضى الله عنها فقال: رأس الكفر من ههنا من حيث يطلع قرن الشيطان يعنى المشرق.

"உம்முல் மு..மினீன் அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா வின் இல்லத்திலிருந்து வெளிவந்த வாய்மையுள்ள வள்ளல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கிழக்குத் திசையை சுட்டிக் காட்டி ஷைத்தானுடைய கொம்பு வெளிப்படுவதைக் கொண்டு இங்கிருந்து தான் கு..ப்ரின் தலைமைபீடம் வெளியாகும் என்றனர்."

நூல்: முஸ்லிம் ஷரீப், கிதாபுல் பிதன், இக்மால், பாகம்-8, பக்கம்-447.

أن النبي صلى الله عليه وآله وسلم قام الى جنب المنبر فقال: الفتنة ههنا الفتنة ههنا من حيث يطلع قرن الشيطان.

"அருமை நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மிம்பரின் அருகில் நின்றவர்களாக ஷைத்தானுடைய கொம்பு வெளிப்படுவதைக் கொண்டு குழப்பம் இங்கிருந்து தான், குழப்பம் இங்கிருந்து தான் எனக் கூறினார்கள்." நூல்: புகாரி ஷரீப், பத்ஹுல்பாரி, பாகம்-13, பக்கம்-49.

قام النبي صلى الله عليه وآله وسلم خطيبا فاشار نحو مسكن عائشة رضي الله عنها فقال: هنا الفتنة ثلاثا من حيث يطلع قرن الشيطان.

"அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் குத்பாவுக்காகத் தயாரான போது அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களது வீட்டின் பக்கமாக சைக்கினை செய்து ஷைத்தானுடைய கொம்பு வெளிப்படுவதைக் கொண்டு இங்கிருந்து தான் குழப்பம் தோன்றும் என்பதாக மூன்றுமுறை சொன்னார்கள்."

நூல்: புகாரி ஷரீப், கிதாபுல் ஜிஹாத், நுஸ்ஹத்துல் காரி, பாகம்-6, பக்கம்-318.

سمعت رسول الله صلى الله عليه وآله وسلم يشير بيده نحو المشرق



ويقول: ها إن الفتنة ههنا ها إن الفتنة ههنا ها إن الفتنة ههنا ثلاثا حيث يطلع قرنا الشيطان.

"ஷைத்தானுடைய இரு கொம்பு வெளிப்படுவதைக் கொண்டு குழப்பம் இங்கிருந்து தான் வெளியாகும். குழப்பம் இங்கிருந்து தான் தோற்ற மெடுக்கும். குழப்பம் இங்கிருந்து தான் உருவாகும் என்பதாக மூன்று முறை கிழக்குத் திசையை நோக்கி தங்களின் முபாரக்கான கரத்தைக் கொண்டு சைக்கினை செய்தார்கள்."

நூல்: முஸ்லிம் ஷரீப், இக்மால், பாகம்-8, பக்கம்-447.

يخرج قوم من المشرق حلقان الرؤس يقرؤون القرآن لايجاوز حناجرهم طوبى لمن قتلوه وطوبى لمن قتلهم.

"கிழக்குத் திசையிலிருந்து தலையை சிரைத்துள்ள கூட்டமொன்று தோன்றும். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். அது அவர்களின் தொண்டைக் குழிக்குக் கீழே இறங்காது. அவர்களை கொல்லுவோருக்கே சோபனம் என்பதாக ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் கள் நவின்றார்கள்." நூல்: தாரீக் திமஷ்குல் கபீர், பாகம்-25, பக்கம்-278.

يخرج ناس من المشرق يقرؤون القرآن لايجاوز تراقيهم كلما قطع قرن نشأ قرن حتى يكون آخرهم يخرج مع مسيح الدجال.

"கிழக்குத் திசையிலிருந்து சிலர் வெளிப்படுவார்கள். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். ஆனால் அது அவர்களின் தொண்டைக் குழிக்குக் கீழே இறங்காது. அவர்களில் இறுதி மனிதன் தஜ்ஜாலுடன் இணையும் வரை அவர்கள் தோன்றிக் கொண்டிருப்பார்கள்."

நூல்: கன்ஸுல் உம்மால், எண்: 31244.

يخرج من قبل المشرق قوم يقرؤون القرآن لايجاوز تراقيهم يمرقون من الدين كما يمرق السهم من الرمية.

"கிழக்குப் பக்கமிருந்து வெளிப்படும் கூட்டமானது, அவர்கள் குர்ஆனை ஓதுவர். ஆனால் அது அவர்களின் தொண்டைக் குழிக்குக் கீழே தாண்டாது. அத்துடன் அவர்கள் வில்லிலிருந்து அம்பு விரைந்தோடுவதை போல மார்க்கத்திலிருந்து வெளியேறிப் போய் விடுவார்கள்."

நூல்: கன்ஸுல் உம்மால், பாகம்-11, பக்கம்-205.

மேற்கண்ட நபிமொழிகள் அனைத்தும் இன்று நாம் கண்கூடா
கக் கண்டு கொண்டுள்ள பிரச்சனைகள் அனைத்துக்கும் அடித்தள
மான புண்ணிய பூமியான மதீனா முனவ்வராவின் கிழக்குப் பகுதி
யிலிருந்து தான் தோன்றியது என்பதைத் தெளிவுபடுத்துவதோடு
அவர்கள் தமீமுடைய வம்சத்தைச் சார்ந்தவர்கள் தான் என்பதை
யும் தெளிவுபடுத்தி விட்டது. இனி அக்கூட்டத்தார் எந்த பெயரை
கொண்ட கூட்டத்தினரை முன்மாதிரியாக கொண்டவர்கள் என்ப
தையும், அடுத்து கிழக்குப் பிரதேசத்தின் எந்த ஊரிலிருந்து அது
தோன்றியது என்பதையும் அடுத்து வரும் ஹதீஸ் எத்தனை துல்லி
யமாக நமக்கு எடுத்துக்காட்டுகிது என்பதை இப்போது பாருகள்.

عن شريك بن شهاب قال: كنت أتمنى أن القى رجلا من اصحاب النبي صلى الله عليه وآله وسلم يحدثني عن الخوارج فلقيت ابا برزة في يوم عرفة في نفر من اصحابه فقلت: يا ابا برزة حدثنا بشيئ سمعته من رسول الله صلى الله عليه وآله وسلم يقوله فى الخوارج؟ فقال: أحدثك بما سمعت أذني ورأت عيناي أتي رسول الله صلى الله عليه وآله وسلم بدنانير فكان يقسمها وعنده رجل اسود مطموم الشعر عليه ثوبان ابيضان بين عينيه اثر السجود فتعرض لرسول الله صلى الله عليه وآله وسلم فاتاه من قبّل وجهه فلم يعطه شيئا فاتاه من قبل يمينه فلم يعطه شيئا فاتاه من قبل شماله فلم يعطيه شيئا ثم اتاه من خلفه فلم يعطيه شيئا فقال: والله يا محمد (صلى الله عليه وآله وسلم) ماعدلت منذ اليوم فى القسمة فغضب رسول الله صلي الله عليه وآله وسلم غضبا شديدا ثم قال: والله لاتجدون بعدي احدا اعدل عليكم مني قالها ثلاثا - ثم قال: يخرج من قبل المشرق رجال كان هذا منهم هديهم هكذا يقرؤون القرآن لايجاوز تراقيهم يمرقون من الدين كما يمرق السهم من الرمية لايرجعون اليه ووضع يده على صدره سيماهم التحليق لايزالون يخرجون حتى يخرج آخرهم فإذا رأيتموهم فاقتلوهم قالها ثلاثا شر الخلق والخليقة قالها ثلاثا.



"ஹழ்ரத் ஷரீக் இப்னு ஷிஹாப் ரழியல்லாஹுு அன்ஹுு அவர்கள் கூறுகின்றனர். அருமை நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லமவர்களின் தோழர் பெருமக்களில் எவரையேனும் சந்தித்து கவாரிஜிய்யீன்களை பற்றி கேட்க வேண்டுமென ஆவல் கொண்டிருந்தேன். அது அரபாவுடைய தினத்தன்று அபூ ஸுர்ஆ என்னும் நபித்தோழரை சந்தித்த போது நிவர்த்தியாயிற்று. நான் அவரிடம் கவாரிஜிய்யீன்களை பற்றி அருமை நாயகம் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லமவர்கள் கூறியுள்ளதை எனக்குச் சொல்லித் தாருங்களென்று கேட்டேன். அதற்கவர்; எனது இவ்விரு செவிப்புலன்கள் கேட்டதையும் இரு கண்கள் கண்டதையும் கூறுகிறேன் என்றுசொல்லி கூறத்துவங்கினார்.

ஒருமுறை நாயகம் ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லமவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட திர்ஹங்கள் சிலவற்றை நபியவர்கள் பங்கீடு செய்து கொண்டிருந்தனர். அப்போது அங்கே அமர்ந்திருந்தவர்களில் கருப்பு நிறமும், தலைமுடி பின்னப்பட்டிருந்தவரும், வெண்மையான ஆடை அணிந்திருந்தவரும், இரு கண்களுக்கும் இடையில் ஸுஜூதுடைய அடையாளத்தை கொண்டிருந்தவருமாகிய ஒருவர் நபியவர்களை நாலாபக்கமும் சுற்றி வந்தவராக தனக்கும் ஏதாவது கிடைக்குமென்ற எண்ணத்தில் சென்று பார்த்தார். எதுவும் கிடைக்கவில்லை. அதனால் அவர் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்தவராக நபியவர்களின் திருப்பெயரை சொல்லி அழைத்து, நீர் நீதமாக பங்கீடு செய்யவில்லை என்று கூறினார்.

அதுகேட்ட நபியவர்கள் சினம் கொண்டவர்களாக எனக்குப்பின் என்னைவிட நீதமாகப் பங்கீடு செய்யும் ஒருவரை பெற்றுக் கொள்ளவே மாட்டீர்கள் என்பதாக அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு மூன்றுமுறை சொல்லிவிட்டு,...

கிழக்குப் பிரதேசத்திலிருந்து இவனைபோன்ற பலர் தோன்றுவார்கள். இவனும் அவர்களில் நின்றுமுள்ளவன் தான். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள் ஆனால் அது அவர்களின் தொண்டைக் குழிக்குக் கீழே இறங்காது. வில்லை விட்டு விரைந்தோடும் அம்பைப்போல அவர்கள் மார்க்கத்தை விட்டும் வெளியேறி விடுவார்கள். பின்னும் வில்லை விட்டு வெளியேறிய அம்பு எவ்வாறு மீண்டும் வில்லுக்குத் திரும்பாதோ அவ்வாறு அவர்கள் மார்க்கத்திற்கு திரும்ப மாட்டார்கள் எனக் கூறியவர்கள், தமது முபாரக்கான திருக்கரத்தை தங்களின் முபாரக்கான நெஞ்சின்மீது வைத்தவர்களாக அவர்களின் அடையாளம் தலையை சிரைப்பதாகும். அவர்களில் இறுதியானவன் தஜ்ஜாலுடன் இணையும்

**வரை தொடர்ந்து தோன்றிக்கொண்டே இருப்பார்கள். அவர்களை நீங்கள் சந்திப்பீர்களாயின் கொன்று விடுங்கள். ஏனெனில் அவர்கள் பிறவியிலேயேமிகக் கொடியவர்களாகும் என்று மூன்று முறை மொழிந்தார்கள்."** (நூல் : முஸ்னத் அஹ்மத், பாகம் - 6, பக்கம் - 662. முஸ்னத் தயாளிசி, எண் - 923, நஸாயி குப்ரா, பாகம் - 2, பக்கம் - 312, எண்-3566.

ஆக இதுவரை எடுத்துக் காட்டப்பட்ட தகவல்கள் அனைத்தும் இஸ்லாமிய மார்க்கத்திற்குள் நவீனமாகத் தோன்றும் கொள்கை விளக்கத்திற்குரிய பிரச்சனைகள் புண்ணிய பூமியான மதீனா முனவ்வராவின் கிழக்குப் பகுதியிலிருந்து தான் தோன்றும் என்பதை தெளிவுபடுத்துவதோடு இப்படியெல்லாம் எச்சரிக்கை செய்யப் படுவதற்கு நபியவர்களின் அத்திருச்சபையில் தனது சுய லாபத் திற்காக கலிமாச் சொல்லி உள்ளுக்குள்ளேயே அல்லாஹ் ரஸூலின் விரோதியாக இருந்த ஒருவன்தான் காரணம் என்பதையும், அவனும் கிழக்குப் பிரதேசத்தைசேர்ந்தவனாகத்தான் இருந்துள்ளான் என்பதையும் மிகத் துல்லியமாக நமக்கு விளக்கிக் காட்டுகிறது.

இதில் புண்ணிய பூமியான மதீனா முனவ்வராவின் கிழக்குப் பிரதேசத்தை நாம் நமது ஆய்வுக்கு எடுப்போமாயின் அரபு மண்ணில் ஒரேயொரு மாகாணத்தைத் தவிர மற்ற பகுதிகளில் வாழ்ந்த ஜனங்களில் ஒருவர்கூட நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் காலத்தில் இஸ்லாத்தை ஏற்றவர் களாக இருக்கவில்லை என்பது புத்தியுள்ளோர்கள் புரிந்து கொண் டுள்ள ஒன்றாகும்.

இவ்வாறே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் களை தமது முகக் கண்களால் காணும் பேறுபெற்ற கிழக்குப் பகுதியில் அமைந்திருந்த அந்த ஒரேயொரு அரபுப் பகுதியிலுள்ள மாகாணத்திலிருந்து தோன்றிய பிரச்சனை தான் இன்றும் அந்தக் கிழக்குப் பிரதேசம் முழுவதையும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருப்பதை நாம் பார்க்கலாம். இப்படிப்பட்ட ஓர் பாதிப்பு ஏற்படும் என்பதால் தான் நமக்கெல்லாம் உயிருக்குயிராக விளங்கும் வள்ளல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அப்போதே பல்வேறு வகையிலும் நம்மை எச்சரித்தார்கள்.

வரலாற்றில் முக்கியமான இடத்தை பெற்றுள்ள அந்த அரபு மாகாணத்திலிருந்து தோன்றிய அப்பிரச்சனை அதை ஒட்டியுள்ள



பகுதிகளையும் பாதித்ததோடு புதுப்புது வகையான குழப்பங்களை யும் எதிர்கொள்ள வைத்ததென்பதை நாம் மறுக்க முடியாது. இதனால் அவ்வூரில் ஏற்பட்ட பாதிப்பைவிட அது பிரதிபலித்த பகுதிகளில் தான் அது மிகப்பெரும் பாதிப்பை ஏற்படுத்திற்று என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதற்காக பாதிப்பின் தாக்கத்தை கொண்டிருந்த பிறபகுதிகளையெல்லாம் குழப்பத்திற்குரிய பிரதேசங்களென்பதாக சிலர் பிரகடனப்படுத்து வது மாபெரும் தவறாகும்.

மேலும் நாம் இந்நூலின் மூலமாக உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்பும் விஷயம் என்னவெனில், இஸ்லாத்தின் துவக்க காலம்தொட்டு இன்றுவரை உள்ள கொள்கை விளக்கப் பிரச்சனைகளுக்கெல்லாம் அடித்தளமாக எந்த இடம் அமைந்திருந் தது என்பதை தெளிவு படுத்துவதேயாகும். அத்துடன் அது எந்தப் பிரதேசத்தில் அமைந்திருந்தது என்பதை குறித்த திருமறை வசனங்களுக்கு தகாத, சுயமான விளக்கங்கள் சொல்லப்பட்ட தோடு, அவ்வசனங்கள் குறித்துக் காட்டும் யதார்த்தமான கருத்துக் களை புறக்கணித்து தாங்கள் விரும்பிய கருத்துக்களை திணிக்க முற்பட்டதுமே காரணமாகும் என்பதை நினைவில் கொள்ளல் மிக மிக அவசியமாகும். அடுத்து அருமை நபியவர்களின் இன்னொரு ஹதீதைப் பாருங்கள்.

عن ابى سعيد رضى الله عنه قال بعث علي رضى الله عنه الى النبي صلى الله عليه وآله وسلم بذهيبة فقسمها بين الاربعة: الاقرع بن حابس الحنظليّ ثم المجاشعيّ وعيينة بن بدر الفزاريّ وزيد الطائي ثم احدبنى نبهان وعلقمه بن علاثة العامري ثم أحد بنى كلاب فغضبت قريش والانصار قالوا: يعطي صناديد أهل نجد ويدعنا قال: (إنما أتألفهم) فأقبل رجل غائر العينين مشرف الوجنتين كث اللحية محلوق الرأس فقال: إتق الله يامحمد (صلى الله عليه وآله وسلم) فقال: من يطع الله إذا عصيت أيامنني الله على اهل الارض فلا تأمنوني فسأله رجل قتله أحسبه خالد بن وليد فمنعه فلما ولي قال: إن من ضئضئى هذا او في عقب هذا قوم يقرؤون القرآن لايجاوز

حناجرهم يمرقون من الدين مروق السهم من الرمية يقتلون اهل الاسلام ويدعون أهل الاوثان لئن أدركتهم لاقتلنهم قتل عاد.

"ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருச்சபைக்கு சிறிது தங்கத்தை அனுப்பியிருந்தனர். அதை நபியவர்கள் (1) அக்ரஃ பின் ஹாபிஸ் (2) உயைனா பின் பத்ர் (3) ஸைத் அத்தாயி (4) அல்கமா பின் உலாஸா அல் ஆமிரிய்யு என்னும் நான்கு குழுவினருக்கும் பங்கீடு செய்தார்கள். அதனால் கோபமுற்ற குறைஷிகளும் அன்ஸாரிகளும் எங்களுக்குத் தராமல் நஜ்துடைய பகுதியைச் சேர்ந்த தலைவர்களுக்கே பங்கீடு செய்து விட்டீர்களே என்றனர். அதுகேட்ட நபியவர்கள்; நஜ்துடைய பெரியார்களின் உள்ளங்களை சந்தோஷப்படுத்தி அவர்களை கவர வேண்டுமென்னும் நோக்கத்தில் தான் அவ்வாறு செய்தேன் என்றனர்.

அப்போது குழிவிழுந்த கண்களையுடைய, உயர்ந்த நெற்றியுள்ள, கன்னம் தடித்த, அடர்த்தியான தாடியைக் கொண்ட, தலைமுடியை சிரைத்த ஒருவன், முஹம்மதே! (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அல்லாஹ்வை அஞ்சும் என்றான். அதுகேட்ட நபியவர்கள் நான் அல்லாஹ்வுக்கு மாறு செய்தால் அல்லாஹ்வுக்கு வழிப்படுபவர் வேறு யார் என்றும், இப்பூமியிலுள்ள அனைவருக்கும் அல்லாஹ் என்னை நம்பிக்கையாளனாக அனுப்பியிருக்கும் போது நீர் என்னை நம்பிக்கையாளனாக ஏற்றுக்கொள்ளவில்லையா? என்றுசொல்ல, அப்போது அருகில் இருந்த காலித் பின் வலீத் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அவனை கொல்லுவதற்கு அனுமதி கோர நபியவர்கள் தடுத்து விட்டார்கள்.

அதன்பின் அவன் அவ்விடத்தை விட்டுச் சென்றபிறகு நபியவர்கள், இவனுடைய வம்சத்திலிருந்து ஒரு கூட்டம் தோன்றும். அவர்கள் குர்ஆனை ஓதுவார்கள். ஆனால் அது அவர்களின் தொண்டைக் குழிக்குக் கீழே இறங்காது. வில்லில் இருந்து வெளியாகும் அம்பைப்போல் அவர்கள் இஸ்லாத்தை விட்டும் வெளியேறிப் போய் விடுவார்கள். மேலும் அவர்கள் விக்ரஹத் தொழும்பர்களை விட்டு விடுவார்கள். முஸ்லிம்களை கொலை செய்வார்கள். அவர்களை நான் ஒருவேளை சந்திப்பேனாயின் ஆதுடைய சமூகத்தார் கொல்லப்பட்டதைப் போல அவர்களை கொல்வேன் என்றனர்." நூல்: புகாரி ஷரீப், பாகம்-2, பக்கம்-645., முஸ்லிம் ஷரீப், கிதாபுஸ் ஸகாத், பாபு திக்ரில் கவாரிஜி, இக்மால், பாகம்-3, பக்கம்-606.

கொடியோர்களான கவாரிஜிய்யீன்கள் கிழக்குப் பகுதியில்



அமைந்துள்ள நஜ்த் என்னும் மாகாணத்திலிருந்து தான் வெளிப்படுவார்கள் என்பதை மேற்கண்ட நபிமொழி நமக்குத் தெளிவாக விளக்கிக் காட்டி விட்டது. அத்துடன் நஜ்த் என்பது அரபுப் பிரதேச மாகாணங்களில் ஒன்றென்பதையும் அம்மாகாணத்தை சார்ந்தவர்களில் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருக்கரத்தை பற்றி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட ஸஹாபாக்களும் இருக்கத்தான் செய்தனர் என்பதையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

அதன்றி அந்த நஜ்த் மாகாணமும் அங்கே வாழ்ந்த மக்களும் பல்வேறு பிரச்சினைகளை எல்லாம் சந்திக்க நேரிடும். அங்கிருந்து தான் கவாரிஜிய்யீன்கள் என்போர் தோன்றுவார்கள் என்பதெல்லாம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு தெரிந்திருந்ததால் தான் அப்பகுதியை சேர்ந்த தலைவர்களை சந்தோஷப்படுத்தி அவர்களோடு ஒரு நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டால் அடுத்து வரப்போகும் பிரச்சினைகள் சிறிது தளருவதற்குரிய வாய்ப்பு ஏற்படும் என்னும் ஆதங்கத்தில் தான் தனது நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்த குறைஷிகளுக்கும் அன்ஸாரிகளுக்கும் அப்பொருளை பங்கிடாமல் நஜ்துடைய தலைவர்களுக்கு பங்கீடு செய்தார்கள் நபியவர்கள்.

இதைக் கண்ணுற்ற அவன், நஜ்தை சேர்ந்த மக்கள் நம்பிக்கைக்குரிய நன்மக்களாக, அல்லாஹ் ரஸூலுடைய திருப்பொருத்தத்திற்குரியவர்களாக மாறுவதை விரும்பாததால் நபியவர்களை அவமதிக்கும் நோக்கில் அவர்களின் பெயரைச் சொல்லி அழைத்து உங்களின் எண்ணம் நிறைவேறப் போவதில்லை. ஆகையால் நீங்கள் எல்லோருக்கும் பங்கீடு செய்யுங்கள் என சூசகமாகச் சொன்னான். ஏனெனில் அவனும் ஒரு நஜ்த் வாசியாக இருந்ததே.

எனவே இந்த நஜ்த் மாகாணம் தான் பிரச்சினைகள் அனைத்துக்கும் தலைமை கேந்திரமாகும். இதுதான் வழிகேட்டின் மர்கஸாகும். இங்கிருந்து தோன்றிய அடிப்படைக்குரிய பிரச்சினைகள் காலப் போக்கில் அதன் அருகாமையில் இருந்த ஈராக்கில் ஒருபெரும் பேராபத்தை ஏற்படுத்திற்று. ஈராக்கில் அன்று ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு நஜ்த் தான் அடித்தளம் இட்டதென்பதை மூடிமறைக்க இன்று ஒரு கூட்டம் முயற்சித்துக் கொண்டிருக்கிறது. காரணம் உண்மையை மூடி மறைப்பதுதான் இவர்களின் பிறவிக் குணமாகும்.

அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்

களின் திருக்கரம் பற்றி இஸ்லாத்தை ஏற்றவர்களில் நஜ்துப் பகுதியை சேர்ந்தவர்களும் இருந்தனர். அவர்களும் கவாரிஜிய்யீன்களின் வெளிப்பாடு, குப்ரின் தலைமைபீடம், குழப்பங்களின் மர்கஸ், ஷைத்தானின் கொம்பு போன்றவை வெளிப்படப் போகும் இடம் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள நஜ்த் தான் என்பதை நன்கு தெரிந்தே வைத்திருந்தனர். அத்துடன் அதற்கான காரணங்களையும் அவர்கள் புரிந்து கொண்டிருந்தனர்.

அதுமட்டுமா! புனித இஸ்லாம் அரபு மண்ணில் வேரூன்றுவதற்கு முன்னும் பின்னும் நஜ்துடைய பகுதியில் பிரச்சனைகள் தொடர்ச்சியாகக் காணப்பட்டதையும் அத்துடன் நஜ்த் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் வெறுப்புக்கும் இலக்காகிப் போனதையும் அவர்கள் நன்கு அறிந்திருந்தனர். இத்தனைக்குப் பிறகும் அப்பிரதேசம் நல்லோர்கள் வாழும் இடமாக மாற வேண்டுமென்னும் மேலான எண்ணத்தில் அவர்கள் இருந்துள்ளார்கள் என்பதை அடுத்து வரும் அமுத வாக்கு எத்தனை அருமையாக விபரிக்கின்றது என்பதை பாருங்கள்,...

عن عبد الله بن عمر رضى الله عنهما قال: قال رسول الله صلى الله عليه وآله وسلم اللهم بارك لنا في شامنا اللهم بارك لنا في يمننا قالوا وفي نجدنا قال اللهم بارك لنا في يمننا اللهم بارك لنا في شامنا قالوا وفي نجدنا يا رسول الله صلى الله عليه وآله وسلم فأظنه قال فى الثالثة هناك الزلازل والفتن وبها يطلع قرن الشيطان.

***"யா அல்லாஹ்! எங்களின் ஷாமுக்கும் எமனுக்கும் பரக்கத்துச் செய்வாயாக என ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பிரார்த்தித்தனர். அப்போது அங்கிருந்த தோழர்களில் ஒருவர், எங்களின் நஜ்துக்கும் (அவர் அப்பகுதியை சேர்ந்தவர்) என்று சொல்ல, நபியவர்கள் மீண்டும் இரண்டாவது முறையாக ஷாமுக்கும் எமனுக்கும் பிரார்த்திக்க, அவர்மீண்டும் எங்களின் நஜ்துக்கும் என்றுசொல்ல, நபியவர்கள் மூன்றாம் முறையாக மறுபடியும் ஷாமுக்கும் எமனுக்கும் பிரார்த்திக்க, அவர் மீண்டும் நபியவர்களிடம் எங்களின் நஜ்துக்கும் என்றுசொல்ல, அதுகேட்ட நபியவர்கள்; அங்கிருந்து தான் குழப்பங்களும் பூகம்பங்களும் ஷைத்தானுடைய கொம்பும் உதயமாகும் என்று சொன்னார்கள்."***
*நூல்: புகாரி, திர்மிதி.*

இந்த நபிமொழிக்கு விளக்கமளிக்கும் சிலர் நஜ்தில் வெறும்



குழப்பம் மட்டுமே தோன்றும் எனக்கூறி உண்மையை மறைக்கப் பார்க்கின்றனர். இது தவறாகும். மாறாக இப்போதும் கூட நஜ்தில் பிரச்சனைகளும் குழப்பங்களும் இருப்பதாகத்தான் நபியவர்கள் கூறுகின்றனர். ஆதலால் அது எப்படிப்பட்ட பிரச்சனைகளை அப்போதே சந்தித்துக் கொண்டிருந்தது என்பதை அடுத்து வரும் பக்கங்களில் பார்ப்போம்.

# கல் வைப்பும்
# ஷைகு நஜ்தியின் தோற்றமும்

அருமை நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இவ்வவனியில் மனிதக் கோலம் கொண்டு வெளியாகி தனது 35வது வயதை எய்திய போது குறைஷிகளால் கஃபா புனர் நிர்மானம் செய்யப்பட்டது.

அப்போது கட்டிட வேலைகளெல்லாம் பூர்த்தியானதும் சுவர்க் கத்திலிருந்து இறக்கப்பட்ட ஹஜருல் அஸ்வதுடைய கல்லை வைப்பது யார் என்னும் பிரச்சனையில் கருத்து வேற்றுமை ஏற் பட்டு இறுதியில் அமீனாகிய அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களே தங்களின் புனிதமிகு திருக்கரத்தால் அதை வைக்க வேண்டுமென குறைஷிகள் முடிவெடுத்தனர். அப்போது,...

ان ابليس كان معهم في صورة شيخ نجديّ وانه صاح باعلى صوته يا معشر قريش أرضيتم أن يضع هذا الركن وهو شرفكم غلام يتيم دون ذوي اسنانكم فكان يثير شرا فيما بينهم.

*"அல்லாஹ்வின் விரோதியாகிய இப்லீஸ் நஜ்த் தேசத்துடைய பெரியாரின் தோற்றத்தில் அச்சபையில் இருந்தான். (அப்போது மக்காவைச் சார்ந்தோரில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களே சிறந்தவர்களென அனைவராலும் கணிக்கப் பட்டதால் இப்படியொரு முடிவு எடுக்கப்பட்டது.) ஆனால் அதனை சகித்துக்கொள்ள முடியாத இப்லீஸ் உரத்த குரலில் சப்தமிட்டு, குறைஷிகளே! உங்களில் மதிப்புக்கு உரியவர்கள் எல்லாம் இருக்கும் போது ஒரு யத்தீமான சிறுவன் அக்கல்லை வைப்பதற்கு முடிவு செய்துள் ளீர்களே! இம்முடிவு நல்லதல்ல. இவர் உங்களிடையே பிரச்சனைகளைத் தோற்றுவிப்பார் என்று சொன்னான்."* நூல்: அஸ்ஸீரத்துன் நபவிய்யா இப்னு ஹிஷாம், அர்ரௌழுல் உன்ப், பாகம்-1, பக்கம்-346. 2:307.



அரபு மண்ணில் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஏகத்துவக் கொள்கையை வெளிப்படுத்து வதற்காக அம்மக்களில் ஒருவராக அனுப்பப்பட்டிருந்ததோடு அங்கிருந்த அனைவராலும் மதிக்கத்தக்க ஒருவராக, போற்றப்படும் புண்ணியராக இருந்த போது நிகழ்ந்த நிகழ்ச்சியாகும் இது. அந்த சந்தர்ப்பத்தில் கூட இப்லீஸ் நஜ்துடைய ஒரு பெரியாரின் தோற்றத்தில் வருகைதந்து,...

மக்கத்து குறைஷிகள் அவர்களை நம்பிக்கையாளர் என்றும், உண்மையாளர் என்றும் ஏற்றுக் கொண்டாலும் கூட நஜ்த் வாசிகள் அதற்கு மாற்றமான எண்ணமுடையோர் தான் என்பதை அப்போதே தெளிவுபடுத்தினன். அத்துடன் நஜ்துவாசிகள் தனது சகாக்கள் தானென்பதையும் ஷைத்தான் தெரிந்து வைத்திருந்தான். அதனால் தான் அப்பகுதியைச் சேர்ந்த மக்களின் அபிப்பிராயம் என்னவென்பதையும் அவன் தெளிவுபடுத்தினன்.

இன்னும் நபியவர்கள் நம்பிக்கையாளர், உண்மையாளர் என்பதை குறைஷிக் காபிர்கள் ஏற்றுக்கொண்டதற்குப் பிறகும் கூட அவ்வாறு நம்பிக்கை கொள்ள நஜ்துவாசிகள் தயாராக இல்லை யென்றால் அவர்கள் நபியவர்களின் எதார்த்தத்தை ஒருபோதும் நம்ப மாட்டார்கள் என்பதையும் அவர்களுடைய தலைவனை ஷைத்தான் தெளிவுபடுத்தி விட்டதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

# தாருன் நத்வாவும் ஷைகு நஜ்தியும்

நபியவர்கள் அல்லாஹ்வின் ஆணைக்கிணங்க மக்காவைச் சேர்ந்த காபிர்களை ஏகத்துவத்தின் பக்கமாக அழைக்கின்றனர். அத்துடன் தான் ஒரு நபியே என்பதையும் தெளிவுபடுத்துகிறுர் கள். அப்போது அவர்களைப் போற்றிப் புகழ்ந்து வந்த நாவுகள் எல்லாம் தூற்றத் துவங்கிற்று. நபியவர்களை இம்சிக்கத் துவங்கி னர். இதனுல் சொல்லொணு துயரங்களுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாக்கப்பட்டார்கள். இறுதியில் மக்காவில் இனியும் வாழ முடியாது என்னும் நிலைக்கு தள்ளப்பட்ட போது,...

இதற்கிடையே இன்னொரு பக்கம் இஸ்லாம் மிக வேகமாக வளர்ந்து வருவதைக் கண்ட முஷ்ரிக்குகள் அந்த வளர்ச்சிக்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்ற எண்ணத்தில் குஸைமா பின் கிலாஃப் என்பானின் இல்லத்தில், உத்பா, ஷைபா, அபூ ஸுஃப்யான், துஅய்மை பின் அத்தி, ஹபீப் பின் முத்யிம், ஹாரிஸ் பின் ஆமிர், அபுல் புக்தரி பின் ஹிஷாம், ரபீஆ பின் அஸ்வத், ஹகீம் பின் ஹிஷாம், அபூஜஹ்ல், நுபைஹ், உமைய்யா, முனப்பஹ் போன்ற தலைவர்களெல்லாம் ஒன்று திரண்டனர்.

وكان ذالك اليوم يسمى يوم الزحمة فاعترضهم ابليس لعنة الله في هيئة شيخ جليل عليه بتّ له فوقف على باب الدار فلما رأوه واقفا على بابها قالوا: من الشيخ قال: شيخ من أهل نجد سمع بالذي اتعد ثم له فحضر معكم ليسمع ماتقولون وعسى ان لايعدمكم منه رأيا ونصحا قالوا: اجل فادخل فدخل معهم.

"அந்தநாளை யௌமுஸ் ஸஹ்மா என்று அழைக்கப்பட்டது. குறைஷித் தலைவர்களெல்லாம் ஒன்று திரண்டபின் அல்லாஹ்வின் விரோதியாகிய இப்லீஸ் மதிப்புக்குரிய ஒரு பெரியாரின் தோற்றத்தில் அவர்கள் திரண்டிருந்த வீட்டின் வாசல்படியில் வந்து நின்று கொண்டி ருந்தான். அவனைக் கண்ட குறைஷித் தலைவர்கள் யார் இந்த பெரியார் என்று வினவ, நான் நஜ்தை சேர்ந்த பெரியார் என்ருன். அத்துடன் அவன், நீங்களெல்லாம் குறிப்பிட்ட ஒருவருக்கு எதிராகத் திரண்டிருப்ப தாகக் கேள்விப்பட்டேன். அவ்விஷயத்தில் நீங்கள் என்ன முடிவு எடுக்கப் போகிறீர்கள் என்பதை தெரிந்து கொள்வதற்காகவும், உங்களின் திட்டம் செயலற்றுப் போய்விடக் கூடாதென்பதற்காகவும் தான் நான் வந்தேன் என்ருன். அதுகேட்ட குறைஷியர்கள், சரி. அப்படியானுல் உள்ளே வாரும் என்றழைக்க, அவனும் உள்ளே வந்து அவர்களோடு சேர்ந்து கொண்டான்."



இவ்வாறு மீண்டும் ஒருமுறை இப்லீஸ் நஜ்துடைய பெரியாரின் தோற்றத்தில் வருகைதந்து குறைஷிக் காபிர்களோடு இணைந்ததைத் தொடர்ந்து அவர்கள் அனைவரும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை என்ன செய்யலாம் என்று ஆலோசனை செய்யத் துவங்கினர்.

قال قائل منهم أحبسوه في الحديد وأغلقوه عليه بابا.

"அப்போது அவர்களில் ஒருவன், அவரைக் கைதுசெய்து ஒரு அறைக்குள் வைத்து பூட்டி விடுவோம் என்ருன்."

قال الشيخ النجدى لا والله ماهذا لكم برأي والله لئن حبستموه كما تقولون ليخرجنّ أمره من وراء الباب الذي اغلقتم دونه الى اصحابه.

"அதைக்கேட்ட நஜ்துடைய அந்த ஷைகு, அல்லாஹ்வின் மீதாணை யாக இது சரியான முடிவல்ல என்ருன். அல்லஹ்வின் மீதாணையாக நீங்கள் அவரைக் கைது செய்து அடைப்பீர்களாயின் அதற்குள் அவருடைய தோழர்கள் நீங்கள் முடிவைத்த அவ்விஷயத்தின் வாயிலை அவர்கள் நிச்சயமாக வெளிப்படுத்தி விடுவார்கள் என்றும் சொன்னுன்."

ثم قال قائل منهم نخرجه من بين اظهرنا فننفيه من بلادنا فإذا خرج عنّا فوالله مانبالي اين ذهب ولا حيث وقع اذا غاب عنا وفرغنا منه فاصلحنا امرنا والفينا كما كانت.

"அதையடுத்து வேறொருவன், நாம் அவரை அவருடைய குடும் பத்தை விட்டுப் பிரித்து நாட்டை விட்டே கடத்தி விடுவோம். அவர் நம்மை விட்டும் விலகிப்போய் விட்டால் அதன்பின் நாம் பயப்படத்

தேவையில்லை. அவர் சம்பந்தமான எண்ணங்களும் நம்மைவிட்டு அகன்றுபோய் நாம் நிம்மதியாக நமது காரியங்களை கவனிக்கலாம் என்றான்.''

قال الشيخ النجدى: لا والله ماهذا لكم برأي الم تروا حسن حديثه وحلاوة منطقه وغلبته على قلوب الرجال بما يأتي به والله لو فعلتم ذالك ما امنتهم أن يحل على حيّ من العرب فيغلب عليهم بذالك من قوله وحديثه حتى يتابعوه عليه.

''இந்த யோசனையும் சரியல்ல எனக் குறுக்கிட்ட நஜ்துடைய ஷைகு, நீங்கள் அவருடைய பேச்சில் இருக்கும் ஈர்ப்புச் சக்தியையும், மனிதர்களின் உள்ளங்களில் அவருடைய பேச்சின் தாக்கத்தையும் இதுவரை பார்க்கவில்லையா என்ன? அல்லாஹ்வின் மீதாணையாக அப்படியொரு முடிவை நீங்கள் எடுப்பீர்களாயின் அவர் அரபியரின் வேறொரு கூட்டத்தாரிடம் சென்று அவர்களுக்கு மத்தியில் பேசுவாராயின் அவரை அம்மக்கள் பின்தொடரும் விஷயத்தில் நீங்கள் அச்சமற்று விட்டீர்களா? என்று சொன்னான்.''

இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையான அபிப்பிராயங்களை சொல்லிக் கொண்டிருக்கும் போது நஜ்துடைய ஷைகு குறுக்கிட்டு இதனால் ஆகப்போவது ஒன்றுமில்லை என ஒவ்வொன்றாக தட்டிக் கழித்துக் கொண்டே இருந்தான். கடைசியாக அங்கே திரண்டிருந்தோரின் தலைவனான அபூஜஹ்ல் அங்கிருந்தோரை நோக்கி,...

فقال ابو جهل بن هشام والله إن لي فيه لرأيا ما اراكم وقعتم عليه بعد قالوا: وما هو يا اباالحكم؟ قال: أرى أن نأخذ من كل قبيلة فتى شابا جليدا نسيبا وسيطا فينا ثم نعطي كل فتى منهم سيفا صارما ثم يعمدوا اليه فيضربوه بها ضربة رجل واحد فيقتلوه فنستريح منه فانهم اذا فعلوا ذالك تفرق دمه فى القبائل جميعا فلم يقدر بنو عبد مناف على حرب قومهم جميعا فرضوا منا بالعقل فعقلنا لهم.

''அல்லாஹ்வின் மீதாணையாக அவர் சம்பந்தமாக என்னிடம் ஒரு ஆலோசனையுண்டு. உங்களில் யாருமே அதை இதுவரை எடுத்துச் சொல்லவில்லை என்று சொல்ல, அது என்ன? என்று அனைவரும் கேட்க, அதற்கவன்; நாம் ஒவ்வொரு கூட்டத்தாரில் இருந்தும் தைரியமான பொறுப்புள்ள குடும்பத்தாருக்கு மிகவும் வேண்டிய ஒரு வாலிபனை



தேர்ந்தெடுப்போம். அவர்களில் ஒவ்வொருவரிடமும் கூர்மையான வாட்களைக் கொடுத்து எல்லோரும் ஒரேநேரத்தில் சேர்ந்து அவரை வெட்டிக் கொல்வோம். அப்போது தான் நாம் நிம்மதி பெற முடியும். அதன்பின் அவரைக் கொன்றது எல்லோரும் தானென்று கூறுவோம். அந்நிலையில் அவருடைய குடும்பத்தாராகிய அப்து மனாப் உடைய மக்கள் எல்லோரிடமும் சண்டையிட சக்திபெற மாட்டார்கள். அத்துடன் பனூ அப்து மனாப் அவரைக் கொன்றவனை கைது செய்வதையே விரும்புவர். அதை நாமும் ஏற்றுக் கொள்ளலாம் என்று கூறினான்.''

قال: فقال الشيخ النجدى القول ما قال الرجل هذا الرأي الذي لا رأي غيره فتفرق القوم على ذالك وهم مجمعون له.

''அவரைக் கொன்றேயாக வேண்டும். அப்போது தான் நாம் நிம்மதியடைய முடியும் என அபூஜஹ்ல் சொன்னதும் இதுதான் சரியான முடிவு. இதைத்தவிர வேறு வழியேயில்லை. இதன்படியே செயல்படுவோம் என்றான் ஷைகு நஜ்தி. இக்கருத்தை எல்லோருமே ஆமோதித்தனர். அதன்பின் அதை செயல்படுத்த அனைவரும் அங்கிருந்து கலைந்து சென்றனர்.''

அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை கொலை செய்வதுதான் சரியானவழியென முடிவெடுத்த நஜ்திகள் அந்த நபியின் கப்ரை தரிசிப்பதற்காக பயணம் செய்வதை மட்டும் நன்மையான காரியமென்று எப்படிச் சொல்வார்கள்? இவர்கள் நபியவர்களின் பரம விரோதிகளாதலால் அவர்களின் அகமியங்களையும் எதார்த்தங்களையும் பேசுவதைவிட கசப்பான ஒன்று அவர்களுக்கு வேறு எதுவும் இருக்க முடியுமா என்ன?

மேலும் காபிர்கள் ஒன்றுகூடி அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சம்பந்தமாக செய்த சதியாலோசனையை அல்லாஹ் சொல்லிக் காட்டும்போது,...

وإذا يمكر بك الذين كفروا ليثبتوك او ليقتلوك او ليخرجوك ويمكرون ويمكر الله والله خير الماكرين.

நபியே! உம்மை சிறைபிடிக்கவோ, உம்மை கொலை செய்யவோ அல்லது உம்மை (ஊரைவிட்டு) வெளியேற்றவோ நிராகரிப்போர் சதி செய்வதை நினைவு கூர்வீராக. அவர்கள் சூழ்ச்சி செய்து கொண்டிருந்தனர். அல்லாஹ்வும் அவர்களுக்கு எதிராக மறைவாக திட்டமிட்டுக் கொண்டிருந்தான். அல்குர்ஆன், சூறா-அன்பால், வசனம்-30.

காபிர்கள் தங்களுடைய ஆலோசனைப்படி அருமை நபியவர்களை

கொலை செய்யும் திட்டத்தோடு புறப்பட்டதை வல்லோனும் அல்லாஹ் தனது ஹபீபுக்கு இவ்வாறு அறிவித்துத் தருகிறான்.

فأتى جبريل عليه السلام رسول الله صلى الله عليه وآله وسلم فقال: لاتبت هذه الليلة على فراشك الذي كنت تبيت عليه قال: فلما كانت عتمة من الليل إجتمعوا على بابه يرصدونه حتى ينام فيثبون عليه فلما رأي رسول الله صلى الله عليه وآله وسلم مكانهم قال لعلي بن ابي طالب نم على فراشي وتسج ببردي هذا الحضرمي الأخضر فنم عليه فانه لن يخلص اليك شيئ تكرهه منهم وكان رسول الله صلى الله عليه وآله وسلم ينام في برده ذلك إذا نام.

*"ஹழ்ரத் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் வருகைதந்து நபியவர்கள் வழமையாக ஓய்வெடுக்கும் படுக்கையில் இரவு தங்க வேண்டாம் என்கின்றனர். (அறிவிப்பாளர் கூறுகிறார்) அன்றிரவு நடுநிசியில் எதிரிகள் நபியவர்களின் இல்லத்தை சூழ்ந்து கொண்டனர். அதாவது நபியவர்கள் உறங்கியதும் அவர்கள் மீது படையெடுக்கக் காத்திருந்தனர். அல்லாஹ்வின் கட்டளைப்படி காபிர்களின் நடவடிக்கையை கண்ணுற்ற நாயகம் அவர்கள் தமது விரிப்பில் ஹழ்ரத் அலீயவர்களை உறங்கச் செய்து தமது போர்வையை எடுத்து போர்த்திக் கொள்ளுமாறு சொன்னார்கள். அவ்வாறு போர்த்திக் கொண்டால் காபிர்களிடமிருந்து எவ்விதத் தீங்குகளும் நேராது. ஏனெனில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அப்போர்வையில் தான் உறங்கிக் கொண்டிருக்கின்றனர் என்றவர்கள் எண்ணிக் கொள்வார்கள்."*

அதன்பின் அல்லாஹ்வின் உதவியோடு ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அங்கிருந்து புறப்படுகிறார்கள்.

وخرج رسول الله صلى الله عليه وآله وسلم فأخذ حفنة من تراب في يده ثم قال: انا اقول ذالك وانت احدهم. وأخذ الله ابصارهم عنه فلا يرونه فجعل ينثر ذالك التراب على رؤوسهم وهو يتلو هذه الآيات من يس: يس والقرآن الحكيم انك لمن المرسلين على صراط مستقيم تنزيل العزيز الرحيم الى قوله فاغشيناهم فهم لايبصرون حتى فرغ رسول



الله صلى الله عليه وآله وسلم من هذه الآيات ولم يبق منهم رجل إلا وقد وضع على رأسه ترابا ثم انصرف الى حيث اراد ان يذهب.

*"காபிர்களுடைய திட்டப்படி அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை கொல்லும் எண்ணத்தோடு அவர்களது வீட்டு வாசலை சூழ்ந்து அதற்குரிய தருணத்தை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் போது அவர்களை அறியாமலேயே நபியவர்கள் அவர்களுக்கு முன்னாலேயே வெளியேறுகின்றனர். அருமை நபியவர்கள் வெளியேறும் போது சூரா யாசீனுடைய வசனம்ஒன்று முதல் ஒன்பது வரை ஓதி மண்ணில் ஊதி அம்மண்ணை அவர்கள் மீது தூவினார்கள். அதன் காரணமாக அவர்களனைவரும் தங்களின் பார்வையை இழந்து போயினர். அதன்பின் புனித ஹிஜ்ரத்திற்குரிய பயணத்தை மேற் கொண்டார்கள்."*

فأتاهم آت ممن لم يكن معهم فقال: وما تنتظرون ههنا؟ قالوا: محمدا قال: قد خيبكم الله قد والله قد خرج عليكم محمد ثم ما ترك منكم رجلا إلا وقد وضع على رأسه ترابا وانطلق لحاجته افما ترون ما بكم؟ قال: فوضع كل رجل منهم يده على رأسه فإذا عليه تراب.

*"நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அங்கிருந்து வெளியேறியதை உணராது தம்மை மறந்தவர்களாக காபிர்கள் நின்று கொண்டிருக்கும் போது நஜ்துடைய ஷைகு அங்கே வருகைதந்து யாரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்களென்று கேட்க, அதற்கவர்கள்; இன்னாரை என்று சொன்னதும், அவன்; அல்லாஹ் உங்களை இழிவு படுத்துவானாக என்று சாபமிட்டு உங்களுடைய தலையில் மண்ணை வாரிப் போட்டுவிட்டு அவர் போக வேண்டிய இடத்திற்கு போய் விட்டார் என்றான். அப்போது தான் அவர்கள் தமது தலையில் மண் இருப்பதை உணர்ந்தனர்."* பார்க்க: உயூனுல் அஸர், 1-292, 293, 294. அர்ரௌழுல் உன்ப், 2-306, 307, 308, 309. அல்காமில் பித்தாரீக், 1-694, 695. தலாயிலுன் நுபுவ்வத் இமாம் பைஹகீ, 2-467, 468, 469, 470. அத்தபகாத்துல் குப்ரா, 1-227. அல் பிதாயா வந்நிஹாயா, 3-175, 176, 177., தப்ஸீர் பகவி, சூரா அன்பால், வசனம்-30.

*தொப்பி அணிவதை சுன்னத்தான அமல் இல்லையென வாதிப்போர் இக்கூட்டத்தை சார்ந்தவர்கள் தான் என்பது இதன் மூலம் ஆதாரப்படுத்தப்படுவதை கவனிக்க வேண்டுகிறோம்.

இதுமட்டுமா! நபியவர்கள் தமது நபித்துவத்தை வெளிப்படுத்துவதற்கு முன்பே அவர்களை அவமானப்படுத்த திட்டமிட்ட நஜ்துடைய ஷைகின் எண்ணம் ஈடேருமல் போனதால் நபியவர்களை கொல்லுவதற்கான நேரத்தை எதிர்பார்த்து காத்திருந்தான். அதற்குரிய வாய்ப்பும் அவனுக்குத் தானுக வந்து வாய்த்தது. அதிலும் அவன் கலந்து கொண்டு அதற்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்தான். இருந்தும் அதிலும் அவன் தோல்வியைத் தான் கண்டான்.

ஆம். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை அவமானப்படுத்த வேண்டும். அவர்களை கொலைசெய்ய வேண்டும் என்றெல்லாம் திட்டமிட்ட நஜ்துவாசிகள் அவைகளில் தோல்விக்கு மேல் தோல்வியைத் தழுவியதாலும் இந்நிலையில் இஸ்லாத்தின் வேகமான வளர்ச்சியையும் கண்டு அளவில்லாத பொருமை கொண்டனர். முடிவில் நபியவர்களைக் கொல்ல முடியாதென்பதை உணர்ந்து கொண்ட அவர்கள் அவர்களின் தோழர்களைக் கொலைசெய்ய திட்டம் தீட்டினர். இதோ அதற்கான சான்றுகளைப் பாருங்கள்.

قدم ابو براء عامر بن مالك بن جعفر ملاعب الاسنة على رسول الله صلى الله عليه وآله وسلم المدينة فعرض عليه رسول الله صلى الله عليه وآله وسلم الاسلام ودعاه اليه فلم يسلم ولم يبعد من الاسلام وقال: يامحمد (صلى الله عليه وآله وسلم) لو بعثت رجالا من أصحابك الى نجد فدعوهم الى امرك رجوت ان يستجيبوا لك فقال رسول الله صلى الله عليه وآله وسلم إني أخشي عليهم أهل نجد قال: ابو براء انا لهم جار فابعثهم فليدعوا الناس الى امرك.

*"ஆமிர் பின் மாலிக் பின் ஜஃபர் என்பார் புனித மதீனு முனவ்வராவில் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை சந்திப்பதற்காக வந்தார். அதுபோது அவரை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுமாறு நபியவர்கள் சொல்ல, அதை அவர் ஏற்கவுமில்லை. பொய்யாக்கவும் இல்லை. அதற்கு மாறுக நபியவர்களிடம் உங்களின் தோழர்களில் சிலரை நஜ்துக்கு அனுப்புங்கள். அவர்கள் அங்குள்ள மக்களை இஸ்லாத்தின் பக்கமாக அழைப்பார்கள். அவர்களின் அழைப்பை நஜ்துடைய மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று சொன்னுர். அதற்கு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நஜ்து வாசிகள் எனது தோழர்களுக்கு அநீதம் இழைத்து விடுவார்களென்று அஞ்சுகிறேன் என்றனர். அதுகேட்ட அவர், உங்களுடைய தோழர்களுக்கு நான் பொறுப்பாளி. பயப்படாமல் அவர்களை இஸ்லாத்தின் பக்கமாக அழைப்பதற்கு அனுப்புங்கள் என்ருர்."* நூல்: புகாரி ஷரீப், கிதாபுல் மஙாஸி, இர்ஷாதுஸ்ஸாரி, பாகம்-9, பக்கம்-155.



நஜ்துவாசிகளுடைய தோற்றத்தில் பலமுறை இப்லீஸ் தோன்றி தனக்கு தீங்கு விளைவிக்க முனைந்ததை நபியவர்கள் கவனத்தில் கொண்டுதான் அப்பகுதி மக்கள் இஸ்லாத்தின் பரம விரோதிகள். அவர்கள் ஒருபோதும் இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக உழைக்க மாட்டார்கள். இந்நிலையில் நஜ்த் வாசிகளை இஸ்லாத்தின் பக்கமாக அழைக்க அவர்தமது தோழர்களை அனுப்புமாறு கோரியபோது தமது தோழர்களுக்கும் அவர்கள் தீங்கு விளைவித்து விடுவார்களோ என்று நான் அஞ்சுகிறேன் என்பதாக சொன்னுர்கள் எனில் நஜ்த் வாசிகளை எந்த அளவுக்கு நபியவர்கள் வெறுத்தார்கள் என்பதையும், அவர்கள் மீது எவ்வளவு கோபம் கொண்டிருந்தார்கள் என்பதையும் நாம் புரிந்து கொள்ளலாம். அத்துடன் நஜ்து வாசிகளால் இஸ்லாத்திற்கு ஒரு போதும் நிம்மதி கிடைக்கப் போவதில்லை. முஸ்லிம்களையும் அவர்கள் நிம்மதியாக வாழவிட மாட்டார்கள் என்பதையும் ஏந்தல் நபியவர்கள் நமக்குத் தெளிவு படுத்தி விட்டார்கள். அது மட்டுமல்ல. ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அகமியத்தை அவர்களின் எதார்த்தத்தை நஜ்துவாசிகள் ஒருக்காலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதையும் நபியவர்களின் நபித்துவம் வெளிப்படுவதற்கு முன்னதாகவே இப்லீஸ் எடுத்துக் காட்டிவிட்ட உண்மையை நாம் மறக்கக்கூடாது. அதன்பின் நபியவர்கள்,...

فبعث معه رسول الله صلى الله عليه وآله وسلم سبعين رجلا من الانصار شببة يسمعون القراء وامر عليهم المنذر بن عمرو الساعديّ فلما نزلوا بئر معونة--------فلقيهم القوم فاحاطوا بهم فكاثروهم فتقاتلوا فقتل اصحاب رسول الله صلى الله عليه وآله وسلم.

*"உங்களின் தோழர்களை இஸ்லாமிய அழைப்புக்காக நஜ்துக்கு அனுப்புங்கள் என்னும் கோரிக்கையை ஏற்று எழுபது தோழர்களை அனுப்பி வைத்தார்கள். அவர்களனைவரும் வாலிபப் பருவத்துடைய அன்ஸார்களாகவும் காரிகள் என்றும் அழைக்கப்பட்டவர்களாகும். முன்திர் இப்னு அம்ர் என்பவர் அவர்களுக்கு தலைவராக நியமிக்கப்பட்டி*

**ருந்தார். அவர்கள் மவூந என்னும் கிணற்றடியை சமீபித்தபோது பெரும்பான்மை கூட்டமொன்று அவர்களை சூழ்ந்துகொண்டு அவர்களோடு சண்டை செய்தனர். அதில் அவ்வெழுபது தோழர்களும் ஷஹீதாக்கப்பட்டனர்.''**

நஜ்துவாசிகளை இஸ்லாத்தின் பக்கமாக அழைப்பதற்காக என்று பொய் திட்டம் வகுத்து அத்தோழர்களை அழைத்துச் சென்று கொஞ்சங்கூட ஈவிரக்கமில்லாமல் கொலைசெய்த நஜ்து வாசிகளைக் கொண்டு முஃமின்கள் நிம்மதியடைவார்களா? அதன் பின் காலப்போக்கில் அவர்கள் மார்க்கத்தை ஏற்று இஸ்லாத்தை துண்டாட எத்தனித்தனர். இதில், தானொரு இஸ்லாத்தின் விரோதி யெனக் கூறிக்கொண்டு இஸ்லாத்தை எதிர்க்க முடியாது என்ப தாலும் அதில் தங்களுக்கு ஒருக்காலும் வெற்றி கிடைக்காது என்ப தாலும் இதை நன்குணர்ந்திருந்த அவர்கள் தானும் முஸ்லிம்களில் ஒருவன் தான் என்று நடிப்பதன் மூலமாகத்தான் வெற்றிபெற முடியும் என்றும் நினைத்தனர். அதில் நஜ்துவாசிகளும் நஜ்துடைய ஷைகும் வெற்றியும் கண்டனர்.

இஸ்லாத்தின் பால் அழைப்பதற்காகவென்று தோழர்கள் அழைத்துச் செல்லப்பட்டு அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட செய்தி நபியவர்களுக்குக் கிடைத்தபோது நபியவர்கள் கடும் சினம் கொண்டார்கள். நஜ்துவாசிகள் தமது தோழர்களுக்கு இழைத்த தீங்கை சகித்துக் கொள்ள முடியாமல் போனபோது தான் அவர் களுக்கு எதிராக,...

قنت النبي صلى الله عليه وآله وسلم بعد الركوع شهرا.

**''முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஒரு மாதமாக தொழுகையில் ருகூவுக்குப் பின் குனூத் ஓதினார்கள்.''** பார்க்க: புகாரி ஷரீப், கிதாபுல் மகாஸீ, தபகாத்துல் குப்ரா, 2-52. அர்ரௌழுல் உன்ப், 3-379. அல்பிதாயா வந்நிஹாயா, 4-71. தாரீக் திப்ரி, வாகிதி, அல் காமில், உயூனுல் அதர், அத்தபகாத், அத்தலாயில், அல் மவாஹிப், அஸ்ஸாத்.

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஷாமுக்கும் எமனுக்கும் பரக்கத்தை குறித்து பிரார்த்தித்த போது நஜ்தை சேர்ந்த தோழர்கள் எங்களின் நஜ்துக்கும் பிரார்த்தியுங்கள் என்றபோது அங்கிருந்து தான் குழப்பங்களும் ஷைத்தானுடைய கொம்பும் உதயமாகும் என்பதாக நபியவர்கள் கூறியதற்குரிய



சுருக்கமான காரணங்களை நபியவர்களின் காலத்திலேயே அப் பகுதியில் நிலவிவந்த ஒருசில பிரச்சனைகளை இதுவரை நாம் பார்த் தோம். அத்துடன் அப்பகுதி நபியவர்களின் பிரார்த்தனைக்கு இலக்காகாமல் போனதோடு நபியவர்களால் சாபமிடப்பட்ட ஓர் பிரதேசம் என்றால் அது சவூதி அரேபியாவின் தலைநகரான ரியாத் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட நஜ்துதான். அவ்வூரின் உண்மை நிலையை மறைப்பதற்காகவே அதனுடைய பெயரை மாற்றியதோடு இப்போது அங்கே இருப்பவர்களும் அன்று இருந் தோரின் எண்ணங்களைக் கொண்டவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்பதை இனங்காட்டுவதற்காகவே அதை அந்த நாட்டின் தலைநகராகவும் பிரகடனப்படுத்தினார்கள். அவ்வாறு இல்லையேல் மக்காவையோ அல்லது மதீனாவையோ தலைநகராக பிரகடனப் படுத்தியிருக்கலாம் அல்லவா!

அடுத்து நபிமொழிக் கிரந்தங்களான புகாரி ஷரீப், முஸ்லிம் ஷரீப் போன்ற நூல்களில் யுத்த சம்பந்தமான பகுதியில் அர்ரிகாஃ என்னும் பிரிவில் பல ஹதீதுகளில் நஜ்த் என்னும் சொல் இடம் பெற்றிருப்பதை நாம் பார்க்கலாம். உதாரணமாக,...

أن ابن عمر رضى الله عنهما قال غزوت مع رسول الله صلى الله عليه وآله وسلم قبل نجد.

**''நான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களோடு நஜ்த் பக்கமாக போரிட்டுள்ளேன் என்கிறார்கள் ஹழ்ரத் ஸெய்யிதுனா அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்.''** நூல்: புகாரி ஷரீப்.

இவைதவிர வரலாற்றுடைய நூல்கள், சரித்திர ஏடுகள் போன் றவைகளிலும் நஜ்த் என்னும் சொல் நிறைந்து காணப்படுகிறது. ஆதலால் இப்போது நஜ்த் என்று எதற்கெல்லாம் சொல்லப்படு கிறது என்பதையும், இதுகுறித்து வரைபட வல்லுநர்கள் உட்பட பல்வேறு நபர்களும் என்ன சொல்கிறார்கள் என்பதை இப்போது பார்ப்போம்.

# நஜ்தும் அதன் பொருளும்

பொதுவாக குர்ஆனிலோ அல்லது ஹதீதுகளிலோ பயன் படுத்தப்படும் சொற்களுக்கு அகராதிப் பொருள் என்ற ஒன்றும் பரிபாஷைப் பொருள் என்ற ஒன்றும் இருவகை பொருட்கள் சொல்லப்படுவதுண்டு.

உதாரணமாக பித்அத் என்னும் வாக்கியத்தை எடுத்துக் கொண்டால் முன்மாதிரி ஏதுமின்றி புதிதாகச் செய்யப்படும் ஒரு காரியத்திற்கு அகராதியின் அடிப்படையில் பித்அத் என்று சொல்லப்படும். இதே போல அக்காரியம் குர்ஆன் ஹதீதுடைய சட்ட திட்டங்களுக்கு மாற்றமாக இல்லாமல் இருந்து ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களின் காலத்தில் செயல்படுத்தப் படாத ஒன்ருக இருந்தால் அப்போது பரிபாஷையில் அப்பெயர் கொண்டு அழைக்கப்படும்.

இதேபோல வாய்மூடி மௌனமாக இருக்கும் ஒருவனைப் பார்த்து ஸாயிம் - நோன்பாளி என்று சொல்லலாம். ஆனுல் மார்க்கத்தின் விதிமுறைகளுக்கேற்ப் உண்ணுமலும் பருகாமலும் ஏனைய சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்பட்டு செயல்படுபவருக்கே பரிபாஷையில் நோன்பாளி என்று சொல்லப்படும்.

இப்படி ஒவ்வொன்றுக்கும் இருவகையான பொருட்கள் இருப்பதை கவனத்தில் கொண்டால் நமது இஷ்டப்படி எல்லாம் நாம் பொருள் சொல்ல முடியாது. நோன்பைப் பற்றியோ அல்லது பித்அத்தைப் பற்றியோ மார்க்க சம்பந்தமான அனுஷ் டானங்களில் எப்போது பேசப்பட்டாலும் அப்போதெல்லாம் அதற்குரிய அகராதிப் பொருளை நாம் சொல்லக்கூடாது. மாருக பரிபாஷையில் அதற்குரிய பொருள் எதுவோ அதைத்தான் சொல்ல வேண்டும். அத்துடன் இந்த இடத்தில் நாம் நமது முன்



ஞோர்களை பின்பற்றுவது தான் கடமையாகும். பரிபாஷைக்குரிய பொருளை சொல்வதாக இருந்தால் கூட அப்பெரியோர்கள் சொன்ன பொருளைத்தான் நாம் சொல்ல வேண்டும். அதற்கு மாருக நாம் நமது முன்ஞோர்களின் பாதையை விட்டு விட்டு தனியானதோர் பாதையை உருவாக்குவோமேயாயின் அப்பாதை வெகு விரைவில் முற்றுப் பெற்று விடுமென்பதையும் நாம் நினைவில் கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம்.

இதன் அடிப்படையில் நஜ்த் என்னும் பதத்துக்கும் இரு வகையான பொருட்களுண்டு. அது அகராதிப் பொருள் என்ற ஒன்றும் பரிபாஷை பொருள் என்ற வரைபட வல்லுனர்களின் தீர்ப்பென்னும் மற்ரெருன்றுமாகும். வாருங்கள் இப்போது அது பற்றி பார்ப்போம்.

1 - மேடான, திடலான பூமி, பாதை, நஜ்த் என்னும் ஊர். இவையனைத்தும் நஜ்துக்குரிய அகராதிப் பொருட்களாகும். நூல்: அல் காமூஸுல் அன்வார், பக்கம்-207.

அகராதியில் கூட நஜ்த் என்பது ஒரு ஊரின் பெயரென்று ஒப்புக் கொள்வது இங்கே குறிப்பிடத்தக்க ஒன்ருகும். காரணம் அது ஒரு தனிப்பட்ட ஊரின் பெயர் என்பதுதான் இரண்டாவது பொருளாகும். அத்துடன் நமது விவாதத்தின் அஸல் நோக்கமும் இதுதான். அத்துடன் இமாம் கத்தாபி போன்ருேரின் கருத்தை ஆதாரம் காட்ட எதிர் தரப்பாருக்கு தகுதியில்லை என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிருேம்.

"அன்றைய காலத்தில் மத்திய கிழக்கு நாடுகள் ஹிஜாஸ், ஈராக், பஹ்ரைன், நஜ்த், எமன் என ஐந்து மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டி ருந்தன. இதில் ஹிஜாஸ் மாநிலத்தை விட நஜ்த் மேடான பூமியாக அப்போதே இருந்துள்ளது. அதனுல் தான் அப்பெயரை அம்மாநிலத் திற்கு வைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்றே விசாலமான பாதைக்கும் நஜ்த் என்று சொல்லப்படு வதுண்டு.

இதன் அடிப்படையில் தான் - وهديناه النجدين என்று திருமறை யில் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதை அனுமானிக்க முடியும். இதில் திஹாமா மற்றும் ஈராக்குக்கு இடைப்பட்ட

பகுதிதான் நஜ்துப் பகுதியாகும்.'' நூல்: மிர்ஆத் ஷரஹ் மிஷ்காத், பாகம்-7, பக்கம்-119.

அடுத்து மஹ்மூத் ஷுக்ரி அல் ஆலூஸி என்பார் ''தாரீகுந் நஜ்த்'' என்னும் நூலில் நஜ்த் பற்றி எடுத்துக் காட்டும் சில கருத்துக்களை நாமும் இங்கே எடுத்துக் காட்டுகிறோம். இவர் ஈராக் நாட்டை சேர்ந்தவர் என்ற போதிலும் நஜ்துடைய ஷைகின் கொள்கையை கொண்டவராகும்.

إعلم أن لفظ نجد فى اللغة مارتفع من الارض ماخالف الغوى اى تهامة فاعلى نجد تهامة واليمن واسفله العراق والشام.

*''தெரிந்து கொள்! நிச்சயமாக நஜ்த் என்னும் சொல் திடலான பகுதிக்கு அகராதியில் சொல்லப்படும். இருப்பினும் திஹாமாவையும் எமனையும் தனக்கு மேற்பகுதியிலும், ஈராக்கையும் ஷாமையும் தனக்கு கீழ்பகுதியிலும் கொண்டுள்ள இடைப்பட்ட பகுதியே நஜ்தாகும்.''*

فهو بين تهامة واليمن والعراق والشام والحجاز.

*''ஹிஜாஸ், ஷாம், ஈராக், எமன், திஹாமா ஆகிய இடங்களுக்கு இடைப்பட்ட பகுதியே நஜ்தாகும்.''*

ان نجدا هى الناحية التي بين الحجاز والعراق.

*''நிச்சயமாக நஜ்தாகிறது ஹிஜாஸ் மற்றும் ஈராக் ஆகிய பகுதிகளுக்கு இடைப்பட்ட பகுதியாகும்.''*

فالسافلة ماولي العراق والعالية ماولي الحجاز وتهامة.

*''ஈராக் நஜ்தின் கீழ் பகுதியிலுள்ள பிரதேசமாகும். இவ்வாறே ஹிஜாஸ் திஹாமா போன்றவை நஜ்துக்கு மேல் பகுதியிலுள்ள பிரதேசங்களாகும்.''*

وبعض المتأخرين قال: نجد قطعة عظيمة من جزيرة العرب.

*''அரேபியப் பிரதேசத்திலுள்ள மகத்தானதோர் பிரதேசம் என்பது பிற்கால அறிஞர்கள் சிலரது கணிப்பாகும்.''*

وقال ابن الاثير: النجد مارتفع من الارض وهو إسم خاص لمادون الحجاز مما يلي العراق.

*''திடலான பூமிக்கு நஜ்த் என்று சொல்லப்படும். இன்னும் அது*



*ஹிஜாஸுக்கு அப்பாற்பட்ட இடம் மட்டுமல்ல. ஈராக்கை அண்மித்த இடத்திற்கு குறிப்பாகச் சொல்லப்படும்.''* அல்லாமா இப்னுல் அதீர், நூல்: உம்தத்துல் காரி, பாகம்-17, பக்கம்-199.

وقال الجوهري: نجد من بلاد العرب.

*''நஜ்தானது அரேபிய ஊர்களில் ஒன்றாகும்.''* நூல்: உம்தத்துல் காரி, பாகம்-17, பக்கம்-199.

وهو إسم للارض العريضة التي اعلاها تهامة واليمن واسفلها العراق والشام.

*''மேற்பகுதியில் திஹாமாவுக்கும் எமனுக்கும், கீழ்பகுதியில் ஈராக்குக்கும் ஷாமுக்கும் இடைப்பட்ட விசாலமான பூமியின் ஒரு பகுதியே நஜ்தாகும்.''* நூல்: முஃஜமுல் புல்தான், பாகம்-5, பக்கம்-262.

இவைதவிர மற்றுமோர் பிரதானத்திற்குரிய வலுவான ஆதாரம் என்னவெனில் நஜ்துக்கும் ஈராக்குக்கும் இஹ்ராம் கட்டி தல்பியா சொல்வதற்கு கட்டாயமாக்கப்பட்ட இடங்கள் என்பது வெவ்வேறாகும். இதை அடுத்து வரும் நபிமொழி ஊர்ஜிதப்படுத்துவதைப் பாருங்கள்.

عن جابر رضى الله عنه قال عن رسول الله صلى الله عليه وآله وسلم قال مهل اهل المدينة من ذى الحليفة والطريق الآخر الجحفة ومهل اهل العراق من ذات عرق ومهل نجد قرن ومهل اهل اليمن يلملم.

*''மதீனாவாசிகள் துல் குலைபா அல்லது ஜுஹ்பா என்னும் இடத்திலும், ஈராக்கை சேர்ந்தவர்கள் தாது இர்க் என்னும் இடத்திலும், நஜ்தை சேர்ந்தவர்கள் கர்னுல் மனாஸில் என்னும் இடத்திலும், எமனை சேர்ந்தவர்கள் யலம்லம் என்னும் இடத்திலும் தல்பியா சொல்லிக் கொள்ளட்டும் என்பதாக அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கூறியதாக ஹழ்ரத் ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றனர்.''* நூல்: முஸ்லிம் ஷரீப், மிஷ்காத் கிதாபுல் மனாஸிக்.

ஆக மொத்தத்தில் மேடான, திடலான பூமிக்கு நஜ்த் என்று சொல்லப்பட்டாலும் நபிமொழியில் இடம் பெற்றுள்ள நஜ்த் என்னும் சொல் அரேபிய மாநிலங்களில் ஒன்றையே சாரும். மாறாக மதீனா முனவ்வராவிலிருந்து ஈராக்கை உற்று நோக்கினால் அது திடலான பூமியாக இருப்பதால் ஈராக்கைத் தான் நஜ்த் எனச்

சொல்லப்பட்டதாகச் சொல்வது முழுப் பூசனிக்காயை சோற்றில் மறைக்கின்ற கதையாகும்.

மேலும் ஈராக் ஒரு தனிப் பிரதேசம் என்பதைப்போல் நஜ்தும் ஒரு தனியான பிரதேசம் தான் என்பதை இதுவரை எடுத்துக் காட்டப்பட்ட கருத்துக்களனைத்தும் அசைக்க முடியாத ஆதாரங்களைக் கொண்டு தெளிவுபடுத்துகின்றது. இல்லையில்லை. இரண்டு பகுதிகளும் வெவ்வேறானது என்பதாக வாதிக்கும் எதிர்தரப்பார், அதிலும் குறிப்பாக மஹ்மூத் ஷுக்ரியின் நூலில் 52ம் பக்கத்திலிருந்து 92ம் பக்கம்வரை சொல்லப்பட்ட ***"நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் எமனுக்கும் ஷாமுக்கும் பிரார்த்தித்த போது எங்களின் நஜ்துக்கும் என்று சொன்ன பிறகும்கூட அந்தப் பகுதிக்குப் பிரார்த்திப்பதற்குப் பதிலாக நபியவர்கள் அதுவோர் பிரச்சனைக்குரிய பிரதேசம். அங்கிருந்து தான் ஷைத்தானுடைய கொம்பு உதயமாகும்"*** என்றெல்லாம் சொல்கிறார்களென்றால் அந்த நஜ்து என்பது ஈராக்கை சேர்ந்த பகுதியாகும் என்று சொல்வது வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்கின்ற சதியாகும்.

சரி. அவருடைய வாதப்படியே வைத்துக் கொண்டாலும் ஈராக்கை அந்த நபிமொழியோடு ஒப்பிட்டு குற்றஞ் சாட்டுவதற்கு வேறு காரணங்களும் அதற்குரிய ஆதாரங்களும் இருக்குமல்லவா! அதையும் ஈராக்கை குறித்து வாதிப்போர் தமக்குரிய ஆதாரமாக எடுத்துக் காட்டியிருக்கலாம் அல்லவா! அதையும் இங்கே உங்களின் பார்வைக்கு வைத்து அதற்குரிய விளக்கத்தையும் நாம் தருகிறோம். அதுதான் ஒரு நலன் விரும்பியின் அடையாளமாகும். ஆம். இரு தரப்பாரின் கருத்தையும் எடுத்துக் காட்டி விளக்கம் தரும்போது தான் உண்மை எது? பொய் எது? என்பதை இலகுவாகப் புரிந்துகொள்ள முடியும். எல்லோருமே குர்ஆன் ஹதீதைத் தானே காட்டுகின்றனர். இந்நிலையில் பொதுமக்கள் யாரை பின்பற்றுவது என்னும் குற்றச்சாட்டிலிருந்தும் தப்பித்துக் கொள்வதோடு யார் தருகின்ற விளக்கம் சரியானது என்பதையும் விளங்கிக்கொள்ள முடியும். இதற்குரிய வாய்ப்பை நமக்குத் தந்த வல்லோனுக்கே எல்லாப் புகழும்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பிரார்த்தனைக்கு இலக்காக்கப்படாத நஜ்தானது ஈராக்கைச் சேர்ந்தது தான் எனக் குற்றஞ் சாட்டுவதற்குரிய தெளிவான விளக்கம் சொல்லப் பட வேண்டுமாயின் முதலில் அந்த நபிமொழியின் அடுத்த



வார்த்தையான,...

وبها يطلع قرن الشيطان.

***"இன்னும் நஜ்திலிருந்து தான் ஷைத்தானுடைய கொம்பு உதயமாகும்"*** எனக் கூறப்பட்டுள்ள வார்த்தைக்குரிய விளக்கத்தை நாம் தெரிந்துகொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். இதில் தெளிவாக்கப் பட வேண்டிய முக்கியமான சொல் "***கர்னுன் - கொம்பு***" எனும் சொல்லுக்குரிய விளக்கமேயாகும்.

இனி கர்னுன் என்ற சொல்லுக்கு ***"மலைஉச்சி, சடை, சூரியனின் முன்பாகம், வயதில் சமமான, நூற்றாண்டு, காலத்தின் ஒருபகுதி, வாள், கொம்பு, உச்சந்தலையின் ஒருபகுதி, என்பது பொருளாகும்."*** நூல்: அல் காமூஸுல் அன்வார், பக்கம்-159. இதன்றி,...

القرن الامة من الناس يحدثون بعد فناء آخرين.

***"கர்ன் என்பது ஒரு சமுதாயமாகும். ஒரு சமுதாயம் (கூட்டம்) அழிந்தபின்னர் இன்னொரு சமுதாயம் (கூட்டம்) தோன்றுவதாகும்."*** இன்னும்,...

وقيل القرن القوة اى تطلع حين قوة الشيطان.

***"கர்ன் என்பதற்கு சக்தி என்றும் பொருள் சொல்லப்படுகிறது. அதாவது அங்கிருந்து ஷைத்தானின் சக்தி வெளியாகும்."*** என்றும் பொருள் தரப்படுகிறது. பார்க்க: பத்ஹுல் பாரி, 13-51. இப்னு பத்தால், 10-44. கௌதருல் மஆனி, 10-390. உம்தத்துல்காரி, 24-199.

ஆக கர்ன் என்னும் சொல்லுக்கு மேற்கண்ட விளக்கத்தைக் கொண்டு நஜ்திலிருந்து ஷைத்தானுடைய கொம்பு வெளியாகும் எனச் சொன்னதன் கருத்தானது,

***"ஷைத்தானின் ஒரு படைப்பிரிவு அழிந்தபின் இன்னொரு படைப் பிரிவுதோன்றும். அல்லது ஒரு பெயரில் பிரபலமான ஷைத்தானின் கூட்டமொன்று இன்னொரு மாற்றுப் பெயரில் வேறொரு கூட்டமாக வெளியாகும் என்பது இதன் கருத்தாகும்."*** அத்துடன் புதுப்புது பெயரில் ஷைத்தானின் படைகள் எந்த நாட்டில் எந்த இடத்தில் தோற்றமெடுத்தாலும் அதற்கெல்லாம் மூலகாரணம் அடித்தளம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் சாபத்திற்குள்ளான நஜ்துப் பகுதியேயாகும். இதன்படி இந்திய தேசத்திலிருந்து தோன்றிய மௌலவி இல்யாஸின் படைப்பிரிவும்,

பாகிஸ்த்தானிலிருந்து தோன்றிய ஜமாஅத்தே இஸ்லாமி இயக்கமென்னும் படைப்பிரிவும் நஜ்திலிருந்து தோன்றிய ஷைத்தானின் படைப்பிரிவுகளேயாகும்.

இவ்வையகம் மட்டுமல்ல. அல்லாஹ்வின் எதார்த்தம் வெளிப்படுவதற்கும் காரணகர்த்தாவான நமக்கெல்லாம் உயிர்நாடியான உத்தமத் தூதர் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மக்கத்து மண்ணில் ஏகத்துவப் பிரச்சாரம் செய்யுமுன் அம்மக்கள் மத்தியில் சிறந்ததோர் புனிதராக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த போது நபியவர்களின் விஷயத்தில் பிளவை ஏற்படுத்தமுனைந்த அல்லாஹ்வின் விரோதியான இப்லீஸ் எடுத்த தோற்றமானது நஜ்தியத் தோற்றம்தான்.

அதன்பின் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை கொலைசெய்ய வேண்டுமென்ற அபூஜஹ்லுடைய முடிவைப் பாராட்டி அவ்வாறே செயல்படத் தூண்டியவன் எடுத்திருந்த தோற்றமும் நஜ்தியத் தோற்றம்தான்.

அதன்பின் நஜ்துவாசிகளை இஸ்லாத்தின் பக்கமாக அழைப்பதற்காக எழுபது தோழர் பெருமக்களை அழைத்துச் சென்று அவர்கள் அனைவரையும் கொலை செய்ததும் நஜ்திகள் தான்.

அதன்பின் அல்லாஹ்வின் தூதராகிய அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் காலத்திலேயே தோன்றி தானும் ஒரு நபிதான் என்று வாதித்த கொடியவன் முஸைலமத்துல் கத்தாபும் நஜ்தைச் சேர்ந்தவன் தான்.

பின்னர் இந்நூலின் துவக்கப்பகுதியில் எடுத்துக் காட்டப்பட்ட நபிமொழிகள் அனைத்துக்கும் எதார்த்தமான சொந்தக்காரர்களாகிய கவாரிஜிய்யீன்களின் தோற்றத்துக்குரிய இடமும் நஜ்துதான். இவ்வாறு ஒன்றுக்குப் பின் ஒன்றாக எல்லா பிரச்சனைகளுக்கும் அடித்தளமாக, முளையாக, மூலஸ்தானமாக, ஆணிவேராக நஜ்துப் பிரதேசம்தான் அமைந்திருந்தது என்பதை ஹதீதுகளும் வரலாற்றுக் கிரந்தங்களும் நமக்கு எடுத்துக் காட்டுகின்ற பேருண்மைகளாகும்.

ஒரு குறிப்பிட்ட பகுதியின் மூலையில் முடங்கிக் கிடந்த நஜ்தியப் பிரச்சனை காலப்போக்கில் உலகமனைத்தையும் ஆட்டிப் படைக்கலாயிற்று. இதில் நஜ்திகளால் தூண்டி விடப்பட்ட அப்பிரச்சனை முதன் முதலாக எதிரொலித்த இடம்தான் ஈராக்காகும்.



ஆம். நஜ்துப் பிரதேசத்தின் கீழ்பகுதியின் எல்லையில் அமைந்த ஈராக் நாட்டைச் சார்ந்த கூபா, பஸரா போன்ற மாவட்டங்களையெல்லாம் ஆட்டிப் படைத்தது. ஈராக்கில் தான் முக்கியமான பிரச்சனைகளெல்லாம் தோன்றிற்று என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் அதற்காக நபியவர்களால் சொல்லப்பட்ட அருள்வாக்கை ஈராக்கை நோக்கித் திருப்புவது வேண்டுமென்றே செய்கின்ற சதியாகும்.

மேலும் ஈராக் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பிரார்த்தனைக்கு இலக்காகாததால்தான் அந்நாட்டில் பெரும் பெரும் பிரச்சனைகளெல்லாம் தலைதூக்கிற்று என்பதாகக் குற்றஞ்சாட்டும் எதிர்தரப்பாரின் கருத்தை ஒரு பேச்சுக்காக நாம் ஏற்றுக் கொண்டாலும் அல்லாஹ்வின் அருட்பார்வை நிறைந்த பூமியும், அண்ணல் நபியவர்களுக்கு மிகவும் உகப்பான நகரமுமாகிய முஃமின்களின் தலைநகரமான மதீனா முனவ்வராவில் இறுதிநாள் தோன்றி விட்டதோ என எண்ணுமளவிற்கு ஹர்ராவுடைய நிகழ்ச்சி நடைபெற்றதா இல்லையா? உலகில் நாம் அறிந்தவரை இப்படியொரு நிகழ்ச்சி வேறு எங்குமே நடந்ததாக வரலாறே இல்லை. அந்த அளவுக்கு மனித உள்ளங்களை எல்லாம் உலுப்பிய நிகழ்ச்சி அது. இதுமட்டுமா! அப்புண்ணிய பூமியில் நயவஞ்சகர்களின் பிரச்சனை. இப்னு ஸைய்யாதின் பிரச்சனை. ஹழ்ரத் ஸெய்யிதுனா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக்கெதிரான குரல். அவர்கள் மீதான படையெடுப்பு. இறுதியில் அவர்கள் கொலை செய்யப்பட்டது என எத்தனையோ பிரச்சனைகள் அங்கே தோன்றின. அவைகளையெல்லாம் காரணமாகக் கொண்டு புண்ணிய பூமியான மதீனாவை குழப்பங்களின் தலைமைபீடம் என்று சொல்லலாமா?

இதேபோல மக்காவை எடுத்துப் பாருங்கள். அதனுடைய வரலாற்றை எடுத்துப் பாருங்கள். பதிமூன்று ஆண்டுகளாக அருமை நபியவர்களுக்கு சொல்லொணாத் துயரங்கள், துன்பங்கள், அநியாயங்கள் இழைக்கப்பட்டன. நபியவர்களும் அவர்களது அருமைத் தோழர்களும் தாம் பிறந்த மண்ணை விட்டே விரட்டியடிக்கப்பட்டனர். சுமார் 22 வருடங்களாக அல்லாஹ்வின் இல்லத்தில் இருந்த சுவர்க்க லோகத்தின் கல்லான ஹஜருல் அஸ்வத் என்னும் கல் அகற்றப்பட்டு அநீதம் இழைக்கப்பட்டது. மக்காவில் தோன்றிய அப்பிரச்சனைகளை எல்லாம் காரணமாகக் காட்டி மக்காவை குழப்பங்களின் மத்தியஸ்தலம் என்று சொல்ல

லாமா? ஆனால் அதற்கு மாறாக இன்றும் கூட அந்நகரை புண்ணிய பூமியென்றும் இஸ்லாத்தின் தலைமைபீடம் என்றுதானே சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

இவ்வாறு எந்த ஊரை எந்தப் பகுதியை எந்த தேசத்தை எடுத்துக் கொண்டாலும் அவைகளும் ஏதாவதோர் பிரச்சனையை எதிர்கொள்ளக் கூடிய நிலையிலேயே இருப்பதை நாம் பார்க்க லாம். ஆதலால் பிரச்சனைகளைக் காரணமாக்கி தீர்ப்புச் சொல்வ தானால் மேற்கண்ட இரு புண்ணிய பூமியும் கூட இத்தாக்குதலி லிருந்து தப்பாது. பின்னும் பிரச்சனைகளை காரணமாக்கி தீர்ப்புச் சொல்வதும் நமது நோக்கமல்ல. மாறாக அங்கெல்லாம் பிரச்சனை கள் தோன்றியதற்குரிய காரணமென்ன? அதைத் தூண்டியவர் யார்? என்பதை வெளிக் கொண்டுவந்து உங்களின் பார்வைக்குத் தருவதே நமது நோக்கமாகும். இந்த அடிப்படையில் நாம் பார்க்கும்போது இஸ்லாத்திற்கும், இஸ்லாமியர்களுக்கும் விரோதி, அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலுக்கும் விரோதி ஷைத்தான் தான். அவன் இந்த உம்மத்தினரிடையே குழப்பத்தை ஏற்படுத்த வும் பிரச்சனைகளை உருவாக்கவும் எடுத்துக்கொண்ட வேஷம் நாதர் நபியவர்களின் நபிமொழிகளில் சுட்டிக் காட்டப்பட்ட, நபியவர்களாலேயே எனது தோழர்களது விஷயத்தில் நான் பயப் படுகிறேன் என்று சொல்லப்பட்ட நஜ்த்வாசிகளின் தோற்றமே யாகும். ஆம். பிரச்சனைகளனைத்துக்கும் காரணமாக இருப்பவன் இப்லீஸாக இருப்பதைப்போல ஊர்கள், பகுதிகள், தேசங்கள் ரீதியாக வைத்துப் பார்க்கும்போது அது நஜ்தாக - ரியாதாகத்தான் இன்றும் இருந்து கொண்டுள்ளது.

எனவே மேற்கண்ட நபிமொழியில் நஜ்த் என்னும் சொல் தெளிவாகச் சொல்லப்பட்ட பிறகும் அது அரேபிய மாநிலத் திலுள்ள நஜ்தல்ல. மாறாக திடல் பூமியான ஈராக் தானென வாதிப் போர் ஈராக்கில் தோன்றிய பிரச்சனைகளை எல்லாம் ஒரு பட்டியலிட்டுக் காட்டுகின்றனர். ஆதலால் அப்பிரச்சனைகளையும் அதற்குரிய விளக்கங்களையும் இப்போது பார்ப்போம்.

1. ஹழ்ரத் ஸெய்யிதுனா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் பற்றிய பிரச்சனை ஈராக்கிலிருந்து தான் ஆரம்பமாயிற்று.

இதுவீண் பழியாகும். ஏனெனில் இப்பிரச்சனை அப்துல்லாஹ் இப்னு ஸஃத் இப்னு அபீசுர்ஹ் என்பவனைக் கொண்டு உருவான



பிரச்சனையாகும். இவன் மிஸ்ரைச் சேர்ந்தவனாதலால் இப் பிரச்சினை மிஸ்ரிலிருந்து தான் தோன்றிற்று. இப்பிரச்சனையில் எதிர்வாதியாக இருந்தவர் ஹழ்ரத் சித்தீகுல் அக்பர் ரழியல்லாஹு அன்ஹுவின் புதல்வர் முஹம்மத் என்பவராகும். இவர் மதீனா வைச் சேர்ந்தவர்.

2. ஜமல் யுத்தம் ஈராக்கில் தான் நிகழ்ந்தது.

சரித்திரம் மற்றும் இஸ்லாமிய வரலாறுகளைப் பார்க்கும் யாரும் இதை ஒரு காரணமாகக் கொண்டு ஈராக்கை குற்றஞ்சாட்ட மாட் டார். ஏனெனில் ஜமல் யுத்தம் யாரால் தோன்றியது? என்பதும், யார் யாருக்கிடையே நடைபெற்றது என்பதும் அவர்களுக்கே தெரியும்.

3. ஹழ்ரத் ஸெய்யிதுனா அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஈராக் நாட்டிலுள்ள கூபாவில் வைத்துத்தான் ஷஹீதாக்கப்பட்டார்கள்.

ஹழ்ரத் ஸெய்யிதுனா அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர் களைக் கொலை செய்தவர்கள் நஜ்துவாசிகளாகும். அதிலும் குறிப் பாக முழர் என்னும் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவனாகும்.

4. ஸிஃப்பீன் யுத்தம் ஈராக்கில் தான் நடைபெற்றது.

உண்மையில் இந்த யுத்தம் ஈராக்கில் நடைபெற்றிருந்தாலும் கூட அதற்கு மூல காரணவாதியாக இருந்தவர் புனித மக்காவில் பிறந்து புனித மதீனாவில் பல வருடங்கள் வாழ்ந்த ஒருவராகும். அவருக்கு உதவி செய்தோர் ஷாம் தேசத்தை சேர்ந்தவர்களாகும். இவையனைத்துக்கும் முக்கியக் காரணமாக இருந்தோர் இஸ்லாமிய வேடந்தரித்த முனாபிக்கீன்களாகும்.

ஆக உலகின் நாலா பக்கங்களிலும் பல்வேறு பிரச்சனைகள் தோன்றின. இருப்பினும் அவையனைத்தும் ஒரு குறுகிய காலத் திற்குள் மறைந்தும் போய் விட்டன. ஆனால் நபித்துவத்திற்கு முன்பிருந்தே நஜ்துவாசிகளால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சனை மட்டும் தான் ஏறக்குறைய 1423 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அத்துடன் இது தஜ்ஜாலின் வருகைவரை நீடிக்கும் என்பது நாதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் வேதவாக்காகும்.

மேலும் ஈராக்கில் நடைபெற்ற பிரச்சனைகளை காரணமாக வைத்து நஜ்தைக் குறித்து அறிவிக்கப்பட்ட நபிமொழியோடு ஈராக்கை தொடர்பு படுத்தியதற்குரிய காரணமானது,...

هناك الزلازل والفتن

**"ஹுனாலிகஸ் ஸலாஸிலு வல் ஃபிதன்"** என்ற வாக்கியம் தான். அங்கே அப்போது காணப்பட்ட குழப்பங்களையும் அனுச்சாரங்களையும் கருத்தில் கொண்டு சொல்லப்பட்ட ஒன்றாகும். ஆனல் அவைகளையெல்லாம் மூடி மறைத்துவிட்டு நஜ்த் என்னும் சொல்லுக்கு தவருன பொருள்கூறி ஈராக்கை இப்பிரச்சனையில் இழுத்துவிட்டுள்ளனர். இது தான் திருடி அயல் வீட்டை நம்ப மாட்டாள் என்னும் பழமொழிக்கு ஒப்பானதாகும்.

பின்னும் இவர்கள் தரும் கருத்துத்தான் சரியானதெனில் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு மறைவான செய்திகளெல்லாம் தெரியும் எனும் நல்லோரது கருத்தை இவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? இப்போது முன்பின் யோசிக்காமல் இப்படியொரு கருத்தைச் சொல்லி விட்டோமே என்று பேயறைந்தவனைப் போல் முழிக்கிருர்கள் போலும்.

அப்பப்பா! தனக்குச் சாதகமான கருத்தை உறுதிப்படுத்துவதற்காக எத்தனை பொய். எத்தனை வீண்பழி. எவ்வளவு பித்தலாட்டம். இதுதான் குர்ஆன் ஹதீதைப் பின்பற்றுவோரின் லட்சணமா?

புகாரி ஷரீபிலுள்ள நபிமொழியை தங்களுக்குத் தோதாக பொய்யான தவருன கருத்தைச் சொல்லி அந்த நபிமொழியில் இனங் காட்டப்படும் நஜ்த் என்னும் சொல் ஈராக்கைத் தான் குறிக்கின்றதென வாதித்தவர்கள் அக்கருத்தை ஆதாரப்படுத்த தப்ரானி கபீரில் கூறப்பட்டுள்ள ஹதீத் ஒன்றையும், முவத்தா இமாம் மாலிக்கில் கூறப்பட்டுள்ள ஹதீத் ஒன்றையும் எடுத்துக் காட்டுகின்றனர்.

அதற்குமுன் ஒரு சந்தேகம்:- அதாவது ஒரு ஹதீதில் ஒரு இடத்தின் பெயர் குறிப்பிடப்பட்டால் அது வேருெரு இடத்தைக் குறிக்காது என்னும்போது ஈராக்கில் நிகழ்ந்த பிரச்சனையை காரணமாக்கி நஜ்த் சம்பந்தமான ஹதீதை ஈராக்குடன் இணைப்பது அடிமடையர்களின் வேலையாயிற்றே! பிறகு ஏன் மீண்டும் மீண்டும் குற்றஞ்சாட்டிக் கொண்டேயிருக்கின்றனர் எனில்,



இதற்கான பதிலை நாம் தெரிந்துகொள்ள வேண்டுமாயின் நய வஞ்சகர்களான ஹாமித் பக்ரியும் அவரது சகாக்களும் மத்ஹபுகளை நொறுக்குவதற்காக அத்துர்ருல் முக்தார் என்னும் நூலில் கூறப்பட்டுள்ள விஷயத்தை தங்களுக்குச் சாதகமாகத் திசை திருப்புவதை நாம் எடுத்துக் காட்டினுல் மேற்கண்ட சர்ச்சைக் குரிய பிரச்சனைக்கும் விடை கண்டு விடலாம்.

ஆம். இமாம் அல்லாமா ஷாமி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது துர்ருல் முக்தாரின் விளக்கவுரையில் பாகம்-4, பக்கம்-264ல் அழிச்சாட்டியம் செய்வோர் என்னும் பாடத்தில்,...

الذين خرجوا من نجد وتغلبوا على الحرمين وكانوا ينتحلون مذهب الحنابلة لكنهم إعتقدوا انهم هم المسلمون وان من خالف اعتقادهم مشركون واستباحوا بذلك قتل اهل السنة وقتل علمائهم.

**"நஜ்திலிருந்து வெளிப்பட்ட சிலர் தம்மை ஹன்பலி மத்ஹபைப் பின்பற்றுவோரென்று சொல்லிக்கொண்டு அவர்களின் கொள்கைக்கு மாறுபட்டோரை முஷ்ரிக்கீன்கள் எனக்கூறி தங்களை மட்டுமே முஸ்லிம்களென்றும் கூறி சுன்னத் வல் ஜமாஅத்தினரை கொல்வது ஆகுமான ஒன்றென்றும் தீர்ப்பளித்தனர். இன்னும் அவர்கள் மக்கா முகர்ரமாவையும் மதீன முனவ்வராவையும் அடாவடித்தனத்தைக் கொண்டும் கைப்பற்றினர். இத்தகையோர் இஸ்லாத்தை விட்டும் விரண்டோடியவர்களாகும். பின்னும் இவர்கள் கவாரிஜிய்யீன்களாகும் எனக் குறிப்பிடுகின்றனர்."** இதனுல் தான் இவர்கள் அந்த நூலை இப்போது அலசி ஆராய்ந்து கொண்டிருக்கிருர்கள்.

மேலும் இவர்களுடைய பார்வையில் மத்ஹபுகள் அனைத்தும் வழிகேடு என்பதால் அதன் முக்கியப் பிரமுகரான இமாம் சிராஜுல் உம்மத் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஈராக்கிலுள்ள கூபாவில் பிறந்து பக்தாதில் நல்லடக்கம் செய்யப்பட்டிருப்பதாலும், இவர்களின் விரோதிகளான சூஃபிஸம் - வலித்தன்மை ஈராக்கிலிருந்து தான் வெகுவேகமாக உலகமனைத்திலும் பரவிற்று என்பதாலும் இவைதான் இஸ்லாத்தில் குழப்பங்களை தோற்றுவித்தது எனக்கருதி அந்நாட்டு முஸ்லிம்களை இழிவுபடுத்துகின்றனர்.

அதனுல் இந்த இடத்தில் எதிர்தரப்பாரின் கருத்துக்களை முறியடிப்பதற்காக ஈராக் பற்றிய தகவல்களை இப்போது பார்ப்போம்.

نظر رسول الله صلى الله عليه وآله وسلم قبل اليمن فقال اللهم اقبل بقلوبهم ونظر قبل العراق فقال اللهم اقبل بقلوبهم ونظر قبل الشام فقال اللهم اقبل بقلوبهم وبارك لنا في صاعنا ومدنا.

***“அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் எமன் தேசத்தை நோக்கியவர்களாக யா அல்லாஹ்! இவர்களுடைய உள்ளங்களை என் பக்கமாக ஆக்குவாயாக என்று பிரார்த்தித்தார்கள். அதன்பின் ஈராக் மற்றும் ஷாமின் பக்கமாகத் திரும்பியவர்கள் அவ்வாறே பிரார்த்தித்தார்கள். இன்னும் எங்களுடைய கொடுக்கல் வாங்கலிலும் பரக்கத்துச் செய்வாயாக என்றும் பிரார்த்தித்தார்கள்.”*** நூல்: மஜ்மவுஸ் ஸவாயித், பாகம்-3, பக்கம்-304. முஸ்னத் அஹ்மத், பாகம்-5, பக்கம்-135 அதபுல் முப்ரத், இமாம் புகாரி. கன்ஸுல் உம்மால்.

أن النبي صلى الله عليه وآله وسلم نظر الى الشام فقال اللهم اعطف بقلوبهم الى طاعتك واحط من ورائهم الى رحمتك ثم نظر الى اليمن فقال مثل ذلك ثم نظر الى العراق فقال مثل ذلك.

***“ஷாம் தேசத்தின் பக்கமாகப் பார்த்த அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் யா அல்லாஹ்! அவர்களுடைய உள்ளங்களை உன்னை வழிப்படுவதற்குரிய உள்ளங்களாக ஆக்குவாயாக. இன்னும் அவர்களை சூழ இருப்போரையும் உனது அருளைக் கொண்டு சூழ்ந்து கொள்வாயாக என்று பிரார்த்தித்தார்கள். பின்னர் எமன் தேசத்தின் பக்கமாகவும் ஈராக் தேசத்தின் பக்கமாகவும் திரும்பி அதுபோன்றே பிரார்த்தித்தார்கள்.”*** நூல்: முஸ்னத் அப்திர் ரஸ்ஸாக்.

மேற்கண்ட இரு நபிமொழிகளிலும் நபியவர்கள் ஷாம் தேசத்திற்காகவும் எமன் தேசத்திற்காகவும் பிரார்த்தனை செய்தபோது தெளிவாக ஈராக்கையும் குறிப்பிட்டு பிரார்த்தனை செய்திருக்கிறார்கள். அதன்பின் ஷாமுக்காகவும் எமனுக்காகவும் பிரார்த்தித்த போது நாயகமே! எங்களின் நஜ்துக்காகவும் பிரார்த்தியுங்கள் எனக்கேட்க, அதற்கு நபியவர்கள் பிரார்த்தனை செய்யாமல் போனதோடு அங்கிருந்து தான் பிரச்சனைகளும் ஷைத்தானின் கொம்பும் உதயமாகும் என்றும் சொல்லப்பட்ட தகவல் ஈராக்கைத்தான் சாரும் எனக் கூறுவது அறிவிலித்தனம் இல்லையா? இனி ஈராக் நாட்டிலுள்ள கூபா பற்றிய சில ஹதீதுகளை இப்போது பார்ப்போம்.



கூபாவில் பிறந்தவர்கள் தான் இமாம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்கள். இந்த நகரம் ஹழ்ரத் ஸெய்யிதுனா உமர் பாரூக் ரழியல்லாஹு அன்ஹு அவர்களுடைய கட்டளையின் பேரில் ஹழ்ரத் ஸெய்யிதுனா ஸஃத் இப்னு அபீவக்காஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களால் பாதுகாக்கப்பட்ட நகரமாகும்.

இந்நகரில் கிட்டத்தட்ட 1500 நபித்தோழர் பெருமக்கள் இன்றும் தங்களின் மண்ணறைகளில் பெருமையோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். லட்சோப லட்சம் மக்கள் இப்போதும் அந்நல்லோரின் கப்ருகளை தரிசித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் 70 பேர் பத்ருடைய ஸஹாபாக்களும் 300 பேர் பைஅத்துர் ரிழ்வானில் கலந்து கொண்டவர்களுமாகும்.

ஹழ்ரத் உமர் பாரூக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், ரஃஸுல் இஸ்லாம், ரஃஸுல் அரப், ஜும்ஜுமதுல் அரப், ரும்ஹுல்லாஹ். கன்ஸுல் ஈமான் எனவும், ஹழ்ரத் ஸல்மானுல் பாரிஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களால் குப்பதுல் இஸ்லாம் எனவும், ஹழ்ரத் ஸெய்யிதுனா அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களால் கன்ஸுல் ஈமான், ஸைபுல்லாஹ், ரும்ஹுல் இஸ்லாம் எனவும் புகழ்ந்து பேசப்பட்ட நகரமாகும்.

இன்னும் ஹழ்ரத் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களால் மிகவும் நேசிக்கப்பட்ட நகரமாகும் இந்நகரம். இந்நகரம் பற்றி, ஹதீதின் அமீருல் முஃமினீன் எனப் புகழப்படும் இமாம் புகாரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,...

*“நான் ஹதீதுக் கலையை கற்பதற்காக இருமுறை மிஸ்ருக்கும், இருமுறை ஷாமுக்கும், இருமுறை ஜஸாயிருக்கும்பயணம் செய்த நான், நான்கு ஆண்டுகள் ஹிஜாஸிலும் வாழ்ந்திருக்கிறேன். ஆனால் கூபாவுக்கும் பக்தாதுக்கும் கணக்கிட முடியாத அளவுக்கு பயணம் செய்திருக்கிறேன் என்று கூறுகின்றனர்.” நூல்: ஹத்யுஸ் ஸாரி, பக்கம்-478.*

இவ்வாறே கூபாவில் வாழ்ந்த ஹழ்ரத் ஸெய்யிதுனா இப்னு மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் சபையில் ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொள்வர். ஒருமுறை தன்னை வரவேற்க வந்த கூட்டத்தைக் கண்ட ஸெய்யிதுனா அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இப்னு மஸ்ஊதே! உம்மால் இந்நகரம் அறிவின் சிகரமாகி விட்டதென்று சொன்னார்கள்.

காத்தமுன் நபியவர்களின் கண்மணித் தோழர்களான நபித் தோழர் பெருமக்களில் ஆறுபேர் நீதிபதிகளாகத் திகழ்ந்தனர். அதில் ஹழ்ரத் ஸெய்யிதுனா உமர் பாரூக், ஹழ்ரத் ஸெய்யிதுனா உபை இப்னு கஃப், ஹழ்ரத் ஸெய்யிதுனா ஸைத் ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோர் மதீனா முனவ்வராவிலும், ஹழ்ரத் ஸெய்யிதுனா அலீ, ஹழ்ரத் ஸெய்யிதுனா அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத், ஹழ்ரத் ஸெய்யிதுனா அபூ மூஸா அல் அஷ்அரி ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோர் கூபாவிலும் மிளிர்ந்தனர் என்கிறார்கள் ஹழ்ரத் ஷஃபி ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்.

“இவ்வாறே ஹழ்ரத் ஸெய்யிதுனா உமர் பாரூக், ஹழ்ரத் ஸெய்யிதுனா இப்னு மஸ்வூத், ஹழ்ரத் ஸெய்யிதுனா ஸைத், ஹழ்ரத் ஸெய்யிதுனா உபை இப்னு கஃப், ஹழ்ரத் ஸெய்யிதுனா அபுதர்தா, ஹழ்ரத் ஸெய்யிதுனா அலீ ரழியல்லாஹு அன்ஹும் ஆகிய அறுவரையும் நபித்தோழர்களில் கல்வியின் ஊற்றுக் கண்ணாகக் கண்டேன். பின்னர் அவ்வூற்றுக்கள் ஹழ்ரத் ஸெய்யிதுனா அலீ, ஹழ்ரத் ஸெய்யிதுனா இப்னு மஸ்வூத் ஆகிய இருவரிடமும் ஒன்று சேர்ந்தது. அவ்விருவரின் கல்வியானது மதீனா முனவ்வராவிலிருந்து பெருக்கெடுத்து கூபாவில் மழையாகப் பொழிந்தது. அவ்விருவரின் பொருட்டால் கூபா முழுவதும் கல்வியால் பிரகாசித்தது என்கிறார் இமாம் மஸ்ரூக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்.” நூல் : பித்னதோன் கா சர்ஸமீன்.

அதற்கு மாறாக அந்த நபிமொழிக்கொப்ப நஜ்தை நாம் கணக்கில் கொண்டால் அங்கிருந்து அல்லாஹ்வின் விரோதியான இப்லீஸ்தான் காலத்திற் கேற்ப வெவ்வேறு வகையான உருவங்களில் தோற்றமெடுத் தானே தவிர இஸ்லாத்தின் மகத்துவத்தை சுட்டிக்காட்டக்கூடிய எந்தவொரு நிகழ்ச்சியும் அங்கே நிகழ்ந்ததாக நமக்குத் தெரிய வில்லை. அதன்றி அப்பகுதியில் ஒருசில பெரியார்களின் கப்ருகள் இருந்தாலும் அவைகளையும் அங்குள்ளோர் உடைத்துத் தரை மட்டமாக்கி அவர்களின் சாபத்தையும் அவர்கள் தேடிக் கொண்டனர்.

அடுத்து அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் எமனுக்காகவும் ஷாமுக்காகவும் பிரார்த்தித்த போது ஈராக்குக்காகவும் பிரார்த்தித்துள்ளனர் என்பதும், ஈராக் தேசம் அல்லாஹ்வின் நேசர்கள் நிறைந்து காணப்படும் அருளுக்குரிய



புண்ணிய பூமி என்பதும்தெளிவாகத் தெரிந்து கொள்ளப்பட்ட ஒன்றாக இருப்பதால் இதற்கு மேலும் நபியவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட நஜ்த் என்பதை ஈராக் தான் என்று சொல்வீர்களாயின் அது சிலந்தி வீடுகட்டிய கதையாகத்தான் முடியும் என்பதை இனியாவது புரிந்து கொள்ளுங்கள். அத்துடன் இங்கே அவர்களின் இன்னொரு வாதத்தையும் உங்களின் மேலான விளக்கத் திற்காக தருகிறோம். ஏனெனில் அப்போது தான் நீங்கள் எளிதாக இப்பிரச்சனையை விளங்கிக்கொள்ள முடியும்.

“**எங்களுடைய நஜ்துக்கும்**” என்னும் வாக்கியத்தைக் கொண்ட ஹதீதானது புகாரி மற்றும் திர்மிதியில் பதிவாகியுள்ள ஒன்றாகும். இதேபோல முஸ்னத் அஹ்மதின் 5986 என்னும் இலக்கத்தில் பதிவாகி இருந்தாலும் 5642 என்னும் இலக்கத்தில் பதிவு செய்யப் பட்டுள்ள ஹதீதில் “**நஜ்தினா**” என்னும் வாக்கியத்திற்குப் பதிலாக “**வஃபீ மஷ்ரிகினா**” - எங்களின் கிழக்குப் பகுதிக்காகவும் என கேட்கப்பட்டதாகவும் பதிவாகியுள்ளது.

எமன் என்றும் ஷாம் என்றும் இடங்களின் பெயரைச் சொல்லி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பிரார்த்தித்த போது நஜ்த் என்ற இடத்தின் பெயரைச் சொன்ன தோழர்கள் இச்சந்தர்ப்பத்தில் மஷ்ரிக் என்பதாக திசையை குறித்து சொல்லி யிருப்பதை நாம் கவனிக்க வேண்டும். ஏனெனில் மதீனா முனவ்வராவிலிருந்து பலமுறை நபியவர்கள் கிழக்குத் திசையை சுட்டிக்காட்டி எச்சரிக்கை செய்தவையனைத்துமே நஜ்தைக் குறித்துத்தான் சொல்லப்பட்டதென்பதை அத்தோழர்களின் வார்த்தை நமக்குத் தெளிவாக்குகிறது.

ஆம். புண்ணிய பூமியான மதீனா முனவ்வராவின் நேர் கிழக்கே நஜ்த் தான் இடம் பெற்றுள்ளது. ஆனால் ஈராக் ஷிமால் - மேற்குப்பக்கமாகச் சாய்ந்து கிழக்கை நோக்கி அமைந்துள்ளது. அதுமட்டுமின்றி எந்தெந்த இடங்களிலெல்லாம் நின்று அருமை நபியவர்கள் கிழக்குத் திசையை சுட்டிக் காட்டினார்களோ அவை களையெல்லாம் நமது ஆய்வுக்கு உட்படுத்துவோமாயின் அது நஜ்தை நோக்கித்தான் திரும்புகிறது.

இவையனைத்தையும் விட மஷ்ரிக் எனதிசையை சுட்டிக்காட்டி சொன்னது நஜ்தை நோக்கித்தான் என்பதை அதே புகாரி முஸ்லிமில் பதிவு செய்யப்பட்டுள்ள நபிமொழிகளே ஆதாரப்படுத்துவதை இப்போது பாருங்கள்.

عن ابى مسعود الانصارى رضى الله عنه عن النبي صلى الله عليه وآله وسلم قال: ههنا جاءت الفتن اشار نحو المشرق والجفاء غلظ القلوب فى الفدادين اهل الوبر عند أصول اذناب الابل والبقر في ربيعة والمضر

***"இங்கிருந்து தான் பிரச்னைகள் உருவாகும் என கிழக்குப் பிரதேசத்தை சுட்டிக்காட்டிய அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஷைத்தானுடைய இரு கொம்புகளும் ரபீஆ மற்றும் முழருடைய வம்சத்திலிருந்தே தோன்றும் எனக்கூறிய நபியவர்கள் அவ்விரு குடும்பத்தினர்களும் ஒட்டகம் மற்றும் மாடுகளை மேய்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளோரிடம் காணப்படும் வன்நெஞ்சமும் வெறுப்புணர்வும் உடையவர்களாக இருப்பார்கள் என்றும் கூறினர்."*** நூல்: புகாரி ஷரீப், கிதாபு பத்யில் கல்கி.

புனித மார்க்கமான இஸ்லாத்தில் முஸ்லிம்களிடையே கருத்து மோதல்களும், ஷைத்தானின் கொம்பும் இன்று சவூதி அரேபியாவின் தலைநகரமாகத் திகழும் ரியாத் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள நஜ்திலிருந்து தான் தோன்றியது என்பதை மேற்கண்ட புகாரி முஸ்லிமின் ஹதீதுகள் மிக அழகாக விளக்கிக் காட்டிவிட்டது. எப்படியென்று கேட்கிறீர்களா? ஷைத்தானுடைய கொம்பும் குழப்பங்களும் கிழக்குத் திசையில் ரபீஆ மற்றும் முழருடைய குடும்பத்திலிருந்து தான் வெளியாகும் எனக் கூறப்பட்டதல்லவா! அவ்விரு கூட்டத்தாருமே நஜ்த் வாசிகள் தான். ஆதலால் இப்போது நாம் அவ்விரு குடும்பங்கள் தொடர்பாக அவர்கள் எங்கிருந்தார்கள்? அதன்பின் அவர்கள் எங்கு சென்றுர்கள்? என்பதைப் பற்றி இப்போது பார்ப்போம்.

### *1. பனூ அஸத் பின் குஸைமா*

இவர்கள் முழருடைய கோத்திரத்தாராகும். இவர்கள் நஜ்துப் பிரதேசத்தில் குடியிருந்தனர். ஹிஜ்ரி 19ல் இவர்கள் கூபாவை சென்றடைந்தனர். சண்டையும் சச்சரவும் இவர்களின் குணமாகும். இக்கோத்திரத்திலிருந்து தான் தன்னை நபியெனப் பிரச்சாரம் செய்த ***"துலைஹா இப்னு குவைலித்"*** என்பவன் தோன்றினன்.

### *2. பனூ தமீம் இப்னு முர்ரா*

இவர்களும் முழரின் கிளையாராகும். நஜ்தில் தான் குடியிருந்தனர். பின்னர் கூபாவில் குடியேறினர். ஹிஜ்ரி 66ல் கூபாவில் நபியென்று தன்னை பிரகடனப்படுத்திக் கொண்டிருந்த முக்தார்



ஸகபியுடன் ஒன்று சேர்ந்து முஸ்லிம்களுக்கு எதிராக யுத்தம் செய்தனர். இன்னும் இதே கோத்திரத்திலிருந்து தான் துல் குவைஸரா பிறந்தான். இதேபோல நஜ்திய மத்ஹபின் ஸ்தாபகரான நஜ்துடைய ஷைகும் இதே கோத்திரத்தை சார்ந்தவர் தான் என்பது இங்கே குறிப்பிடத்தக்க ஒன்ருகும்.

### *3. பனூ தைம் அர்ரபாப்*

இவர்களும் முழரின் கிளையாராகும். இக்கிளையைச் சார்ந்த கூபாவின் பிரதிநிதியான ராஷித் என்பவன் தான் ஹழ்ரத் ஸெய்யிதுனு அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களை கொலை செய்வதற்காக அப்துர் ரஹ்மான் பின் முல்ஜிம் என்பவனை உருவாக்கியவனுகும்.

### *4. பனூ ஸகீ.:ப்*

இவர்களும் முழருடைய கிளையைச் சேர்ந்தவர்களே. இவர்கள் தாயிப் நகரில் வாழ்ந்தனர். அதன்பின் கூபாவை சென்றடைந்தனர்.

### *5. பனூ கு.:பாஜா*

இவர்களும் முழரின் கிளையைச் சார்ந்தோரே. இவர்கள் நஜ்தில் வாழ்ந்தனர்.

### *6. பனூ சுலைம் பின் மன்ஸூர்*

முழரின் கிளையார். நஜ்தில் வாழ்ந்தனர்.

### *7. பனூ ஆமிர் இப்னு ஸ.:ஸஆ*

முழரின் கிளையார். நஜ்தில் வாழ்ந்தனர்.

### *8. பனூ கத்பான் இப்னு ச.:த்*

முழரின் கிளையார். நஜ்த் வாசிகளாகும்.

### *9. பனூ .:பஸாரா இப்னு ஸப்யான் - ذبيان*

முழரின் கிளையார். நஜ்திலும் வாதியுல் குராவிலும் வாழ்ந்தனர். கைபர் யுத்தத்தின் போது முஸ்லிம்களுக்கெதிராக யூதர்களுக்கு உதவி செய்தவர்களாகும். அப்துர் ரஹ்மான் ஃபஸாரி என்பவன் இதே கிளையைச் சேர்ந்தவனுகும்.

### *10. பனூ பக்ர் பின் வாயில்*

ரபீஆவின் கிளையார். ஸுஊத் குடும்பத்தினர் இக்கிளையைச் சேர்ந்தவர்களாகும்.

### *11. பனூ தங்லப் ثعلب - பின் வாயில்*

ரபீஆவுடைய கிளையார். நஜ்துவாசிகளாகும்.

### *12. பனூ ஷைபா பின் ஸஃலபா*

ரபீஆ கிளையைச் சார்ந்த பக்ர் பின் வாயிலின் குடும்பத்தினராகும். இக்குடும்பத்தில் தான் கவாரிஜிய்யீன்களின் முக்கியஸ்தர்கள் தோன்றினர். நஜ்தில் வாழ்ந்தனர்.

### *13. அல் பதீகாத் - الفديكات*

அபூ பித்யக் அப்துல்லாஹ் இப்னு தௌர் இப்னு கைஸ் இப்னு ஸஃலபாவின் பிள்ளைகளாகும். ஷைத்தானின் கொம்பு வெளிப்பட்ட நஜ்தில் வாழ்ந்தவர்கள். நூல்: பித்னத்தோன் கா ஸர்ஸமீன், பக்கம்-88.

அன்புக்குரிய வாசகர்களே! இதுவரை மேற்கூறப்பட்ட ரபீஆ மற்றும் முழரின்கோத்திரத்தார் இன்று இப்னு சுஊதின் ஆட்சியின் கீழிருக்கும் ரியாத் என்னும் நஜ்தில்தான் வாழ்ந்து வந்தனர். அன்று இஸ்லாமியர்களுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட பிரச்சனைகள் அனைத்துக்கும் இவர்கள் தான் காரண கர்த்தாக்களாகும். பின்னர் காலப்போக்கில் இஸ்லாம் எங்கெல்லாம் பரவிற்றோ அங்கெல்லாம் இவர்கள் சென்று குழப்பங்களையும் பிரச்சனைகளையும் ஏற்படுத்தினர். இவ்வகையில் இவர்கள் ஈராக்கிலுள்ள கூபா, பஸரா போன்ற பகுதிகளுக்குச் சென்று குடியேறி பல்வேறு பிரச்சனைகளை ஏற்படுத்தினர். எனவே ஈராக்கில் ஏற்பட்ட பிரச்சனைகள் அனைத்துக்கும் இந்த நஜ்திகள் தான் காரணமாகும். எதார்த்தமான இந்த உண்மைகளெல்லாம் மறைக்கப்பட்டு ரபீஆ மற்றும் முழருடைய கோத்திரத்தார் ஈராக்கில் தான் வாழ்ந்ததாகவும் நபியவர்களால் சொல்லப்பட்ட நஜ்த் என்பது ஈராக் தானென்றும் பொய் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

இனி எதிர்தரப்பார் தமது கூற்றுக்கு ஆதாரமாக எடுத்துவைக்கும் விஷயங்களில் அடுத்து வருபவை மிக மிக முக்கியமானவைகளாகும். அதாவது அவர்களது கருத்துக்கு அவை உயிர்நாடியைப் போன்றதாகும். இதில் வியப்புக்குரிய விஷயம் என்னவெனில் இவர்களால் பொய்யாக இட்டுக்கட்டப்பட்ட ஹதீதுகளைக் கொண்டுள்ள நூல்களென்று இவர்களாலேயே புறக்கணிக்கப்படுகின்ற நூல்களிலிருந்து அதற்குரிய ஆதாரத்தை நமக்கு எடுத்துக்



காட்டுவதேயாகும். அதையும் உங்களின் பார்வைக்கு தருகிறோம். அதாவது,...

أن عمر رضى الله عنه قال إن النبي صلى الله عليه وآله وسلم قال: اللهم بارك لنا في صاعنا وفي مدنا فرددها ثلاث مرات فقال: يا رسول الله صلى الله عليه وآله وسلم ولعراقنا فقال رسول الله صلى الله عليه وآله وسلم: بها الزلازل والفتن ومنها يطلع قرن الشيطان.

*"யாஅல்லாஹ்! எங்களுடைய கொடுக்கல் வாங்கலில் பரக்கத்துச் செய்வாயாக என்பதாக மூன்றுமுறை நபியவர்கள் பிரார்த்தித்தார்கள். அப்போது ஒருவர், எங்களுடைய ஈராக்கிற்கும் பிரார்த்தியுங்கள் என்றுசொல்ல, அங்கே குழப்பங்களும் பிரச்சனைகளும் இருப்பதாகவும் அங்கிருந்து தான் ஷைத்தானுடைய கொம்பு உதயமாகும் என்றும் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொன்னார்கள்."* அ-ர். ஹழ்ரத் ஸெய்யிதுனா உமர் ரழியல்லாஹு அன்ஹு, நூல்: ஹுல்யத்துல் அவ்லியா, பாகம்-6, பக்கம்-133.

أن النبي صلى الله عليه وآله وسلم قال: اللهم بارك لنا في مدينتنا وبارك لنا في مكتنا وبارك لنا في شامنا وبارك لنا في يمننا وبارك لنا في صاعنا ومدنا فقال رجل: يارسول الله صلى الله عليه وآله وسلم وفي عراقنا فاعرض عنه فقال: فيها الزلازل والفتن وبها يطلع قرن الشيطان.

*"அண்ணலெம் பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், எங்களின் மக்கா, எங்களின் மதீனா, எங்களின் கொடுக்கல் வாங்கல், எங்களின் ஷாம், எங்களின் எமன் ஆகியவைகளுக்கு அருள் புரியுமாறு அல்லாஹ்விடம் பிரார்த்தித்தார்கள். அப்போது ஒருவர், அல்லாஹ்வின் ரஸூலே! எங்களின் ஈராக்கிற்கும் பிரார்த்தியுங்கள் என்றார். அதற்கு அங்கே பிரச்சனைகளும் குழப்பங்களும் இருக்கிறது. இன்னும் ஷைத்தானின் கொம்பும் அங்கிருந்து தான் உதயமாகும் என்றார்கள்."* அ-ர்: ஹழ்ரத் ஸெய்யிதுனா உமர் ரழியல்லாஹு அன்ஹு. நூல்: ஹுல்யத்துல் அவ்லியா, பாகம்-6, பக்கம்-133

عن ابن عمر رضى الله عنهما قال صلى رسول الله صلى الله عليه وآله وسلم الفجر ثم اقبل على القوم فقال اللهم بارك لنا في مدينتنا وبارك لنا في مدنا وصاعنا اللهم بارك لنافي شامنا ويمننا فقال رجل والعراق

يارسول الله صلى الله عليه وآله وسلم قال من ثم يطلع قرن الشيطان وتهيج الفتن.

"சுப்ஹுத் தொழுகையை நிறைவேற்றிய பின் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அங்கே குழுமியிருந்தோரை முன்னோக்கியவர்களாக, யா அல்லாஹ்! எங்களது மதீனாவிலும், எங்களது கொடுக்கல் வாங்கலிலும் இன்னும் எங்களது ஷாமுக்கும் எமனுக்கும் பரக்கத்துச் செய்வாயாக எனப் பிரார்த்தித்தார்கள். அப்போது ஒருவர் ஈராக்கிற்கும் பிரார்த்தியுங்கள் என்று சொல்ல, அதற்கு அங்கிருந்து தான் ஷைத்தானின் கொம்பு உதயமாகும் பிரச்சனைகள் ஏற்படும் என்றார்கள்." அ-ர்: ஹழ்ரத் ஸெய்யிதுனா இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு. நூல்: மஜ்மவுஸ் ஸவாயித், பாகம்-3, பக்கம்-305.

عن ابن عباس رضى الله عنهما قال: دعا نبي الله صلى الله عليه وآله وسلم فقال اللهم بارك لنا في شامنا ويمننا فقال رجل من القوم يانبي الله صلى الله عليه وآله وسلم وعراقنا فقال إن بها قرن الشيطان وتهيج الفتن وان الجفاء بالمشرق.

"யாஅல்லாஹ்! எங்களது ஷாமுக்கும் எங்களது எமனுக்கும் பரக்கத்துச் செய்வாயாக எனப் பிரார்த்தனை செய்தபோது, அங்கிருந்தோரில் ஒருவர், யாரஸூலல்லாஹ்! எங்களது ஈராக்கிற்கும் பிரார்த்தியுங்கள் என்றுசொல்ல, அதற்கு அங்கிருந்து தான் ஷைத்தானின் கொம்பு உதயமாகும் என்றும், குழப்பங்கள் வெடிக்கும் என்றும் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மொழிந்தார்கள்." அ-ர்: ஹழ்ரத் ஸெய்யிதுனா இப்னு அப்பாஸ் ரழியல்லாஹு அன்ஹு. நூல்: மஜ்மவுஸ் ஸவாயித், பாகம்-3, பக்கம்-305.

عن مالك رضى الله عنه أنه بلغه أن عمر بن الخطاب رضى الله عنه اراد الخروج الى العراق فقال له كعب الاحبار: لاتخرج اليها يا امير المؤمنين فان بها تسعة اعسار السحر وبها فسقة الجن وبها الدال العضال.

"ஹழ்ரத் ஸெய்யிதுனா உமர் இப்னு கத்தாப் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஈராக் நாட்டுக்குச் செல்ல தயாரானபோது, ஹழ்ரத் ஸெய்யிதுனா கஃபுல் அஹ்பார் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், அமீருல் முஃமினீனே! ஈராக்குக்கு செல்லாதீர்கள். நிச்சயமாக அங்கே



பத்தில் ஒன்பது சதவிகிதம் சூனியம் இருக்கிறது. அதுமட்டுமின்றி ஜின்கள் இருப்பதாகவும், மார்க்கத்திற்கு அழிவு இருப்பதாகவும் சொல்லப்பட்டுள்ள தகவல் என்னை வந்து எட்டியுள்ளது என்றார்கள். ஹழ்ரத் இமாம் மாலிக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்." நூல்: முவத்தா இமாம் மாலிக்.

عن سالم بن عبد الله بن عمر رضى الله عنهما يقول: ياأهل العراق ما أسألكم عن الصغيرة وأركبكم للكبيرة سمعت ابي عبد الله بن عمر يقول سمعت رسول الله صلى الله عليه وآله وسلم إن الفتنة تجيئ من ههنا وأومأ بيده نحو المشرق من حيث يطلع قرنا الشيطان.

"ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் புதல்வர் ஈராக்வாசிகளை நோக்கி, நான் உங்களிடம் சிறு விஷயங்களை குறித்து கேட்கவில்லை. நீங்கள் பெரும் பெரும் விஷயங்களையெல்லாம் புரிந்து கொண்டிருக்கிறீர்கள். ஆதலால் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது முபாரக்கான கரத்தால் கிழக்குத் திசை பக்கமாக சைக்கினை செய்து ஷைத்தானின் இரு கொம்புகள் வெளியாவதைக் கொண்டு அங்கிருந்து தான் குழப்பங்கள் உருவாகும் என்றுசொன்ன தகவலை நான் எனது தந்தை சொல்லக் கேட்டேன் என்கிறார்கள்." நூல்: முஸ்லிம் ஷரீப், கிதாபுல் பிதன், இக்மால், 8-447. பத்ஹுல்பாரி, பாகம்-13, பக்கம்-50.

மேற்கண்ட ஆறு ஹதீதுகளும் எதிர்தரப்பாரால் தமது கூற்றுக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டப்படுபவைகளாகும். இவற்றில் இரண்டு ஹதீதுகள் ஹுல்யத்துல் அவ்லியாவில் இருந்தும், இரண்டு ஹதீதுகள் மஜ்மவுஸ் ஸவாயிதில் இருந்தும், ஒன்று முவத்தாவில் இருந்தும், மற்றொன்று முஸ்லிம் ஷரீபில் இருந்தும் எடுக்கப்பட்டுள்ளது.

இவைகளில் குறைந்த பட்சம் பலவீனமான படித்தரமுள்ள அறிவிப்பாளர்களால் அறிவிக்கப்படும் ஹதீதையே ஏற்றுக் கொள்ள மறுக்கும் இவர்கள் இங்கே எடுத்துக் காட்டப்பட்டுள்ள ஆறு ஹதீதுகளிலும் ஒரேயொரு ஹதீதைத்தவிர மற்ற ஹதீதுகள் அனைத்தும் எந்த மாதிரியான படித்தரமுள்ளவை என்பதை அவர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். இனி அந்த ஒரு ஹதீதுக்குரிய விளக்கமும் நமக்குச் சாதகமான ஒன்றேயன்றி அவர்களுக்குச் சாதகமானதல்ல.

யாருக்குச் சாதகமாக இருந்தாலும் சரி. அவைகளுக்கான விளக்கமென்ன? என்று நம்மவர்கள் கேட்கலாம். ஆதலால் சொல்லப்போகும் விளக்கம் சுருக்கமாக இருந்தாலும் அதை ஆழமாக சிந்திக்குமாறு வேண்டுகிறோம். அதாவது, புகாரி, திர்மிதி, முஸ்னத் அஹ்மத் போன்ற நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ள ஸஹீஹான ஹதீதுகளில், எங்களுடைய நஜ்துக்கும் எங்களுடைய கிழக்குப் பகுதிக்கும் பிரார்த்தியுங்கள் என்று கேட்டதற்குரிய ஆதாரங்கள் உள்ளது. காரணம் அன்று அப்புனித சபையில் நஜ்தைச் சேர்ந்த தோழர்களும் இருந்ததே அதற்குரிய சான்றாகும்.

அதுமட்டுமின்றி நஜ்துவாசிகளால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கும், அவர்களது தோழர் பெருமக்களுக்கும் பல்வேறு வகையான பிரச்சனைகள் ஏற்படுத்தப்பட்டதால் அவைகளையெல்லாம் கருத்தில் கொண்டு நபியவர்கள் பிரார்த்திக்காமல் விட்டு விட்டனர். ஆனால் அப்பகுதியைச் சார்ந்தவர்கள் அவைகளையெல்லாம் தெரிந்து கொண்டே தங்களின் பகுதியும் நபியவர்களின் பிரார்த்தனைக்கு இலக்காகிவிட வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் ஒருமுறை கேட்கிறார்கள். அதற்கு நபியவர்கள் ஒன்றும் சொல்லாமல் இருக்கிறார்கள். இரண்டாவது முறையாகவும் கேட்கிறார்கள். அதற்கும் நபியவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. அத்தோடு அத்தோழர்கள் பேசாமல் இருந்திருந்தால் நஜ்த் என்னும் அப்பகுதி இத்தனை இழிவு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்காது. அதைத்தான் அருளின் முழுவடிவான ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும் விரும்பி இருந்திருக்கிறார்கள். அதே நேரம் கேட்பதைக் கொடுக்கக் கூடிய வல்லமையுடையவர்களும், இல்லையென்றும் சொல்லாதவர்களாக நபியவர்கள் இருந்ததால் அத்தோழர்களும் நபியவர்கள் நடந்ததையெல்லாம் மறந்து நமக்காக பிரார்த்திக்காமலா போய்விடுவார்கள் என்னும் ஆதங்கத்தில் ஒருமுறைக்கு மூன்றுமுறை கேட்டபோது தான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும் நஜ்துடைய எதார்த்த நிலையை அத்தோழர்களுக்கு எடுத்துக் காட்டினார்கள்.

அதற்கு மாறாக அப்புனிதச் சபையில் ஈராக் சம்பந்தமாகச் சொல்லப்படுவதற்குரிய சூழலோ, அல்லது அது சம்பந்தமாகப் பேசுவதற்குரிய ஆட்களோ யாருமே இருக்கவில்லை. அத்துடன் ஈராக்கைச் சேர்ந்தவர்கள் யாரும் அதுவரை இஸ்லாத்தைத் தழுவியதற்குரிய ஆதாரங்களும் இல்லையென்னும் போது நபியவர்களிடம் ஈராக்கிற்காக பிரார்த்தியுங்களென்று கேட்பதற்



குரிய சாத்தியம் அறவே இல்லையாதலால் இது சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இனி சந்தேகத்திற்குரிய நிலையில், சந்தேகத்திற்குரிய ஒன்றை எப்படி ஆதாரமாக எடுக்க முடியும்? இது ஒருபுறமிருக்க, தற்போது உள்ள நஜ்திகள் மேற்கண்ட ஹதீதுகளில் கூறப்பட்டுள்ள நஜ்த் என்னும் வாக்கியத்தை அந்த இடத்திலிருந்து அகற்றிவிட்டு அதற்குப் பதிலாக ஈராக் என்று வாக்கியத்தை நுழைத்திருக்கலாம் அல்லவா! ஏனெனில் இதற்கு ஏராளமான ஆதாரங்களும் இருக்கின்றனவாதலால் மேற்கண்ட ஹதீதுகளில் முதல் நான்கு ஹதீதுகளும் ஆதாரமாகக் கொள்ளப்படுவதற்குரிய தகுதி வாய்ந்தவையல்ல.

இனி கஃபுல் அஹ்பார் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை ஈராக்குக்குச் செல்ல வேண்டாமென சொல்லப்பட்ட ஹதீதானது, முவத்தாவின் பார்வையில் முர்ஸலானதும், முஸ்னத் அப்திர் ரஸ்ஸாக்கின் பார்வையில் முன்கதிவுமாகும்.

இது ஒருபுறமிருக்க இந்நூலில் பேசப்படும் கருத்துக்கு கொஞ்சங்கூட சம்பந்தமில்லாமல் இந்த ஹதீது இருப்பதை நாம் காணலாம். அதற்கு மாறாக சம்பந்தப்படுத்த முனைவோமாயின் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் செல்லாத ஒரு பகுதிக்கு தமது தோழர்களை அனுப்புவதற்கு அவர்கள் எப்படி முயற்சித்திருக்க முடியும்? அதுமட்டுமா! ஈராக் நாட்டை இஸ்லாமிய நாடாக மாற்றியமைக்கின்ற விஷயத்தில் கலீபா அவர்கள் எந்த அளவுக்கு ஆர்வமுடையவர்களாக இருந்தார்கள் என்பதை அடுத்து வரும் சம்பவத்தைக் கொண்டு நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். அச்சம்பவமானது,...

“ஹமதான் என்னும் பகுதியைச் சேர்ந்த 1000 பேர் ஷாமுக்கு ஹிஜ்ரத்துச் செய்யும் எண்ணத்தில் மதீனா முனவ்வராவை வந்தடைந்தனர். அப்போது ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு, அவர்கள் அனைவரையும் ஈராக்குக்கு அனுப்ப எடுத்துக் கொண்ட முயற்சியில் இரத்தம் சிந்த வேண்டிய கட்டம்கூட ஏற்பட்டது. இதில் கலீபா அவர்களின் தலையிலிருந்து இரத்தம் வழிவதைக் கண்டபோது தான் அவர்கள் ஈராக்குக்கு செல்லத் தயாரானார்கள்.” நூல்: முஸ்னத் அப்திர்ரஸ்ஸாக்.

மேலும் ஈராக்கில் சூனியம் மலிந்து காணப்பட்டது போல ஜின்களின் சாகசங்களும் ஒருகாலத்தில் அங்கே நிறைந்து காணப்

பட்டது வாஸ்தவம் தான். அதன்றி பல்வேறு வகையான பிரச்சனைகளும் அங்கே தலைதூக்கியதும் உண்மைதான். இருப்பினும் அவையனைத்தும் காலப்போக்கில் அழிந்துபோய் விட்டதோடு அதன்பின் அது விலாயத்தின் சிகரமாகத் திகழத் துவங்கி விட்டது.

அதன்றி புண்ணிய பூமியாகவும், விலாயத்தின் தலைமை பீடமாகவும் விளங்கிக் கொண்டுள்ள ஈராக்கை உலகின் குழப் பத்திற்குரிய பகுதியென சொல்லிக் கொண்டிருப்பவர்கள் தான் காலங்காலமாக இஸ்லாத்தை அழித்தொழிப்பதற்கு திட்டமிட்ட நஜ்துடைய ஷைகின் சகாக்கள் என்பதையும் நாம் கவனித்துக் கொண்டுதானிருக்கிறோம்.

இனி நாம் இவ்வாறு சொல்வதை கட்டுக்கதையென மறுக்கப் படுமாயின், சவூதி அரசாங்கம் பிரகடனப்படுத்தப்பட்ட போது அல்லாஹ்வின் ஆலயம் அமைந்துள்ள புனித மக்காவை அல்லது அல்லாஹ்வின் அருமைத் தூதரான ஈருலக ரட்சகர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் வாழ்ந்து கொண்டுள்ள புனித மதீனா முனவ்வராவை தலைநகரமாக ஆக்காமல் அல்லாஹ் ரசூலுடைய சாபத்திற்கு இலக்கான நஜ்தை பெயர் மாற்றம் செய்து தலைநகராக ஆக்கியது ஏன்? பதில் தொடர்கிறது.

இதுவரை வல்லோனாகிய அல்லாஹ்வின் பேரருளாலும் எமது நாதாக்களின் நல்லாசியாலும் அண்ணல் நபியவர்களின் ஹதீதில் சுட்டிக் காட்டப்பட்ட **"நஜ்த்"** என்பது இப்பூமியிலுள்ள எந்தப் பகுதி? அது எங்கேயுள்ளது? அங்கே தோன்றிய பிரச்சனைகள் என்ன? அது எக்காரணம் கொண்டும் ஈராக்கைச் சேர்ந்த பகுதியல்ல என்பதை தகுந்த ஆதாரங்களைக் கொண்டு உங்களின் பார்வைக்கு தந்தோம். இப்போது அந்த ஹதீதில் சுட்டிக்காட்டப் படும் **"ஷைத்தானின் கொம்பு"** என்பது எது என்பதற்குரிய விளக்கத்திற்காக நமது எழுதுகோலை முன்னைவிட கூர்மையாக்கிக் கொண்டு முனைப்போடு சொல்லத் துவங்குகிறோம். எல்லாம் செவ்வனே நிறைவுபெற நாதாக்களை நம்பி அவர்களின் பாதக் கமலத்தில் பணிந்து கிடக்கிறோம். அத்துடன் அனைத்துக்கும் அவர்களை அல்லாஹ்விடம் வஸீலாவாக்குகிறோம்.

# ஷைத்தானின் தோற்றம்

அருமை நாயகம் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், எங்களுடைய ஷாமுக்கும், எமனுக்கும் பரக்கத்துச் செய்வாயாக என்று அல்லாஹ்வைப் பிரார்த்தித்த போது ஒருவர், எங்களுடைய நஜ்துக்கும் என்று சொல்ல, அதற்கு நபியவர்கள்,...

هناك الزلازل والفتن وبها يطلع قرن الشيطان.

**"அங்கே குழப்பங்களும் சச்சரவுகளும் இருக்கின்றன. இன்னும் அங்கிருந்து தான் ஷைத்தானின் கொம்பும் வெளியாகும் என்று சொன்னார்கள்."** இன்னும்,...

سيظهر من نجد شيطان تزلزل جزيرة العرب من فتنته.

***"நஜ்திலிருந்து தான் ஷைத்தான் வெளிப்படுவான். அவனுடைய பிரச்சனையால் மத்திய கிழக்குப்பகுதி அதிர்ச்சியுறும் என்றும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொன்னார்கள்."***

நூல்: அல் ஃபஜ்ருஸ் ஸாதிக்.

இந்த ஹதீதுக்கு நாம் விளக்கமளிக்கும் முகமாக நஜ்தில் காணப்பட்ட பிரச்சனைகள் குறித்தும், அந்த நஜ்து என்பது அரபு மாகாணத்திலுள்ள, இன்று ரியாத் எனப் பெயர் மாற்றம் செய்யப் பட்டுள்ள பகுதி என்பதையும் ஆதாரப்படுத்தினோம். இப்போது அந்த நஜ்து என்னும் பகுதியிலிருந்து வெளியான ஷைத்தான் யார் என்பதை உங்களின் பார்வைக்குத் தருகிறோம்.

"**ஷைத்தானின் கொம்பு**" எனப் பேசுகின்ற ஹதீதுகளில் சிலவற் றில் "**ஒருகொம்பு**" என்றும், இன்னும் சிலவற்றில் "**இருகொம்பு**" என்றும் பேசப்பட்டிருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். அத்துடன் அவ்விரு ஷைத்தானின் கொம்பும் (சக்தியும்) நஜ்தில்

வாழ்ந்த முழர் மற்றும் ரபீஆவுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான் என்பதையும் அந்த ஹதீதுகள் தெளிவுபடுத்தியதையும் நீங்கள் கவனித்திருக்கலாம். ஆதலால் அவ்விருவரில் முதல் நபர் யார் தெரியுமா? அவன்தான்,...

## முஸைலமத்துல் கத்தாப்

என்போனுகும். இவன் நஜ்த் மாகாணத்தில் உயைனு என்னும் ஊரில் பிறந்தான். இவன் முழர் குடும்பத்தைச் சேர்ந்தவ்ன். இவன் தன்னை நபியென வாதித்தான். இவனை எதிர்த்து நடைபெற்ற யுத்தத்தில் பெரும்பான்மையான தோழர்கள் ஷஹீதாகிப் போயினர். இறுதியில் இவனுடைய பிரச்சனை வேரோடு கிள்ளியெறியப் பட்டது.

அத்துடன் இவனுடைய பிரச்சனை அருமை நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இப்பூமியில் தமது வெளிரங்க மான பஷரிய்யத்துடைய வாழ்க்கை வாழ்ந்த காலத்திலேயே தோன்றிய ஒன்றுகும். இதில் நஜ்த் என்பது ஈராக்கிலுள்ள ஒரு பகுதி என்பதாக வாதிப்போர், முஸைலமா எங்கே பிறந்தான்? இவனுக்கும் நபித்தோழர்களுக்கும் இடையே நடைபெற்ற யுத்தம் எங்கே நடைபெற்றது என்பதை தெளிவுபடுத்தட்டும்.

மேலும் முஸைலமத்துல் கத்தாபுடைய வெளிப்பாட்டை நமது பெரியோர்கள் ஷைத்தானின் ஒருகொம்பு எனக்கூறியதை பெரிய மனதோடு ஏற்றுக் கொண்டதோடு இவனுடைய பிரச்சனை நபியவர்களின் காலத்திலேயே ஏற்பட்ட ஒன்றுக இருப்பதாலும் நபிமொழியில் சொல்லப்பட்ட பகுதியிலிருந்து மட்டுமல்ல. சொல்லப்பட்ட குடும்பத்திலிருந்தே தோன்றிய இவனல்லாத இன்னும் இருகொம்புகள் யார் என்பதைப் பார்ப்போம்.

நபிமொழியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தோன்றப்போகும் அவ்விரு கொம்பும் ரபீஆ, மற்றும் முழர் ஆகிய இரு குடும்பங் களிலிருந்து தான் தோன்ற வேண்டும். அதாவது ஒரு கொம்பு ரபீஆவின் கோத்திரத்தை இன்னெரு கொம்பு முழருடைய கோத்திரத்தை சேர்ந்ததாக இருக்க வேண்டும். ஆனுல் முதல் கொம்பாயுள்ள முஸைலமாவும் இரண்டாவது கொம்பான ஷைகு நஜ்தி ஆகிய இருவருமே முழருடைய கோத்திரத்தைச் சேர்ந்தவர் களாகவே இருப்பதால் இரு குடும்பத்தைச் சேர்ந்த அவ்விரு கொம்புகள் யார் என்பது பற்றி இப்போது பார்ப்போம். இவ் வகையில் தோன்றிய முதல் கொம்பு யார் தெரியுமா?

# ஷைகு நஜ்தி முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப்

இவர் நஜ்த் மாகாணத்தில் தன்னை நபியென வாதித்த முஸைலமா பிறந்த ஊரான உயைனுவில் தான் பிறந்தார். இந்த ஊர் தற்போது ரியாதிலிருந்து நாற்பது கிலோமீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. இதைத்தான்,...

يخرج في آخر الزمان في بلد مسيلمة رجل بغير الاسلام.

*"இறுதிக் காலத்தில் முஸைலமாவின் ஊரிலிருந்து ஒருவன் தோன்றுவான். அவன் இஸ்லாத்தை மாற்றியமைப்பான் என்பதாக அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பொன்னுன வாக்கு தெளிவுபடுத்துகிறது."* நூல் :அல்பஜ்ருஸ் ஸாதிக், பக்கம்-21.

இன்னும்,...

اما مضر فمن إبنه الياس يتفرع فرعان فرع مدركة ثم فرع طابخة وكان منه نسب الامام محمد بن عبد الوهاب.

*"முழரின் பிள்ளைகளில் இல்யாஸும் ஒருவராகும். இல்யாஸின் குடும்பத்தினர் முத்ரிகா, தாபிகா என இரு கிளைகளாகப் பிரிந்தனர். இவர்களில் தாபிகாவின் வழித்தோன்றலே "ஷைகு நஜ்தி"யாகும்"* நூல் : முதீருல் வஜ்த் ஃபீ அன்ஸாபி முலூகி நஜ்த், பக்கம் - 10.

இன்னேரிடத்தில்,...

إن الموجود في نجد من تميم يمكن حصره في ثلاثة بطون وهي اولا بطن حنظلة فمن حنظلة الوهبية وهم بيت الشيخ محمد بن عبد

الوهاب في الرياض.

*"நஜ்தில் இருக்கும் பனீ தமீம்கள் மூன்று குடும்பங்களில் உள்ளடங்குவர். அதிலொன்று "ஹன்ழலா"வாகும். அக்கோத்திரத்தை சேர்ந்தவர்கள் தான் அப்துல் வஹ்ஹாபின் அங்கத்தினர்களாகும். அவர்கள்தான் ரியாதிலுள்ள முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபின் குடும்பத்தினராகும்."* நூல்: ஹாஷியா முதீரில் வஜ்த், பக்கம்-32.

ஷைத்தானின் கொம்பாகத் திகழ்ந்த ஷைகு நஜ்தியான முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அமுத வாக்குக்கமைய முழர் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருப்பதுடன், துல்குவைஸராவின் கோத்திரமான பனூ தமீமையும் சார்ந்தவராக இருக்கிறார். முழருடைய குடும்பத்தில், பனூ தமீமுடைய கிளையில், நஜ்த் மாகாணத்தில், உயைனா என்னும் ஊரில் தோன்றிய அனைவருமே கொடியவர்கள், ஷைத்தானுடைய கொம்புகள் என்று சொல்வது தவறாகும். காரணம் அவர்களில் நல்லவர்களும் இருந்திருக்கலாம். இதற்கு அடுத்து வரும் ஹதீதைக்கூட நாம் அதற்கு ஆதாரமாகக் கொள்ளலாம். அதாவது,...

لاتقوم الساعة حتى يتحول خيار اهل العراق الى الشام ويتحول شرار اهل الشام الى العراق.

*"ஈராக்கிலுள்ள நல்லவர்கள் ஷாமுக்கும் ஷாமிலுள்ள தீயவர்கள் ஈராக்குக்கும் சென்றடையாத வரை இறுதிநாள் தோன்றாது என்கிறார்கள் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்."*

எனவே எல்லா இடத்திலும் எல்லா வம்சத்திலும் நல்லவர்களும் இருப்பர். தீயவர்களும் இருப்பர் என்பதால் இப்போது நாம் பனூ தமீம் பற்றியும், துல்குவைஸரா பற்றியும் பார்ப்போம்.

عن عمران بن حصين قال جاء نفر من بنى تميم الى رسول الله صلى الله عليه وآله وسلم فقال: ابشروا يابنى تميم قالوا بشرتنا فاعطنا قال فتغير وجه رسول الله صلى الله عليه وآله وسلم وجاء نفر من أهل اليمن فقال: اقبلوا البشرى فلم يقبلها بنو تميم قالوا قد قبلنا.

*"பனூ தமீமுடைய கிளையைச் சார்ந்தோரில் சிலர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருச்சபைக்கு வருகை தந்தபோது, நபியவர்கள் அவர்களை நோக்கி, "பனூ தமீம்களே! உங்களுக்கு நல்*



*வாழ்த்துக்கள்" என்றனர். அதற்கு அவர்கள், (ஏற்கனவே) எங்களுக்கு சுபச்செய்தி சொல்லி விட்டீர்களாதலால் இப்போது (பணம்) கொடுங்கள் என்றனர். அதுகேட்ட நபியவர்களின் திருவதனம் சினத்தால் மாறிப் போயிற்று. அப்போது அங்கே எமன் தேசத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் வருகை தந்தனர். அவர்களிடம் நபியவர்கள், எனது சுபச்செய்தியை பனூ தமீம்கள் ஏற்கவில்லை. நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்களென்று சொல்ல, அதற்கவர்கள்; நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்றனர்."* அ-ர்: ஹழ்ரத் இம்ரான் இப்னு ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு. நூல்: புகாரி, பாகம்-3, பக்கம்-262. நஸாயி, திர்மிதி, கிதாபுல் மனாகிப். இப்னு ஹிப்பான், பாகம்-9, பக்கம்-202. இன்னும்,...

إن الذين ينادونك من وراء الحجرات اكثرهم لايعقلون.

*"ஹபீபே! உங்களுடைய அறைகளின் வெளிப்பக்கமிருந்து உங்களை அழைப்பவர்களில் பெரும்பாலோர் அறிவிலிகளாக இருக்கின்றனர்."* அல்-குர்ஆன்.

இவ்வசனமானது, திங்களெங்கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டுள்ள போது நபியவர்களின் வீட்டு வெளிப்பக்கமிருந்து சிலர் நபியவர்களின் திருப்பெயரைச் சொல்லி அழைத்தபோது அவர்களது விஷயத்தில் இவ்வசனம் இறக்கப்பட்டது. நூருல் யகீன் ஃபீ ஸீரத்தி ஸையிதில் முர்ஸலீன், பக்கம்-247., அஸ்ஸீரத் துன் நபவிய்யா, பாகம்-2, பக்கம்-314. அவர்களை அல்லாஹ் அறிவீனர்கள் என்பதாக இவ்வசனத்தில் குறிப்பிடுகிறான். அவர்கள்தான் ஷைகு நஜ்தி முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபுடைய முன்னோர்களான பனூ தமீம்களாகும். ஆம். அல்லாஹ்வால் அறிவீனர்கள் எனப் பேசப்பட்ட கூட்டத்தைச் சார்ந்தஇந்த ஷைகு நஜ்தியைத் தான் ஷிர்க்கையும் பித்அத்தையும் அழித்தொழித்து ஏகத்துவத்தை புதுப்பிக்க வந்த புரட்சியாளர் என்கிறது ஒருகூட்டம்.

ஆனால் சுன்னத் வல் ஜமாஅத் எனச் சொல்லப்படும் நல்லடியார்களைத் தவிரவுள்ள ஏனைய எல்லா சிறு சிறு கூட்டங்களுமே ஷைகு நஜ்தியின் சகாக்களாக இருப்பதைப் பார்த்துக் கொண்டே என்ன காரணத்திற்காக இப்படிச் சொல்கின்றனர் என்பதுதான் நமக்குப் புரியாத புதிராகும்.

# ஷைகு நஜ்தியும் இந்திய உலமாக்களும்

இந்திய தேசத்தைச் சார்ந்த தேவ்பந்த்திகளால் ஷைகுல் ஹதீதென அழைக்கப்படும் ''அன்வர் ஷாஹ் கஷ்மீரி'' என்பார்,...

فانه كان رجلا بليدا قليل العلم فكان يسارع الى الحكم بالكفر.

*''முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் மதிநுட்பம் குறைந்த மடையராகவும் அறிவற்றவராகவும் காணப்பட்டார். அதனால் குப்ருடைய தீர்ப்பு வழங்குவதில் அவசரம் காட்டினார் எனக் கூறுகிறார்.''* நூல் : முகத்தமா ஃபைழுல்பாரி.

*''அவர் தமது கூட்டத்தாரைத் தவிர மற்ற முஸ்லிம்கள் அனைவரையும் முஷ்ரிக்குகள் என்றும், அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தினரைக் கொல்வது நன்மையான காரியம் என்றும் தீர்ப்பளித்தார் என்கிறார் கலீல் அஹ்மத் அம்பேட்டி.''* நூல் : அத்தல்பீஸாத், பக்கம்-13. அல் முஹன்னத், பக்கம்-18,19.

*''அன்பானவர்களே! பதினோராம் நூற்றாண்டின் துவக்கத்தில் அரேபிய மண்ணில் நஜ்துப் பகுதியில் தோன்றிய முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் என்பவர் பாத்திலான (பொய்யான) கொள்கையுடையவராகும். அதனால் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தினரோடு போர் புரிந்து பல்லாயிரக்கணக்கானோரை கொன்று குவித்தார். அத்துடன் சுன்னத் வல் ஜமாஅத்தினரைக் கொல்வது நன்மையான ஒன்றென்றும் சொன்னார். அவர்களின் சொத்துக்களை சூறையாடினார். அவர்களால் எழுதப்பட்ட நூல்களையெல்லாம் எரித்துச் சாம்பலாக்கினார்.*



*இஸ்லாமிய முன்னோடிகளை கடுமையாக எதிர்த்தார். இவருடைய அநியாயத்தையும் அழிச்சாட்டியத்தையும் தாங்க முடியாமல் மக்கா மற்றும் மதீனாவைச் சேர்ந்தவர்களெல்லாம் தமது சொந்த இடங்களை விட்டும் வெளியேறி ஓடினர். இவர் ஒரு படுபாவியும் அநியாயக்காரருமாகும் என்கிறார் ஹுஸைன் அஹ்மத் டான்டவி என்பார்.''* நூல்: அஷ்ஷிஹாபுத் தாகிப், பக்கம்-42.

*''அவர்கள் தம்மைத்தாமே ஹன்பலி மத்ஹபைப் பின்தொடர்வோர் எனக் கூறிக் கொண்டாலும் உண்மை அதுவல்ல. அவர்கள் தமது கொள்கைக்குப் புறம்பான கொள்கையுடையோரை முஷ்ரிக்கீன்கள் என்றே கருதினர் என்னும் அல்லாமா ஷாமியின் கருத்தைப் பிரதிபலிக்கிறார் முஹம்மத் தானவி.''* நூல்: ஹாஷியா நஸாயி ஷரீப்.

*''முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் பிரார்த்தனை செய்யும்போது அல்லாஹ்விடம் இன்னார் பொருட்டால் எனக் கேட்போர் அனைவரும் காபிரும் முஷ்ரிக்குமாகும் என்று சொன்னார். காரணமில்லாமல் சுன்னத் வல் ஜமாஅத்தினரைக் கொன்று குவித்தார் என்கிறார் உபைதுல்லாஹ் ஸிந்தீ''* நூல்: ஷாஹ் வலியுல்லாஹ் அவ்ர் உன்கீ ஸியாஸத்தி தஹ்ரீக், பக்கம்-228,229,230.

முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபைக் குறித்து கருத்துச் சொன்ன மேற்கண்ட தேவ்பந்திய உலமாக்களும் வஹ்ஹாபிகள் தான். இந்த தேவ்பந்தியர்கள் மற்ற இயக்கங்களுக்குப் புறம்பாக நான்கு மத்ஹபுகளில் ஒன்றை பின்பற்றுபவர்களாக இருப்பது தான் இவர்களுக்கும் மற்ற இயக்கங்களுக்கும் இடையேயுள்ள ஒரு வித்தியாசமாகும். இருப்பினும் இவர்களெல்லாம் ஷைகு நஜ்திதொடர்பாகக் கூறிய கருத்துக்களில் நமக்கு ஒரு மாபெரும் பிரயோஜனம் இருக்கின்றது. அது என்னவெனில், முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் பாத்திலான - பொய்யான புதியதோர் கொள்கையைக் கொண்டவர். அவரை ஆதரிக்காதோரை முஷ்ரிக் - அல்லாஹ்வுக்குஇணை வைத்தவர் என்றும் வாதித்தார். நல்லடியார்களான சுன்னத் வல் ஜமாஅத்தினரைக் காரணமில்லாமல் கொன்று குவித்தார் என அவர்களே கூறியிருக்கின்றனர். ஆதலால் அவரைப் பற்றிய தகவல்களை இப்போது பார்ப்போம்.

இவருடைய முழுப்பெயர் பற்றி மஹ்மூத் ஷுக்ரி என்பார் தமது தாரீக் நஜ்த் (அரபி) என்னும் நூலின் 111ம் பக்கத்தில்,...

முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் இப்னு சுலைமான் இப்னு

அலி இப்னு முஹம்மத் இப்னு அலி இப்னு ராஷித் இப்னு புரைத் இப்னு முஹம்மத் இப்னு புரைத் இப்னு முஷ்ரிப் இப்னு உமர் இப்னு புஃஹாத் இப்னு ரீஸ் இப்னு ஸாகிர் இப்னு முஹம்மத் இப்னு அலி இப்னு உஹைப் அத்தமீமி அந்நஜ்தி என்று கூறுகிறார்.

அடுத்து அவருடைய பிறப்பின் ஆண்டு தொடர்பாக அல்லாமா ஸைனீ தஹ்லான் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஹிஜ்ரி 1111 எனக் குறிப்பிட்ட போதிலும் ஹிஜ்ரி 1115ம் (கி.பி.1703) ஆண்டுதான் பிறந்தாரென நஜ்த்வாசிகள் கூறுகின்றனர். அவரைக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கையைப் பின்தொடர்வோரையே வஹ்ஹாபிகள் என்றழைக்கப்படுகிறது. இனி இது பற்றியும் கருத்து வேறுபாடு இருப்பதால் அவருடைய கொள்கையை சரிகண்ட அலி தன்தாவி ஜௌஹரி என்பார், முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் என்னும் தமது நூலின் 13வது பக்கத்தில் என்ன சொல்கிறார் என்பதைப் பார்ப்போம்.

اما محمد فهو صاحب الدعوة التي عرفت بالوهابية.

***"முஹம்மத் என்னும் பெயருடையவரைத் தான் வஹ்ஹாபிகள் எனச் சொல்லப்படுகிறது"*** என்று கூறுகிறார்.

அடுத்து ஷைகு நஜ்தி பிறந்த காலத்தின் நிலை குறித்தும் அவர் இஸ்லாத்திற்கு புதியதோர் விளக்கத்தை தந்ததற்குரிய காரணம் என்னவென்பதைக் குறித்தும் மஸ்வூத் ஆலிம் (இந்தியா) என்பார் கூறும் கருத்தை நாம் நூலின் துவக்கத்திலேயே உங்களின் பார்வைக்கு எடுத்துக்காட்டியிருக்கிறோம். இருப்பினும் உங்களின் கவனத்திற்காக இங்கே சுருக்கமாகச் சொல்வதாயின்,...

உலகமனைத்திலும் இருந்த இஸ்லாமியர்கள் எல்லாம் கப்ருகளை வணங்குபவர்களாகவும் முஷ்ரிக்கீன்களாகவும் மடமைக் காலத்தில் இருந்ததாகவும் கூறுகிறார். இதற்கு அவருடைய ஊரோ அல்லது பக்கத்திலிருந்த ஊரோ விதிவிலக்காக இருக்கவில்லை என்றும், ஏனெனில்; அவரது சொந்த ஊரான உயைனாவுக்குப் பக்கத்திலிருந்த ஜபீலா என்னும் ஊரில் வாழ்ந்த ஹழ்ரத் ஸெய்யிதுனா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் மைந்தரான ஹழ்ரத் ஸைத் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் கப்ரை அங்கிருந்தோர் வணங்கிக் கொண்டிருந்ததாகவும், அதேபோல தர்இய்யாவிலும் பல குப்பாக்களை நபித்தோழர்களுடையதென்று சொல்லிக்கொண்டு அவைகளை கண்ணியப்படுத்திக் கொண்டிருந்



தனர் என்றும், கபீரா என்னும் ஊரில் ழிரார் இப்னு அஸ்வர் என்னும் தோழருடைய குப்பா வழிகேட்டின் அடித்தளமாக இருந்ததென்றும், பழீலத்துல் பிதா என்னும் ஊரில் பழமை வாய்ந்த ஒரு மரத்தடியில் அன்றிருந்த ஆண்களும் பெண்களும் இணைந்து சொல்லமுடியாத அனாச்சாரங்களை எல்லாம் செய்பவர்களாகக் காணப்பட்டனர் என்றும் கூறுகின்ற மஸ்வூத் ஆலிம் அவரது பெற்றோர் பற்றிச் சொல்லும்போது அதே நூலின் 17வது பக்கத்தில்,...

உயைனா என்னும் ஊரில் பேரறிஞர்களின் குடும்ப வாரிசாக கி.பி. 1703ம் ஆண்டு ஹிஜ்ரி 1115ல் பிறந்தார். இவருடைய தந்தை அப்துல் வஹ்ஹாப் அந்த ஊரின் காழியாக இருந்தார். அப்போது அவ்வூரின் தலைவராக அப்துல்லாஹ் இப்னு முஹம்மத் இப்னு ஹம்த் இப்னு அப்துல்லாஹ் இப்னு மஃமர் என்பவர் இருந்து வந்தார்.

இவருடைய பெரிய தந்தையான ஷைகு சுலைமான் என்பவர் அக்காலத்திய பிரபலமான அறிஞராக இருந்தார். பல நூல்களையும் இயற்றினார். சிறிய தந்தையான இப்றாஹீம் என்பவரும், அவருடைய மைந்தரான அப்துர்ரஹ்மான் என்பவரும், அவருடன் பிறந்த சகோதரரான சுலைமான் என்பவரும்பிரசித்திப் பெற்ற மாபெரும் அறிஞர்களாக விளங்கியதுடன் அவர்களெல்லாம் தனிப்பட்ட ஓர் மத்ஹபைப் பின்பற்றுபவர்களாகவும் அந்த மத்ஹபின் சட்டப்படியே தீர்ப்புகள் வழங்கக் கூடியவர்களாகவும் இருந்தனர்.

அறிஞர்களின் வாரிசாகப் பிறந்ததால் ஷைகு நஜ்தியையும் அறிவாளியாக ஆக்குவதற்காக வேண்டி தனது தந்தையிடமே கல்வி கற்றார். மேற்படிப்புக்காக தூர தேசங்களுக்கு சென்றது பற்றியோ அல்லது அங்கே ஆண்டுக்கணக்கில் கல்வி பயின்றதற்கோ உரிய ஆதாரங்கள் ஏதுமில்லை. இருப்பினும் தனது பத்தாம் வயதிலேயே முழு குர்ஆனையும் அவர் மனனம் செய்துவிட்டார். அதன்பின் அவரது 12ம் வயதில் திருமணமும் செய்து வைக்கப்பட்டார்.

இந்த இடத்தில் ஒன்றை நாம் கண்டிப்பாகச் சொல்லியே ஆக வேண்டும். அதாவது அவர் பிறந்து மார்க்கத்திற்கு ஒரு புதியதோர் விளக்கத்தை சொல்லும்வரை சுமார் 400 வருடங்களாக வாழ்ந்து

வந்த உலகமனைத்திலும் இருந்த இஸ்லாமியர்களெல்லாம் வழி கேட்டில்மூழ்கிக் கிடந்ததாகச் சொல்லும்போது, ஷைகு நஜ்தியின் தந்தை, பெரிய தந்தை, சிறிய தந்தை, சகோதரர் போன்றவர்கள் மட்டும் எப்படி பேரறிஞர்களாக இருந்தார்கள்? எல்லோருமே முஷ்ரிக்குகளாக இருந்தார்கள் என்றால் இவருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் ஏகத்துவவாதிகளாக எப்படி இருந்திருக்க முடியும்? என்பதுதான்.

பின்னும் பாராளும் பயகம்பர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கும் ஹழ்ரத் ஸெய்யிதுனா ஈஸா அலைஹிஸ் ஸலாமவர்களுக்கும் இடைப்பட்ட காலம் 570 ஆண்டுகள் மட்டுமே. இந்த இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்களில் சிலர் அல்லாஹ்வைப் பற்றிய அறிவை தமக்குள் கொண்டிருந்தனர். இருப்பினும் அவர்களும் மௌனிகளாகத்தான் இருந்து வந்ததாக வரலாறு சொல்லிக் கொண்டிருக்கிறது. ஒரு பேச்சுக்கு ஷைகு நஜ்தியுடைய குடும்பத்தார் மட்டும் அல்லாஹ்வால் பாதுகாக்கப் பட்டிருந்தார்களென்று நாமாகக் கருதிக் கொண்டாலும் அவர்கள் நீதவான்களாக இருந்தார்களென்றும் ஹன்பலி மத்ஹபின் பிரகாரம் தீர்ப்புகள் வழங்கி வந்தார்களென்றும் எப்படிச் சொல்ல முடியும்?

அல்லாஹ்வுக்கு இணை வைப்பவர்களாக, கப்ருகளுக்கு தலை வணங்குபவர்களாக இருந்து கொண்டிருந்தவர்களுக்கு தனிப் பட்ட ஒரு மத்ஹபின் பிரகாரம் எப்படி தீர்ப்புச் சொல்ல முடியும்? அத்துடன் மத்ஹபுகளெல்லாம் வழிகேடாக இருக்கும்போது இவர்கள் ஒரு மத்ஹபை எவ்வாறு பின்தொடர்ந்திருக்க முடியும்?

அவ்வாறின்றி ஷைகு நஜ்தியுடைய தந்தை மற்றும் சகோதரர்கள் போன்றோர் இவருக்குப் பின்புதான் சத்தியத்தை உணர்ந்தார்களென்று வைத்துக் கொண்டால் அவர்கள் இவருடைய கொள்கைகளுக்கு ஊக்கமளித்திருக்க வேண்டும். குறைந்த பட்சம் அவருக்கு பக்கபலமாகவாவது இருந்திருக்க வேண்டுமல்லவா! இந்நிலையில் உறுதுணையாகவும் பக்கபலமாக வும் இருக்க வேண்டிய அவருடைய தந்தையும் சகோதரரும் அவரை எதிர்த்ததாகவும், அவருடைய நவீன கொள்கைகளைக் கண்டித்து நூல்கள் இயற்றியதாகவும் அவர் ஒரு வழிகேடராக மாறுவதற்குரிய சாத்தியக் கூறுகள் இருப்பதால் அவரோடு யாரும் சகவாசம் வைத்துக்கொள்ளக் கூடாதென்று பகிரங்கமாக ஜனங் களை எச்சரித்தது ஏன்? இதில் அவருடைய சகோதரர் பின்னால் மன்னிப்புக் கேட்டதாகவும் அண்ணனுடன் சேர்ந்து கொண்ட



தாகவும் நஜ்திகள் ஏன் கூறுகின்றனர்? அதிலும் குறிப்பாக சகோதரர் சுலைமான் அவர்களால் அண்ணன் வழிகேடன். பித்த லாட்டக்காரன். பொய்யன் என்றெல்லாம் எச்சரிக்கை செய்து தொகுக்கப்பட்ட நூல் இன்றும் பாதுகாப்பாக இருக்கின்றதே! இனி சுலைமான் தனது அண்ணனுடன் சேர்ந்து கொண்டார் எனில் அதற்குரிய வாக்குமூலத்தைக் கொண்ட எழுத்துப் பிரதியை இந்த வஹ்ஹாபிகள் காட்ட வேண்டாமா? உலகத்தில் விலை கொடுத்து வாங்க முடியாத பொருள் ஒன்று இருக்குமாயின் அது தாயும் தந்தையும் தானென்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அதையும் இவர்கள் விலைக்கு வாங்கி விடுவார்கள் என்பது நமக்கு நன்றாகவே தெரியும்.

# ஷைகு நஜ்தியின் கல்வியும் அதற்கான பயணமும்

ஷைகு நஜ்தி பேரறிஞர்களின் குடும்ப வாரிசாகப் பிறந்ததால் அவர் தமது தந்தையிடமே ஹன்பலி மத்ஹபின் பிரகாரம் கல்வி கற்ருர். அவர் கல்விகற்ற அக்காலம் குறித்து அலீ தன்தாவி ஜௌஹரீஎன்பார் தமது நூலின் 21ம் பக்கத்தில்,...

وجلس في حلقة ابيه يحضر دروسه وينكر مايرى من البدع والمخالفات في ذلك حتى اثار عليه الناس ولم يرتض ابوه هذا المسلك منه ولم يقره عليه وكان يوثر المسالمة ويكره الصنف فنهاه حتى وقع بينهما كلام ولكنه استمر على دعوته وانكاره واستجاب له فريق من الناس وتابعوه وصار طلبة العلم طائفتين قليل منهم معه والكثير عليه وكان ابوه من اى الطائفة الثانية.

*"ஷைகு நஜ்தி தமது தந்தையிடமே கல்வி கற்ருர். அவர் அப்போதே தனக்குப் பிடிக்காத விஷயங்களையெல்லாம் வழிகேடானவை என்று எதிர்த்தார். இதனுல் அனைவரும் அவரை எதிர்க்கத் துவங்கினர். அவருடைய தந்தையும் அவர்மீது கோபமுற்ருர். தந்தை பிரச்சனைகளை விரும்பாத ஒருவராக இருந்ததால் மகனை பலமுறை எச்சரித்து தடுத்துப் பார்த்தார். அதையெல்லாம் அவர் கொஞ்சமும் சட்டை செய்யாமல் தனது பேச்சுக்களையே தொடர்ந்து பேசி வந்தார். இந்நிலையில் அவரோடு சிலர் இணைந்து கொண்டனர். இருப்பினும் பெரும்பாலோர் அவரை எதிர்த்தே வந்தனர். இறுதியில் அவருடைய தந்தையிடம் வந்துபோய்*



*கொண்டிருந்தோர் இரு பிரிவாகப் பிரிந்து விட்டனர். சொற்பமானோர் மகனோடும் பெரும்பான்மையோர் தந்தையோடும் இணைந்திருந்தனர்."*
நூல்: தாரீக் நஜ்தோ ஹிஜாஸ் - உர்து, பக்கம்-21.

அதன்பின் ஹஜ்ஜூப் பயணத்தை மேற்கொண்ட அவர் மதீனுவுக்குச் சென்று சிலகாலம் வரை அங்கே தங்கியிருந்து அங்குள்ள சில உலமாக்களிடம் கல்வி பயின்ருர். புனித மதீனு முனவ்வராவில் அவர் சந்தித்த உலமாக்களைப் பற்றி நஜ்தைச் சேர்ந்த உஸ்மான் பின் பஷீர் என்பார் உன்வானுல் மஜ்த் ஃபீ தாரீகி நஜ்த் என்னும் நூலிலும், அலீ தன்தாவி ஜௌஹரீ என்பார் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் என்னும் நூலிலும் கீழ்கண்டவாறு சொல்கின்றனர். அதாவது,...

والتي فى المدينة رجلين وكان لهما في حياته وتوجيهه اثر كبير الاول شيخ نجدى من اسوة لها الوهابية والرياسة في قرية المجمعة عالم عاقل من العاكفين على كتب ابن تيمية والمتبعين له والآخذين بآرائه هو الشيخ عبد الله بن ابراهيم بن يوسف.

*"ஷைகு நஜ்தி மதீனு முனவ்வராவில் இருவரை சந்தித்தார். அச்சந்திப்பால் அவருக்குள் புதியதோர் திருப்புமுனை ஏற்பட்டது. அதில் ஒருவர் நஜ்தைச் சேர்ந்த மஜ்மஃ என்னும் இடத்திலுள்ள அரசியல்வாதியாகவும் அறிஞராகவும் இருந்தார். அவர் இப்னு தைமிய்யா மற்றும் அவருடைய தோழர்களால் எழுதப்பட்ட நூல்களை மறுஆய்வு செய்யும் ஒருவராக இருந்தார். அவர்தான் அப்துல்லாஹ் இப்னு இப்ருஹீம் இப்னு ஸைப் என்பவராகும்."*

இவரைப்பற்றி ஷைகு நஜ்தி கூறியதாக பின்வருமாறு சொல்லப்படுகிறது,...

وقد حدث الشيخ محمد بن عبد الوهاب قال كنت عنده يوما فقال لي اتريد ان اريك سلاحا اعددته للمجمعة قلت له نعم فادخلني غرفة مملوئة بالكتب وقال هذا هوالسلاح الذي اعددته لها وابن سيف هو الذى دل محمد بن عبد الوهاب على كتب ابن تيمية واعانه على قرائتها.

*"ஷைகு நஜ்தி கூறுகிருர்:- ஒருநாள் இப்னு ஸைபிடம் நான் அமர்ந்திருக்கும் போது மஜ்மஃ வாசிகளுக்காக நான் சித்தம்செய்து வைத்துள்ள*

ஆயுதங்களை காட்டட்டுமா என்று கேட்க, அதற்கு நான் ஆம் என்றேன். அப்போது அவர் என்னை நூல்கள் நிறைந்த ஒரு அறைக்கு அழைத்துச் சென்று இவைதான் அந்த ஆயுதங்கள் என்றார். இப்னு ஸைப் என்னும் இவர்தான் ஷைகு நஜ்தியை இப்னு தைமிய்யாவுடைய நூல்களை மறு ஆய்வு செய்யத் தூண்டியவரும் அதற்கு வழிவகுத்தவருமாகும்." இவர் ஷைகு நஜ்தியுடைய முதலாவது ஆசிரியராகும். இனி இரண்டாவது ஆசிரியரைப் பற்றி கூறப்படுவதாவது,...

وحكي ان الشيخ محمد اوقف يوما عند الحجرة النبوية عند اناس يدعون ويستغيثون عند حجرة النبي صلى الله عليه وآله وسلم فقال الشيخ ماتقول في هؤلاء قال إن هؤلاء متبر ماهم فيه وباطل ماكانوا يعملون.

"ஒருநாள் ஷைகு நஜ்தி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அறைக்கு முன்னால் நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கே வருகை தந்தவர்கள் அனைவரும் நபியவர்களிடம் நேரடியாக உதவி தேடிக் கொண்டிருந்தனர். அதுபோது அங்கே வருகைதந்த அவருடைய ஆசிரியரிடம் அதுபற்றி ஷைகு நஜ்தி கேட்க, அதற்கவர்; இவர்களெல்லாம் நாசமாய் போகக் கூடியவர்கள். இவர்கள் செய்யும் இக்காரியம் வீணான ஒன்றாகும் என்று சொன்னார்." அவர்தான் முஹம்மத் ஹயாத் ஸிந்தீ என்பவராகும்.

ஷைகு நஜ்தியாலும் அவருடைய சக இயக்கவாதிகளாலும் மிக மிக வன்மையாக எதிர்க்கப்பட்டு வரும் விஷயங்களில் பிரதானமானது, நபிமார்கள் வலிமார்கள் போன்றோரிடம் நேரடியாகவோ அல்லது அவர்களை பொருட்டாக்கியோ உதவிதேடும் விஷயமாகும். இது அவர்களின் பார்வையில் அல்லாஹ்வுக்கு இணை வைக்கக்கூடிய விஷயங்களில் மாபெரும்குற்றத்திற்குரிய விஷயமாகும். இதேபோல இன்னும் பல விஷயங்கள் இருந்தாலும் நாம் இந்நூலில் உதவிதேடும் விஷயம் சம்பந்தமாக சுருக்கமான விளக்கத்தை பின்னால் பேசுவோம். இருப்பினும் உங்களின் ஆவலை நிறைவேற்றும் வகையில் இங்கே ஒரேயொரு குர்ஆனுடைய வசனத்தை மட்டும் உங்களின் பார்வைக்கு தருகிறோம். அதாவது இறைவன் தனது வேதத்தில் சூரா அல்பகராவின் 89ம் வசனத்தில்,...

وكانوا من قبل يستفتحون على الذين كفروا.

"அவர்கள், நிராகரிப்போருக்கு எதிராக தங்களுக்கு வெற்றியைத் தருமாறு பிரார்த்தனை செய்து கொண்டிருந்தார்கள்"
என்று கூறுகிறான். இவ்வசனத்திற்கு விளக்கமளிக்கும் திருக்குர்



ஆனின் விரிவுரையாளர் அல்லாமா இமாம் இப்னு கதீர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,...

عن ابن عباس رضى الله عنهما: ان اليهود كانوا يستفتحون على الاوس والخزرج برسول الله صلى الله عليه وآله وسلم قبل مبعثه فلما بعثه الله من العرب كفروا به وجحدوا ماكانوا يقولون فيه فقال لهم معاذ بن جبل وبشر بن البراء بن معرور وداؤد بن سلمة يامعشر يهود اتقوا الله واسلموا فقد كنتم تستفتحون علينا بمحمد صلى الله عليه وآله وسلم ونحن اهل شرك وتخبروننا بانه مبعوث وتصفونه بصفته.

"யூதர்கள் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இப்பூவுலகுக்கு அனுப்பப்படும் முன்பாக அவர்களின் பொருட்டால் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜுடைய கூட்டத்தாருக்கு எதிராக வெற்றியைத் தருமாறு பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். அரபியரில் ஒருவராக நபியவர்கள் அனுப்பப்படவே அவர்களை மறுத்து பொய்ப்பித்து விட்டனர். இவ்வாறு அவர்கள் பொய்ப்பித்ததைக் கண்ட மஆத் இப்னு ஜபல், பிஷ்ர் பின் அல்பரா:., தாவூத் பின் ஸலமா போன்ற தோழர்கள், நாங்கள் முஷ்ரிக்குகளாக இருந்தபோது எங்களுக்கு எதிராக வெற்றியைத்தா என்று நபியவர்களை பொருட்டாக்கி உதவி தேடுபவர்களாகவும், நபியவர்களின் சிறப்பைப் பற்றி எங்களுக்குச் சொல்பவர்களாகவும் இருந்தீர்கள். ஆதலால் இப்போது அல்லாஹ்வுக்கு அஞ்சி அந்த நபியைக் கொண்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள் என்றனர்." ஆனால் இப்போது நம்மிடமிருக்கும் தர்ஜமத்துல் குர்ஆனில் சொல்லப்பட்டுள்ள பொருள் பிழையானதாக இருப்பதால் அதிலிருந்து எச்சரிக்கையாக இருக்குமாறு வேண்டுகிறோம்.

இந்த வசனத்தில் சொல்லிக் காட்டப்படுவது போல நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இவ்வையகத்தில் தோன்றுவதற்கு முன்பே நபியவர்களை பொருட்டாக்கி யூதர்கள் பிரார்த்தித்து வந்ததாக குர்ஆன் சொல்லிக் காட்டுகிறது என்றால் இப்போது நபியை பொருட்டாக்கி பிரார்த்திக்கலாமா இல்லையா? என்பதை நீங்களே தீர்மானியுங்கள்.

அடுத்து ஷைகு நஜ்தி புண்ணிய பூமியான மதீனா முனவ்வராவில் இப்னு தைமிய்யாவின் சீடர்களோடு அமர்ந்ததால் அவருடைய கருத்துக்களால் கவரப்பட்டதோடு இப்னு தைமிய்யாவை விட

ஒருபடி மேலே சென்று அப்போதிருந்த முஸ்லிம்களையெல்லாம் அல்லாஹ்வுக்கு இணை வைக்கும் முஷ்ரிக்குகள் என்னும் கொள்கையை தனதாக்கிக் கொண்டவராக நஜ்துக்குத் திரும்பிச் சென்றார். அங்கே சென்றவர் மீண்டும் ஷாம் தேசம் செல்வதற்காக தமது தந்தையிடம் அனுமதி பெற்று பஸரா வழியாக ஷாமை நோக்கிச் சென்றார்.

பஸராவுக்கு வந்து சேர்ந்தவர் அங்கே சிலகாலம் தங்கியிருந்து முஹம்மத் அல் மஜ்முயி என்பாரிடம் சில விஷயங்களை கற்றுக் கொள்கிறார். அப்போது பஸராவாசிகளிடம் காணப்பட்ட பல விஷயங்களை அவர் வெறுத்தார். அது அவ்வூர் மக்களுக்குத் தெரியவரவே அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டார்.

பின்னர் ஷாமுக்குச் செல்வதற்கான கட்டுச்சாதம் இல்லாததால் அல் அஹ்ஸாஃ என்னும் ஊருக்குச் சென்று அங்கேயிருந்த அப்துல்லாஹ் பின் லதீப் என்பாரின் வீட்டில் தஞ்சம் புகுந்தார். பின்னர் அங்கேயிருந்து ஹுரைமலா என்னும் ஊருக்கு போய் சேர்ந்தார். அவர் ஹுரைமலாவுக்குப் போய் சேர்ந்தபோது அவருடைய தந்தையும் அங்குதான் வசித்துக் கொண்டிருந்தார். இது சுமார் *1139 - 1726*ம் ஆண்டில் நிகழ்ந்த சம்பவங்களாகும்.

ولما وصل الشيخ محمد الى بلد حريملة لازم اباه وقرأ عليه واظهر الانكار على اهل نجد في عقائدهم فوقع بينه وبين ابيه منازعة وجدال وكذلك وقع بينه وبين الناس في بلد حريملة جدال كثير فاقام على ذلك على مدة سنين حتى توفي ابوه الشيخ عبد الوهاب سنة ثلاث وخمسين ومأة الف.

*"ஹுரைமலாவுக்கு போய் சேர்ந்தபோது அவருடைய தந்தையும் அங்கே இருந்ததால் தந்தையிடமே கல்வியை தொடர்ந்து கற்கலானார். இருப்பினும் முன்னைவிட இப்போது மிகத்தீவிரமாக நஜ்துவாசிகளின் காரியங்களை எதிர்க்கலானார். அதனால் தொடர்ந்து தந்தைக்கும் மைந்தனுக்குமிடையே விவாதங்களும் தர்க்கமும் அதிகரித்தது. அதேபோல ஊராருக்கும் அவருக்குமிடையே மோதல்கள் மேலும் வலுக்கத் துவங்கிற்று. இந்நிலை 1153ம் ஆண்டுவரை, அதாவது தந்தையின் மரணம் வரை தொடர்ந்தது."* நூல்: தாரீக்குன் நஜ்த் - அரபி, பக்கம்-113.

# கொள்கை பிரச்சாரம்

கூண்டில் அடைபட்ட குருவி போல தந்தையின் காலத்தில் தனது கருத்துக்களை பகிரங்கமாகச் சொல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருந்த ஷைகு நஜ்திக்கு தந்தையின் மரணம் ஒருபெரும் வாய்ப்பாக அமைந்தது. அந்த மகிழ்ச்சியில் அவரது கொள்கையை ஹுரைமலாவில் பகிரங்கமாக அறிவித்தார். ஏற்கனவே இவருக்கும் ஊராருக்கும் இடையே பூசல் ஏற்பட்ட போதெல்லாம் தந்தையின் முகத்துக்காக அவர்மீது கொண்டிருந்த மரியாதைக்காக சகித்துக் கொண்டிருந்த அம்மக்கள் இப்போது அவரைக் கொல்ல வேண்டுமெனத் திட்டம் தீட்டினர். இது தெரியவே இரவோடிரவாக சொந்த ஊரான உயைனாவிற்குக் பயணமானார்.

அவர் உயைனா வந்து சேர்ந்த போது உஸ்மான் பின் ஹம்த் இப்னு முஃமர் என்பவன் அந்த ஊரின் தலைவனாக இருந்தான். அவன் அவரை வரவேற்று கண்ணியப்படுத்தினான். அதைக் கண்ட அவர் தலைவனை பார்த்து,...

إني ارجو ان قمت بنصر لااله الاالله ان يظهرك الله تعالى وتملك نجدا واعرابها.

*"லாஇலாஹ இல்லல்லாஹ் என்னும் கலிமாவுக்காக எனக்கு நீ உதவி செய்தால் அல்லாஹ் உனக்கு வெற்றியைத் தருவான். அத்துடன் நஜ்தும் அதன் சுற்றுப் புறங்களும் உன்னுடைய அதிகாரத்திற்குள் வந்து சேரும் என்றார்."* அதைக்கேட்ட உஸ்மான், அவருக்கு உதவி செய்வதாக வாக்களித்தான். அதன்பின் அவனுடைய ஒத்தாசையோடு, முன்னைவிட முனைப்போடு ஷைகு நஜ்தி செயல்படத்

துவங்கினர். நன்மையை ஏவி தீமையைத்தடுக்கும் இயக்கமென்று தனது இயக்கத்திற்கு பெயர் சூட்டினர். சூடான அதேநேரம் சாதுர்யமான பிரச்சாரத்தின் பயனுக மக்கள் கவரப்பட்டார்கள். அதனுல் இன்னும் அதிக உற்சாகத்தோடு தனது முதல் பணியாக குப்பாக்களை உடைத்தெறியத் துவங்கினர். இதுபற்றி உஸ்மான் இப்னு பஷீர் அந்நஜ்தி என்பார் உன்வானுல் மஜ்த் ஃபீதாரீகி நஜ்த் என்னும் நூலின் 9மற்றும் 10வது பக்கங்களில் பின்வருமாறு சொல்கிருர்,...

ثم إن الشيخ اراد ان يهدم قبة زيد بن الخطاب رضى الله عنه التي عند الجبيلة فقال لعثمان دعنا نهدم قبة التي وضعت على الباطل وضل بها الناس عن الهدى فقال دونها فاهدمها فقال الشيخ اخاف من اهل الجبيلة ان يوقعوا بنا ولا استطيع هدمها الا وانت معي فسار معه عثمان بنحو ستمأة رجل فلما قربوا منها ظهروا عليهم اهل الجبيلة يريدون ان يمنعونها فلما رآهم عثمان علم ماهموا به فتاهب لحربهم فلما رأوا ذالك كفروا عن الحرب وخلوا بينهم وبينهما ذكر لي ان عثمان لما اتاها قال للشيخ نحن لانتعرضها فقال اعطوني الفاس فهدمها بيده حتى ساواها.

*"ஷைகு நஜ்தி ஜுபைலா என்னும் ஊரில் ஹழ்ரத் ஸைத் இப்னு கத்தாப் ரழியல்லாஹு அன்ஹு அவர்களது கப்ரின் மீது கட்டப்பட்டிருந்த குப்பாவை உடைக்க எண்ணங்கொண்டு, மக்களின் நேர்வழிக்கு இடையூருக இருந்து வழிகெடுத்துக் கொண்டிருக்கும் இக்குப்பாவை உடைத்தெறிவோம் வாரீர் என உஸ்மானிடம் சொல்லவே, அதற்கவர்; அதை நீரே செய்து கொள்ளும் என்ருன். அதற்கவர் ஜுபைலாவுடைய மக்கள் படையெடுப்பார்களோ என்று நான் அஞ்சுகிறேன். ஆதலால் உன்னுடைய உதவியின்றி என்னுல் செயல்பட முடியாதென்று சொல்ல, உஸ்மான் 600 பேர்களைக் கொண்ட ஒருகுழுவை தயார் செய்துகொண்டு அங்கேபோய் சேர்ந்தபோது ஜுபைலாவுடைய மக்கள் வேறு வழியின்றி வழிவிட்டனர். அதன்பின் குப்பாவை நெருங்கியதும் அதன்மீது நான் கைவைக்க மாட்டேனென்று உஸ்மான் சொல்லவே ஷைகு நஜ்தி தன்னிடம் கோடரியைத் தருமாறு வாங்கி தன்னுடைய கையால் குப்பாவை உடைத்துத் தரைமட்டமாக்கினர்."*

மேலும் இந்த ஊரில் வைத்துத்தான் ஷைகு நஜ்தியால் கிதாபுத்



தௌஹீத் என்னும் நூல் தொகுக்கப்பட்டது. இந்த நூல் இன்றும் கூட சவூதி அரசால் அச்சிடப்பட்டு இலவசமாக வினியோகம் செய்யப்படுகிறது. பல்வேறு மொழிகளில் இந்நூல் தற்போது அச்சிடப்பட்டாலும் இந்தியாவில் இந்நூலை முதன்முதலாக மொழி பெயர்த்தவர் தேவ்பந்த் இயக்கத் தலைவர்களில் ஒருவரான மௌலவி இஸ்மாயீல் தெஹ்லவி என்பவராகும்.

குப்பா தகர்த்தெறியப்பட்ட செய்தி அப்பகுதியின் பக்கத்திலுள்ள ஊர்களான அல் அஹ்ஸாஃ, அல் கதீஃப், போன்றவைகளின் தலைவரான சுலைமான் இப்னு முஹம்மத் இப்னு அஸீஸ் அல் ஹுமைதி என்பாருக்குத் தெரியவரவே அவர் உஸ்மானுக்கு மடலொன்றை எழுதினர். அதில் அவர்,...

فإذا وصلك كتابي فاقتله فان لم تقتله قطعنا خراجك الذي عندنا فى الاحساء.

**"எனது மடல் உம்மை வந்தடைந்தால் அவரைக் கொன்று விடும். இல்லையேல் எம்மிடமிருக்கும் உமது சொத்துக்களனைத்தையும் நாம் முடக்கி விடுவோம்."** என்பதாக அதில் எழுதப்பட்டிருந்தது. நூல்: தாரீகுன் நஜ்த் - அரபி, பக்கம்-*114*.

மடல் உஸ்மானை வந்தடைந்த போது அதில் கூறப்பட்டிருந்த விஷயத்தை ஷைகு நஜ்தியிடம் எடுத்துக்காட்டி அவரை எதிர்க்கும் சக்தி தனக்கு இல்லையென்றும், அதேநேரம் உம்மைக் கொல்லவும் நான் விரும்பவில்லையாதலால் நீர் இவ்வூரை விட்டுப் போய்விடும் என்ருன். அதற்கு ஷைகு நஜ்தி உஸ்மானிடம் திரும்பவும், நீ எனக்கு உதவி செய்தால் நஜ்த் உனக்குக் கிடைக்குமென்று சொல்ல, அதை அவன் மறுத்து விட்டான்.

இப்படி குப்பாக்களை உடைப்பதும், கப்ருகளை தரைமட்டமாக்குவதும், கப்ருகள் உள்ள மஸ்ஜிதுகளில் தொழுவது ஹராம் என்னும் பல்வேறு கருத்துக்கள் இவர்களுடைய கொள்கைத் திட்டங்களில் உள்ளவைகளாகும். இதனை இன்றுள்ள அவர்களுடைய ஏஜெண்டுகள் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அமுல்படுத்தவும் செய்கின்றனர்.

இதுபோன்றே இப்னு சுஊதும் ஷைகு நஜ்தியும் இணைந்து அமுல்படுத்திய விஷயங்களைத்தான் இன்றுள்ள சவூதிய அரசாங்கமும் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது. இதை

நாம் நிரூபிக்க வேண்டுமாயின்,...

இதுபற்றி இலங்கையிலுள்ள அவர்களது ஏஜென்டுகள் வெளியிட்டிருந்த மக்கா ஹரம் ஷரீப் இமாம் திட்டமிட்டவாறு கொள்ளுப்பிட்டி ஜும்ஆ மஸ்ஜிதில் ஏன் ஜும்ஆ தொழுகையை நடத்தவில்லை? என்னும் தலைப்பை கொண்ட துண்டுப் பிரசுரமொன்றின் கருத்தை கீழே தருகிறோம்.அதாவது,...

**"கொள்ளுப்பிடி ஜும்ஆ மஸ்ஜிதில் கப்ரு இருப்பதால் அதில் தொழுவது ஹராமாகும்"** எனக்கூறி அதற்காதாரமாக இரண்டொரு ஹதீதுகளையும் எடுத்துக் காட்டியிருந்தனர். அந்த ஹதீதுகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு மிகப் பகிரங்கமாக சொல்லப்பட்டிருந்த விஷயம் என்னவென்றால் அதில் தொழுவோர் அனைவரும் முஷ்ரிக்குகள் என்பதேயாகும்.

அதன்பின் புனித மதீனா பள்ளிவாசலின் பிரதம பேஷ்இமாம் கலாநிதி ஸலாஹ் முஹம்மத் அல் புதைர் அவர்கள் இலங்கையின் வேறொரு சாராரால் அழைக்கப்பட்டு வருகை தந்தவர் நாட்டின் பலபாகங்களுக்கும் சென்றபோது கல்முனை அல் ஹாமிய்யாவுக்கும் சென்று உரையாற்றிய அவரது உரையாடல் 8-10-2002ல் வெளியான தினகரன் நாளேட்டின் 2ம் பக்கத்தில் **"ஈமானை பாதிக்கும் கப்று வணக்கம் நரகில் சேர்க்கும்"** என்னும் தலைப்பில் வெளியிடப்பட்டிருந்தது.

இப்படிப்பட்டதொரு மாபெரும் குற்றச்சாட்டை அவர்களால் சொல்லப்பட்ட போது நம்மவர்கள் மௌனம் சாதித்தது தான் ஏனென்று நமக்குப் புரியவில்லை. அதற்குரிய காரணம் என்னவாகத்தான் இருக்குமென்று நாம் யோசித்தபோது நமக்குக் கிடைத்த உண்மை இதுதான்,...

அதாவது கொள்ளுப்பிடி ஜும்ஆ மஸ்ஜிதில் கப்ரு இருப்பதால் அங்கு தொழுவது ஹராம் என்றும் அதில் தொழுபவர்களெல்லாம் முஷ்ரிக்கீன்கள் என்றும் சொன்னவர்கள் அத்தனை பேரும் மக்கா முகர்ரமாவிலுள்ள ஹரம் ஷரீபில் தானே தொழுகின்றனர்? அத்துடன் அங்கே லட்சக்கணக்கான மக்கள் சதா வருகை தந்தவண்ணமாயுள்ளனர். காரணம் அதிகமான நன்மை கிடைக்குமென்றால் அந்தப் பள்ளியில் தொழுவதற்குத்தான் கிடைக்கும். அப்பேற்பட்ட பள்ளிவாசலில்,...



ودفن اسماعيل عليه السلام بالحجر مع أمه هاجر عليهما السلام.

**"ஹழ்ரத் ஸெய்யிதுனா இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமவர்களும் அவர்களுடைய தாயார் ஸெய்யிததுனா ஹாஜரா அலைஹஸ்ஸலாமவர்களும் அடக்கப்பட்டிருப்பதாகவும்"** இன்னும்,...

ان قبر نوح عليه السلام بالمسجد الحرام.

**"ஹழ்ரத் நூஹ் நபி அலைஹிஸ்ஸலாமவர்களின் கப்ரும் இருப்பதாகவும்"** இன்னொரு தகவலின்படி,...

انه ببلدة بالبقاع تعرف اليوم بكرك نوح وهناك جامع قد بني بسبب ذالك.

**"நூஹ் நபியவர்களின் கப்ரு கர்க் என்னும் ஊரில் இருப்பதாகவும் அதன் காரணமாகவே அங்கே ஒரு மஸ்ஜித் கட்டப்பட்டுள்ளது"** என்றும் சொல்லப்படுகிறதே! நூல்: அல் பிதாயா வந்நிஹாயா, பாகம்-1, பக்கம் - 120, 193. மஸ்ஜிதுல் ஹராமில் பல நபிமார்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதை ஸஹீஹான, ஹஸனான, ழயீபான பல தகவல்கள் உறுதிப்படுத்திக் கொண்டுள்ளன.

இமாம் அஸ்ரகீ அவர்கள் அக்பார் மக்கா என்னும் நூலிலும், ஹாபிழ் இப்னு ஜரீர், ஹாபிழ் இப்னு அபீ ஹாத்திம் ஆகிய இருவரும் தத்தம் தமது தப்ஸீர்களிலும் நபிமார்களான நூஹ், ஹூத், ஸாலிஹ், ஷுஐப் போன்றோர் அங்கே நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாகக் கூறுகின்றனர். இத்தகவலை ஹாபிழ் இப்னு ஜரீர் அத்திப்ரீ, முர்ஸலான ஒன்றெனக் கூறுவதோடு இது நம்பிக்கைக்குரிய தகவலென்றும் கூறுகின்றனர். ஹாபிழ் இப்னு கதீர் அவர்களும் இதனை முர்ஸல் எனக் கூறுவதோடு இதில் பலவீனம் இருப்பதாகவும் கூறுகின்றனர். எனினும் இத்தகவலை வேறுபல தகவல்களைக் கொண்டு ஊர்ஜிதப்படுத்தப்படுவதை எவராலும் மறுக்க முடியாது.

உதாரணமாக இமாம் பாகிஹானி அவர்கள் ஃபழாயிலு மக்கா என்னும் நூலிலும், ஹாபிழ் தகியுத்தீன் பாஸி அவர்கள் ஷிபாவுல் ஃகராம் என்னும் நூலிலும், ஹாபிழ் அஸ்ரகீ அவர்கள் தாரீக் மக்கா என்னும் நூலிலும், ஹாபிழ் அப்திர்ரஸ்ஸாக் அவர்கள் முஸன்னப் என்னும் நூலிலும், இமாம் முஹம்மத் பின் ஹஸன் அவர்கள் அல் ஆஸார் என்னும் நூலிலும், இமாம் அபூயூஸுப் அவர்கள் தமது

அல் ஆஸார் என்னும் நூலிலும், இமாம் ஹாகிம் அவர்கள் முஸ்தத்ரக் என்னும் நூலிலும், ஹாபிழ் இப்னு ஸஃத் அவர்கள் அத்தபகாத் என்னும் நூலிலும், ஹாபிழ் அபூநயீம் அவர்கள் ஹுல்யா என்னும் நூலிலும் மேற்கண்ட தகவலை பதிவு செய்துள்ளனர்.

இவ்வனைத்து தகவல்களிலும் பனிரெண்டு நபர்கள் ஆய்வு செய்யப்பட வேண்டியவர்களாகும். அவர்களில் இருவர் ஸஹீஹானவர்கள். இருவர் ஹஸனானவர்கள். ஐவர் ழயீபான வர்கள். ஒருவர் ஸஹீஹ் அல்லது ஹஸனானவர். இன்னும் ஒருவர் ஹஸனுடைய படித்தரத்திற்கு ஒப்பானவராகும். ஆதலால் மஸ்ஜிதுல் ஹராமில் நபிமார்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள் ளார்கள் என்னும் தகவல் ஏற்கத்தக்க ஒரு தகவலாகும்.

இதுதவிர நபியுல்லாஹ் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமவர் களும் அவர்களுடைய அருமை தாயார் ஹாஜரா அலைஹஸ்ஸ லாமவர்களும் கஃபத்துல்லாஹ்விற்குப் பக்கத்திலேயே நல்ல டக்கம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை இப்னுல் ஜெளஸி அவர்கள் அல் முன்தழம், பாகம்-1, பக்கம்-305லும், இமாம் அப்துர்ரஹ்மான் ஸுஹைலி அவர்கள் அர்ரௌழுல் உன்ஃப், பாகம்-1, பக்கம்-88லும் ஸீரத் இப்னு ஹிஷாம், பாகம்-1, பக்கம்-42லும், ஹாபிழ் தஹபி, தாரீகுல் இஸ்லாம், பாகம்-1, பக்கம்-20லும், அபுல் ஹஸன் அலீ பின் ஹுஸைன் அல் மஸ்ஊதி அவர்கள், அல் முரவ்வஜித் தஹப், பாகம்-2, பக்கம்-48லும், ஹாபிழ் இப்னு அதீர், அல்காமில், பாகம்-1, பக்கம்-102லும், அபுர்ரஃபீஃ ஸுலைமான் பின் மூஸா அல்கலாயி அவர்கள், அல் இத்திபா பீ மகாஸீ ரஸூலில்லாஹ் வஸ்ஸலாஸதில் குலபா, பாகம்-1, பக்கம்-63லும் குறிப்பிட்டுள்ளதை நாம் காணலாம்.

ஹழ்ரத் அப்துர்ரஹ்மான் பின் உஸ்மான் பின் உபைதுல்லாஹ் அல் குரைஷிய்யி அத்தமீமி என்னும் நபித்தோழர் பற்றி கூறப் படும் தகவல் என்னவெனில், தோழர் அவர்கள் கொல்லப்பட்ட போது ஹஸ்வரா என்னுமிடத்தில் நல்லடக்கம் செய்யப்பட் டார்கள். அதன்பின் மஸ்ஜிதுல் ஹராம் விஸ்தரிக்கப்பட்ட போது அவருடைய கப்ரும் பள்ளியின் உட்பகுதியிலேயே அமைக்கப் பட்டது. நூல்: அல் இஸாபா, பாகம்-2, பக்கம்-410. தஹ்தீபுத் தஹ்தீப், பாகம்-6, பக்கம்-227. அல் இக்துஸ் ஸமீம், பக்கம்-1758. இத்ஹாபுல் வரா, பாகம்-2, பக்கம்-102.



இத்ஹாபுல் வரா பி அக்பாரி உம்மில் குரா, பாகம்-2, பக்கம்-454ல் ஹிஜ்ரி 451ம் ஆண்டு நிகழ்ந்த சம்பவமொன்றை கூறும் போது, மகாமெ இப்ருஹீமுக்கும் ஹிஜ்ருக்கும் இடையில் தோண்டப்பட்ட போது பெருவாரியான மண்டை ஓடுகளும் எலும்புகளும் தென்பட்டன. அதைக்கண்டபோது அவற்றை அவ்வாறே வைத்து மூடப்பட்டன என்று கூறுகின்றனர்.

மேற்கண்ட பிந்திய தகவலிலிருந்து நமக்குக் கிடைக்கும் முக்கியமான விஷயம் என்னவெனில் ஹஸ்வரா என்னுமிடம் அருமை தோழர்களது காலத்தில் நல்லடக்கம் செய்யப்படும் ஓர் இடமாக இருந்ததையும் அதன்பின் அந்த இடம் மஸ்ஜிதுல் ஹராமுக்குள் இணைக்கப்பட்டது என்பதையும் கஃபாவின் அருகில் நபிமார்களும் அவர்களல்லாதவர்களும் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்பதையும் உறுதிப்படுத்துவதை நாம் தெரிந்து கொள்கிறோம். ஆக தற்போதுள்ள ஹரம் ஷரீபின் எல்லைக்குள் பல கப்ருகள் இருக்கின்றன என்பதே உண்மையாகும்.

இதே போல மக்காவுக்கு அருகிலுள்ள மினா என்னும் இடத்தில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் கைபை எடுத்துக் கொண்டால் அப்பள் ளிக்குள் எழுபது நபிமார்களுடைய மண்ணறைகள் இருப்பதாக அருமை நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் பொன்மொழி முஸ்னதுல் பஸ்ஸார் என்னும் நூலின், எண்: 1177லும், தப்ரானி கபீர், பாகம்-12, பக்கம்-316லும் கூறப்பட்டுள்ளது. இத்தகவலை ஹாபிழ் இப்னு ஹஜர் அவர்கள் முக்தஸர் ஸவாயித் பஸ்ஸார் என்னும் நூலின் எண்: 813ல் ஸஹீஹான அறிவிப்பாளர்களை கொண்டு கூறப்பட்டதென்றும், ஹாபிழ் ஹைத்தமி அவர்கள் மஜ்மவுஸ் ஸவாயித் என்னும் நூலின் பாகம்-3, பக்கம்-297ல் ஹாபிழ் பஸ்ஸாரின் அறிவிப்பா ளர்கள் நம்பிக்கைக்குரியவர்கள் என்றும் கூறுகின்றனர்.

இத்தனைக்குப் பின்பும் ஜனாப் அல்பானி அவர்கள் தஹ்ரீருல் மஸாஜித் என்னும் நூலின் பக்கம்-101, 102ல் தமக்கே உரிய பிறவிக் குணத்தை கொண்டு குறை கூறுகிறார். அதில் அவர் மேற்கண்ட நபிமொழியை நம்பிக்கைக்குரிய ஹதீதுகளை வல்லு னர்களில் யாருமே இது நம்பத்தகுந்த ஒன்றெனக் கூறவில்லை என்றும், இமாம் ஹைத்தமி அவர்கள் இவ்விஷயத்தில் தவறாக தீர்ப்பளித்து விட்டாரென்றும் கூறுகிறார். இவரது குற்றச்சாட்டுக்கு எந்த ஆதாரமும் இல்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய

ஒன்றாகும். இவரைச் சேர்ந்தோருக்கு அதை எவ்வளவு தான் விளக்கினாலும் அது விழலுக்கிறைத்த நீராகத்தான் முடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆதலால் நல்லடியார்களுக்கு ஹதீதுக் கலையின் வல்லுனர்களான ஹாபிழ் இப்னு ஹஜரும் ஹாபிழ் இமாம் ஹைத்தமியும் மஸ்ஜிதுல் கைபில் நபிமார்களின் மண்ணறைகள் இருப்பதாகச் சொல்லப்படும் ஹதீத் நம்பத்தகுந்த ஒன்றுதான் என்பதை ஆதாரப்படுத்துவதே போதுமானது. இதற்கு மேலும் விரிவான விளக்கத்தை பார்க்க விரும்புவோர் கஷ்புஸ்ஸுதூர் அம்மா உஷ்கில மின் அஹ்காமில் குபூர் என்னும் நூலில் 123ம் பக்கத்திலிருந்து 136ம் பக்கம் வரை பார்க்க வேண்டுகிறோம்.

இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் மக்காவில் வைத்து மறைந்ததாகவும் அவர்களது தாயாரான ஹாஜரா அலைஹஸ்ஸலாமவர்களின் அருகாமையில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்னும் தகவலை 1999ம் ஆண்டு இரண்டாம் பதிப்பாக ஸஊதி அரசால் பிரசுரிக்கப்பட்ட முஸீருல் வஜ்த் ஃபீ அன்ஸாபி முலூகி நஜ்த் என்னும் நூலின் 101வது பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றுமாகும்.

இது மட்டுமா! திங்களெங்கோமான் முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் நபவி மஸ்ஜிதானது ஆயிரக்கணக்கான முஷ்ரிக்கீன்களின் மண்ணறைகளைக் கொண்ட மயானத்தின் மீதல்லவா கட்டப்பட்டுள்ளது?

பின்னும் கப்ருகள் உள்ள இடத்தில் தொழுவது ஹராம். அது முஷ்ரிக்கீன்களின் செயலென்று சொல்லபபட்டால் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அருமைத் துணைவியார் அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் சுமார் ஐம்பது ஆண்டுகளாக நபியவர்களின் புனித ரௌழா ஷரீபை உள்ளடக்கிய தமது வீட்டில்தானே தொழுது வந்தார்கள்? அவர்களுமா............?

இது மட்டுமா? இருலோக வேந்தரான ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஈரல்குலை எனப் பேசப்படும் சுவர்க்கத்துப் பெண்களின் தலைவியான அன்னை பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள்,...

كانت فاطمة عليها السلام تزور قبر عمها حمزة رضى الله



عنه كل جمعة فتصلي وتبكى عندها.

***"நபியவர்களின் சிறிய தந்தையான ஹழ்ரத் ஹம்ஸா ரழியல்லாஹு அன்ஹுவின் கப்ரை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் தரிசிப்பதற்காகச் சென்று அங்கே தொழுவார்கள். இன்னும் அழுவார்கள்"*** என்றும் சொல்லப்படுகிறதே! நூல்: முஸ்தத்ரக், 1-533. இந்த ஹதீதை அறிவித்தவர்களை இமாம் தஹபி முன்கர் ஜித்தன் என்கின்றனர். ஆதலால் கப்ரடியில், கப்ருகள் உள்ள இடத்தில் தொழுவது கூடாதெனில் மீறித் தொழுபவர் முஷ்ரிக் எனில், அன்னை பாத்திமாவுமா...?

பகுத்தறிவற்ற மிருகங்களை விடக் கேடு கெட்டவர்கள் செய்யும் வேலைகளையெல்லாம் நீங்கள் ஏன் செய்து கொண்டிருக்கிறீர்கள்? இதைவிட இனியதோர் சந்தர்ப்பம் கிடைக்குமா என்பதை உறுதியாகச் சொல்ல முடியாத நிலையில் கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு இப்போதாவது கலிமாவின் கருத்தை உணர்ந்து யூத, கிறிஸ்தவர்களோடு போர்தொடுக்கும் நாளை எதிர்பாருங்கள். அவர்களிடமிருந்து உங்களுக்குக் கிடைக்கும் பலா பலன்களை விட கோடான கோடி மேன்மைக்குரிய பலன்கள் உங்களைப் படைத்த ரட்சகனாகிய அல்லாஹ்விடம் உங்களுக்காக காத்துக் கொண்டிருப்பதை உணர்ந்து இனியாவது செயல்படுங்கள். நீங்களெல்லாம் நல்லடியார்களாக மாறிட அல்லாஹ்வின் அருமைத் தூதரான முஹம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடம் மனமாற உள்ளமுருகிக் கேட்கிறோம். அல்லாஹு வரஸூலுஹு அஃலம்.

எனவே ஒரேயொரு கப்ரை உள்ளடக்கியது மட்டுமல்ல. சொற்ப நபர்களைக் கொண்ட பள்ளிவாசலில் தொழுபவர்கள் கூட அவர்களுடைய பார்வையில் முஷ்ரிக்குகள் எனில் அவர்களை வரும் யார் என்பதை யோசித்து முடிவு செய்ததால் இலங்கையில் உள்ளோர் மௌனமாக இருந்திருக்கலாம். அவ்வாறு இல்லையேல் நாம் முஃமின்களாக இருப்பதால் அவர்களின் குற்றச்சாட்டு அவர்களைத் தான் சாரும் என்னும் ஹதீதைக் கருத்தில் கொண்டு மௌனத்தை தேர்ந்தெடுத்திருக்கலாம் என்று நினைக்கிறோம்.

இனி கப்ருகள் கட்டப்படுதல் பற்றி எடுத்துக்காட்டப்படும் சில தகவல்களை இப்போது பார்ப்போம்.

عن عبد الله عمرو رضى الله عنه سمعت رسول الله صلى الله عليه و آله

وسلم يقول حين خرجنا معه الى الطائف فمررنا بقبر فقال ان هذا قبر ابى رغال.

*"ஹழ்ரத் அப்தில்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹுஅன்ஹு அவர்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் கொண்டு அறிவிக்கின்றனர். நாங்கள் தாயிப் பக்கமாகச் சென்று கொண்டிருக்கும் போது ஒரு கப்ருக்கு அருகாமையில் சென்றோம். அப்போது இது அபூ ரிகால் என்பவரது கப்ராகும் என நபியவர்கள் கூறினர்."* இவர் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் வாழ்ந்த ஸமூது கூட்டத்தாரைச் சார்ந்தவராகும். பார்க்க : அல் பிதாயா வந்நிஹாயா, 1-137.

فقبره (ابراهيم عليه السلام) وقبر ولده اسحاق عليه السلام وقبر ولد ولده يعقوب عليه السلام فى المربعة التي بناها سليمان بن داؤد عليه السلام ببلد حبرون وهو البلد العروف بالخليل اليوم وهذا تلقى بالتواتر امة بعد امة وجيل بعد جيل من زمن بنى اسرائيل والى زماننا هذا ان قبره مربعة تحقيقا.

*"ஹழ்ரத் ஸெய்யிதுனா இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம், ஹழ்ரத் ஸெய்யிதுனா இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம், ஹழ்ரத் ஸெய்யிதுனா யஃகூப் அலைஹிஸ்ஸலாம், ஆகியோரின் கப்ருகள் நாலா புறங்களிலும் சூழப்பட்டதோர் இடத்தில் உள்ளது. அதைக் கட்டியவர் ஹழ்ரத் ஸெய்யிதுனா தாவுத் அலைஹிஸ்ஸலாமவர்களின் மைந்தரான ஹழ்ரத் சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்களாகும். இந்த இடம் இப்போது அல் கலீல் என்னும் பெயரில் பிரபலமாக இருக்கின்றது. இன்னும் இது பனீ இஸ்ரவேலர்களின் காலந்தொட்டு இன்றுவரை இருந்து கொண்டிருக்கின்றது."* எனக்கூறி விட்டு,...

فما تعيينه منها فليس فيه خبر صحيح عن معصوم فينبغي ان تراعي تلك المحلة وان تحترم احترام مثلها وان تبجل وان تجل ان يداس في ارجائها خشية ان يكون قبر الخليل او احد من اولاده الانبياء عليهم السلام تحتها.

*"அந்த இடம் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதற்குரிய நம்பத்*



*தகுந்த ஆதாரம் இல்லையென்றாலும் அங்கே நபி இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களுடைய, அல்லது அவர்களுடைய புதல்வர்களில் யாரேனும் ஒரு நபியுடைய கப்ரு இருந்தால் அதற்கு தரப்பட வேண்டிய மரியாதையையும் கண்ணியத்தையும் கொடுப்பதோடு அந்த இடத்தை யாரும் மிதித்து விடாமல் பாதுகாக்கப்படவும் வேண்டும்"* என்பதாகவும் கூறப்பட்டுள்ளது. நூல்: அல் பிதாயா வந்நிஹாயா, 1-175.

இவ்விரு தகவல்களையும் நாம் எடுத்துக் காட்டும்போது இந்த நஜ்தியக் கொள்கைவாதிகள், இவைகள் முன்னிருந்த சமுதாயத்தில் ஆகுமாக்கப்பட்டதாக இருந்திருக்கலாம். ஆனால் அதன்பின் அண்ணலெங்கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் மார்க்கத்தில் மாற்றப்பட்டு விட்டதென்று கூறுகின்றனர். அவ்வாறாயின் அவை யாரால் எப்போது உடைக்கப்பட்டது என்பதை இவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். இவர்கள் விரும்பினால் ஃபுதூஹுஷ் ஷாம் என்னும் நூலையும், இஹ்யாவுல் மக்பூர், பக்கம்-40யும் பார்க்கட்டும். இன்னும் இதுபற்றி இப்னு தைமிய்யா,...

كانت لقبور الانبياء هناك ابنية ولكن ابوابها كانت مغلقة حتى القرن الرابع الهجري.

*"ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டு வரை குதுஸில் நபிமார்களது கப்ருகளின் மீது கட்டிடம் கட்டப்பட்டிருந்ததாகவும், அதனுடைய வாயில்கள் மூடப்பட்டிருந்ததாகவும்"* தமது அஸ்ஸிராத்தல் முஸ்தகீம் என்னும் நூலில்பக்கம்-676ல் குறிப்பிட்டுள்ளதாக அல் வஹ்ஹாபிய்யா ஃபில் மீஸான் என்னும் நூலின் 69ம் பக்கத்திலும், ரிஸாலா அல் அவ்ராகுல் பக்தாதிய்யா என்னும் நூலின் 9ம் பக்கத்திலும் கூறப்பட்டுள்ளது. இன்னும் இது குறித்து உலக வரலாற்றாசிரியர்களில் பிரபலமான இப்னு பதூதா அவர்கள் புனித பைத்துல் முகத்தஸுக்குச் சென்றபோது மேற்கூறப்பட்ட நபிமார்களின் கப்ருகளை தரிசித்ததாகவும், அது பற்றி அங்கிருந்த அறிஞர்களிடம் கேட்டறிந்ததாகவும் தமது ரிஹ்லத் இப்னி பதூதா" என்னும் நூலின் 1-74ல் கூறுகிறார்.

இப்புனித ஸ்தலங்களெல்லாம் பாலஸ்தீனில் இருப்பதால் அவைகளை உலகிலுள்ளோர் யாரும் சென்று தரிசித்து விடக்கூடாதென்பதற்காகவும், அங்கே வாழுகின்ற மக்கள் அவைகளை மதிப்பதாலுமே அந்த இடங்களெல்லாம் யூதர்களால் கைப்பற்

றப்பட்டு அம்மக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாக்கப் பட்டு வருகின்றனர். இன்னும் இதற்குப் பின்னால் இதை ஊக்கு வித்துக் கொண்டிருப்போர் சுஊதுடைய வம்சமும் ஷைகு நஜ்தியுடைய வம்சமும் தான் என்பதை இஸ்லாமிய உலகம் உணராத வரை வெற்றி என்பது அறவேயில்லை. மேலும் அல்பானி பாலஸ்தீனியர்கள் அம்மண்ணை விட்டு ஹிஜ்ரத்துச் செய்வது அவர்கள்மீது கடமையாகும் என்று கூறுகிறார் என்றால் அவருக்கு எத்தனை துணிச்சல் இருக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள்.

அடுத்து இந்த ஷைகு நஜ்துடைய கொள்கைவாதிகள், ஈராக்கை ஹழ்ரத் ஸெய்யிதுனா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் வெற்றி கொண்டபோது, ஹழ்ரத் தானியால் அலைஹிஸ்ஸலா மவர்களுடைய கப்ரின் மீதிருந்த அடையாளங்களை எல்லாம் ஏன் அகற்றினார்கள் எனக் கேட்கின்றனர்.

கலீபா அவர்கள் அவ்வாறு செய்ததற்குரிய காரணம் இவர்களால் எடுத்துக் காட்டப்படும் ஒன்றல்ல என்பது ஒருபுறமிருக்க, அது ஒரு பாவமான காரியமென்றோ, இஸ்லாம் கப்ருகளின் மீது அடையாளம் இடப்படுவதை அங்கீகரிக்கவில்லை என்றோ, அதனால் தான் கலீபா அவர்கள் அகற்றினார்கள் என்பதை ஒப்புக் கொள்ளும் இவர்கள் அதே கலீபா அவர்களால் ஏற்படுத்தப்பட்ட தராவீஹுடைய தொழுகை இருபது ரக்அத்துகள் தானென்பதை ஏற்றுக் கொள்ளாததுடன் அவர்கள்தான் வழிகேட்டிற்குரிய வாசலைத் திறந்தவர்கள் என்றும் கொஞ்சங்கூட நாகூசாமல் சொல்கிறார்களே!

வெகு விரைவில் அல்லாஹ்வுடைய தண்டனையை நீங்கள் அனுபவிக்கத்தான் போகிறீர்கள். ஆம். தௌபாவின் வாசல்படி அடைபடுவதற்கு முன் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் தர்பாரில் ஆஜராகி மண்டியிட்டு நபியவர் களிடம் முதலில் மன்னிப்புக் கேளுங்கள். அதன்பின் அவர் களுடைய பொருட்டால் அல்லாஹ்விடம் மன்னிப்புக் கேளுங்கள். இல்லையேல் உங்களின் ஆடைகளோ பாஷையோ அலங்காரமோ ஒன்றுக்கும் உதவாது.

அடுத்து இவர்கள் கப்ருகளை இடிக்க வேண்டுமென்பதற்கு எடுத்துக் காட்டும் ஆதாரங்களில் ஒரேயொரு ஆதாரத்தை மட்டும் உங்களின் பார்வைக்குத் தந்து அதற்கு அவர்கள்



தருகின்ற விளக்கம் சரியானது தானா என்பதைப் பார்ப்போம். ஏனெனில் இந்த இடத்தில் அது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதாலே.

حدثنا يحى بن يحى وابوبكر بن شيبة وزهير بن حرب قال يحى: اخبرنا وقال الآخرون حدثنا وكيع عن سفيان عن حبيب ابن ابى ثابت عن ابى وائل عن ابى الحياج الاسدى قال: قال لي علي ابن ابى طالب رضى الله عنه: الا ابعثك على مابعثني عليه رسول الله صلى الله عليه وآله وسلم ان لاتدع تمثالا الا طمسته ولا قبرا مشرفا الا سويته.

***"அபுல் ஹய்யாஜ் அல் அஸதி என்பார் கூறுகிறார்:- எந்தக் காரியத்தை செய்வதற்காக நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் என்னை அனுப்பினார்களோ அக்காரியத்திற்காக நான் உம்மை அனுப்பட்டுமா? எனக் கேட்ட ஹழ்ரத் ஸெய்யிதுனா அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், உயர்ந்துள்ள கப்ருகளை சமப்படுத்துமாறும், உருவச் சிலைகளைக் கண்டால் அவைகளை அழித்து விடுமாறும் சொன்னார்கள்."*** நூல்: ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஜனாயிஸ். ஸுனன் திர்மிதி - பாபு மா ஜாஅ ஃபீ தஸ்வியதில் கப்ரி. ஸுனனு நஸாயி - பாபு தஸ்வியதில் கப்ரி.

இந்த ஹதீதில் இரு விஷயங்கள் ஆராயப்பட வேண்டும். ஒன்று இதனுடைய அறிவிப்பாளர்கள் பற்றியது. இரண்டாவது இதனுடைய கருத்துப் பற்றியது. இதில் முதலாவது விஷயத்தில் எதிர்தரப்பார் கையாளும் அதேமுறையை நாமும் கையாளுவதற் காக நமது சகோதரர்களிடம் நாம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கி றோம். ஏனெனில் அவர்களுடைய முறையை நாம் கையாளுவதன் நோக்கம் உண்மையை வெளிக்கொண்டு வருவதேயாகும்.

அந்த வகையில் மேற்கண்ட ஹதீதை அறிவிக்கும் அறிவிப் பாளர்களில் வகீஃ, ஸுஃப்யானுஸ் ஸௌரி, ஹபீப் இப்னு அபீ தாபித், அபூ வாயில், அபுல் ஹய்யாஜ் அல் அஸதி போன்றோர் இடம் பெறுகின்றனர். இவர்களைப் பற்றி அல்லாமா இப்னு ஹஜர் அஸ்க்கலானி அவர்கள் தமது தஹ்தீபுத் தஹ்தீப் என்னும் நூலில்,...

ஹதீதுடைய அறிவிப்பாளர்களில் முதல் நபரான வகீஃ என்ப வரை எடுத்துக் கொண்டால்,...

انه اخطأ في خمس مأة حديث

*"இவர் 500 ஹதீதுகளில் தவறு இழைத்துள்ளார்"* என்பதாக இமாம் அஹ்மத் பின் ஹன்பல் ரழியல்லாஹு அன்ஹு அவர்களும்,...

كان (وكيع) يحدث بالمعنى ولم يكن من اهل اللسان.

***"(வகீ:) ஹதீதுகளுக்கு பொருள் சொல்வதில் அரபி மொழியில் பாண்டித்தியம் உள்ளவரல்ல"***
என்று முஹம்மத் இப்னு நஸ்ருல் மரூஸி அவர்களும் பாகம்-11, பக்கம்-111, 114ல் கூறுகின்றனர்.

அடுத்து இரண்டாவது நபரான ஸுப்யானுஸ் ஸௌரியைப் பற்றி இப்னு முபாரக் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்,...

حدث سفيان بحديث فجئته وهو يدلسه فلما رآني استحي.

**"ஸுப்யான் அவர்கள் ஒரு ஹதீதைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் போது அந்த ஹதீதை அவர் யாரிடமிருந்து பெற்றுரோ அவருடைய பெயரைச் சொல்லாமல் மறைத்துப் பேசிக் கொண்டிருந்தார். அதுபோது நான் அங்கே செல்ல என்னைக்கண்டதும் அவரது முகம் வெட்கித்துப் போயிற்று"** என்றுபாகம்-4, பக்கம்-104ல் கூறுகின்றனர்.

இதேபோல மூன்றுவது நபரான ஹபீப் இப்னு அபீதாபித் என்பாரைப் பற்றி இப்னு ஹிப்பான் அவர்கள்,...

كان مدلسا.

**"யாரிடமிருந்து ஹதீதைப் பெற்றுரோ அவருடைய பெயரைச் சொல்லாமல் அவருக்கு மேலே உள்ளவரின் பெயரைச் சொல்லி அவரிடமிருந்து நேரடியாகக் கேட்டதைப் போல சொல்பவராகும்"** என்று கூறுகின்றனர்.

இன்னும் இவரைப்பற்றி கித்தான் என்பார் ***"லாயுதாப:அலைஹி வலைஸத் பி மஹ்பூஸதின்"*** என்பதாக பாகம்-2, பக்கம்-165ல் கூறுகிறுர்.

அதற்கடுத்து நான்காவது நபரான அபூ வாயில் என்பவர் ஹழ்ரத் ஸெய்யிதுனு அலீ ரழியல்லாஹு அன்ஹுவின் மீது விரோதம் கொண்டவராக இருந்தார் என்பதாக அபுல் ஹதீதுக்குச் சொந்தமான ஷரஹ் நஹ்ஜுல் பலாகாவில் கூறப்பட்டுள்ளது.

அடுத்து ஐந்தாவது நபராகிய அபுல் ஹய்யாஜ் அல் அஸதி



என்பவர், ஹதீதுகளை நேரடியாக ஹழ்ரத் ஸெய்யிதுனு அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாக அறிவித்தவராகும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் ஸிஹாஹ் ஸித்தாக்களான அங்கீகரிக்கப்பட்ட புகாரி, முஸ்லிம், திர்மிதி, இப்னு மாஜா, நஸாயி, அபூதாவூத் போன்ற கிரந்தங்களில் இவரால் அறிவிக்கப் பட்ட ஒரேயொரு ஹதீது மட்டுமே கூறப்பட்டுள்ளது. இந்த வகையில் இவர் ஒரு நபிமொழி அறிவிப்பாளரே அல்ல என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். ஆதலால் மேற்கண்ட ஹதீதில் சந்தேகத்திற்குரிய வாய்ப்பு மிகுந்து காணப்படுவதால் சந்தேகத் திற்கு இடமான ஒன்றைக்கொண்டு தீர்ப்புச் சொல்வது கூடாது.

அடுத்து மேற்கண்ட ஹதீதுக்கு அவர்களால் தரப்படும் விளக் கத்தில் அந்த ஹதீதிலுள்ள **"முஷ்ரிபுன்"** மற்றும் **"ஸவ்வைதஹு"** என்னும் வாக்கியம் ஆராயப்பட வேண்டிய ஒன்றுகும். இதில் முஷ்ரிபுன் என்னும் வாக்கியம் உயரமான ஒரு பொருளுக்குச் சொல்லப்பட்டாலும் கூட இது ஒட்டகத்தின் திமின் வடிவத்தின் உயரத்திற்கு மட்டுமே சொல்லப்படும் வாக்கியமாகும்.

அடுத்து ஸவ்வைதஹு என்னும் வாக்கியமானது ஸவ்வா என்னும் மூலத்திலிருந்து திரிந்த ஒன்றுகும். இதற்கு சமம், பரிபூர ணம் என்பது அதற்குரிய பொருளாகும். இவ்விரு வாக்கியத்தின் பொருளுக்குரிய அடிப்படையில் வைத்துப் பார்க்கும்போது இதற்கு இப்படி விளக்கம் சொல்லலாம். அதாவது,...

1. அமீருல் முஃமினீன் ஹழ்ரத் ஸெய்யிதுனு அலீ கர்ரமல் லாஹு வஜ்ஹஹு அவர்கள் உயரமாகக் காணப்படும் கப்ருகளை பூமியோடு சமப்படுத்துமாறு அபுல் ஹய்யாஜை ஏவினுர்கள் என்பது ஒருவகை விளக்கமாகும். இது பொய்யான (பாத்திலான) விளக்கமாகும். ஏனெனில் ஸவ்வா என்னும் வாக்கியத்திற்கு உடைத்தல் என்பது பொருளாகாது. அவ்வாறு பொருள் தரப்பட வேண்டுமாயின் (பூமியுடன்) என்னும் வார்த்தை சேர்த்து உபயோகிக்கப்பட்டிருக்க வேண்டும். அடுத்து கப்ரு பூமியோடு சமமாக ஆக்கப்பட வேண்டும் என்பதாக நம்முடைய அறிஞர் பெருமக்கள் நமக்குக் கற்றுத்தரவில்லை. மாறுக,...

يندب ارتفاع التراب فوق القبر بقدر شبر.

**"ஒரு சான் அளவுக்கு உயரமானதாக கப்ருடைய மேலேயுள்ள மண் உயர்த்தப்பட்டிருக்க வேண்டும். அதுதான் சுன்னத்தாகும்"** என்பதாக

தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதையொட்டித் தான் நாமும் இன்று வரை செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். அத்துடன் கப்ரு உயர்த்தப்பட்டதற்குரிய ஆதாரம் ஹதீதிலும் காணப்படுகிறது. ஆம் கப்ரு சமதரையாக இருக்கக் கூடாதென்று தான் இஸ்லாம் கூறுகிறது.

2. ஒட்டகத்துடைய திமின் வடிவத்தில் கூம்பையாக உயர்த்தப்பட்டிருந்த கப்ருடைய வடிவத்தை மாற்றி அவைகளை சமப்படுத்துமாறு கட்டளையிட்டார்கள் என்பது இரண்டாவது விளக்கமாகும்.

3. இந்த ஹதீதானது முஷ்ரிக்கீன்களுடைய விஷயத்தில் சொல்லப்பட்டதாகும். ஆதலால் எந்த வகையிலும் இது நபிமார்கள் மற்றும் வலிமார்களின் கப்ருகள் மீது கட்டப்பட்டுள்ள குப்பாக்களை உடைத்து தரையோடு தரையாக ஆக்கப்பட வேண்டும் என்பதற்கு இது ஆதாரமாகாது என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

ஹழ்ரத் ஸெய்யிதுனா அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களால் சொல்லப்பட்டதை சரியாக விளங்கிக் கொள்ளாமல் அதனுடைய ஆழம் புரியாமல் திட்டமிட்டு வேண்டுமென்றே இவர்கள் முஃமின்கள் மீது குற்றம் சாட்டுகின்றனர். இது இங்கே சுருக்கமாக சொல்லப்பட்ட நமது விளக்கமாகும். ஆனால் அதே நேரம் தேவையான நேரத்தில் விரிவாக விளக்குவோம் இன்ஷா அல்லாஹ்.

கப்ருகள் கட்டப்படக் கூடாது. குப்பாக்கள் அமைக்கப்படக் கூடாது. அவைகள் உடைத்துத் தரை மட்டமாக்கப்பட வேண்டும் என்பதெல்லாம் இஸ்லாமிய மார்க்கத்தின் ஷரீஅத்துக் கற்றுத்தரும் ஒன்றல்ல. அதற்கு மாறாக கப்ருகள் உயர்த்தப்பட்டிருக்க வேண்டும். நபிமார்களின் வலிமார்களின் கப்ருகளைச் சூழ சுவர்கள் அமைக்கப்பட்டு அவைகள் முகடுகளை கொண்டதாக இருக்க வேண்டும் என்பதே ஷரீஅத்துத் தருகின்ற தீர்ப்பாகும். ஒரு பெரிய குண்டைத் தூக்கிப் போடுவதாக யோசிக்கிறீர்களா? இதோ நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் சொன்ன வார்த்தையை கூர்ந்து பாருங்கள்.

ما قبض الله نبيا الادفن حيث يقبض.

***"நபிமார்களின் உயிர் கைப்பற்றப்படும் இடத்தில் தான் அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட வேண்டும்"*** என்று கூறுகின்றனர். அவ்வா



றுயின் நான்கு சுவர்களும் அதன்மீது முகடும் கொண்ட வீட்டுக்குள் தான் அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட வேண்டும் என்று நபியவர்கள் கூறுவதைக் கவனியுங்கள். இதைத் தழுவி நபியவர்களை அவ்வாறு அடக்கம் செய்யவில்லையா? கப்ருகளுக்கு முகடுகள் கட்டப்படக் கூடாதென்று இருந்திருந்தால் மேல்முகட்டைக் கொண்ட வீட்டுக்குள் இவ்வையகத்திற்குரிய வாழ்க்கையின் முடிவை ஏன் தேர்ந்தெடுத்தார்கள்? இதற்கும் ஏதாவது சாக்குப் போக்கு சொல்லப்படுமாயின் அதன்பின் நபியவர்களின் தோழர் பெருமக்கள் அதை ஏன் விட்டு வைத்தார்கள்? என்னும் கேள்விக்கெல்லாம் இவர்கள் பதில் தந்தாக வேண்டும். ஆகையால் கப்ருகள் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதே ஷரீஅத்தின் தீர்ப்பாகும் என்பதை இவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அடுத்து கப்ரஸ்தானில் தொழுவது பற்றியும், கப்ருள்ள பள்ளியில் தொழுவது பற்றியும் வேறு சில கருத்துக்களை இப்போது பார்ப்போம். இங்கு நாம் மூன்று விஷயங்களை நமது ஆய்வுக்கு உட்படுத்துவோம்.

1. மையவாடியில் தொழுதல். அதாவது நாற்புறங்களிலும் கப்ருகளால் சூழப்பட்டுள்ள ஒரு இடத்தின் மத்தியில் கட்டிடமொன்றை அமைத்துக் கொண்டு தொழுதல். அல்லது திரையேதுமில்லாமல் தொழுதல்.

விசாலமான மையவாடியாக இருந்து அதற்குள் ஒரு இடம் மீதமாக இருந்து அவ்விடத்தில் ஒருஇடம் அமைக்கப்பட்டிருந்தால் அங்கே தொழலாம்.

2. கப்ரை உள்ளடக்கிய பள்ளியில் தொழுதல்:- அதாவது பள்ளிவாயிலுக்குப் பக்கத்தில், அல்லது பள்ளியின் முற்றத்தில், அல்லது பள்ளியின் ஒரு பகுதியில் கப்ரு இருப்பதாகும். அதை மையவாடி எனச் சொல்லப்பட மாட்டாது. அன்றி மையவாடியில் தொழுவதைத்தான் கூடாதென்று ஹதீத் சொல்லிக் கொண்டிருக்கிறது.

3. கப்ரை முன்னோக்கி தொழுவதாகும்:- அதாவது தனக்கு முன்னால் கப்ரை வைத்துக்கொண்டு அதை முன்னோக்கி ஸுஜூது செய்வதாகும்.

முதலாவது மையவாடியில் தொழுதல்:- மண்ணறைகள்

தோண்டப்பட்டிருந்தாலும் மூடப்பட்டிருந்தாலும் அவைகள் மீது ஒருவிரிப்பை விரித்துத் தொழுவதை இமாம் அஹ்மத் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஹராம் என்றும் அத்தொழுகை பாத்திலானதென்றும் கூறுகின்றனர். இக்கருத்துக்கு,...

ان النبي صلى الله عليه وآله وسلم قال: الارض كلها مسجد الا المقبرة والحمام.

***"மையவாடி மற்றும் குளியலறை தவிர்த்த ஏனைய எல்லா இடங்களுமே மஸ்ஜிதாகும் என்னும் ஹதீதை ஆதாரமாக எடுத்துக் காட்டுகின்றனர்."***

இதில் மையவாடி தோண்டப்பட்டதாக மட்டுமே இருக்குமாயின் அங்கே தொழுவது ஹராமாகும் எனக் கூறுகின்றனர் இமாம் ஷாபி ரஹிமஹுல்லாஹ் அவர்கள். அன்றி மூடப்பட்டுள்ள கப்ரின்மீது தொழுவது வெறுக்கத்தக்க செயலாகும் என்றும் குறிப்பிடுகின்றனர்.

மண்ணறைகள் தோண்டப்பட்டிருந்தாலும் மூடப்பட்டிருந்தாலும் அந்த இடத்தில் தொழுவது நல்லதல்ல. மாருக வெறுக்கத்தக்க செயலாகும் எனக்கூறுகின்றனர் இமாம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்கள்.இதற்கு,...

اينما ادركتك الصلوة فصل فإنه مسجد.

***"எந்த இடத்தில் தொழுகை உன்னை வந்தடைந்தாலும் அவ்விடத்திலேயே தொழுதுகொள். அந்த இடம் மஸ்ஜிதாகும் என்னும் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஹதீதை ஆதாரமாகக் காட்டுகின்றனர்."*** புகாரி, முஸ்லிம்.

அடுத்து பொதுவாக மையவாடியில் தொழலாம் எனக்கூறுகின்றனர் இமாம் மாலிக் ரஹிமஹுல்லாஹ் அவர்கள். இதற்கு,...

ان إمرأة سوداء او شابا كانت تقم المسجد فقدها رسول الله صلى الله عليه وآله وسلم فسأل عنها او عنه فقالوا مات قال افلا كنتم آذنتموني قال فكأنهم صغروا أمرها او أمره فقال دلوني على قبره فدلوه فصلى عليها ثم قال ان هذه القبور



مملوئة ظلمة على أهلها وان الله عز وجل ينورها لهم بصلاتي عليهم.

***"மஸ்ஜிதுன் நபவியை துப்பரவு செய்த ஏழை பெண்மணி - அல்லது வாலிபன் இறந்து விடுகின்றனர். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அவரைப் பற்றி விசாரிக்கின்றனர். அப்போது அவர் இறந்து விட்டதாக சொல்லப்படுகிறது. அதுகேட்ட நபியவர்கள் எனக்கு ஏன் சொல்லவில்லை என்றவர்கள் (இதையும் சொல்ல வேண்டுமா என்ன எனக்கருதிக் கொண்டார் என்பதாக அறிவிப்பாளர் கூறுகிறார்) அவருடைய கப்ரை காட்டுங்களெனக் கூறிய நபியவர்கள் அந்த இடத்திற்குப்போய் சேர்ந்தவர்கள் அங்கே தொழுதபின் இந்தக் கப்ருகளனைத்தும் இருளால் சூழப்பட்டிருந்தது. என்னுடைய தொழுகையால் அல்லாஹ் அவர்களின் நிலையை ஒளியாக்கினான் என்றும் கூறியதை ஆதாரமாகக் காட்டுகின்றனர்."***

நூல்: முஸ்லிம் ஷரீப், இக்மால், பாகம்-3, பக்கம்-420. ஷரஹ் நவவி, பாகம்-7, பக்கம்-25.

இனி மையவாடியில் தொழுவதை குறித்து சொல்லப்பட்ட கருத்துக்களை பார்க்க விரும்புவோர் ஷரஹ் சுனன் இப்னு மாஜா பாகம்-1, பக்கம்-412லும் துஹ்பதுல் அஹ்வதி ஷரஹ் திர்மிதி பாகம்-2, பக்கம்-219லும் ஆரிழதுல் அஹ்வதி ஷரஹ் திர்மிதி பாகம்-3, பக்கம்-113லும் பத்லுல் மஜ்ஹூத் ஷரஹ் அபீதாவூத் பாகம்-3, பக்கம்-336லும் அவ்னுல் மஃபூத் ஷரஹ் அபீதாவூத் பாகம்-2, பக்கம்-112லும் பார்க்க வேண்டுகிறோம்.

மேலும் இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களை பார்க்கும்போது மையவாடியில் கப்ரடியில் தொழலாம் என்பது தெளிவாகிறது. இன்னும் மையவாடியில் தொழக்கூடாதென்னும் ஹதீதை இமாம் திர்மிதி அவர்கள் முர்ஸலானது எனக்கூறுகின்றனர். அத்துடன் பூமி முழுவதும் எனக்கு மஸ்ஜிதாக ஆக்கித் தரப்பட்டுள்ளது என்னும் ஸஹீஹான ஹதீதுக்கும் இது மாற்றமானதாக இருக்கின்றது என்பதை கவனிக்க வேண்டும்.

இரண்டாவது கப்ருள்ள பள்ளியில் தொழுதல்:- கப்ரை உள்ளடக்கிய பள்ளியில் தொழக் கூடாதென்பதற்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை. கப்ரு உள்ள இடத்தில் பள்ளி கட்டப்பட்டிருந்தாலும் சரியே. அல்லது பள்ளி கட்டப்பட்ட பின்னர் அப்பள்

ளிக்குள் கப்ரு ஏற்படுத்தப்பட்டாலும் சரியே. பின்னும் கப்ரை உள்ளடக்கிய பள்ளியில் தொழுவது கூடாதென்பதற்காக எடுத்துக் காட்டப்படும் ஹதீதுகள் அவர்களின் அறியாமையை தான் நமக்கு புலப்படுத்துகின்றன. மாறாக அந்த ஹதீதுகளை புரிந்து கொள்வதற்குரிய திறமை அவர்களிடம் இல்லை என்பதும் இதன் மூலம் நமக்குத் தெளிவாகிறது.

மேலும் கப்ருகள் உள்ள இடத்தில் தொழ முடியாதெனில் பூமி முழுவதும் எனக்கு தொழுமிடமாக ஆக்கித் தரப்பட்டுள்ளது என்னும் ஹதீதுக்கொப்ப இறந்து போவோர் அனைவரையும் ஒன்று எரிக்க வேண்டும். அல்லது கடலில் வீசியெறியப்பட வேண்டும். இப்படியொரு பத்வாவை இவர்கள் தந்தாலும் ஆச்சரியமில்லை.

அடுத்து ஹதீதில் கூறப்பட்டுள்ள மஸாஜித் என்னும் வாக்கியத்தை ஒரு இடத்திற்குரிய பெயராகக் கொள்ள வேண்டுமாயின் ஹதீதானது "லா தத்தகிதூ அலல் குபூரி மஸாஜித" என்பதாக பதிவாகியிருக்க வேண்டும். அப்படி இல்லாததால் அந்த வாக்கியத்தை மஸ்தர் மீமியாகத்தான் கணிக்கப்படும். இதெல்லாம் இவர்களுக்குப் புரியவா போகிறது.

அடுத்து கப்ரை வணங்கும் எண்ணத்தில் அல்லது கப்ரை கிப்லாவாக ஏற்படுத்திக் கொள்ளும் எண்ணத்தில் அதற்கு முன்னால் ஸுஜூது செய்வதாகும். இதைத்தான் இவர்களால் எடுத்துக் காட்டப்படும் ஹதீதுகள் அனைத்தும் கூறுகின்றன.

அவ்வாறின்றி வணக்கத்துடைய எண்ணமின்றியும் கிப்லாவாக ஆக்க வேண்டுமென்னும் நிய்யத் இன்றியும் திரையிடப்பட்ட நிலையில் ஒரு கப்ரு பள்ளிக்குள் இருக்குமாயின் அங்கே தொழுவதில் ஆட்சேபனை ஏதுமில்லை. இதுதான் இஸ்லாம் நமக்குக் கற்றுத்தரும் உண்மையாகும். அதற்கு மாறாக மக்காவிலுள்ள இமாம் சொல்லிவிட்டார் என்பதற்காக அது வேதவாக்காக ஆகிவிடாது. அத்துடன் அவர் அரபியர் என்பதற்காக அவர் சொல்வதையெல்லாம் கேட்பதற்கு நாங்கள் என்ன ஜாஹிலிய்யீன்களின் காலத்தவர்களா? யூதர்கள்கூட அரபிதான் பேசுகின்றனர். அதற்காக அவர்கள் குர்ஆனை ஓதுகின்றனர் என்று சொல்ல முடியும்?

இனி கப்ரை உள்ளடக்கிய பள்ளியில் தொழுவதைக் குறித்து



எழுதப்பட்ட "வணக்கஸ்தலங்களும் அடக்கஸ்தலங்களும்" என்னும் நாவலில் கதைக்குதவாத உப்பு சப்பற்ற வெறும் வாதங்கள்தான் உள்ளன. இன்னும் அந்த நாவலில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் குர்ஆனையும் ஹதீதையும் கொஞ்சங்கூட விளங்கிக் கொள்ளாத தான்தோன்றித்தனமான அதேநேரம் சமுதாயத்தில் மிக மிகக்கீழ்த்தரமான தரத்தை கொண்ட ஆலு ஷைகும் ஆலு சுஊதும் இணைந்து உருவாக்கிய வடிகட்டிய வழிகேடர்களால் சொல்லப்படும் வெறும் சொத்தைக் கருத்துக்களாகும். இருந்த போதிலும் அக்கதை புத்தகத்தில் கூறப்பட்டுள்ள ஒரேயொரு கதையைப் பற்றி இப்போது நாம் பார்ப்போம். அவர் கூறுகிறார்,...

"அதன்பின் ஹிஜ்ரி 88வரை எந்தவித விஸ்தரிப்பு வேலையும் நடைபெறவில்லை. 88க்குப்பின் வலீத் பின் அப்துல் மலிக் பள்ளியை விஸ்தரிப்பு செய்தார். முன்னோர்களான உமர் ரழியல்லாஹு அன்ஹுவும், உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹுவும் செய்யாததை இவர்செய்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் எதை குறித்து அஞ்சினார்களோ, சபித்தார்களோ, மரண வேளையில் கூட அடிக்கடி எச்சரித்தார்களோ அதை இவர் செய்து விட்டார். இவர் செய்த பாதகத்தை அன்று இருந்த மிகப்பெரும் அறிஞரும் தாபியீனுமான ஸயீத் பின் முஸய்யப் (ரஹ்மதுல்லாஹ்) அவர்கள் வன்மையாகக் கண்டித்தார்கள்.

பள்ளி வேறாகவும் கப்ரு வேறாகவும் பிரிந்திருந்ததை இவர் தான் ஒன்றாக இணைத்தார். அன்றைய சூழ்நிலையில் அப்போது நபித்தோழர்கள் யாரும் இருக்கவில்லை. மதீனாவில் அவ்வாறு இருந்திருப்பின் கண்டிப்பாக விஷயம் வேறாக இருந்திருக்கும். ஆட்சியின் மமதையில் இவர் சமகாலத்தவர்களை சட்டை செய்யவில்லை. இதன் விபரீதமே இன்று இந்த நிலை தோன்றுவதற்குக் காரணமாக அமைந்து விட்டது." பக்கம்-16,17. என்று கூறுகிறார்.

அவர் என்ன கூறுகிறார் எனில் வலீத் பின் அப்துல் மலிக் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் புனிதப் பள்ளிவாசலை விஸ்தரித்த போதுதான் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ரௌழா ஷரீபை பள்ளியின் உட்பகுதியில் கொண்டுவந்து இணைத்தார். இதோர் பாவமான காரியமாகும். அப்போது அங்கிருந்த ஹழ்ரத் ஸயீத் பின் முஸய்யப் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அச்செயலை வன்மையாகக் கண்டித்ததாகவும் நபித்தோழர்கள் யாரும் அப்போது இருக்கவில்லை என்றும் இருந்திருந்தால் அப்படிப்பட்டதோர் நிலை ஏற்பட்டிருக்

காதென்றும் ரத்தம் கொதித்துப் போகிறார். இவரும் ஒரு கலா நிதியாம்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமை இஸ்லாமியச் சகோதரர்களே! அல்லாஹ்வுடைய ரஸூலும் நமது உயிரினும் உயிர் நாடியான மழ்ஹருல் அதம்மான அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களால் சிறப்புக்குரிய காலங்கள் என உத்திரவாதமளிக்கப்பட்ட காலங்களை பற்றிய ஹதீத் நமக்கெல்லாம் தெரிந்த ஒன்றுதான். நபியவர்களால் சுபச்செய்தி தரப்பட்ட அப்புனிதமான காலத்தில் வாழ்ந்தவர் தான் ஹழ்ரத் ஸெய்யிதுனா உமர் பின் அப்துல் அஸீஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்களாகும். அத்துடன் இவர் இரண்டாம் உமர் என்றும் போற்றப்பட்ட ஓர் பெரியாராகும். இவருடைய தாயார் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹுவின் புதல்வரின் புதல்வியாகும். நமது நபியவர்களின் துணைவியர்களில் ஒருவரான அன்னை மைமூனா ரழியல்லாஹு அன்ஹா அவர்கள் மறைந்த வருடமான ஹிஜ்ரி 63ம் ஆண்டில் பிறந்தவர்களாகும்.

அன்றிருந்த மிகப்பெரும் அறிஞரும் தாபியீனுமாகிய ஹழ்ரத் ஸயீத் பின் முஸய்யப் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் வலீத் செய்த காரியத்தை வண்மையாகக் கண்டித்தார் என மேற்படி நாவலில் கூறப்பட்டுள்ளதல்லவா. அதே ஸயீத் பின் முஸய்யபிடம் ஒருவர் மஹ்தி எனப்படுபவர் யாரென்று கேட்டபோது, அதற்கவர்,...

فقال له سعيد أدخلت دار مروان قال لا قال فادخل دار
مروان ترى المهدي فانطلق الرجل حتى دخل دار مروان
فرأى الامير والناس مجتمعين ثم رجع الى سعيد بن المسيب
فقال يا أبا محمد دخلت دار مروان فلم ار احدا اقول هذا
المهدي هل رأيت الاشج عمر بن عبد العزيز القائد على
السرير؟ قال نعم. قال فهو المهدي.

*"நீர் மர்வானுடைய வீட்டுக்கு சென்றதுண்டா என்று அவரிடம் கேட்க, அதற்கவர்; இல்லையென்று சொல்ல அதற்கந்த அறிஞர், முதலில் அங்கே சென்றுவா என்று சொன்னார். அந்த வீட்டுக்குச் சென்ற அவர் அங்கே மக்களுக்கு மத்தியில் அமர்ந்திருந்த தலைவரை பார்த்துவிட்டு திரும்பி வந்தவர், அங்கே மஹ்தி*



***யென்று சொல்லப்படும் யாரையும் நான் பார்க்கவில்லை என்று சொல்ல, அதுகேட்ட அறிஞர்; அங்கே கட்டிலில் அமர்ந்திருந்த ஒரு மாவீரரை பார்த்தாயா எனக்கேட்க, அதற்கவர்; ஆம் என்று சொல்ல, அவர்தான் மஹ்தி என்று அறிஞர் கூறினார். அவர்தான் உமர் பின் அப்துல் அஸீஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்களாகும்.***

நூல்: தபகாத் இப்னி ஸஃத், பாகம்-5, பக்கம்-333.

இன்னும் இதே ஸயீத் பின் முஸய்யப் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்தான் ஹர்ராவுடைய நாட்களில் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ரௌழா ஷரீபிலிருந்து பாங்கொலி கேட்டதை வைத்து தொழுகைக்குரிய நேரங்களை தெரிந்து கொண்டதாகக் கூறுகிறார். இதை இவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா? இவர்கள் பதவிக்காகவும் பணத்திற்காகவும் பசப்புகின்ற அரசியல்வாதிகளை விட மிக மிக மட்டமானவர்கள்.

மாபெரும் அறிஞர்களால் மஹ்தியென போற்றப்பட்ட ஹழ்ரத் உமர் பின் அப்துல் அஸீஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இருபத்தைந்து வயதுடையவராக இருக்கும்போது தான் மேற்படி நாவலில் சபிக்கப்பட்ட வலீத் பின் அப்துல் மலிக் அவரை புனித மதீனா முனவ்வராவின் அதிகாரியாக ஹிஜ்ரி 87ம் ஆண்டு நியமித்தார். அதிகாரியாக நியமனம் செய்யப்பட்ட உமர் பின் அப்துல் அஸீஸ் அவர்கள் அவ்வூர் அறிஞர்களை எல்லாம் அழைத்து பின்வருமாறு உபதேசம் செய்தார். அதாவது,...

***"அல்லாஹ்வை புகழ்ந்த பின் நிச்சயமாக நான் உங்களை அழைத்ததெல்லாம் சத்தியத்தை நிலைநாட்ட நீங்கள் எல்லோரும் எனக்கு ஒத்தாசையாக இருக்க வேண்டும். உங்களுடைய அபிப்பிராயம் இல்லாது நான் எதையும் செய்ய மாட்டேன்"*** என்று சொன்னார். அந்த அறிஞர்கள் யார் தெரியுமா?,...

ஹழரத் உர்வா பின் ஸுபைர், ஹழ்ரத் உபைதுல்லாஹ் பின் அப்துல்லாஹ் பின் உத்பா, ஹழ்ரத் அபூபக்கர் பின் அப்துர்ரஹ்மான் பின் ஹாரிஸ், ஹழ்ரத் அபூபக்கர் பின் சுலைமான் பின் அபீ ஹத்மா, ஹழ்ரத் சுலைமான் பின் யஸார், ஹழ்ரத் காஸிம் பின் முஹம்மத், ஹழ்ரத் ஸாலிம் பின் அப்துல்லாஹ், ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் அப்துல்லாஹ் பின் உமர், ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் ஆமிர் பின் ரபீஆ, ஹழ்ரத் காரிஜா பின் ஸைத் பின் தாபித் ரஹிமஹுமுல்லாஹ் போன்றோராகும்.

நூல்: தபகாத் இப்னி ஸஃத், பாகம்-5, பக்கம்-334. அல் பிதாயா வந்நிஹாயா, பாகம்-9, பக்கம்-71.

மதீனா முனவ்வராவின் அதிகாரியாக ஹழ்ரத் உமரவர்கள் நியமிக்கப்பட்ட பின் அவர்கள் ஹஜ்ஜுக்காக தயாராகின்றனர்.

لما اراد عمر بن عبد العزيز ان يحج من المدينة وهو واليها في خلافة الوليد بن عبد الملك دخل عليه انس بن مالك وهو يومئذ بالمدينة.

***“வலீத் பின் அப்துல் மலிகின் ஆட்சியின் கீழ் ஹழ்ரத் உமரவர்கள் மதீனா முனவ்வராவின் அதிகாரியாக இருக்கும்போது புனித ஹஜ்ஜுப் பயணத்திற்காக தயாராகின்றனர். அப்போது அங்கே வருகை தந்தது நபித்தோழரான ஹழ்ரத் அனஸ் பின் மாலிக் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள்தான்.”*** இன்னும்,...

ما صليت وراء احد اشبه صلوة برسول الله صلى الله عليه وآله وسلم من هذا الفتى يعنى عمر بن عبد العزيز.

***“நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குப் பின்னால் நின்று தொழுவதை போன்ற ஒரு உணர்வை இந்த வாலிபரான உமருடன் தொழும்போது மட்டும்தான் நான் பெற்றுக் கொண்டேன். அதன்றி வேறு யாரிடமும் அப்படிப்பட்டதோர் உணர்வை நான் பெறவில்லை எனக் கூறுகின்றனர் ஹழ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள்.”***

நூல்: தபகாத், பாகம்-5, பக்கம்-332.

இதில் ஹழ்ரத் அனஸ் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை தெரியாதவர்கள் இருக்க முடியாது. நமது நபியவர்களுக்கு பத்தாண்டு காலம் பணியாளராக ஊழியம் புரியும் நற்பாக்கியத்தை பெற்றவர்கள். இவர்கள் ஹிஜ்ரி 93ல் பஸராவில் வைத்து இறையடி சேர்ந்தனர். இன்னும் இவர்களையன்றி ஹழ்ரத் அபுத் துபைல் ஆமிர் பின் வாஸிலா என்னும் தோழரும் அக்காலத்தில் இருந்த நபித்தோழராகும். இவர்கள் ஹிஜ்ரி 110ல் மக்கா முகர்ரமாவில் வைத்து இறையடி சேர்ந்தனர். நபித்தோழர் பெருமக்களில் இறுதியாக இவ்வவணிக்கு பிரியாவிடை கொடுத்த தோழர் இவரேயாகும்.



நூல்: அல் இஸ்தீஆப், பாகம்-4, பக்கம்-259. அல் பிதாயா வந்நிஹாயா, பாகம்-9, பக்கம்-190. அல் இஸாபா, உஸுதுல் காபா.

இன்னும் ஹழ்ரத் உமர் பின் அப்துல் அஸீஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் காலத்தில் மதீனா முனவ்வராவில் தாபியீன்களிலுள்ள மிகப்பெரும் சட்டக்கலை மேதைகள் எனப் போற்றப்பட்ட ஏழு நபர்கள் வாழ்ந்தனர். அவர்கள்,...

1. ஹழ்ரத் ஸெய்யிதுனா ஸயீத் பின் முஸய்யப்.

2. ஹழ்ரத் ஸெய்யிதுனா காஸிம் பின் முஹம்மத்.

3. ஹழ்ரத் ஸெய்யிதுனா உர்வா பின் ஸுபைர்.

4. ஹழ்ரத் ஸெய்யிதுனா காரிஜா பின் ஸைத்.

5. ஹழ்ரத் ஸெய்யிதுனா அபூஸல்மா பின் அப்துர்ரஹ்மான்.

6. ஹழ்ரத் ஸெய்யிதுனா உபைதுல்லாஹ் பின் அப்துல்லாஹ் பின் உமர்.

7. ஹழ்ரத் ஸெய்யிதுனா சுலைமான் பின் யஸார் ரஹிமஹுமுல்லாஹ் ஆகியோர்களாகும்.

அடுத்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ரௌழா ஷரீப் வலீதைக் கொண்டு பள்ளியின் உட்பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்ட போது நபித்தோழர்களில் யாருமே இருக்கவில்லையென மேற்படி நாவலின் ஆசாமி அளக்கின்ற கதை உண்மையா என்ன? யோசியுங்கள்.

## புனித மதீனா முனவ்வராவின் விஸ்தரிப்பும் ஹழ்ரத் உமர் பின் அப்துல் அஸீஸும்

88ம் ஆண்டு ரபீவுல்அவ்வல் மாதம் வலீதிடமிருந்து ஆளுநரான ஹழ்ரத் உமர் அவர்களுக்கு மடலொன்று வந்து சேர்ந்தது. அதில்,...

புனித மஸ்ஜிதுன் நபவியை புணர் நிர்மாணம் செய்வதற்காக அங்குள்ள நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் துணைவியர்களின் வீடுகளையும் அம்மஸ்ஜிதோடு இணைத்து உள்ளடக்கி ஆக்குமாறு எழுதப்பட்டிருந்தது.

உடனே மேற்கூறப்பட்ட பத்து அறிஞர்களையும் மதீனாவிலுள்ள மக்களையும் அழைத்து கடிதத்தில் எழுதப்பட்டிருந்ததைச் சொல்ல, அதுகேட்ட அவர்கள் அக்கருத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். அவ்வாறு செய்யக்கூடாதென எதிர்த்தனர். அனைவருடைய எதிர்ப்புக்கு மத்தியிலும் கட்டுமானப்பணி துவக்கப்பட்டபோது நபியவர்கள் இவ்வுலகை விட்டு மறைந்தபோது அழுவதை போல அவர்களெல்லாம் அழத்துவங்கினர். ஏன் அழுதனர்? எதற்காக மறுப்புத் தெரிவித்தனர்? புரியவில்லை அல்லவா! இதோ அதற்கான காரணத்தை அவர்களே கூறுகின்றனர்.

وتركها على حالها اولى لينظر اليها الحجاج والزوار
والمسافرون والى بيوت النبي صلى الله عليه وآله وسلم
فينتفعوا بذالك ويعتبروا بذالك.

***"இப்போது இருப்பதைப் போலவே விட்டு விடுவதுதான் நல்லது. அப்போது தான் ஹாஜிகளும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை தரிசிக்க வருவோரும் பிரயாணிகளும் அவைகளை காணும் பாக்கியம் பெறமுடியும். அத்துடன் அதைக் கொண்டு படிப்பினை பெற்றுக் கொள்வதற்குமுரிய வாய்ப்புண்டு எனக்கூறினர்."***

நூல்: அல் பிதாயா வந்நிஹாயா, பாகம்-9, பக்கம்-74. அல் ஹுஜுராதுஷ் ஷரீபா, பக்கம்-189.

அதுபோது ஹழ்ரத் ஸயீத் பின் முஸய்யப் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் பள்ளியின் உட்பகுதியில் நபியவர்களின் ரௌழா ஷரீபை உள்ளடக்கப்படுவதை எதிர்த்தார்களென்று சொல்லப் படுகிறது. இவர்கள் கீல், கால், யுஹ்கா, ஹுகிய என்பதையெல்லாம் எப்போது ஆதாரமாக ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தார்கள் என்பதுதான் நமக்குப் புரியவில்லை.

இனி ஹழ்ரத் ஸயீத் பின் முஸய்யப் அவர்கள் உண்மையில் அச்செயலை எதிர்த்தார்களெனில் அவரால் மஹ்தி எனப்போற்றப் பட்ட ஹழ்ரத் உமர் பின் அப்துல் அஸீஸ் அவர்களுக்கு அது தெரியாமலா போய்விட்டது? அத்துடன் அங்கே வாழ்ந்து கொண்டிருந்த அறிஞர்களாலும் ஊர் மக்களாலும் அப்பிரச்னை குறித்த ஓர் பிரேரணை ஏன் கொண்டு வரப்படாமல் விடுபட்டுப் போயிற்று? மேலும் ஹிஜ்ரி 88க்கு முன்னால் மஸ்ஜிதுன் நபவி



விஸ்தரிக்கப்பட்டதை குறித்து மேற்படி நாவலில் பேசும்போது, அம்மஸ்ஜிதை ஹழ்ரத் ஸெய்யிதுனா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் மூன்றாவது முறையாகவும் ஹழ்ரத் ஸெய்யிதுனா உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நான்காவது முறையாகவும் ஹிஜ்ரி முப்பதாம் ஆண்டு வாக்கில் பெரிது படுத்தினார்கள் என்றும், அப்போது இவ்விரு கலீபாக்களும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ரௌழா ஷரீபை உள்ளடக்கிய அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் வீட்டுப் பகுதியை விட்டு விட்டு மற்ற பகுதிகள் மட்டும் விஸ்தரிக்கப்பட்டு விடப்பட்ட பகுதியை பள்ளியோடு சேர்க்கக் கூடாதென்றும் பிரகடனப்படுத்தியதாக கூறுகிறார்.

முதலில் அப்படியொரு பிரகடனம் வெளியிடப்பட்டதற்குரிய ஆதாரத்தை அவர் நமக்குக் காட்ட வேண்டும். அடுத்து அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ரௌழா ஷரீபை உள்ளடக்கியது தான் அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் வீடு என்பதை ஏற்றுக்கொள்பவர் நபியவர்களின் புனித கப்ரு இருந்த இடத்தில்தான் அன்னையவர்கள் சுமார் ஐம்பது வருடங்களாக வாழ்ந்து வந்தனர் என்பதையும் ஏற்றுக் கொள்கிறாரா? இன்னும் அருமை நபியவர்கள் இவ்வுலகை விட்டு மறைந்தபோது அன்னையவர்கள் 18 வயதுடையவர்களாகத்தான் இருந்தார்கள். இனி அன்னையவர்கள் இவ்வுலகை விட்டு மறையும் போது அவர்களின் வயது 67ஆக இருந்தது.

நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அருமை துணைவியார் அவர்கள் ஹிஜ்ரி 58 அல்லது 57ல் தான் இவ்வுலகை விட்டு மறைகிறார்கள். இந்நிலையில் மஸ்ஜிதுன் நபவி பள்ளிவாயில் இறுதியாக ஹிஜ்ரி 30ல் தான் புணர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. அதன்பின் ஹிஜ்ரி 88ல் வைத்துத்தான் மீண்டும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதில் ஹழ்ரத் உமரும் உஸ்மானும் பள்ளிவாயிலை புனர் நிர்மாணம் செய்தபோது நபியவர்களின் ரௌழாவை உள்ளடக்கிய அறையில்தான் அன்னையவர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். இப்போது ரௌழா ஷரீப் ஏன் பள்ளியோடு இணைக்கப்படவில்லை என்பது உங்களுக்குப் புரிகிறதா!

அடுத்து கப்ரு உள்ள இடத்தில் தொழ வேண்டாம் என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கடுமையாக எச்சரிக்கை செய்ததாகக் கூறுகிறார்களே,...

وبقيت ساكنة فيها بعد دفنه ودفن صاحبيه وكانت تصلي فيها.

***"சுமார் ஐம்பது ஆண்டு காலம்வரை அன்னையவர்கள் கப்ரு உள்ள இடத்தில்தான் தொழுதிருக்கிறார்கள்"*** இதற்கு என்ன பதில் தருவார்கள்? நூல்: கஷ்ஃபுல் இர்தியாப், பக்கம்-341.

பின்னும் அன்னையவர்கள் மட்டும்தான் கப்ரு உள்ள இடத்தில் தொழுது வந்தார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? இல்லை. இல்லவே இல்லை. அண்ணல் நபியவர்களின் மறைவுக்குப் பின் வாழ்ந்த அத்தனை நபித்தோழர்களும் கப்ரு உள்ள இடத்தில்தான் தொழுது வந்தார்கள்.

இனி கொள்ளுப்பிடி பள்ளிவாயிலில் தொழுவது கூடாதெனில் நபித்தோழர்கள் அனைவருடைய தொழுகையும் கூடாதென்று தான் சொல்ல வேண்டும். இன்னும் தெவடகஹ பள்ளிவாயிலில் தொழுவது கூடாதெனில் அந்த அருமை ஸஹாபாக்களின் தொழுகையும் கூடாதுதான். போர்வை பள்ளிவாயிலில் தொழுவது கூடாதெனில் ஸஹாபாக்கள் முதல் இன்றுவரை மஸ்ஜிதுன் நபவியில் தொழுவோர் அனைவரின் தொழுகையும் கூடாதென்று தான் சொல்ல வேண்டும். கொள்ளுப்பிடி பள்ளிவாயில், தெவடகஹ பள்ளிவாயில், போர்வை பள்ளிவாயில், கம்பொள கூபி பாவா பள்ளிவாயில், கண்டி மீரா மக்காம் பள்ளிவாயில் போன்றவைகளில் எப்படி ஒரே வளாகத்தில் பள்ளிவாயிலோடு கப்ருகள் இணைந்துள்ளதோ அதேபோலத்தான் ஹிஜ்ரி 88ம் ஆண்டுவரை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம வர்களின் ரௌழா ஷரீபும் பள்ளிவாயிலோடு குறுக்கே ஒருசுவரை கொண்டு இணைந்திருந்தது. ஹிஜ்ரி 88ல் வலீதுடைய ஆட்சியின் கீழ் ஹழ்ரத் உமர் பின் அப்துல் அஸீஸ் அவர்களது தலைமையின் கீழே மஸ்ஜிதுன் நபவி விஸ்தீரணம் செய்யப்பட்ட போது ரௌழா ஷரீப் பள்ளியின் உட்பகுதிக்குள் கொண்டுபோய் சேர்க்கப்பட்டது.

மேலும் புராதனச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென குரல் கொடுக்கும் நீங்கள் பிறகு ஏன் அவைகளை முன்னோர்கள் உடைத்தார்கள் என்று வினவலாம். இதில் உடைக்கப்பட்டவை அனைத்தும் நமது நபியவர்களுக்கே அர்ப்பணிக்கப்பட்டது. அப்புனிதர்களால் அவ்வாறு செய்யப்பட்டதற்காக நாம்



அல்லாஹ்வை புகழுகிறோம். இல்லையெனில் அசுத்தமான இவர்களுடைய கரமல்லவா அதில் பட்டிருக்கும்!

இப்போது சொல்லுங்கள். மேற்படி நாவலாசிரியர் குர்ஆன் ஹதீதை ஆதாரமாகக் காட்ட தகுதியானவரா? இஸ்லாமிய வரலாற்றை கூட தெரியாத இவரா கலாநிதி? இவர்களும் இவர்களுடைய மூதாதையரும் கேள்விப்பட்டிராத புதிய புதிய விளக்கத்தையெல்லாம் சொல்லும் இவர்கள் தஜ்ஜாலுடைய கூட்டத்தையல்லவா சேர்ந்தவர்கள். இவர் மட்டுமல்ல. இவருடைய சகாக்களான சவூதியின் முப்தி சொன்னலென்ன? அதென்ன மார்க்கமாகி விடுமா? இவர்கள் அனைவரும் இஸ்லாத்தின் ஆணி வேர் மீது வெந்நீரை ஊற்றி அதன் புனித்ததன்மையை சுத்தமாகத் துடைத்தெறிய வந்த சியோனிசவாதிகளின் பொம்மைகள். இன்னும் இவர்களுடைய தீங்குகளை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுவோமாக.

இனி "நல்லடக்கம் செய்யப்பட்ட இடம் சொந்த இடமாக இருக்குமாயின் அங்கே குப்பாக்களை கட்டிக் கொள்ளலாம்" எனக்கூறுகிறார் இப்னு தைமிய்யாவின் மாணவரான இமாம் இப்னுல் முஃப்லிஹ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள். இவரைக் குறித்து இப்னு கையிம் கூறும்போது,...

ما اعلم تحت اديم السماء اعلم في الفقه على مذهب احمد من ابن مفلح.

***"இமாம் அஹ்மத் பின் ஹன்பல் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் மத்ஹபுக்குரிய சட்ட மேதைகளில் இப்னு முஃப்லிஹை விட சிறந்த ஒருவரை இவ்வுலகில் நான் காணவில்லை என்கிறார்."***
நூல்: இஹ்யாவுல் மக்பூர், பக்கம்-9.

குறிப்பு: - நான்கு மத்ஹபுகளின் ஏகோபித்த முடிவு என்னவெனில் அசுத்தங்களை விட்டும் நீங்கியதாக மையவாடி இருக்குமாயின் அந்த இடத்தில் தொழலாம். அத்தொழுகை நிறைவேறும். அதற்கு மாறாக அசுத்தம் எந்த இடத்தில் இருந்தாலும் அங்கே தொழப்படும் தொழுகை நிறைவேறாது.

மேலும் நாம் கப்ருகளைக் கௌரவப்படுத்தி அவைகளுக்கு மரியாதை செய்வதை பாவமான காரியமென்றும், ஸியாரத்துச்

செய்வதற்காக பயணம் செய்வதை கூடாதென்றும் இவர்கள் கூறுகின்றனர். ஆனால் இதுபற்றி நபித்தோழர்கள் என்ன கூறுகிறார்களென்று பாருங்கள்.

ان كعبا رضي الله عنه دخل على عائشة رضى الله عنها فذكروا رسول الله صلى الله عليه وآله وسلم فقال كعب مامن يوم يطلع الا نزل سبعون الفا من الملئكة حتى يحفوا بقبر النبي صلى الله عليه وآله وسلم يضربون باجنحتهم ويصلون على رسول الله صلى الله عليه وآله وسلم حتى إذا امسوا عرجوا وهبط مثلهم فصنعوا مثل ذالك حتى اذا انشقت الارض خرج في سبعين الفا من الملئكة يزفونه.

***"ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுபதாயிரம் மலக்குகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுடைய ரௌழாவுக்கு வருகைதந்து தங்களின் இறக்கைகளால் நபியவர்களின் ரௌழாவைச் சூழ்ந்தவர்களாக மாலைவரை நபியவர்களின் மீது ஸலவாத்துச் சொல் கின்றனர். மாலையானதும் அவர்கள் வானத்திற்குச் செல்ல, அவர்களைப் போன்ற எண்ணிக்கையைக் கொண்ட வேறு மலக்குகள் வானத்திலிருந்து ரௌழாவை நோக்கி வருகைதந்து காலைவரை ஸலவாத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலை நபியவர்கள் தமது கப்ரிலிருந்து எழுப்பப்படும் வரை நடந்து கொண்டிருக்கும் என்பதாக கஃபுல் அஹ்பார் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றனர்."*** நூல்: ஸுனன் தாரமி, 1-44. இதற்குப் பிறகும் மா நபியவர்களின் புனித மிகு கப்ரை தரிசிப்பதற்காக பயணம் செய்வதை பாவமான ஒன்றென்று இவர்கள் சொல்லப் போகிறார்கள்! பாருங்கள். நபியவர்களின் ரௌழாவை அல்லாஹ் வானவர்களைக் கொண்டல்லவா கௌரவப்படுத்துகிறான். ஆனால் மனிதன் அதை பாவமான காரியமென்று சொல்கிறான். இதுதான் காலத்தின் கோலம் என்பதோ!சரி. நாம் விஷயத்திற்கு வருவோம்.

உஸ்மானாலும் கைவிடப்பட்டதால் ஷைகு நஜ்தி அங்குமிங்குமாக அலைகழிந்தார். தொடர்ந்து அவமரியாதையாக நடத்தப்பட்டதால் மிகவும் மனம் நொந்துபோனார். இந்நிலையில் அவரை அரவணைக்கவும் அவருடைய நோக்கத்திற்கு ஆதரவளித்து ஊக்கமளிக்கவும் படைபலமும் ஆயுத பலமும் கொண்ட ஒருவர் சீக்கிரமாக அவருக்குத் தேவைப்பட்டார். தன்னிடம் அறிவிருக்கிறது. ஆனால் ஆயுதபலமோ ஆள்பலமோ இல்லையே என



யோசித்தவராக அதற்கு யாரை தேர்வு செய்யலாம் என்றெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கும் போது இன்னொரு பக்கத்தில் வல்லரசுகளின் ஆயுத பலத்தோடு தனது காரியத்தை நிறைவேற்றக் கூடிய ஒரு அறிஞன் தனக்குக் கிடைக்கவில்லையே என்று இன்னொருவன் யோசித்துக் கொண்டிருக்கிறான். அவன்தான் நபியவர்களால் சுட்டிக் காட்டப்பட்ட ஷைத்தானின் இரண்டாவது கொம்பாகும். அவன்,...

# முஹம்மத் பின் சுஊத்

தனது நோக்கத்தை நிறைவேற்றி வைக்கும் ஒருவனைத் தேடிக் கண்டுபிடிக்கும் எண்ணத்தில் ஷைகு நஜ்தி தர்யிய்யா என்னும் ஊருக்குப் பயணமானார். இது ஹிஜ்ரி 1160ல் நிகழ்ந்த சம்பவமாகும். அந்த ஊருக்குப் போய் சேர்ந்தபோது அங்கேயிருந்த தனது சிஷ்யர்களில் ஒருவனான அப்துல்லாஹ் இப்னு ஸுவைலிம் என்பானின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். இந்த ஊரின் அமீராக அப்போது இருந்தவர்தான் முஹம்மத் பின் சுஊதாகும்.

ஷைகின் வருகையைக் கண்டு அஞ்சிய சிஷ்யன் அவருடைய உபதேசத்தால் சிறிது அமைதி வரப்பெற்றான். ஷைகைப் பற்றி அமீரிடம் சொல்வதற்குரிய தைரியம் அவனுக்கு இல்லாததால் அமீருடைய சகோதரர்களான முஷாரி, ஸனிய்யான் ஆகிய இருவரிடமும் முதலில் சொன்னான். அவ்விருவரும் அமீரின் மனைவியான மௌழா, மூழா பின்த்து அபீ கஹ்தானிடம் ஷைகு நஜ்தியைப் பற்றியும் அவருடைய திறமை வாய்மை பற்றியும் சொல்ல, தனது கணவர் எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர் இவர் தான் என்பதைத் தெரிந்து கொண்டவளாக தனது கணவனிடம் சென்று,...

“எழும். இவர் உமக்கு அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட அருட்கொடையாகும். நீர் அவருக்கு உதவி செய்யும். உமது இரு உலகப் பிரச்சனையும் தீர்ந்து விடும் என்றாள்” நூல்: முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப், பக்கம்-34.

மனைவியின் சொல்லே மந்திரம் என்பதுபோல இப்னு சுஊதும் அவரைப் பார்ப்பதற்கு சம்மதம் தெரிவித்தார். இருவரும் தங்களின்



காரியம் நிறைவேறுவதற்காக எடுத்த ஆயுதம் திருக்கலிமாவாகும். இதனால் இவ்விருவரின் சுயரூபத்தை அறியாதவர்கள் இவர்களோடு கைகோர்த்தனர். இவர்களை புரிந்தவர்கள் தமது உயிரைக் கூட தியாகம் செய்யத் துணிந்தனர். அப்போது இப்னு சுஊத் ஷைகு நஜ்தியை நோக்கி,...

يايها الشيخ إن هذا دين الله ورسوله صلى الله عليه وآله وسلم الذي لا شك فيه. فابشروا بالنصرة لما امرت به وبالجهاد من خالفك ولكن أشترط عليك شرطين: الاول إذا قمنا بنصرتك والجهاد في سبيل الله وفتح لنا البلاد فلا ترحل عنا ولا تستبدل بنا غيرنا. والثانى ان لي على اهل الدرعية خراجا آخذه منهم وقت الثمار فلا تمنعني من أخذه منهم.

“பெரியவரே! நீங்கள் சொன்ன கருத்துக்களனைத்தும் சந்தேகத்திற்கிடமின்றி அல்லாஹ் மற்றும் அவனுடைய ரஸூலின் மார்க்கம்தான். ஆகையால் உமது கட்டளைக்கு உதவி செய்வதைக் கொண்டு உமது சொல்லுக்கு நாம் கட்டுப்படுகிறோம். உம்மை எதிர்ப்பவர்களோடு நாம் போர் புரிவோம் என்று சுபச்செய்தி கூறுகிறோம். இருப்பினும் அதற்கு இரு நிபந்தனைகள் உண்டு.

ஒன்று, உமக்கு நாம் உதவிசெய்து போர்புரிந்து நாடுகள் கைப்பற்றப்பட்டால் எங்களைவிட்டு நீர் போகக்கூடாது. எங்களுக்குப் பதிலாக வேறு யாரையும் அரசனாக நியமிக்கக் கூடாது.

இரண்டாவது, தர்யிய்யாவில் எனக்கு வரவேண்டிய சொத்துக்களை கைப்பற்றும் விஷயத்தில் என்னை தடுக்கக் கூடாது என்றார். அதைக் கேட்ட ஷைகு நஜ்தி,....

فقال له الشيخ: اما الاولى فامدد يدك فمدها وقبضها وقال له الدم بالدم والهدم بالهدم واما الثانية فلعل الله يفتح عليك الفتوحات فيعوضك من الغنائم ماهو خير منه.

“கையைக் கொடு என்றுசொல்ல, இப்னு சுஊதும் தனது கையைக் கொடுக்க அதைப் பற்றிப்பிடித்த ஷைகு நஜ்தி, முதல் நிபந்தனைப் பிரகாரம் எனது இரத்தம் உமது இரத்தமாகும். எனது தோல்வி உமது தோல்வியாகும் என்றார். அடுத்து இரண்டாவது நிபந்தனைப் பிரகாரம் உமக்கு நீர் கற்பனை செய்து பார்க்க முடியாத சொத்துக்களெல்லாம்

உம்மை வந்தடையும் என்றூர்.'' இதனையடுத்து ஷைகு நஜ்தியின் கரத்தில் சுஊத் பைஅத்துச் செய்து கொண்டார். இதன்பின் சுஊதுடைய அட்டூழியம் ஆரம்பமாயிற்று.

மேற்கண்டவாறு இருவரும் ஒப்பந்தம் செய்து கொண்ட போது ஷைகு நஜ்தியுடைய வயது 46ஆக இருந்தது. இதைத் தொடர்ந்து முதன் முதலாக இவர் ரியாதைக் கைப்பற்ற முயன்று இப்னு தவ்வாஸுக்கு எதிராக போர் தொடுத்தார். இப்போர் சுமார் 30 ஆண்டுகள் வரை நீடித்தது. இறுதியில் இப்னு சுஊதுடைய மைந்தன் அப்துல் அஸீஸுடைய காலத்தில் 1773ம் ஆண்டு ரியாத் கைப்பற்றப்பட்டது.

இப்னு சுஊத் தவ்வாஸுடன் போர் புரிந்து கொண்டிருந்த போதே ஷைகு நஜ்தியை கொல்ல வேண்டுமென்றும் இல்லையேல் சொத்துக்களனைத்தும் முடக்கப்பட்டு விடுமென்றும் மடல் எழுதியவரின் பிரதேசமான அல் அஹ்ஸாவுடனும் போரிட்டார். அப்போரில் அந்த ஊரும் கைப்பற்றப்பட்டது. இப்படி அவர் எதிர்பாராத அளவுக்கு வெற்றிக்கு மேல் வெற்றி வந்து குவிந்து கொண்டிருப்பதைக் கண்ட அவரும் அவருடைய குடும்பத்தாரும் நஜ்தைச் சேர்ந்த மக்களும் இவையனைத்தும் நஜ்துடைய ஷைகால் தான் என்றெண்ணி அவரை பெரிதும் மதிக்கத் துவங்கினர். இதுபற்றி மஹ்மூத் ஷுக்ரி என்பார் தமது தாரீக் நஜ்த் - அரபி என்னும் நூலின் 119ம் பக்கத்திலும், மஸ்ஊத் ஆலிம் என்பார் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் என்னும் நூலின் 42ம் பக்கத்திலும்கீழ்கண்டவாறு கூறுகின்றனர்,...

ولا يصدر جيش ولا يكون رأي الا.بقوله ورأيه و كانت طاعة أهل
نجد للشيخ كطاعة الصحابة للنبي صلى الله عليه و آله وسلم وإذا
ذكره احد بسوء قتلوه.

''சுஊதுடைய குடும்பத்தார் எதைச் செய்தாலும் ஷைகவர்கள் சொல்வதற்கேற்பவே செய்தனர். நஜ்துடைய மக்கள் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு அவர்களது தோழ பெருமக்கள் வழிப்பட்டதைப் போன்று வழிப்பட்டனர். ஷைகை யாரேனும் தப்பாகப் பேசினல் அவரைக் கொலையும் செய்தனர். இன்னும்,...

''சுஊதும் அவரது குடும்பத்தாரும் ஷைகவர்களின் காலடியில்



தம்மை அர்ப்பணித்து விட்டனர். அவர்களுக்குக் கிடைத்த இப்பாக்கியம் ஷைகவர்களின் செருப்புடைய பரக்கத்தால் தான் கிடைத்ததென்று கருதினர். முஹம்மத் இப்னு சுஊதும் அவருடைய குடும்பத்தாரும் ஷைகவர்களின் ஆலோசனையின்றி எதையும் செய்வதில்லை. ஷைகவர்களை உலகிலுள்ள எந்தப் பொருளின் தேவையுமற்ற மாபெரும் புண்ணியவாளுக அவர்கள் கண்டார்களாம்.'' இதே அடிப்படையில் தான் இன்று நமது நாட்டில் இப்னு அப்துல் வஹ்ஹாபையும் இப்னு தைமிய்யாவையும் எதிர்ப்போருக்கு ஹஜ்ஜுக்குரிய விசா மறுக்கப்படுகிறது. வஹ்ஹாபியக் கொள்கையை எதிர்ப்போருக்கு குத்பாக்கள் வழங்கப்படுவதில்லை. பள்ளிவாசல்களிலிருந்து விரட்டப்படுகின்றனர். சந்தர்ப்பம் கிடைத்தால் அவர்களை அடிக்கவும் முற்படுவதோடு சந்தர்ப்பம் கிடைத்தால் கொலையும் செய்வதோடு பாதாள கோஷ்டியினரால் மிரட்டப்படவும் செய்கின்றனர்.

அதன்பின் முஹம்மத் இப்னு சுஊத் ஹிஜ்ரி 1179ல் இறந்து போக அவருடைய மைந்தன் அப்துல் அஸீஸ் என்பவருக்கு அதே ஆண்டு ஷைகுடைய முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. இவ்விரு குடும்பத்தாரால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சனை புண்ணிய பூமிகளான மக்கா முகர்ரமா, மதீனு முனவ்வரா போன்றவைகளையும் விட்டு வைக்கவில்லை. அங்கேயும் அவர்கள் போர் தொடுத்தனர். அவர்கள் விளைவித்த அராஜகங்கள் பற்றி அல் பஜ்ருஸ் ஸாதிக் என்னும் நூலின் 22ம் பக்கத்தில் இவ்வாறு சொல்லப்படுகிறது,...

ومن اعظم قبائح الوهابية قتلهم الناس حين دخلوا الطائف قتلا عاما
حتى استوصلوا الكبير والصغير واوردوا بالمأمور والامير والشريف
والوضيع. وصاروا يذبحون على صدر الام طفلها الرضيع ووجدوا
جماعة يتدارسون القرآن فقتلوهم عن أخرهم ولما ابادوا من فى
البيوت جميعا خرجوا الى الحوانيت والمساجد وقتلوا من فيها وقتلوا
الرجل فى المسجد وهو راكع او ساجد حتى افنو المسلمين في
ذلك البلد---------- وطرحوا الكتب على البطاح وفى الازقة والاسواق
تعصف بها الرياح وكان فيها كثير من المصاحف ومن نسخ البخارى
ومسلم وبقية كتب الحديث والفقه وغير ذالك تبلغ الوفا مؤلفة

فمكثت هذه الكتب اياما وهم يطئونها بارجلهم ولا يستطيع احد ان يرفع منها ورقة--الخ.

*"முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபை பின்தொடர்ந்த வஹ்ஹாபிகள் எனப்படுவோர் புரிந்த ஆகமோசமான கீழ்த்தரமான செயல்களில், அவர்கள் புனித தாயிப் நகரைச் சென்றடைந்த போது நடத்தப்பட்ட கொடுங்கோன்மையாகும். அங்கே அவர்கள் சிறுவர் முதல் பெரியவர்வரை, ஆண்கள் முதல் பெண்கள்வரை பாகுபாடு பார்க்காமல் எல்லோரையும் கொன்று குவித்ததாகும். தாயுடைய மடியில் பாலருந்திக் கொண்டிருந்த குழந்தையை அத்தாயின் கண் முன்னாலேயே அறுத்தனர். குர்ஆனை ஓதும் ஒரு கூட்டத்தாரை கண்ட போது அவர்களனைவரையும் கொலை செய்தனர். இன்னும் கடைகளிலிருந்தவர்களையும் கடைத்தெருக்களில் இருந்தோரையும் கொன்று குவித்தனர். பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்தவர்களை கொஞ்சங்கூட ஈவிரக்கமில்லாமல் கொன்று குவித்தனர். திருமறை, புகாரி, முஸ்லிம் போன்ற கிரந்தங்களையும் சட்டக் கிரந்தங்களையும் நடைபாதையில் பரப்பி வைத்து அவைகளையெல்லாம் தங்களின் கால்களால் மிதித்துக் கொண்டு சென்றனர். ஒரு பேப்பரைக்கூட அங்கிருந்தவர்களில் யாராலும் எடுக்க முடியவில்லை. இவையனைத்தும் சுமார் ஹிஜ்ரி 1217ல் நிகழ்ந்த சம்பவங்களாகும்."*

திங்களெங்கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு தாயிப்வாசிகளால் அநீதம் இழைக்கப்பட்ட போது நபியவர்கள், அவர்கள் செய்த தவறை அவர்களே உணர்ந்து இஸ்லாத்தை ஏற்பார்கள் என்று கூறிய பூமியில் இவர்கள் எப்படிப்பட்ட கொடுமைகளை எல்லாம் நிகழ்த்தியிருக்கிறார்கள் என்பதைப் பார்த்தீர்களா!

இன்னும் இப்படியெல்லாம் நடைபெற்ற உண்மை வரலாற்றைச் சொல்லும்போது இவர்களை ஆதரிக்கும் திருட்டுக் கூட்டம் இவர்களால் ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள் பொய்யானதாக இருந்திருக்குமாயின் 250 ஆண்டுகளுக்குப் பிறகும்கூட இவர்களின் ஆட்சி அழிந்து போகாமல் மேலும் மேலும் விரிந்து கொண்டல்லவா இருக்கிறதென்று கேட்கின்றனர். இதைவிட பைத்தியக்காரத்தனமான சிந்தனை வேறு ஏதாவது இருக்க முடியுமா என்ன இவர்கள் சொல்வதை போல இப்பூமியிலுள்ள பிறசமயவாதிகளை எல்லாம் எடுத்துக் கொள்ளுங்கள். மக்கள் தொகையிலும், ஆயுத பலத்திலும், பொருளாதாரத்திலும் உயர்ந்தவர்களாக இவர்கள்



இப்போது இருப்பதாலும் அல்லாஹ்வை வணங்குபவர்களை விட அவனுக்கு மாறு செய்யும் இவர்கள்தான் மேலும் மேலும் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக இவர்கள்தான் சத்தியத்தில் இருக்கிறார்கள் என்று சொல்வீர்களா என்ன? ஒரு வேளை இவர்கள் சொன்னாலும் சொல்வார்கள். ஏனெனில் இவர்களுக்கு இவர்களின் மனோ இச்சைதானே ரட்சகன்?

அதன்றி காபிர்களால் முறியடிக்கப்பட முடியாமல் அவர்களுக்கெல்லாம் ஒருபெரும் சவாலாக இருந்த உஸ்மானிய்யாக்களின் ஆட்சி இவ்விரு குடும்பத்தாரால் தான் மண்ணோடு மண்ணாகிப் போனது. நஜ்துடைய ஷைகும், இப்னு சுஊதும் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால் இஸ்லாத்தை அழிப்பதற்காக தயாரிக்கப்பட்ட ராக்கெட்டுகளாகும். அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட நவீனக் கொள்கைதான் அதற்குரிய அணுஆயுதம் என்பதாக ஆங்கிலேயர்களால் மத்திய கிழக்கு நாடுகளில் உளவு பார்ப்பதற்காக அனுப்பப்பட்ட ஹம்ப்ரே என்பவர் கூறுகிறார்.

அரபுலகின் புகழ்பெற்ற அரசியல் வரலாற்று ஆய்வாளரும் விமர்சகருமான பேராசிரியர் ஜலால் கிஸ்க் அவர்கள் தமது சஊதியர்களும் இஸ்லாமியத் தீர்வும் என்னும் நூலில், ஷைகு நஜ்தியை ஒரு சமூகத் துரோகி என்று கூறுகிறார். பிரித்தானியரின் பிடியில் சிக்கி மார்க்கத்திற்குப் புறம்பாக புரிந்த செயல்களனைத்தும் உளவாளி ஹென்றியின் டைரியில் பதிவு செய்யப்பட்டுள்ளதை காத்தான்குடி ஜாமிஅத்துல் ஃபலாஹ் அரபிக் கல்லூரியின் ஆசிரியரும், இலங்கை முஸ்லிம் சேவை வரலாற்றில் ஓர் ஏடு புகழ் மௌலவி எம். எச். எம். புகாரியின் ஒத்துழைப்போடு எழுதப்பட்டு அல் ஹஸனிய்யா அரபிக் கல்லூரியின் அதிபர் எம். ஐ. எம். அப்துல்லதீப் ஆலிம் அவர்களின் அணிந்துரையுடன் வெளிவந்த வஹ்ஹாபிகளுக்கோர் மறுப்பு என்னும் நூல் சுட்டிக் காட்டுகிறது.

இதுபற்றிய விரிவான விஷயங்கள் இஃதிராஃபாத் அல் ஜாஸூசுல் இங்கிலீஸி என்னும் அரபி நூலில், அல்லது அதனுடைய கருத்துக்களைச் சுமந்துள்ள தமிழ்நாடு மஜ்லிஸுல் உலமாயி அஹ்லிஸ் சுன்னத்தி வல் ஜமாஆவின் செயலாளரும் அஹ்லெ சுன்னத் மாத இதழ் ஆசிரியருமான மௌலானா மௌலவி அல் ஹாபிழ் எப். எம். இப்றாஹீம் ரப்பானி அவர்களால் எழுதப்பட்ட வஹ்ஹாபிய தோற்றம் என்னும் நூலில் பார்க்க வேண்டுகிறோம்.

அன்று ஷைகு நஜ்தியுடைய குடும்பமும், சுஊதுடைய குடும்

பமும் இணைந்து உலகிலுள்ள முஸ்லிம்களையெல்லாம் முஷ்ரிக்குகள் என்றும், கப்ருகளை முஸ்லிம்கள் வணங்குவதாகவும் பழிசுமத்தி கொன்று குவித்தனர். அவர்களின் பொருட்களையெல்லாம் சூரையாடினர். குப்பாக்களையும் கப்ருகளையும் உடைத்துத் தரைமட்டமாக்கிய நிகழ்ச்சிகளையெல்லாம் உண்மையான முஸ்லிம் ஒருபோதும் மறக்க மாட்டான். அன்று துவக்கப் பட்ட இவர்களின் கொடுங்கோன்மை இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

ஷைகு நஜ்துடைய குடும்பத்தாருக்கும் சுஊதுடைய குடும்பத்தாருக்கும் கப்ருகள் அழிக்கப்பட வேண்டும். கப்ருகளுக்கு மரியாதை செய்வோர் அழிய வேண்டும் என்பது அவர்களின் குறிக்கோளாகும். அதேபோல வல்லரசுகளுக்கு இஸ்லாம் அழிக்கப்பட வேண்டும் என்பது அவர்களின் குறிக்கோளாகும். இவ்விரு நோக்கத்திற்காகவும் அவர்களுடைய முன்னோடிகளால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம், தற்போது நிகழ்ந்து வரும் சம்பவங்கள் அதை உண்மைபடுத்திக் கொண்டுள்ளது.. அவ்வாறு இல்லையேல் உண்மை முஸ்லிம்களான இவர்களுக்கு வல்லரசுகளோடு என்ன தொடர்பு? அல்லாஹ்வின் நேசர்களான நபிமார்களிடமும் வலிமார்களிடமும் உதவி தேடுவதை ஷிர்க்கென்று சொல்லும் இவர்கள் காபிர்களிடம் உதவி தேடலாமா? இன்னும் இவர்களாக அப்புனித பூமியிலிருந்து அவர்களை வெளியேற்ற மாட்டார்கள். ஆனால் ஒருநாள் அவர்கள் மட்டுமல்ல. இவர்களும் சேர்த்து விரட்டியடிக்கப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை மட்டும் இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன் யாரை இவர்கள் தங்களின் நண்பர்களாகக் கருதி அவர்களின் பாதுகாப்பில் இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களாலேயே அவர்களின் ஆயுதத்தாலேயே இவர்களுக்கு பாதிப்பு ஏற்படப் போகிறது என்பதை மட்டும் இவர்கள் மறக்காமலிருந்தால் சரி. காலம் இன்னும் கடந்துவிடவில்லை. இப்போதாவது உண்மையை உணர்ந்து இஸ்லாத்தை பாதுகாக்க முன்வந்தால் சரி.

இதுமட்டுமா! இன்றுவரை புண்ணிய பூமியான பாலஸ்தீனத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரச்சனை ஒரு முடிவுக்கு வராமல் இழுத்துக் கொண்டிருப்பதற்குரிய காரணமும் இந்த வல்லரசுகளுக்குப் பின்னால் இவ்விரு குடும்பத்தாரும் அதற்குத் தூண்டுகோலாய் இருப்பதுதான். சொல்வதற்கு கசப்பாக இருந்தாலும் இதுதான் உண்மை நிலவரமாகும். இதற்கான காரணத்தை நாம் சொல்லித்தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமா என்ன?

# வஹ்ஹாபியக் கொள்கை

இப்னு தைமிய்யாவின் கொள்கையைத்தான் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபும் அவரைப் பின்பற்றுவோரும் மற்ற இயக்கங்களனைத்தும் செயல்படுத்தி வருகின்றன. ஆதலால் அவர்களின் கொள்கைகளிலிருந்து உதாரணத்திற்காக ஒரேயொரு கொள்கையை மட்டும் உங்களின் பார்வைக்கு தருகிறோம். தூய சிந்தனையும் தொலைநோக்குப் பார்வையும் உடையோர் முடிவை தாமாகவே யூகித்துக் கொள்வர்.

1. நபிமார்களையும் வலிமார்களையும் அழைத்து உதவி தேடுவது ஷிர்க்கை உண்டாக்கும், இப்னு தைமிய்யா, கிதாபுல் வஸீலா, பக்கம்-63.

2. நிச்சயமாக முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்) தமக்கே ஒரு நல்லதை செய்யவோ அல்லது ஒரு தீயதைத் தடுக்கவோ சக்தி பெற்றவரல்ல. இப்னு அப்துல் வஹ்ஹாப் நஜ்தி, கஷ்புஷ் ஷுபுஹாத், பக்கம்-6.

3. அல்லாஹ்வையும் அவனது ரஸூலையும் இறுதி நாளையும் ஈமான் கொண்ட ஒருவர், வலிமார்கள் ஒரு நல்லதைச் செய்யவோ அல்லது தீமையைத் தடுக்கவோ சக்தி படைத்தவர்கள் என்று நம்பிக்கை கொள்வதானது குப்ரை ஏற்படுத்தும். காழி ஷௌக்கானி, அத்துரருந் நழீத் ஃபீ இக்லாஸி கலிமதித் தௌஹீத், பக்கம்-53.

4. அல்லாஹ் அல்லாத வேறொருவரிடம் உதவி தேடுபவர் குப்ரை செய்து விட்டார். அப்துல் அஸீஸ் ஆலு சுஊத், மஜ்முஅத்துத் தௌஹீத், பக்கம்-112.

5. முஹம்மத் என்றும் அலீ என்றும் பெயர் வைக்கப்பட்டவர் எதற்கும் சக்தி கொண்டவரல்ல. இஸ்மாயீல் தெஹ்லவி, தக்வியத்துல் ஈமான், பக்கம்-42.

6. நபிமார்கள் வலிமார்கள் ஸாலிஹீன்கள் ஷுஹதாக்கள் போன்ற அனைவருமே சரிசமமானவர்களே. ஆனால் சிலர் சிலரை அழைத்து உதவி தேடுகின்றனர். இது தவறாகும். மௌதூதி, தப்ஹீமுல் குர்ஆன், 2: 532, 533.

மேற்கண்டோரின் கூற்றுக்களைக் கொண்டு நபிமார்களும் வலிமார்களும் ஸாலிஹீன்களும் ஷுஹதாக்களும் எதற்குமே லாயக்கில்லாதவர்கள் என்பது தான் இவர்களனைவரின் கருத்தாகும். இதில் இவர்கள் ஒவ்வொருவரும் அதைச் சொல்வதற்கென ஒரு பிரத்யேகமான பெயரையும் இயக்கத்தையும் தோற்றுவித்துக் கொண்டுள்ளனர். ஆக மொத்தத்தில் இவர்களனைவரும் அல்லாஹ் ரஸூலுடைய மற்றும் வலிமார்களுடைய விரோதிகள் என்பதே எதார்த்தமாகும். இனி இவர்கள் தமது கூற்றுக்களை உண்மையாக்குவதற்காக எடுத்து வைக்கும் ஆதாரங்களைப் பாருங்கள்.

ومن أضل ممن يدعوا من دون الله من لايستجيب له الى يوم القيامة وهم عن دعائهم غافلون.

*"இறுதிநாள் வரை (அழைத்தாலும்) தனக்கு பதில் கொடுக்க முடியாத அல்லாஹ் அல்லாதவர்களை அழைப்பவர்களை விட வழிகெட்டவர்கள் யார்? தங்களை அழைப்பதையே அவர்களால் அறிய முடியாது."* அல் அஹ்காப், வசனம்-5.

والذين تدعون من دونه لايستطيعون نصركم ولا انفسهم ينصرون.

*"அவனையன்றி நீங்கள் யாரை பிரார்த்திக்கிறீர்களோ அவர்கள் உங்களுக்கு உதவி செய்யவும் தங்களுக்குத் தாங்களே உதவி செய்து கொள்ளவும் சக்திபெற மாட்டார்கள்."* அல் அஃராப், வசனம்-197.

ولاتدع من دون الله مالا ينفعك ولايضرك فان فعلت فانك إذا من الظالمين.

*"உமக்கு எவ்வித நன்மையையோ தீமையையோ செய்ய இயலாத அல்லாஹ் அல்லாத எதனையும் நீர் பிரார்த்திக்க வேண்டாம். அவ்வாறு செய்வீராயின் நிச்சயமாக நீர் அநியாயக்காரர்களில் ஒருவராகி*



*விடுவீர்."* யூனுஸ், வசனம்-106.

والذين يدعون من دون الله لايخلقون شيئا وهم يخلقون.

*"அல்லாஹ்வையன்றி வேறு எவர்களை அவர்கள் பிரார்த்திக்கிறார்களோ அவர்கள் எந்தப் பொருளையும் படைக்க மாட்டார்கள். அவர்களால் பிரார்த்திக்கப்படுபவர்களும் படைக்கப்பட்டவர்களே."* அந்நஹ்ல், வசனம்-20. அத்துடன்,...

إذا سألت فاسأل الله وإذا استعنت فاستعن بالله.

*"நீர் கேட்டால் அல்லாஹ்விடமே கேளும். இன்னும் உதவி தேடினால் அல்லாஹ்விடமே உதவி தேடும்."* என்ற ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அமுத வாக்கையும் தங்களின் ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

இவ்விஷயத்தில் இப்னு தைமிய்யா, முஹம்மத் இப்னு அப்தில் வஹ்ஹாப், மௌதூதி, தேவ்பந்தி, கைருல் முகல்லிதீன்கள் என எல்லோருமே குர்ஆன் ஹதீதுக்குரிய அதன் அஸல் பொருளை திருடி தங்களின் சுய விருப்பப் பிரகாரம் பொருள் சொன்ன கவாரிஜிய்யீன்களின் வாரிசுகள் தான் என்பதற்கு இதை விட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? மேற்கண்ட குர்ஆனுக் குரிய வசனங்களின் பொருட்கள் நம்மிடமுள்ள தர்ஜமதுல் குர்ஆனிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இந்நூலின் ஆசிரியர் கூட இக்கூட்டங்களைச் சார்ந்தவர்தான் என்பதே அப்பொருட்கள் சொல்லும் உண்மையாகும். இனி இவர்களின் கருத்துக்கு எதிராக குர்ஆனும் ஹதீதும் என்ன சொல்கிறதென்பதைப் பாருங்கள்.

من أنصاري الى الله قال الحواريون نحن انصار الله.

*"அல்லாஹ்வுக்காக எனக்கு உதவுபவர் யார் என ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் கேட்டபோது நாங்கள் அல்லாஹ்வின் உதவியாளர்கள் என்பதாக ஹவாரிய்யீன்கள் சொன்னார்கள்."*

அல் குர்ஆன். சூரு-ஸஃப், வசனம்-14.

واجعل لي وزيرا من اهلي هارون اخى اشدد به ازرى.

*"இன்னும் எனக்கு எனது குடும்பத்திலிருந்து ஒரு அமைச்சரை ஆக்குவாயாக. அவர் எனது சகோதரர் ஹாரூனாகும். அவர் மூலமாக எனது பலவீனத்தை அகற்றி உறுதிப்படுத்துவாயாக என நபி மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் அல்லாஹ்விடம் வேண்டினார்கள்."*

அல் குர்ஆன். சூரு- தாஹா, வசனம்-29,30,31.

فان الله هو موله وجبريل وصالح المؤمنين والملئكة بعد ذلك ظهير.

"நிச்சயமாக அவர்களுக்கு அல்லாஹ் உதவியாளனாகும். இன்னும் ஜிப்ரீலும், ஈமான் கொண்டவர்களில் நல்லடியார்களும் பின்னர் அமரர்களும் உதவியாளர்களாகும்."

அல் குர்ஆன். சூரா - அத் தஹ்ரீம், வசனம்-4.

فمن زعم أن النبي صلى الله عليه وآله وسلم كآحاد الناس لايملك شيئا اصلا ولانفع به لاظاهرا ولاباطنا فهو كافر خاسر الدنيا والآخرة.

"அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களால் எங்களுடைய வெளிரங்க அந்தரங்க விஷயங்களுக்கு எந்தப் பிரயோஜமும் இல்லை என்று எண்ணம் கொள்பவர் காபிராகும். மேலும் இரு உலகிலும் கைசேதப்படக் கூடியவர்களாகும்." தப்ஸீர் ஸாவி.

قال ابن المقرى: كنت انا والطبراني وابو الشيخ (هو ابن حبان) بالمدينة فضاق بنا الوقت (أى لم يبق معهم نفقة) فواصلنا ذالك اليوم (أى صاموا يوما آخر مع صيام يوم قلبه) فلما كان وقت العشاء حضرت القبر وقلت: يارسول الله صلى الله عليه وآله وسلم الجوع. فقال لي الطبراني: اجلس فاما ان يكون الرزق او الموت. فقمت انا وابو الشيخ (أى الى الصلاة) فحضر الباب علوي ففتحنا الباب فاذا معه غلامان بقفتين فيهما شيئ كثير وقال شكوتموني الى النبي صلى الله عليه وآله وسلم رأيت فى النوم فامرني بحمل شيئ اليكم.

'ஹாபிழ் இப்னு முக்ரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றனர்:- நானும் ஹாபிழ் தப்ரானியும் ஹாபிழ் இப்னு ஹிப்பானும் மதீனா முனவ்வராவில் இருக்கும்போது அத்தியாவசியத் தேவைகளுக்குரிய பொருட்கள் இல்லாததால் இரவு பகலாக நோன்பு நோற்றோம். இஷாவுடைய தொழுகைக்கான நேரம் வந்தபோது நான், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ரௌழாவுக்குச் சென்று அல்லாஹ்வுடைய ரஸூலே! நாயகமே! பசிக்கிறது என்று சொன்னேன். அப்போது இமாம் தப்ரானி உணவு வரும் அல்லது மரணம் வரும் எனக் கூறியவராக என்னை அமரச் சொன்னார்கள். பின்னர் நானும் இப்னு ஹிப்பானும் தொழுகைக்குத் தயாரானபோது வாசல்படியில் அலவி ஒருவர் வந்து



நின்றார். நான் கதவைத் திறந்தபோது அவருடன் இன்னும் இரு வேலையாட்களும் இருந்தனர். அவர்களது கரங்களில் மிகுதமான உணவு வர்க்கங்களைக் கொண்ட இரு பாத்திரங்கள் இருந்தன. அப்போது அவர், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் எனது கனவில் தோன்றி, நீங்கள் பசிப்பதாக முறையிட்டதாகவும் இவைகளையெல்லாம் உங்களுக்கு கொடுக்கும் படியாகவும் உத்திரவிட்டார்கள் என்று கூறினார்." நூல்: ஸியர் அஃலாமின் நுபலாஃ, பாகம்-12, பக்கம்-452.

وقال ابو الخير الاقطع التيناتي: اتيت قبر رسول الله صلى الله عليه وآله وسلم وانا جائع فقلت: انا ضيفك يارسول الله صلى الله عليه وآله وسلم وتنحيت ونمت خلف المنبر فرأيت النبي صلى الله عليه وآله وسلم فقبلت مابين عينيه فدفع لي رغيفا فاكلت نصفه وانتبهت وبيدى النصف الآخر.

"அபுல் கைர் அல் அக்தஃ அத்தீனாதி என்பார் கூறுகிறார். நான் பசித்தவனாக அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ரௌழா ஷரீபுக்கு வருகைதந்து ஆஜராகி, அல்லாஹ்வின் ரஸூலே! நான் உங்களுடைய விருந்தாளி (எனக்குப் பசிக்கிறது) என்றேன். அதன்பின் மிம்பருக்குப் பின்னால் உறங்கி விட்டேன். அப்போது தூக்கத்தில் நபியவர்களைக் கண்டு அவர்களுடைய இரு கண்களுக்கும் இடையில் முத்தமிட்டேன். அப்போது நபியவர்கள் எனக்கு ஒரு ரொட்டியைக் கொடுக்க அதில் பாதியை சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே கண் விழித்து விட்டேன். அப்போது மீதிப்பாதி எனது கையிலிருந்தது." நூல்: அத்துர்ரதுஸ் ஸமீனா ஃபீ தாரீகில் மதீனா, பக்கம்-225. அவ்லியாவ கராமாத், பக்கம்-74.

இன்னொரு சம்பவத்தையும் பாருங்கள். அபுல் ஃபதஹ் இப்னு ஹஸன் என்பார் அபூ அலிய்யுல் கஸ்ஸானி என்பவருக்குச் சொன்னதாக சொல்லப்படுவதாவது:- ஸமர்கந்த் என்னும் ஊரில் சில வருடங்களாக தண்ணீர்ப்பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் பலமுறை மழைக்காக பிரார்த்தித்தும் மழைபொழியவில்லை. இச்சந்தர்ப்பத்தில் அந்த ஊரைச் சேர்ந்த நீதிபதியிடம் ஸாலிஹான ஒருவர் வருகை தந்து, நான் ஒரு கனவு கண்டேன். அதன்படி நீங்களும் இவ்வூர் மக்களும் இமாம் புகாரி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கப்ருக்குச் சென்று அவர்களிடம் மழை வேண்டி பிரார்த்திப்போம். அல்லாஹ் நமக்கு மழையை தரக்கூடும் என்று சொன்னார்.

அதைக்கேட்ட நீதிபதி உமது கனவு நனவாகட்டும் என்றுகூறி அவரும் அவ்வூர் மக்களும் அங்கு சென்று மழைக்காக பிரார்த்தித் தனர். அப்போது அல்லாஹ்வுடைய பேரருளால் பெரும் மழை பொழிந்தது. கடுமையான அம்மழை காரணமாக ஏழு நாட்கள் வரை தமது சொந்த ஊருக்குச் செல்ல முடியாமல் அங்கேயே தங்கியிருந்தனர். இமாமவர்களின் கப்ரு ஷரீபுக்கும் ஸமர்கந்திற் கும் இடைப்பட்ட தூரம் மூன்று மைல்களாகும்.'' நூல் : ஸியர் அஃலாமுந் நுபலாஃ, பாகம்-10, பக்கம்-320.

முகல்லிதுகளும் கைரெ முகல்லிதுகளும் அல்லாஹ் அல்லாத வர்களிடம் கேட்பது ஷிர்க்கென்று சொல்வது சரியா? அல்லது குர்ஆனும் ஹதீதும் சொல்வது சரியா? என்பதை நீங்களே முடிவு செய்வதுடன் இவ்வியக்கங்களின் குள்ளநரித்தனமானமார்க்கப் பணியைக் கண்டு ஏமாந்து விட வேண்டாமென்று எச்சரிக்கிறோம். அத்துடன் உங்களின் மனைவி மக்களையும் இவர்களிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள். யாருடைய உள்ளங்களை இவர்கள் வளைத்துப் போடுகிறார்களோ, யார் இவர்களுடைய இயக்கங்களை ஆதரிக்கிறார்களோ அவர்கள் எப்படியாவது திருந்தி விடுவார் களென்று மட்டும் நினைக்காதீர்கள். இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் அல்லாஹ் அல்லாதவர்களிடம் உதவி தேடலாம், அவர்களை அழைக்கலாம் என்று நாம் சொல்வதாக நீங்கள் எண்ணிவிடக் கூடாது. நபிமார்களையும் வலிமார்களையும் இந்த நஜ்துக் கொள்கைவாதிகள் அல்லாஹ் அல்லாதவர்கள் என்று பேசியதை வைத்துத்தான் நாமும் அவ்வாறு பேசினோமே யன்றி மற்றபடி நாம் அவர்களுடைய கருத்தை ஆதரிப்பவர் களல்ல. இனி அல்லாஹ் அல்லாதவர்கள் எனப்படுவோர் யார் என்பதுபற்றி பிரிதொரு சந்தர்ப்பத்தில் நாதாக்களின் நல்லாசியால் விளக்குவோம் இன்ஷாஅல்லாஹ்.

இன்னும் இப்னு தைமிய்யா முதல் இவ்வுலகில் தோன்றிய இயக்கமனைத்தும் நபிமார்களிடமும் வலிமார்களிடமும் உதவி தேடுவதை ஷிர்க் என்றும் பெரும் பாவமென்றும் கூறிக் கொண்டி ருக்கிறார்களே! அதற்குரிய காரணம் என்னவென்று இதுவரை அவர்களிடம் நீங்கள் கேட்டதுண்டா? ஒருமுறை அவர்களிடம் கேட்டுத்தான் பாருங்களேன்.

ஆம். உயிரோடுள்ள ஒருவர் உயிரோடுள்ள இன்னொருவரிடம் உதவி தேடலாம். அல்லது அவர் பொருட்டாலும் கேட்கலாம் என்னும் விஷயத்தில் எந்தக் கருத்து வேற்றுமையும் கொள்ளாத



இவர்களுடைய இயக்கத்தை சேர்ந்த அனைவரும் எதற்காக நபிமார்களிடமும் வலிமார்களிடமும் உதவி தேடக்கூடாதென்று சொல்கிறார்கள் தெரியுமா? நாம் உதவி தேடுபவர்களெல்லாம் இறந்து மண்ணோடு மண்ணாகமக்கிப் போய் விட்டார்கள் என்பது தான் இவர்கள் தரும் விளக்கமும் இவர்களால் செய்யப்படும் பிரச்சாரமுமாகும். இவர்களின் இப்பிரச்சாரம் முற்றிலும் உண்மைக்குப் புறம்பான மிக மிகக் கீழ்த்தரமான பொய் பிரச்சார மாகும் என்பதை குர்ஆன் ஹதீதைக் கொண்டே நம்மால் நிரூபிக்க முடியும். இருப்பினும் மௌலானா மௌலவி முஹம்மத் பாகர் ஆலிம் அவர்களால் எழுதப்பட்ட ஹிதாயத்துல் அனாம் இலா ஸியாரத்தில் அவ்லியாயில் கிராம் என்னும் நூலின் 70 மற்றும் 71ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஓர் நிதர்சனமான சம்பவத்தை மட்டும் இங்கே உங்களின் பார்வைக்குத் தருகிறோம். அதாவது,

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் அருமைத் தோழர்களான ஹழ்ரத் ஹுதைபத்துல் யமானி மற்றும் ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு ஜாபிருல் அன்ஸாரி ரழியல்லாஹு அன் ஹுமா ஆகிய இருவரும் ஷஹீதாகி ஈராக்கில் பக்தாத் நகருக்குச் சமீபமாக உள்ள ஆற்றோரத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டிருந்த னர். பிற்காலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக இரு கப்ருகளுக்கும் சேதம் ஏற்பட்டது. அவைகள் ஆற்றில் மூழ்கி விடுமென்ற பீதியும் ஏற்பட்டது. அப்போது ஈராக்கை ஆட்சி செய்து வந்த அமீர் பைஸல் உலமாக்களின் ஆலோசனைப்படி அவ்விரு கப்ருகளையும் தோண்டியெடுத்து வேறொரு இடத்தில் நல்லடக்கம் செய்ய ஏற்பாடு செய்தார். அவ்விரு கப்ருகளும் தோண்டப்பட்ட போது அவர்களின் மகத்துமிக்க தேகங்கள் இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்கு முன்புதான் அடக்கம் செய்யப்பட்டவர்களின் தேகத்தைப் போலிருந்தன. இவ்விஷயம் அப்போது விளம்பரமும் செய்யப்பட்டது. இது அவர்கள் அகால மெய்தி 1300 ஆண்டுகளுக்குப் பின் நிகழ்ந்த சம்பவமாகும். இது 1992ம் ஆண்டு நடைபெற்றது.

அத்துடன் மகத்தான அவ்விரு நபித்தோழர்களின் புனித தேகங்கள் தோண்டி எடுக்கப்படுவதை அரசு அனுமதியோடு ஜெர்மனியைச் சேர்ந்த திரைப்பட நிறுவனம் ஒன்றால் ஒளிப்பதி வும் செய்யப்பட்டு மறுநாள் பக்தாத் நகரிலுள்ள திரையரங்கு களில் திரையிடப்பட்டும் காட்டப்பட்டது. இது பண்டைக்கால வரலாற்றுச் சம்பவமல்ல. இது நமது காலத்திலேயே வாழ்ந்த

மக்களின் கண்களால் நிதர்சனமாகக் காணப்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும் என்று கூறுகிறார்.

இதேபோல முஃதாவுடைய யுத்தத்தில் ஷஹீதான அருமை ஸஹாபாக்கள் ஏறக்குறைய 1342 வருடங்களுக்குப் பிறகும் அவர்களின் புனித தேகம் அழியாமல் இருந்தது கண்டுபிடிக்கப் பட்டது மட்டுமல்ல. அவர்கள் தமது தலைகளில் அணிந்திருந்த வெள்ளை, பச்சை, மற்றும் சிவப்பு நிறத்தாலான தலைப்பாகைகள் கூட அப்படியே இருந்ததாக அல் ஜாமிஅத்துல் இஸ்லாமிய்யா என்னும் சஞ்சிகையின் 201ம் இதழ் வெள்ளிக்கிழமை 24 துல்கஃதா, 1351ல் முஃதாவின் ஷஹீதுகள் என்னும் தலைப்பில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. நூல்: நபஸுர் ரஹ்மான், பக்கம்-196.

புனித இஸ்லாமிய மார்க்கத்திற்காக தமதுயிரை அர்ப்பணம் செய்த தியாகிகளின் புனித திரேகங்கள் கூட இன்றும் அழியாமல் கப்ருக்குள் உயிரோடு இருக்கிறார்கள் என்றால் அவர்களைவிட எவ்வளவோ மேலான படித்தரத்தைக் கொண்டுள்ள நபிமார்களும் ஸித்தீகீன்களும் தமது திரேகத்தோடு ஏன் உயிரோடு இருக்க மாட்டார்கள்! இனி அவர்கள் உயிரோடு தான் இருக்கிறார்கள் எனில் அவர்களிடம் உதவி தேடுவது எப்படி ஷிர்க்காகும்? இப்போது இன்னொரு ஆச்சரியமான அதேநேரம் அதிசயத்திற்குரிய நிகழ்ச்சியொன்றை பாருங்கள்,...

துஸ்தர் என்னும் நகரம் ஹழ்ரத் ஸெய்யிதுனா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் ஹழ்ரத் அபூமூஸா அல் அஷ்அரி ரழியல்லாஹு அன்ஹு அவர்களால் கைப்பற்றப்பட்ட நகரமாகும். அதுபோது நடைபெற்ற சம்பவமொன்றை தாபியீன்களில் ஒருவரான ஹழ்ரத் ருபைஃ பின் மிஹ்ரான் (அபுல் ஆலியா) ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர்,...

“நாங்கள் அந்த நகரத்தை வெற்றி கொண்டபோது ஒரு வீட்டில் இறந்துபோன ஒருவரின் தேமொன்று ஒரு கட்டிலில் வைக்கப்பட்டிருந்ததை பார்த்தோம். அத்துடன் அவருடைய தலைமாட்டில் வேதநூல் ஒன்றும் இருந்தது. அந்த நூலை நாங்கள் ஹழ்ரத் ஸெய்யிதுனா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் சபைக்குக் கொண்டு சென்றோம். அப்போது அதில் கூறப்பட்டுள்ள விஷயங்களை தெரிந்து கொள்வதற்காக பல மொழிகளை சரளமாகப் பேசும் ஹழ்ரத் கஃபுல் அஹ்பார் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அழைக்கப்பட்டு வாசிக்கப்பட்டது.



அதுபோது அவரை என்ன செய்தீர்கள்? என்றும், அவரைக் கொண்டு என்ன பிரயோஜனங்களை பெற்றுக் கொண்டீர்கள் என்றும் கேட்டபோது, அவருடைய தேகம் சிதைக்கப்பட்டு விடக் கூடாதென்பதற்காக இரவோடிரவாக அவரை நல்லடக்கம் செய்து கப்ரையும் சமப்படுத்தி விட்டோம் என்றனர். இன்னும்,...

***“அந்நகர மக்கள் மழை பொழியாமல் தடுக்கப்படும் போது கட்டிலோடு அவரை வெளியே கொண்டு வருவார்கள். உடனே மழையும் பொழியும்” அப்போது அவர் யார்? எத்தனை காலமாக அந்த நிலையில் அவரை நீங்கள் பெற்றுக் கொண்டுள்ளீர்கள் எனக்கேட்க,...”***

***“அவர் தானியால் என்று சொல்லப்படுகிறார். அவரை நாங்கள் சுமார் முன்னூறு ஆண்டு காலமாக இறந்த நிலையில் பெற்றிருக்கிறோம். அவருடைய பிடரியிலுள்ள ஒருசில முடிகளைத் தவிர வேறு எந்த மாற்றமும் அவரில் ஏற்படவில்லை என்றும் கூறினர்.”***

இச்சம்பவம் இப்னுதைமிய்யாவின் “அஸ்ஸிராத்துல் முஸ்தகீம்” என்னும் நூலில் 686ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அதைக்கொண்டு அவர் நிரூபிக்க முனைவது கப்ரு பற்றிய விஷயமாகும். இன்னும் ஜனாப் அல்பானியும் “தக்ரீஜு அஹாதீதி ஃபழாயிலிஷ் ஷாமி வத்திமிஷ்கி” என்னும் நூலில் 51ம் பக்கத்தில் குறிப்பிட்டு விட்டு அவரும் இப்னு தைமிய்யாவின் கருத்தையே எடுத்துக் காட்டுகிறார். மேலும் இந்த சம்பவத்தை இமாம் இப்னு கதீர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் பதிவு செய்துவிட்டு இது ஸஹீஹான தகவல் என்றும் கூறுகிறார்.

நூல்: அல் பிதாயா வந்நிஹாயா, பாகம்-2, பக்கம்-40.

இச்சம்பவத்தை கொண்டு இப்னு தைமிய்யா மற்றும் அல்பானியின் தோழர்களிடம் நாம் கேட்பது என்ன தெரியுமா? இச்சம்பவம் ஹழ்ரத் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் நடைபெற்றுள்ளதால் இதனை நீங்கள் எதற்குமே ஆதாரமாகக் கொள்ளக் கூடாது என்பதுதான். அவ்வாறின்றி இந்த நிகழ்ச்சியை உங்களின் கருத்துக்கு ஆதாரமாகக் கொள்வீர்களாயின் ஸெய்யிதுனா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களால் ஏற்படுத்தப்பட்ட தராவீஹ் தொழுகையின் எண்ணிக்கையையும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அடுத்து மேற்கண்ட நபர் தனது இறப்புக்குப் பின்னர் முன்னூறு ஆண்டுகளுக்கு மேல் ஒரு

கட்டிலில் வைக்கப்பட்டுள்ளாரே இவரென்ன நபியா? அத்துடன் அந்நகர மக்கள் தங்களுக்கு மழை வேண்டுமென்றால் அவரைக் கொண்டுதான் பெற்றுள்ளனர் என்னும்போது இது ஷிர்க்கான காரியமல்லவா! பின்னும் ஷிர்க்கான ஒரு காரியத்தை தடுத்து நிறுத்த அல்லாஹ் அவருடைய தேகத்தை மறைத்திருக்கலாம் அல்லவா! இந்நிலையில் ஒருவருடைய தேகத்தை கொண்டு ஷிர்க் நடைபெறுவதற்கு அல்லாஹ்வும் உடந்தையாக இருந்தான் எனக்கூறலாமா? அருள்கூர்ந்து பதில் தாருங்களேன். மரணித்தவர்களால் எதையுமே செய்ய முடியாது என்பது அல்லாஹ்வுடைய விரோதிகளின் கொள்கையாகும். இதில் சுன்னத் வல் ஜமாஅத்தைத் தவிரவுள்ள அனைத்து இயக்கங்களும் நபிமார் வலிமார் போன்றோரிடம் உதவி தேடுவதை பெரும் பாவமென்று சொல்வதால் இவர்களனைவரும் அல்லாஹ்வின் விரோதிகள் தான் என்பது இதைக் கொண்டு வெள்ளிடை மலை போல தெளிவாக்கப்பட்டு விட்டது.

# இந்தியாவில் வஹ்ஹாபிஸம்

ஆசியக் கண்டத்தில் குறிப்பாக இந்திய நாட்டில் முஸ்லிம்கள் பெருமையோடு தலைநிமிர்ந்து யாருக்கும் அஞ்சாமல் நடமாடிய ஒரு காலமிருந்தது. முஸ்லிம்கள் என்றால் அவர்களனைவரும் ஒரே கொள்கையுடையவர்களாக இருந்ததோடு காதிரிய்யா, ஷாதுலிய்யா, சிஷ்திய்யா, ரிபாயிய்யா, நக்ஷபந்திய்யா போன்ற தரீக்காக்களில் இணைந்தவர்களாகவும், நான்கு மத்ஹபுகளில் ஒன்றை பின் பற்றுபவர்களாகவும் திகழ்ந்தனர். முகல்லிதுகளான வஹ்ஹாபிகளும் தம்மை சிஷ்திய்யா தரீக்காவை பின்பற்றுவோர் என்று சொன்னவர்கள் தான்.

இதில் அல்லாஹ்வின் நேசர்களான வலிமார்கள் தான் இந்த தரீக்காக்களை அமைத்து இஸ்லாத்தை நாடு தழுவிய அளவுக்கு எடுத்துச் சென்றவர்களாகும். ஹழ்ரத் காஜா முயீனுத்தீன் சிஷ்தி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கரம்பற்றி 90 லட்சம் மக்கள் புனித இஸ்லாத்தை தழுவினார்கள் என்றால் இது அவர்களுக்கு அல்லாஹ்வால் வழங்கப்பட்ட ஓர் அருட்கொடையாகும்.

ஆம். இஸ்லாத்தின் வளர்ச்சியை எப்போதுமே சகித்துக் கொள்ளாத காபிர்கள் அரபு மண்ணில் கண்ட வெற்றியை போல அஜமிகளையும் அவ்வலையில் சிக்கவைப்பதற்கான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தனர். யார் மூலமாக இதை செயல்படுத்தலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தவர்களுக்கு இஸ்லாத்தை கூறுபோட்டு, முஸ்லிம்களுக்கிடையே மார்க்கத்தின் பெயரால் கலகத்தை ஏற்படுத்தி, முஸ்லிம்களே முஸ்லிம்களை துண்டாடுவதற்காக சிலரை அவர்கள் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஊதியமும் வழங்கி ஊக்குவித்தனர். அவர்கள் யாரென்று பாருங்கள்.

1. இந்தியாவிலுள்ள அலிகர் பல்கலைகழகத்தின் ஸ்தாபகர் சர் ஸெய்யித் அஹ்மத்.

2. லாகூரிலுள்ள சீனபுவாலி பள்ளிவாசலின் பேஷ்இமாம் அப்துல்லாஹ் சக்டாலவி.

3. அஹ்மத்தீன் பங்வீ.

4. அஸ்லம் சிராஜ்பூரி.

5. நியாஸ் பதஹ்பூரி.

6. மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி

ஆகியோராகும். இதில் பிரபல்யமான மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானியை வெறுக்கத் தெரிந்த நமக்கு அவருடைய பேச்சுக்கும் கருத்துக்களுக்கும் அடித்தளம் அமைத்துத் தந்தவர் யார் என்பதை மட்டும் நாம் தெரிந்துகொள்ள முயலவில்லை. அவர் தான் இங்கே முதல் நபராகக் குறித்துக் காட்டப்பட்ட சர் ஸெய்யித் அஹ்மதாகும்.

ஹழ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் இறந்து விட்டார்கள் என்னும் காதியானிகளின் கருத்தை முதன் முதல் இந்திய மண்ணில் பேசியவர் சர் ஸெய்யித் அஹ்மத் தானென்று கூறுகிறார் மௌலவி ரபீக் ஸாஹிப் திலாவரி என்பவர். இந்தத் தகவல் ரயீஸ் காதியான் என்னும் நூலின் பாகம்-1, பக்கம்-176ல் குறிப்பிடப் பட்டிருப்பதோடு 20-5-1916ல் வெளியான அல் பழ்ல் என்னும் காதியானிகளின் சஞ்சிகையிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதில் சர் ஸெய்யித் அஹ்மதை மௌனமாக்கி மிர்ஸா குலாமை பிரபல்யப்படுத்தியது ஆங்கிலேயர்கள் தான். இது இந்திய தேசத்தில் காபிர்களுக்கெதிராக முஸ்லிம்களின் குரலை திசை திருப்புவதற்காக ஆங்கிலேயர்களால் கையாளப்பட்ட குள்ளநரித் தனமான செயலாகும்.

காதியானிகள் தங்களின் கருத்தை பிரபல்யப்படுத்தி முஸ்லிம்களிடையே கலவரத்தை ஏற்படுத்தியதோடு மறுபக்கம் சர் ஸெய்யித் அஹ்மதை காபிர்களுக்கு எதிராக பேசப்படும் பேச்சுக்களை நிறுத்திவிட்டு காபிர்களோடு அறப்போர் செய்ய வேண்டிய தன் அவசியத்தையும் மூடிமறைத்து விட்டு முஸ்லிம்களுக்கிடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாட்டை முதலில் சரி



செய்ய வேண்டுமெனப் பிரச்சாரம் செய்வதற்காக அவரைத் தூண்டி விட்டனர்.

இதற்காகப் பயன்படுத்தப்பட்டவர்தான் இஸ்மாயீல் தெஹ்லவி என்பவராகும். இவர் ஸெய்யித் அஹ்மத் ராய்பரேலியின் முரீது என்பதே அதற்கான மூலகாரணமாகும். இஸ்மாயீல் தெஹ்லவி என்றழைக்கப்படும் இவர் கைரெ முகல்லிதீன்களாலும், தேவ்பந்திகளாலும் முஜத்தித் என்றும் ஷஹீத் என்றும் புகழ்ந்து பேசப் படுகிறார்.

இதில் முகல்லிதுகளான வஹ்ஹாபிகளும் கைரெ முகல்லிதுகளான வஹ்ஹாபிகளும் ஒருவருக்கொருவர் முட்டி மோதிக் கொள்பவர்கள் என்றல்லவா நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அத்துடன் இருவரும் வெவ்வேறு கொள்கையுடையவர்களல்லவா என்றும் நீங்கள் யோசிக்கலாம். (இஸ்லாமிய மார்க்கத்தில் தோன்றிய பிரிவினைவாதிகளில் நான்கு மத்ஹபுகளில் ஒன்றை பின்பற்றுகிற முகல்லிதுகளான வஹ்ஹாபியக் கொள்கையுடையவர்களும் நான்கு மத்ஹபுகளில் எதையுமே ஏற்காத கைரெ முகல்லிதுகளான வஹ்ஹாபிகளும் என இரு பிரிவார் தான் பல்வேறு பெயர்களில் முஸ்லிம்களிடையே அறிமுகமாகி உள்ளனர் என்பதை வாசகர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.) ஆனால் உண்மை அதுவல்ல. இவ்விஷயத்தில் இவ்விருவர் மட்டுமல்ல. மூன்றாவதான காதியானிகளும் கூட இவர்களோடு மோதிக் கொள்ளத்தான் செய்கின்றனர். ஒருவரை ஒருவர் எதிர்த்தும் பேசுகின்றனர். நூல்கள் தொகுத்து வெளியிடுகின்றனர். இப்படியெல்லாம் செய்தால் தானே இவர்களை பின்பற்றும் அப்பாவிகள் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொள்வார்கள். இதற்காகத்தானே ஆங்கிலேயர்களும் இவர்களை உருவாக்கினார்கள். ஆனால் இவர்களைப் பொறுத்தவரை இவர்கள் உள்ளுக்குள்ளே ஒரே கொள்கையைச் சார்ந்தவர்கள் மட்டுமல்ல. வெள்ளையரின் வளர்ப்புப் பிள்ளைகளும் கூட. முஸ்லிம்களை துண்டாடி அவர்களுக்கிடையே பகைமை என்னும் நெருப்பை கொளுந்து விட்டெரியச் செய்வதற்காக வெள்ளையர்கள் பயன்படுத்திய ஆயுதங்களாகும். இன்னொரு மாபெரும் உண்மை என்னவெனில் இந்த ஆங்கிலேயர்கள் வகுத்துத் தந்த கொள்கைகள் தான் ஷைகு நஜ்தியால் சொல்லப்பட்ட கருத்துக்களாகும்.

மேலும் இந்த இயக்கங்களுடைய மறுபக்கத்தை அறியாதவர்

களும் அவர்களின் பூர்வீக சரித்திரத்தை தெரியாதவர்களும் தான் தேவ்பந்திகள் வஹ்ஹாபிஸத்தையும் காதியானிகளையும் வண்மையாக எதிர்ப்பவர்கள் என்று சொல்லிக்கொண்டு அலைகின்றனர். ஆனால் இவர்களனைவரும் காபிர்களால் வளர்க்கப் பட்டவர்கள். அவர்களிடம் மாதா மாதம் ஊதியம் வாங்கித் தின்று அவர்களின் காலை நக்கிக் கொண்டிருப்பவர்கள். இந்த உண்மையை மறைப்பதற்காகவே பல பேருடைய பெயரால் பல இயக்கங்களை இஸ்லாத்தின் பெயரால் அறிமுகப்படுத்தினர். எனவே இவ்வியக்கங்களில் ஒன்று மற்றொன்றை எதிர்ப்பதைப் பார்த்து நம்மவர்கள் ஏமாந்துவிட வேண்டாமென்று எச்சரிக்கிறோம்.

ஏனெனில் தேவ்பந்திகளும், தௌஹீத் இயக்கத் தலைவர்களும், ஜமாஅத்தே இஸ்லாமியின் தலைவர்களும், காதியானி இயக்கத்தின் தலைவர்களும் போன்ற இவர்கள் எல்லோருமே ஆங்கிலேயரின் அடிமைகள்தான். இவர்களின் இயக்கங்களும், இவர்களால் வெளியிடப்படும் நூல்களும் வஹ்ஹாபிய நச்சுக் கருத்துக்களைக் கொண்டதாகத் தான் அமைந்துள்ளது. ஆனால் தற்போதுள்ள தொழுகைக்கு அழைக்கும் இயக்கத்திலுள்ளவர்கள் அப்படிப்பட்டவர்கள் இல்லையே என்பதாக நீங்கள் யோசிப்பீர்களாயின் அதற்குமுன் தாம்பரம் கமால் என்பவர் எழுதிய ''நீங்கள் எந்தக் கூட்டம்'' என்னும் பக்வாஸுக்குரிய நூலைப் படித்தபின் முடிவு செய்யுங்கள்.

ஜனாப் கமால் அவர்கள் அந்த நூலில், ஹாமித் பக்ரி, பி.ஸைனுல் ஆபிதீன் போன்றோரையும் அவர்களை ஆதரிப் போரையும் நாத்திகர்களை விடக் கேவலமானவர்கள் என்று கூறுகிறார். குர்ஆனின் வசனங்களையெல்லாம் திரித்துக் கூறுவதாக குற்றம் சாட்டும் இவரும் இவரைச் சார்ந்த இயக்கமும் அதே காரியத்தைத் தான் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியவில்லை. ஆதலால் இவர்கள் அனைவருமே வழிதவறிய கூட்டமென்று தான் நாம் சொல்வோம்.

மேலும் இவ்வியக்கங்களைப் பற்றி இன்னும் அதிகமாகத் தெரிந்துகொள்ள விரும்புவோர் ''*வஹ்ஹாபியத் கா போஸ்ட் மார்ட்டம், நஜ்த் ஸே காதியான் பிராஸ்தா தேவ்பந்த், வஹ்ஹாபி மத்ஹப்*'' போன்ற உர்து மொழியிலுள்ள நூல்களை பார்க்க வேண்டுகிறோம். அத்துடன் அந்த நூல்களில் சொல்லப்படும் விஷயங்களெல்லாம் பொய்யானவை, இட்டுக்கட்டப்பட்டவை,



பொறுமையால் புளுகியவை என்றெல்லாம் சொல்லப்படுவதைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள். உதாரணமாக, முகல்லிதுகளான வஹ்ஹாபியக் கொள்கையுடைய தொழுகைக்கு அழைக்கும் இயக்கத்தை சேர்ந்த இவர்களில் மௌலவி அஷ்ரப் அலி தானவி என்பார், ஹிஜ்ரி 1336ம் ஆண்டு ஸபர் மாதம் வெளிவந்த அல் இம்தாத் என்னும் பத்திரிக்கையின் கேள்வி பதில் பகுதியில் அஷ்ரப் அலி தானவி அவர்களை விரும்பும் ஒருவர் கேள்வி யொன்றை கேட்கிறார். அதாவது, நான் கனவில் லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்னும் கலிமாவை ஓதுவதற்குப் பதிலாக அஷ்ரப் அலி ரஸூலுல்லாஹ் என்று ஓதுகிறேன். இவ்வாறு ஓதுவது தவறென்று எனக்குத் தெரிகிறது. அதே நேரம் நான் எனது வசத்தில் இல்லை. அதன்பின் தூக்கத்திலிருந்து விழித்தெழுந்து அத்தவறை திருத்திக் கொள்ளும் வகையில் ஸலவாத்துச் சொல்ல நினைத்து ஸலவாத்தை ஓதியபோது அது, அல்லாஹும்ம ஸல்லி அலா ஸைய்யிதினா வநபிய்யினா வமௌலானா அஷ்ரப் அலி என்று வருகிறது. இதேநிலை மறுநாளும் தொடர்கிறது. அதற்காக நான் மிகவும் அழுதேன். என்ன செய்வது? நான் என் வசத்தில் இல்லை. அத்துடன் நிர்பந்திக்கப்பட்டவனாகவும் இருக்கிறேன். இதன்றி வேறுபல காரணங்களும் உள்ளன. நான் தங்களை மிகவும் நேசிக்கிறேன். இதற்கு மேல் என்ன சொல்ல? எனக் கேட்கிறார்.

அதற்கு மௌலவி அஷ்ரப் அலி தானவி அவர்கள், இந்த சம்பவத்தில் அமைதி இருக்கின்றது. நீர் யாரை நோக்கித் திரும்புகிறீரோ அவர் சுன்னத்துக்களை பின்பற்றுபவராகும். என்று பதில் கூறுகிறார். இதைத் தவறென்று சுன்னத் வல் ஜமாஅத்தை சார்ந்த உலமாக்கள் எடுத்துக் காட்டியதற்கு மௌலானா ஸகரிய்யா என்பார், தேவ்பந்த் ஸே பரேலி தக் என்னும் நூலில், பவாயிதுஸ் ஸாலிகீன் என்னும் நூலை ஆதாரமாக காட்டி அந்த நூலில், காஜா முயீனுத்தீன் சிஷ்தி ரஹிமஹுல்லாஹ் அவர்களிடம் பைஅத்துப் பெறுவதற்காக வந்த ஒருவரிடம் சிஷ்தி ரஸூலுல்லாஹ் எனக் கூறுமாறு சொன்னதாகவும், இதேபோல அல்லாமா ஷிப்லி ரஹிமஹுல்லாஹ் அவர்களிடம் பைஅத்துப் பெறுவதற்காக வந்த ஒருவரிடம் ஷிப்லி ரஸூலுல்லாஹ் எனச்சொல்லச் சொன்னதாகவும், அப்படியானால் இவர்களைப் பற்றி என்ன கூறுவீர்கள் என்றும் கேட்கிறார். இது முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுகிற வேலை. அத்துடன் இஸ்லாத்தை சீர்குலைக்க நினைக்கும் எவர் வேண்டுமானாலும் மேற்கண்ட மௌலானா ஸகரிய்யா அவர்கள்

கூறுவதைப் போல தம்மை ரஸூலென்று வாதித்து விட்டு அதன்
பின் நான் என்னுடைய சுயநினைவில் இதைச் சொல்லவில்லை.
அத்தோடு ஷிப்லி ரஹிமஹுல்லாஹ் மற்றும் காஜா முயீனுத்தீன்
ரஹிமஹுல்லாஹ் போன்றோரும் தம்மை ரஸூலென்று வாதித்
திருக்கும் போது நான் மட்டும் சொன்னால் அது தவறாகி விடுமா?
எனக் கேட்பதைப் போலுள்ளது இவருடைய வாதம். ஆக தொழு
கைக்கு அழைத்தல் என்னும் பெயரில் முகல்லிதீன்களிலுள்ள
வஹ்ஹாபிகளான இவர்கள் வடிகட்டிய வஹ்ஹாபிகள் என்பதை
நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஆனால் அதேநேரம் சமீப காலமாக தமிழகத்தில் தங்களை சிஷ்திய்யாவுடைய தரீக்காவை சேர்ந்தவர்கள் எனக் கூறிக்கொள்வோர் வெளியிட்டுள்ள நினைவு மலரில் மௌலானா ஸகரிய்யாவுடைய அதே வாதத்தைதான் இவர்கள் மீண்டும் வாந்தியெடுத்துள்ளனர். ஆக இவர்கள் தரீக்கா என்னும் பெயரில் உலா வந்து கொண்டுள்ள வஹ்ஹாபிகளாகும் என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதெல்லாம் அவர்களை பாதுகாத்துக் கொள்வதற்காக அவர்களால் கையாளப்படும் தந்திரங்களில் ஒன்றாகும். இந்த இயக்கங்கள் பற்றி இந்திய தேச உலமாக்களால் சொல்லப்பட்டிருப்பதோடு அவர்கள் சவால் விட்டதற்குரிய ஆதாரமும் நம்மிடம் இருக்கின்றது என்பது இங்கே குறிப்பிடத் தக்க ஒன்றாகும். ஆதலால் தொழுகைக்கு அழைக்கும் இயக்கத்தை ஆதரிக்கும் உலமாக்கள் மௌலவி இல்யாஸ் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இயக்கத்தை விட்டு நீங்கி நல்லடியார்களான நாதாக்களுடன் இணைந்து சத்தியத்தை பாதுகாக்கத் துணைபுரியுமாறு பணிவோடு அழைக்கிறோம். பின்னும் மௌலவி இல்யாஸும் அவரால் தோற்றுவிக்கப்பட்ட தொழுகைக்கு அழைக்கும் இயக்கமும் நல்லெண்ணத்திலோ அல்லது குர்ஆன் ஹதீதுக்கு உட்பட்டோ தோற்றுவிக்கப்பட்ட இயக்கமல்ல என்பதை அவ்வியக்கத்தை ஆதரிக்கும் உலமாக்களுக்கு மீண்டும் மீண்டும் தாழ்மையாக சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்.

# இலங்கையில் வஹ்ஹாபிஸம்

இனி இலங்கை திருநாட்டில் தோன்றிய வஹ்ஹாபியக் கூட்டம் பற்றி நமது பார்வையை இப்போது திருப்புவோம். அதாவது **1951**ம் ஆண்டு கல்முனைக்குடியில் வைத்து மாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மாநாட்டை பற்றி (இரு வழிக்கு ஒருவழித் தேர்வு) என்னும் பெயரில் பத்வா ஒன்று கொடுக்கப்பட்டு அது அன்று பிரசுரமாக வெளியிடப்பட்டது. அதன்பின் அப்பிரசுரம் ***28-9-1997***ல் நீர்கொழும்பில் பலஹத்துறையில் வைத்து நடைபெற்ற அகில இலங்கை அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் மஜ்லிஸுல் உலமா சபையின் ஏழாவது ஆண்டு நிறைவு விழாவில் எளிய தமிழ் நடையில் திரைகிழிந்தது, வஹ்ஹாபிகள் தப்பி ஓட்டம் என்னும் பெயரில் மறுபிரசுரம் செய்யப்பட்டு வினியோகம் செய்யப்பட்டது. மேலும் அம்மாநாட்டில் நீதிபதியாக அன்று நியமிக்கப்பட்டவர் அஸ்ஸகுமுல் காரிக் ஃபீ ஐனிஸ் ஜிந்தீகில் ஃபாஸிக் - பாவியாகிய வழிகேடரின் கண்ணை துளைக்கும் அம்பு என்னும் பெயரால் ஒரு நூலை அச்சிட்டிருந்தார். அவர்தான் வெலிகம மத்ரஸதுல் கிழ்ரிய்யா அரபிக் கல்லூரியின் அதிபரான மௌலானா ஏ.எச்.ஏ.எம்.ஆலிம் அவர்களாகும். இன்னும் அப்பிரசுரம் பல உலமாக்களால் சரிகாணப்பட்டு அவர்களுடைய கையெழுத்தோடு கொழும்பு வீரகேசரி அச்சகத்தில் ஜனாப் எம்.கே.எ.மஹ்மூத் லெப்பை என்பாரின் முயற்சியால் **1951**ம் ஆண்டு அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. அந்த பத்வாவில் கையொப்பமிட்டிருந்தவர்களின் பெயர்கள் பின்வருமாறு,..

**1.** மௌலவி எஸ்.யு.எம்.ஹபிபதுல் கரீம் ஆலிம் பாகவி - தலைவர் ஜம்இய்யத்துல் உலமா கொழும்பு.

**2.** மௌலவி காரி டபிள்யூ.எச்.எல்.எம்.ருமிஸ் ஆலிம் -

காரியதரிசி ஜம்இய்யத்துல் உலமா கொழும்பு.

3. மௌலவி ஸெய்யித் ஸஹ்ல் பின் ஸெய்யித் தாஹா மௌலானு பாகவி வலிகாமம்.

4. மௌலவி டபிள்யூ. முஹம்மத் ரிழா ஆலிம் பஹ்ஜி வலிகாமம்.

5. மௌலவி எச்.எல்.எம்.உஸ்மான் ஆலிம் வலிகாமம்.

6. மௌலவி எம்.எம்.முக்தார் ஆலிம் அதிபர் அல்காமம் அரபிக் கல்லூரி.

7. மௌலவி இஸட்.எல்.எம்.நஜ்முத்தீன் பஹ்ஜி தடாலி.

8. மௌலவி ஏ.என்.எம்.அதாவுள்ளாஹ் ஆலிம் பாகவி வலிகாமம்.

9. மௌலவி என்.டி.அப்துர்ரஸ்ஸாக் ஆலிம் ஜமாலி - ஆசிரியர் அல் -இல்ம் கொழும்பு.

10. மௌலவி எம்.ஸெய்யித் அஹ்மத் ஆலிம் பஹ்ஜி - காழியார் களுத்துறைப்பகுதி.

11. மௌலவி யு.எல்.எம்.ஹாமீம் ஆலிம் பஹ்ஜி - அதிபர் ஸாவியா அரபிக்கல்லூரி வலிகாமம்.

12. மௌலவி என்.டி.ஏ.அபுல் ஜமால் முஹம்மத் பத்ருத்தீன் ஆலிம் - கிருஷ்ணஜி பட்டிணம் தஞ்சாவூர்.

13. மௌலவி ஏ.எல்.எம்.கவுஸ் ஆலிம் பாகவி-பஞ்சிகாவத்தை கொழும்பு.

14. மௌலானு மௌலவி எம்.ஸெய்யித் பழ்லுள்ளாஹ் பஹ்ஜி ஆகியோர்களாகும். இப்போது அப்பிரசுரத்திலுள்ள விஷயங்களில் சிலவற்றை நாம் பார்ப்போம்.

அன்று வஹ்ஹாபியக் கருத்துக்குரிய பிரச்னையில் கதாநாயகனுக நின்று செயல்பட்டவர் குருநாகல் பறகஹதெனிய என்னும்



கிராமத்தை சேர்ந்த "தர்வேஷ்" என்பவராகும். இவர் மார்க்கக் கல்வி கற்பதற்காக இந்தியாவில் தமிழ்நாட்டிலுள்ள பொதக்குடி என்னும் ஊரிலுள்ள மத்ரஸாவில் சென்று சேர்ந்தார். அங்கே இவருடைய ஒழுக்கமின்மை காரணமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். அதன்பின் வேலூரிலுள்ள மத்ரஸாவிற்கு சென்ருர். அங்கேயும் இவருடைய புத்தி சுவாதீனமற்ற நிலையைக் கண்டதால் அங்கிருந்தும் வெளியேற்றப்பட்டு ராயவேலூரிலுள்ள ஒரு சிறிய மத்ரஸாவில் சென்று சேர்ந்தார். அங்கே சேர்ந்து ஓரிரு மாதங்களே ஆனநிலையில் இவருடைய தீயநடத்தை காரணமாக அங்கிருந்தும் வெளியேற்றப்பட்டார். இப்படி ஒவ்வோர் ஊராக அலைந்து திரிந்தவர் இறுதியில் இலங்கையிலுள்ள நிந்தவூர் என்னும் ஊருக்கு வந்து சேர்ந்தபோது அவ்வூரில் இவர் தர்வேஷ் அப்துல் ஹமீத் என்னும் பெயரால் அறிமுகமானர். அதுபோது இவர் போதை பொருட்களை உபயோகிப்பவராக இருந்துள்ளார். அதன்பின் திடீரென காணமல் போனவர் 1948ம் ஆண்டு மீண்டும் திரும்பி வந்து ஒரு சங்கத்தை துவக்கினர். அதுதான் "அன்ஸார் ஸுன்னத் முஹம்மதிய்யா" என்னும் இயக்கமாகும்.

இது இப்படியிருக்க சாய்ந்தமருது மாளிகைக் காட்டில் தன்னை மஜ்தூப் எனப் பாசாங்கு செய்து நடித்துக் கொண்டிருந்த குட்டி மஸ்தான் வெள்ளைக்குட்டி என்பவர் மணமாகி வாழ்ந்து கொண்டிருந்த தனது மகளை ஃபசகு செய்யவைத்து பறகஹதெனிய வெள்ளமம்முடரின் மகனுரான தர்வேஷுக்கு மணமுடித்துக் கொடுத்தார்.

இந்த தர்வேஷ் சவூதிக்குப் போய்வந்த பின் அவ்வூரிலுள்ள மக்கள் அதுவரை கேள்விப்படாத பல்வேறு கருத்துக்களை இவர் பிரச்சாரம் செய்யத் துவங்கினர். இதனல் சாய்ந்தமருது மரைக்காமார்கள் தர்வேஷையும் ஊரிலுள்ள உலமாக்களையும் பள்ளி வாசலுக்கு அழைத்து யார் சொல்வது சரியானது என்பதை நிரூபிக்க முயன்றனர். அதுசமயம் உலமாக்கள் சார்பாக மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களை சேர்ந்த சுமார் நாற்பது பேர் அழைக்கப்பட்டார்கள். ஆனல் அக்கூட்டத்திற்கு தர்வேஷ் வரவில்லை. இதனல் வேறுவழியின்றி அவருடைய கருத்துக்களை நன்கு அலசி ஆராய்ந்தவர்கள் 2-10-1948ம் தேதியன்று கல்முனை ஆரும் குறிச்சி தக்கியாபள்ளியில் வைத்து இவர் ஒரு வஹ்ஹாபி என மார்க்கத் தீர்ப்பளிக்கப்பட்டார். இதைக் கேள்விப்பட்ட அவர் தமது சொந்த ஊரான பரகஹதெனிக்கு ஓடிப்போனர்.

அதன்பின் சிலமாதங்கள் கழித்து மாளிகைக்காட்டில் அவருக்
கொரு சொந்த இடம் கிடைத்ததால் மீண்டும் தமது பிரச்சாரத்தை
துவக்கியவர் கல்முனைக்குடி 3ம் குறிச்சிக்கும் சென்று பிரச்சாரம்
செய்யவாரம்பித்தார்.

இப்படி இவர் பல்வேறு இடங்களுக்கும் சென்று பிரச்சாரம்
செய்ததால் அந்தந்த ஊர்களில் இருந்தவர்கள் பலவகையான
பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை நேரிட்டது.
அத்துடன் பாமர மக்கள் வெகுவாகக் குழப்பப்பட்டனர். இந்நிலை
யில் இதற்கோர் முடிவு காணப்பட வேண்டும் என்று அனைவரும்
ஆசைப்பட்டனர். அதற்காக பலமுறை கல்முனைக்குடியைச்
சேர்ந்த தலைவர்கள் மாநாடு ஒன்றை நடத்துவதற்குரிய அவசியம்
குறித்து தர்வேஷுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு பேசியும்
அதற்கவர் சம்மதிக்கவில்லை. தர்வேஷ் இசைந்து வராததைக்
கண்டவர்கள் அதையேனும் மக்களுக்கு நாம் தெளிவுபடுத்த
வேண்டும் என்பதற்காக 13-7-1951ம் நாள் பிற்பகல் மூன்று
மணிக்கு கடற்கரை பள்ளிவாசல் முற்றத்தில் வைத்து நத்வத்துல்
உலமாசபை தலைவர் மௌலவி பி.எம்.மக்பூல் ஆலிம்
அவர்களின் தலைமையில் மரைக்காமார்களின் ஒத்துழைப்போடு
பிரம்மாண்டமான மாநாடு ஒன்று நடைபெற்றது.

அம்மாநாட்டில் நத்வத்துல் உலமாசபை போஷகர் மௌலவி
எஸ்.எம்.ஏ.முஹம்மத் இஸ்மாயீல் ஆலிம் அவர்கள் மாநாட்டில்
முக்கியமான அங்கத்தவராக பங்கேற்று வருகை தந்திருந்த பாமரர்
களுக்கு அனைத்தையும் தெளிவுபடுத்தினர். இவரின்றி இன்னும்
பல உலமாக்களும் உரையாற்றும் போது தர்வேஷின் போக்கை
குறித்து தெளிவுபடுத்தினர். ஆனால் தர்வேஷ் வருகை தரவில்லை.

இம்மாநாடு நடைபெற்று ஒரு மாதத்திற்குப்பின் 11-8-1951ம் நாள் தல்கஸ்பிடி இஸ்லாம் மத ஆராய்ச்சியாளரின் தரப்பிலிருந்து துண்டுப் பிரசுரமொன்று வெளியிடப்பட்டது. அதில் 12 விஷயங்களை குறித்து சொல்லப்பட்டு அவைகளை செய்பவர்கள் தெய்வ வணக்கம் புரிபவர்கள் என்றும் அவைகளுக்கு தக்க பதிலளிப்போருக்கு 1000 ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

அப்பிரசுரத்தில் சொல்லப்பட்டிருந்த கருத்துக்களை தெளிவு படுத்த ஒரு விவாதத்திற்குரிய மாநாடு ஒன்று நடத்தியே தீர



வேண்டும் என்பதற்காக மூன்றும் முறையாக குழுவொன்று தயாராயிற்று. அதில் ஏ.முஹம்மத் காசிம், இ.ஆதம்பாவா, எஸ்.ஏ.மஜீத், எம்.எச்.எம்.அப்துல்காதர், எம்.எச்.எம்.ஹனீபா, வி.வி.இ.எல்.முஹைதீன் ஆகியோர் நிர்வாகிகளாக இயங்கினர்.

இக்குழு நத்வத்துல் உலமா சபையையும், அன்ஸார் ஸுன்னத் சங்கத்தாரையும் விவாதிக்க வருமாறு பகிரங்கமாக அழைத்ததன் பேரில் இரு சாராரும் சம்மதம் தெரிவித்தனர். அதில் மொத்தம் 22 விஷயங்கள் விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டன. அவையாவன,..

## விவாதிக்க வேண்டிய விஷயங்கள்

*1. அல்லாஹ் அர்ஷில் தான் இருக்கிறான்.*

*2.ரஸூலுல்லாஹ்வுக்கு ஷபாஅத் கிடையாது.*

*3. மௌலூது ஓதுவது கூடாது.*

*4. தராவீஹ் எட்டு ரக்அத்துக்களே.*

*5. சதகத்துல் பித்ரு ஒருகொத்து அரிசி மட்டும்தான்.*

*6. கல்முனைக்குடி போன்ற கிராமங்களில் பல ஜும்ஆக்கள் நடத்தலாம்.*

*7. இமாம் பூஸிரி காபிர். (நவூதுபில்லாஹ்)*

*8. ஸியாரத்துல் குபூர் ஹராம்.*

*9. ஹயாத்து நபி கிழ்ரு இறந்து விட்டார்.*

*10. தொழுகையில் பாத்திஹா சூராவுக்குப் பின் வழள்ளால்லீனுக்கும் ஆமீனுக்கும் இடையில் ரப்பி.ஃக்பிர்லீ என்று சொன்னால் தொழுகை பாத்திலாகி விடும்.*

*11. தரீக்காக்கள் அனைத்தும் வழிகேடு.*

*12. அல்லாஹ் அல்லாத வலிமார்களுக்கு நேர்ச்சை செய்வது தெய்வ வணக்கமாகும்.*

*13. கப்ரை கட்டுவது ஹராமாகும்.*

*14. கப்ருகளில் குறிப்பிட்ட நாளில் ஒன்று சேருவதும் மௌலித் போன்றவைகளை ஓதுவதும் பித்அத்தாகும்.*

*15. கொடி ஏற்றுவதும் அதற்காக நேர்ச்சை செய்வதும் ஷிர்க்காகும்.*

*16. ஜனாஸாவை கொண்டு செல்லும்போது சப்தமாக கலிமா போன்றவைகளை கூறுவது வழிகேடு.*

*17. தல்கீன், நாள் குறிப்பிட்டு கத்தம் பாத்திஹா ஓதுவது வழிகேடு.*

*18. மரணித்தவருக்காக குர்ஆன் ஓதுவது வழிகேடு.*

*19. ஜும்ஆவில் மஹ்ஷர் ஓதுவது வழிகேடு.*

*20. சுப்ஹ் தொழுகையில் ருகூவுக்குப் பின் குனூத் ஓதுவது வழிகேடு.*

*21. தொழுது முடிந்தபின் கூட்டுப் பிரார்த்தனை செய்வது வழிகேடு.*

*22. நேர்ச்சை செய்யப்பட்ட பிராணிகளை உண்பது ஹராமாகும்.*
என்பனவாகும்.

## இருவழிக்கு ஒருவழித் தேர்வு மார்க்க மாநாட்டின் சாரம்ச வரலாறு

1951 புரட்டாசி மாதம் 15ம் தேதி சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு கல்முனை முற்றவெளியில் வைத்து விவாதத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் கல்முனை தொகுதியின் பாராளு மன்ற பிரதிநிதி இராசவாசல் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் ஜேபி.யு.எம். கல்முனை பிரதேச சபை தலைவர் அவர்களின் தலைமையில் விவாதத்திற்குரிய மாநாடு ஆரம்பமாயிற்று. மௌலானா மௌலவி முஹம்மத் அலி மரைக்கார் பின் அஹ்மத் மரைக்கார் அவர்கள் நீதிபதியாக நியமிக்கப்பட்டார்கள். காரிய தரிசியாக மௌலவி அஸ்ஸெய்யித் பழ்லுல்லாஹ் மௌலானா அவர்கள் அமர்த்தப்பட்டிருந்தார்கள். மௌலவி ஏ.எம்.இப்ராஹீம் அவர்களின் கிராஅத்துடன் கூட்டம் துவங்கிற்று.

அன்ஸார் சுன்னத் சார்பாக வருகை தந்தவர்கள்

1. தர்வேஷ் பக்ரி.
2. மௌலவி அஹ்மத் குர்ணி.
3. நெய்னா முஹம்மத் ஆலிம்.
4. ஏ.எச்.முஹம்மத் இஸ்மாயீல் ஆலிம்.
5. யு.எல்.எம்.குத்தூஸ்.

ஆகியோருடன் பெயர் சொல்லப்படாத நான்கு நபர்களுமாக மொத்தம் ஒன்பது பேர் கலந்து கொண்டனர். இவர்களில் தர்வேஷும் அஹ்மத் குர்ணியும் தான் பேச்சாளராக இருந்தனர்.



நத்வத்துல் உலமாசபை சார்பாக வருகை தந்தவர்கள்

1. எம்.முஹம்மத் இப்ராஹீம் ஆலிம் காத்தான்குடி.
2. எம்.எச்.முஹைதீன் ஆலிம் மருதமுனை.
3. எஸ்.எம்.ஏ.முஹம்மத் இஸ்மாயீல் ஆலிம் கல்முனைக்குடி.
4. பி.எம்.மக்பூல் ஆலிம் கல்முனைக்குடி.
5. எஸ்.எம்.கே.அப்துல்காதர் மௌலானா சாய்ந்தமருது.
6. ஏ.எம்.முஸ்தபா ஆலிம் சம்மாந்துறை.
7. எஸ்.எல்.முஹம்மத் இஸ்மாயீல் ஆலிம் நிந்தவூர்.
8. இ. எல். முஹம்மத் இஸ்மாயீல் ஆலிம் அட்டாளச்சேனை.
9. ஏ. எம். புகாரி ஆலிம் அக்கரைப்பற்று.

ஆகிய ஒன்பது நபர்களாகும்.

விவாத மன்றத்தை சுற்றி முள்கம்பி வேலியிடப்பட்டிருந்த தோடு காவல்துறையைச் சார்ந்த ஏ.எஸ்.பி. உட்பட பதினாறு போலீஸ் அதிகாரிகளின் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் ஒழுங்குபடுத்தப்பட்ட இடத்தின் வலப்பக்கமாக நத்வத்துல் உலமா சபையைச் சார்ந்தவர்களும் இடப்பக்கமாக அன்ஸார் சுன்னத் சங்கத்தினரும் மத்தியில் தலைவர், நீதிபதி, காரியதரிசி போன்றோரும் அவரவருக்குரிய ஆசனங்களில் அமர்ந் திருந்தனர். நுழைவாயிலுக்குரிய அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டி ருந்தோர் உள்ளேயும் மற்றவர்கள் வேலிக்கு அப்புறமாக இருந்தும் விவாதத்தை கவனித்தனர். இதன்றி ஆயிரக்கணக்கான உலமாக்களும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களும் இலங்கை யின் பல பாகங்களிலிருந்தும் வருகை தந்திருந்தனர்.

விவாதத்திற்கான நிபந்தனைகள் முதலில் தலைவரால் வாசிக்கப் பட்டதை தொடர்ந்து விவாதம் ஆரம்பமாயிற்று. முதன் முதலாக தர்வேஷ் அழைக்கப்பட்டார். விவாதத்தின் முதல் சுற்று மதியம் இரண்டு மணிவரை நடைபெற்றது. அதுவரை ஆறு விஷயங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. அது,...

*1.தல்கீன். 2.இறந்தோருக்காக குர்ஆன் ஓதுதல். 3.அல்லாஹ் அர்ஷில் தான் இருக்கிறான். 4.ஜனாஸாவிற்குப் பின்னால் தக்பீர் கூறுதல்,*

**சாம்பிரானி போடுதல். 5.தொழுகை மூலமாக மையித்திற்கு பிரயோஜனம் அளித்தல் ஆகியவற்றோடு இன்னொரு விஷயமுமாகும்.**

இந்த ஆறு விஷயங்களுக்கும் பதிலளிப்பதற்காக நத்வத்துல் உலமா சார்பில் மௌலவி எஸ்.எம்.ஏ.முஹம்மத் இஸ்மாயீல் ஆலிம், மௌலவி எம்.எம்.இப்ராஹீம் ஆலிம், எஸ்.எல்.முஹம்மத் இஸ்மாயீல் ஆலிம், இ.எல்.முஹம்மத் இஸ்மாயீல் ஆலிம், ஏ.எம்.முஸ்தபா ஆலிம், ஏ.எம்.புகாரி ஆலிம் அவர்களும் வந்திருந்தனர்.

அதன்பின் பகல் இரண்டு மணிக்கு மதிய உணவுக்காக விவாதம் ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும் ஆரம்பமாயிற்று. இரண்டாம் சுற்றுக்கான நேரம் வந்தது. நத்வத்துல் உலமா சபையைச் சார்ந்தவர்கள் ஆஜராகி அரைமணி நேரமாகியும் தர்வேஷும் அவரை சார்ந்தவர்களும் வரவில்லை. உடனே கூட்ட நிர்வாகிகளும் போலீஸாரும் சென்று அவர்களை அழைக்க அவர்கள் வரமுடியாதென மறுத்து விட்டனர். அதன்பின் அவர்களால் கொண்டு வரப்பட்ட நூல்களனைத்தும் போலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு தர்வேஷ் இல்லாமலேயே விவாதம் நிகழ்ச்சி நிரலின்படி நடைபெற்றது.

தர்வேஷ் வராததால் மேற்கூறப்பட்ட ஏழாவது விஷயத்திலிருந்து இருபதாம் விஷயம் வரை விவாதிக்கப்பட்டு பிற்பகல் 4-30 மணியளவில் நீதிபதி அல்லாமா மௌலவி முஹம்மத் அலி மரைக்கார் அவர்களால் சத்தியக் கொள்கையான ஸுன்னத் வல் ஜமாஅத்திற்கு முழுக்க முழுக்க மாறுபட்ட தர்வேஷும் அவரைச் சேர்ந்தோரும் வழிகெட்ட வஹ்ஹாபியக் கொள்கைவாதிகள் எனத் தீர்ப்பளிக்கிறேன் என்னும் பத்வாவாகிய மார்க்கத் தீர்ப்பை வாசித்தார். இவையனைத்தும் அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகளாகும்.

அன்று தர்வேஷால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களைத் தான் இன்று நம்மிடையேயுள்ள அனைத்து இயக்கங்களும் பிரச்சாரம் என்னும் பெயரில் வாந்தியெடுத்துக் கொண்டிருப்பது நாடறிந்த உண்மையாகும். இவ்வியக்கங்கள் பல்வேறு பெயர்களில் புதுப் புது தோற்றங்களில் ஒவ்வோர் காலக்கட்டத்திலும் தோன்றிக் கொண்டுதான் உள்ளன. இந்த வகையில் ஒரு விசித்திரமான தோற்றத்தில் அனைத்து பாமர மக்களையும் கவர்ந்திழுக்கும் வண்ணம் ஒரு இயக்கமொன்று இந்த நாட்டை வந்தடைந்தது. அதைப்பற்றி இப்போது நாம் பார்ப்போம்.



திங்களெங்கோமான் தாஹா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் முன்னறிவிப்பின் படி நஜ்த் என்னும் ஊரில் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் என்பாரின் தோற்றம் ஏற்பட்டது. அவ்வியக்கம் தனது தீய கொள்கைகளை (கிதாபுத் தௌஹீத்) என்னும் நூல் வழியாக எடுத்துக் காட்டியது. அந்த நூலை உர்து பாஷையில் இந்திய தேசத்தை சேர்ந்த மௌலவி இஸ்மாயீல் தெஹ்லவி என்பார் (தக்வியத்துல் ஈமான்) என்னும் பெயரில் மொழியாக்கம் செய்து இந்திய மண்ணில் முதன்முதலாக வஹ்ஹாபியக் கொள்கையை பரப்பினர்.

இக்கொள்கைக்கு பலமான எதிர்ப்புக் கிளம்பி இஸ்லாமிய ஷரீஅத் படி இஸ்மாயீல் தெஹ்லவி கொல்லப்பட்டார். அதன் பின் அக்கொள்கைகளை இவருடைய சிஷ்யர்களான ரஷீத் அஹ்மத் கங்கோஹி, காஸிம் நானூத்வி, கலீல் அஹ்மத் அம்பேட்டி, அஷ்ரப் அலி தானவி போன்றோர் மிகவும் போற்றிப் புகழ்ந்த தோடு இஸ்மாயீல் தெஹ்லவியை ஷஹீத் என்றும் பறைசாற்றினர். மேற்கூறப்பட்ட அனைவரையும் தமது குருமார்களாக ஏற்றுக் கொண்டவர் தான் இல்யாஸ் காந்தல்வி என்பவராகும். இவரால் தோற்றுவிக்கப்பட்ட இயக்கம்தான் முகல்லிதுகளான வஹ்ஹாபிகள் என்னும் பெயரில் காட்சி தருகின்றனர். இதனுடைய நோக்கமும் வஹ்ஹாபியக் கொள்கையைப் பரப்புவது தான்.

இவ்வியக்கம் இலங்கை திருநாட்டுக்கு வந்தபோது அதற்கு எதிராக மாத்தறையில் கோட்டக்கரை ஜும்ஆ பள்ளியில் 8-8-1965ம் நாள் இஜ்திமா ஒன்று நடத்தப்பட்டது. அப்போது இதனுடைய முகமூடியை கிழித்தெறிய இம்மாநாட்டில் சங்கைக்குரிய மௌலானா மர்ஹூம் சூபி ஷெய்கு அப்துல்காதிர் ஆலிம் அவர்களுக்கும் பனிரெண்டு முகல்லிது வஹ்ஹாபிகளுக்கும் இடையே விவாதமொன்று நடைபெற்றது. இதற்கு இருசாராரின் சம்மதத்தோடு கீழ்கண்டோர் நீதிபதிகளாக தேர்வு செய்யப்பட்டனர். அவர்கள்,...

1. ஷெய்குல் பஹ்ஜி அல்ஹாஜ் மௌலவி எச்.எல்.அப்துல் ஹமீத் (காலி அரபிக் கல்லூரி அதிபர்)

2. மௌலவி பாஸில் ஏ.எல்.முஹம்மத் கவுஸ் பாகவி.

3. ஜனாப் எம்.ஐ.எம்.காஸிம் ஹாஜியார் (காத்தான்குடி பிரதேசத் தலைவர்)

இக்கூட்டத்திற்கு ஜனூப் எம்.என்.எம்.ழியாவுத்தீன் ஜே.பி. ஆலிம் அவர்கள் தலைமை தாங்கினூர்கள். இந்த விவாதத்தில் தாங்கள் தோல்வியுற்று விடுவோம் என்பதை தெரிந்துகொண்ட அவ்வியக்கத்தார் எந்தவொரு முடிவும் ஏற்படாத வண்ணம் கூச்சலையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி விவாத அரங்கை விட்டு வெளியேறியதோடு விவாதத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அனைத்தையும் தப்பும் தவறுமாக திரித்து எழுதி உண்மைக்குப் புறம்பான பிரசுரம் ஒன்றை வெளியிட்டனர்.

ஆனூல் உண்மையில் நடந்தது என்ன? மூன்று நீதிபதிகளில் ஒருவரான ஏ.எல்.முஹம்மத் கவுஸ் பாகவி அவர்களின் கையெழுத்தை அவ்வியக்கத்தினர் அவரிடமிருந்து திருட்டுத்தன மாக பெற்று விவாத நிகழ்ச்சியை திரித்துத் தங்களுக்குச் சாதகமாக வெளியிட்டனர். இதை பொய்யென்று நிரூபித்து (விவேகமில் லாத மாநாடும் வீணூன தீர்ப்பும்) என்னும் தலைப்பில் சுன்னத் வல் ஜமாஅத்தினரால் பிரசுரமொன்றும் வெளியிடப்பட்டது. அதில் மௌலவி கவுஸ் அவர்களால் **22-8-1965**ல் தன்னிடம் பொய் சொல்லி கையெழுத்து பெற்றுச் சென்றதாக எழுதப்பட்ட மடலும் பிரசுரிக்கப்பட்டது. அசல் பிரதி, நூலின் கடைசியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இவ்வியக்கத்திற்கு எதிராக அதன் உண்மை நிலைகளை தெளிவுபடுத்தத் தொகுக்கப்பட்ட தமிழ் நூல்கள் இன்றும்கூட பாதுகாப்பாக இருக்கின்றன. நலன் விரும்பிகள் அவைகளை மறுபிரசுரம் செய்து சத்தியத்தை பாதுகாக்க முன்வரலாம். இன்னும் சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கையை முழுக்க முழுக்க ஆதரிக்கும் உலமாக்கள் மற்றும் பாமரர்கள் படித்தவர்கள் போன்றோர் அவ்வியக்கத்தில் சேர்ந்து அவர்களை நாம் திருத்தலாம் என்று நினைப்பார்களாயின் அவர்களின் எண்ணம் கானல் நீராகத் தான் முடியும். அத்துடன் அவர்களுடைய குடும்பத்தை சேர்ந்த வர்களும் தவறூன வழியில் செல்வதற்கு இவர்களே காரணமாகி விடக்கூடாது. அத்துடன் இவ்வியக்கம் வஹ்ஹாபிகளின் இயக்க மல்ல என்பதை நிரூபிக்க குரல் கொடுப்போர் மேற்கண்ட ஆதா ரங்கள் குறித்து என்ன பதில் தருவார்கள் என்பதை தெளிவு படுத்துவதோடு அவர்கள் உலமாக்களால் அப்போது கூறப்பட்ட தாக குற்றம் சாட்டப்படும் கருத்துக்களுக்கு விளக்கம் தருவதே இப்போது போதுமானதாகும். புதிதாக ஏதும் விளக்கம் தரத் தேவையில்லையென்று நினைக்கிறோம். நாம் அக்கருத்துக்கள்



அனைத்தையும் வன்மையாக எதிர்ப்பவர்கள். பின்னும் சுன்னத் வல் ஜமாஅத்தினர் தான் சத்தியத்தில் நிலைத்து நிற்கும் கொள்கை வாதிகள்.

அல்லாஹ்வின் நல்லடியார்களே! அருமை நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களின் நேசர்களே! மனிதனைகப் பிறந்தவர்கள் அனைவரும் அல்லாஹ்வால் கட்டளையிடப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவது அவர்களின் மீது கட்டாயமான கடமையாகும். இதில் மாறு செய்பவன் தண்டிக்கப்படுவான். அதேநேரம் அவனை மன்னிப்பது அல்லாஹ்வின் விருப்பத்தை பொறுத்ததாகும். இதில் இறையாணையை நிறைவேற்றியவனுக்கு அவன் சன்மானம் வழங்கி சிறப்பிக்கிறூன். அதேநேரம் அவனூல் நிகழ்த்தப்படும் வணக்கங்கள் அவனை சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லாது. இன்னும் ஒரு மனிதனின் வெளிப்படையான வணக்க வழிப்பாட்டை கவனத்தில் கொண்டு அவனை சுவர்க்கவாதி எனக் கூற யாருக்கும் உரிமை கிடையாது. மாறூக சுவர்க்கம் செல்லுதல் என்பதெல்லாம் அல்லாஹ்வின் பேருபகாரத்தைக் கொண்டுதான். இன்னும் அல்லாஹ்வுடைய ரஹ்மத்தைக் கொண்டுதான் ஒருவன் சுவர்க்கம் செல்ல முடியும் என்னும் நபிமொழி நமக்குக் கூறும் ஒரு மிகப்பெரும் யதார்த்தமான விஷயம் என்னவென்றூல் யாரை நமது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பொருந்திக் கொண்டார்களோ அவர்தான் சுவர்க்கம் செல்ல முடியும் என்பதேயாகும். மேலும் நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அல்லாஹ்வின் ரஹ்மத் என்பது அல்லாஹ்வின் வாக்காகும்.

ஆதலால் ஒரு மனிதனுடைய வணக்கம், உடல் பருமன், ஆடை, மொழிவன்மை போன்றவைகளை கவனித்து நாம் ஏமாளி களாகி விடக்கூடாது. இதை நிரூபிக்க வரலாற்றின் உண்மை சம்பவம் ஒன்றை உங்களின் பார்வைக்கு தருகிறோம். படித்துப் பயன்பெறுங்கள்.

ஹிஜ்ரி **511**ம் ஆண்டு ஷவ்வால் மாதம் பதினூராம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை சூரியோதய நேரத்தில் ஹலப் என்னும் ஊரில் பிறந்து ஹிஜ்ரி **580**ம் ஆண்டு ஷவ்வால் மாதம் பதினூராம் நாள் புதன்கிழமையன்று இறையடி சேர்ந்து திமிஷ்க்கில் நல்லடக்கம் செய்யப்பட்ட ஒருவரே அல் ஆதில் நூருத்தீன் மஹ்மூத் பின் ஸங்கீ ஷஹீத் என்னும் அரசராகும்.

இப்பெரியாரின் கப்ரைப் பற்றி இமாம் இப்னு கதீர் அவர்கள், இவருடைய கப்ரு தரிசிக்கப்படுவதாகவும் ஸியாரத்துச் செய்வோர் அங்கிருந்து பரக்கத்துப் பெற்று செல்வதாகவும் கூறுகின்றனர். இன்னும் இமாம் தஹபி அவர்களும் இப்பெரியாரை மக்கள் ஸியாரத்துச் செய்வதாகவும் கூறுகின்றனர். இப்பெரியாரின் கனவில் ஒருநாள் இரவு அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மூன்றுமுறை தோன்றி இரு நபர்களை சுட்டிக் காட்டி அவ்விருவரும் தனக்கு தீங்கு விளைவிப்பதாகக் கூறினர். கனவைக் கண்ட அன்றிரவே தனக்கு நெருக்கமான அமைச்சர் ஜமாலுத்தீன் என்பாரை அழைத்து நடந்ததைக்கூறி விஷயத்தை மறைத்து வைக்குமாறும் உடனே மதீனாவுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறும் கூற, ஏற்பாடு செய்யப்பட்டு இருபது சிப்பாய்களோடு பதினாறு நாட்களில் மதீனா வந்து சேர்ந்தனர்.

இதில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களால் அடையாளம் காட்டப்பட்ட அவ்விருவரையும் கண்டு கொள்வதற்காக எடுக்கப்பட்ட முயற்சி பலனளிக்கவில்லை. இந்நிலையில் அங்கே மக்ரிப் - மொராக்கோ நாட்டைச் சேர்ந்த இருவர் மட்டும் வரவில்லையென்றும் அவ்விருவரும் யாரிடமிருந்தும் எதையும் பெறுவதில்லை என்றும் மாறாக அவர்கள் மக்களுக்கு வாரிவழங்கும் தனவந்தர்கள் என்றும் அரசருக்குச் சொல்லப்பட்டது. அதுமட்டுமின்றி,...

فاثنى عليهما اهل المدينة بخير كثير وقالوا انهما صائمان الدهر ملازمان الصلوات فى الروضة الشريفة وزيارة النبي صلى الله عليه وآله وسلم وزيارة البقيع كل يوم بكرة وزيارة قباء كل سبت ولا يرذان سائلا.

"அவ்விருவரும் சதா நோன்பு நோற்பதாகவும், ரௌழா ஷரீபில் தொழுகையை நிறைவேற்றுவதாகவும், அதிகமதிகம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் புனிதமிகு ரௌழா ஷரீபை அவர்கள் ஸியாரத்துச் செய்வதாகவும், தினந்தோறும் அதிகாலையில் ஜன்னத்துல் பஃகீயை தரிசிப்பதாகவும், சனிக்கிழமை தோறும் மஸ்ஜிதுல் குபாவை தரிசிப்பதாகவும், கேட்போருக்கெல்லாம் இல்லையென்று சொல்லாது வாரி வாரி வழங்குவதாகவும் அவர்களை பற்றி புகழ்ந்து மக்கள் பேசினர்." அதுகேட்ட அரசர், அவ்விருவரையும் பார்க்க வேண்டுமென்று சொல்ல அவ்விருவரும் வருகை தந்தனர். கனவில் காட்டித் தரப்பட்டவர்கள் இவர்கள்தான் என்பதை அரசர்



கண்டு கொண்டாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவர்கள் தங்கியிருக்கும் வீட்டுக்குச் சென்று பார்த்தபோதுஅங்கே அதிகமான பணங்களும் வேறுசில பொருட்களும்தான் இருந்ததேயன்றி வித்தியாசமான எதுவும் இல்லாததால் அரசர் தனியாக வீட்டை சுற்றிப் பார்த்த போது அங்கே விரிக்கப்பட்டிருந்த பாய் ஒன்றை உயர்த்திப் பார்க்க,...

فرفع حصيرا فى البيت فرأى سردابا محفورا ينتهي الى صوب الحجرة الشريفة فإرتاعت الناس لذالك.

"அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் புனிதமிகு ரௌழா ஷரீபுக்குச் சென்று சேரும் சுரங்கப் பாதையொன்று தோண்டப்பட்டிருப்பதைக் கண்ட அனைவரும் திகைத்துப் போயினர்."

உடனடியாக அவ்விருவரும் கைது செய்யப்பட்டனர். அதன் பின் கடுமையான வேதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே அவர்கள் தாங்கள் கிறிஸ்தவர்களால் அனுப்பப்பட்டவர்கள் என்பதையும் தாங்களும் கிறிஸ்தவர்கள் தான் என்பதையும் ஒப்புக்கொண்டனர். இதன்பின் அவ்விருவரும் கொல்லப்பட்டனர். அதற்குப்பின் ரௌழா ஷரீபை சுற்றி ஈயத்தினால் ஆன வேலி உள்ளே போடப்பட்டது.

சகோதரர்களே! பார்த்தீர்களா! அல்லாஹ்வுடைய ரஸூலின் விரோதிகள் எந்த வேஷத்தில் செயல்பட்டுள்ளார்கள் என்பதை கவனித்தீர்களா? 900 ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் அனைவராலும் கண்டுகொள்ள முடியாமல் போயிருக்கும்போது இப்போது அவர்களை உங்களால் கண்டுகொள்ள முடியுமா என்ன? எனவே சுன்னத் வல் ஜமாஅத்தைத் தவிரவுள்ள அனைத்து இயக்கங்களும் இஸ்லாத்தின் பரமவிரோதிகளாகும். ஆதலால் அவர்களின் சகவாசம் உங்களுக்கு வேண்டாம். இன்னும் அவர்கள் தம்மை சுன்னத் வல் ஜமாஅத்தினர் எனப் பிரச்சாரம் செய்து கொண்டாலும் வஹ்ஹாபிசம் வழிகேடு என்பதை அவர்கள் உணர்ந்தும் அவர்கள் தம்மை அடையாளம் காட்டிக் கொள்ளாமல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ரௌழா ஷரீபையும் மஸ்ஜிதுன் நபவியையும் பிரிக்க வேண்டும். மஸ்ஜிதுன் நபவிக்குள் கப்ரு இருப்பது வழிகேட்டுக்குரிய செயலென்று சொல்லும் தரங்கெட்ட இயக்கவாதிகளே! தனது திருவுடலை திருட வந்தவர்கள் பற்றி முன்னறிவிப்புச் செய்த நபியவர்கள், அம்மன்னனிடம்; மக்கள் தனது கப்ரை பள்ளிக்குள்ளே வைத்துள்ளனர். கப்ரு இருக்கும் பள்ளிவாயிலில் தொழக்கூடாது. ஆதலால் எனது கப்ரை

யும் பள்ளியையும் தனித்தனியாகப் பிரித்து விடுங்களென்று ஏன் சொல்லாமல் விட்டுவிட்டார்கள்? அதுசரி. மனிதர்களாக இருந்தாலல்லவா இவர்கள் சிந்திப்பார்கள்!

பின்னும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களால் அவர்களின் பள்ளிவாயிலில் தொழுது கொண்டிருந்த ஒருவனை கொலை செய்யுமாறு தமது தோழர்களுக்கு கட்டளையிட்டார்களே நபியவர்கள்! அக்கொடியவனின் வாரிசுகள் இவர்கள். ஆதலால் வெளித்தோற்றத்தை கண்டு ஏமாந்துவிட வேண்டாமென்று எச்சரிக்கிறோம்.

மேலும் பள்ளியின் உட்பகுதியில் (தொழுவோருக்கு இடைஞ்சலை விளைவிக்கும் வண்ணம் ஹராமான முறையில்) புத்தகம் வாசிக்கும் வழக்கம் என்பது முதன் முதல் கி.பி.1806 - ஹிஜ்ரி 1221ம் ஆண்டு முஹர்ரம் மாதம் ஏழாம் நாள் வெள்ளிக்கிழமை அன்றுதான் மக்கா முகர்ரமாவின் ஹரம் ஷரீபில் வைத்து நஜ்திய வஹ்ஹாபியப் புத்தகத்தை வாசிப்பதன் மூலமாக முதன்முதலாக துவக்கி வைக்கப்பட்டது. இதைப் பின்பற்றித்தான் பள்ளியின் உட்பகுதியில் புத்தகம் வாசிக்கும் வழக்கத்தை முகல்லிதுகள் ஏற்படுத்தினர்.

# நஜ்திய உலமாக்களுடன் ஒரு நிமிடம்

ஷைகு நஜ்தி முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபால் தோற்றுவிக்கப்பட்ட மத்ஹபானது வழிகேட்டின் ஊற்றுக் கண்ணாக திகழ்ந்ததோடு, முஸ்லிம்களும் முவஹ்ஹிதீன்களும் காபிர்களெனத் தீர்ப்பளிக்கப்பட்டு ஆண்கள் கொல்லப்பட்டும் பெண்கள் மான பங்கப்படுத்தப்பட்டும் கேவலப்படுத்தப்பட்டனர். அத்தோடு தாங்கள் விரும்பியவாறு எல்லாம் குர்ஆனுக்கும் ஹதீதுக்கும் விளக்கமளித்தனர். இவையனைத்தும் உண்மையிலேயே புண்ணிய பூமியான குர்ஆன் இறங்கிய மண்ணில் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களும் அவர்களது அருமைத் தோழர்களும் நடமாடிய மண்ணிலேயே இப்படிப் பட்டதோர் நிலை ஏற்படுத்தப்பட்டதென்றால் அவர்களுக்கும் நமக்கும் என்ன தொடர்பிருக்க முடியும்? சுன்னத் வல் ஜமாஅத்தினரை முஷ்ரிக்குகள் என்றும், அஜமிகளான நம்மை அடிமைகளென்றும்கருதக்கூடிய சுஊதிய நஜ்த் உலமாக்களையும், இப்னு சுஊதின் மன்னர்களையும் இப்போதும்கூட நாம் மதிக்கிறோம் என்றால் அவர்கள் தங்களின் நாவால் இன்னும் ஏகத்துவக் கலிமாவை உச்சரிக்கிறார்களே என்னும் ஒரே காரணத்திற்காகத் தான். ஆம். நாவால் கலிமாவை உச்சரித்து உள்ளத்தளவில் முனாபிக்காக இருப்போரை நாம் மதிக்கிறோம். அதேநேரம் சகல நிலைகளிலும் முஃமின்களாக இருக்கும் நம்மை அவர்கள் உதாசீனப்படுத்துகிறார்கள்.

இவர்களால் இப்படியெல்லாம் முன்னொரு காலத்தில் தானே நடைபெற்றது. தற்போது அப்படியெல்லாம் இல்லையே. முன்பு

நடந்ததைச் சொல்லி இப்போது முஸ்லிம்களின் ஒற்றுமையை
நாம் சிதைக்கப் பார்க்கிறோம் என்பதாக நீங்கள் சொல்லலாம்.
அதனால் தான் இவர்கள் இஸ்லாமியர்களுக்கு இழைத்த கொடுமை
களையெல்லாம் இவர்களை ஆதரிக்கும் இந்திய உலமாக்களைக்
கொண்டே ஆதாரப்படுத்திய நாம் அவைகளெல்லாம் அப்பட்ட
மான உண்மை என்பதோடு இன்றும் அதேநிலை தான் தொடர்ந்து
கொண்டிருக்கிறது என்பதையும் குவைத் நாட்டைச் சார்ந்த
முன்னாள் கல்வி அமைச்சரும் இஸ்லாமிய சட்டசபை அமைச்சரு
மாக இருந்த அஸ்ஸெய்யித் யூஸுஃப் இப்னு ஹாஷிமுர் ரிபாயி
தவ்வலல்லாஹு ஹயாதஹு அவர்களின் நூலாகிய "**நஜ்திய சகோதர உலமாக்களுக்கோர் உபதேசம்**" என்னும் நூலிலிருந்து சில
கருத்துக்களை எடுத்து அதன்மூலம் உங்களோடு நாம் பேசிக்
கொண்டிருக்கிறோம். அத்துடன்,...

لايجوز اتهام المسلمين الموحدين الذين يصلون معكم ويصومون ويزكون ويحجون البيت ملبين مرددين لبيك اللهم لبيك لاشريك

"**1. உங்களோடு தொழுது கொண்டும் நோன்பு நோற்றுக் கொண்டும் ஸகாத் கொடுத்துக் கொண்டும் திரும்பத்திரும்ப ஆண்டவனே உனக்கே நாங்கள் வழிப்பட்டோம். உனக்கு யாரும் நிகரில்லை. நிச்சயமாக புகழனைத்தும் உன்னையே சாரும். அதிகாரமும் உனக்கே உரியது எனக் கூறும் முவஹ்ஹிதீன்களான முஸ்லிம்கள் மீது பழிசுமத்தக் கூடாது**"
என்று சொல்லப்பட்ட மேற்கண்ட பண்புக்குரிய நல்லடியார்
களுடைய விஷயத்தில் இப்போதும் முஷ்ரிக்குகள் என்னும்
கருத்தில் தான் இவர்கள் இருக்கின்றனரா இல்லையா?

انكم تغلقون مسجد رسول الله صلى الله عليه وآله وسلم بعد صلاة العشاء مباشرة وهو الذي لم يغلق قبلكم في حياة المسلمين وتمنعون الناس عن الاعتكاف والتهجد فيه.

"**2. இஷா தொழுகை முடிந்ததும் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் கண்ணியத்திற்குரிய பள்ளிவாசலை மூடி விடுகிறீர்கள். இது இஸ்லாமிய வரலாற்றில் எங்குமே காணப்படாத ஒன்றாகும். இவ்வாறே அப்பள்ளிவாசலில் இஃதிகாஃப் இருப்பதையும், தஹஜ்ஜுத் தொழுவதையும் தடுக்கிறீர்கள்**" இதுஏன்? இதற்கு என்ன
காரணம்? இந்த உரிமையை உங்களுக்குத் தந்தது யார்? உங்களை
யாராலும் கேட்கமுடியாதென்னும் அகம்பாவம் தானே. உங்களுக்கு
உலகத் திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மீது



ஏன் இந்த வெறுப்பு?

تمنعون دفن المسلم الذي يموت خارج المدينة ومكة المكرمة من الدفن وهما من البقاع الطيبة المباركة الذي يحبها الله ورسوله فتحرمون المسلمين ثواب الدفن في تلك البقاع الشريفة المباركة.

"**3. புண்ணிய பூமிகளான மதீனா முனவ்வரா மற்றும் மக்கா முகர்ரமாவின் வெளிப்பகுதியில் இறப்பெய்தும் முஸ்லிம்களை அங்குள்ள ஜன்னத்துல் முஅல்லாவிலும் ஜன்னத்துல் பகீஃயிலும் நல்லடக்கம் செய்வதை ஏன் தடுக்கிறீர்கள்? அல்லாஹ்வும் அவனது ரஸூலும் நேசிக்கின்ற அப்புண்ணிய பூமியில் நல்லடக்கம் செய்யப்படுவதால் ஏற்படும் நன்மைகளை பெற்றுக் கொள்வதை விட்டும் முஸ்லிம்களை நீங்கள் தடுக்கிறீர்கள்.**"

ஜன்னத்துல் பகீஃ பற்றி அண்ணலெங்கோமான் ஸல்லல்லாஹு
அலைஹி வஸல்லமவர்கள் என்ன சொல்கிறார்களென்று பாருங்கள்.

يبعث منها يوم القيامة سبعون الفا على صورة القمر ليلة البدر يدخلون الجنة بغير حساب.

"**அதிலிருந்து மறுமை நாளன்று பதினான்காம் பக்கத்து நிலவைப் போன்ற தோற்றத்தில் எழுபதாயிரம் பேர் எழுப்பப்படுவார்கள். அவர்களனைவரும் கேள்வி கணக்கின்றி சுவர்க்கத்திற்குள் நுழைவார்கள்**" என்றும்,...

من دفناه في مقبرتنا هذه شفعنا له او شهدنا له.

"**எங்களது இம்மையவாடியில் யார் நல்லடக்கம் செய்யப்படுகிறாரோ அவருக்கு நாம் ஷபாஅத்துச் செய்வோம். அல்லது அவருக்கு நாம் சாட்சி சொல்வோம் என்கிறார்கள் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்**" நூல்: அத்துர்ரதுஸ் ஸமீனா ஃபீ தாரீகில்
மதீனா, பக்கம்-229.

சுவூதியின் வஹ்ஹாபிய உலமாக்களே! இந்த நபிமொழிகள்
உங்களுக்குத் தெரியாதா? அல்லது நீங்கள் ஷபாஅத்தை பொய்
யாக்கும் கூட்டமா?

"**4. விசுவாசிகளே! உங்களின் தொனியை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் குரலுக்கு மேல் உயர்த்தாதீர்கள். இன்னும் உங்களில் ஒருவரை இன்னொருவர் அழைப்பதைப் போன்று நபியவர்களை அழைக்காதீர்கள். அன்றி அவ்வாறு செய்வீர்களாயின்**

உங்களது வணக்கமெல்லாம் தவிடு பொடியாகிவிடும். ஆனால் அதை உங்களால் புரிந்துகொள்ள முடியாது.''

என்பதாக அல்லாஹ் வண்மையாக எச்சரிக்கை செய்த பின்னரும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் தர்பாரில் அவமரியாதையாக நின்றுகொண்டு உரத்த குரலில் சப்தமிடுவதற்காக சிலரை அமர்த்தியுள்ளீர்களே. அல்லாஹ்வை அஞ்சாத யூத, கிறிஸ்தவர்களின் பொம்மைகளா நீங்கள்?

''5. அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங்களின் முபாரக்கான கரத்தால் சகோதரர் உஸ்மான் இப்னு மழ்வூன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் கப்ரை அடையாளம் கண்டு கொள்வதற்காக கல்லொன்றை வைத்தார்கள். அக்கல்லானது''

وإن أشدنا وثبة الذي يثبّ قبر عثمان بن مظعون حتى يجاوزه.

''யார் அக்கல்லை பாய்ந்து தாண்டுகிறாரோ அவர் எங்களில் அதிக உயரம் தாண்டுகிற ஒருவரெனக் கணிக்கப்படும் அளவுக்கு அக்கல் உயரமானதாக இருந்தது.''

ஆனால் நீங்கள் அருமைத் தோழர்கள், உம்மஹாத்துல் முஃமினீன்கள், அஹ்லுல் பைத்துக்கள் போன்றோரின் புனிதமிகு கப்ருகளையெல்லாம் சுடுகாட்டைப் போலாக்கி விட்டீர்கள். குப்பாக்கள் மீது உங்களுக்கு ஏன் இத்தனை காழ்ப்புணர்வு?

''6. அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் தர்பாருக்கு அருகிலேயே காரியாலம் ஒன்றை அமைத்து நபியவர்களின் முன் அழுது பிரார்த்திப்பவரையும், உள்ளச்சத்தோடு காணப்படுபவரையும், அதிகமாக ஸியாரத்துச் செய்பவரையும் அழைத்து விசாரணை நடத்துவது ஏன்?''

سمحتم لاحد المحسنين من اهل المدينة بهدم واعادة بناء مسجد ابي بكر الصديق رضى الله عنه في جبل الخندق على حسابه الخاص وبعد الهدم اوقفتم رخصة البناء.

''7. கொடை வள்ளல்களில் ஒருவர் தமது சொந்தச் செலவில் கந்தக் மலையடிவாரத்தில் அமைந்துள்ள ஹழ்ரத் ஸெய்யிதுனா ஸித்தீகுல் அக்பர் ரழியல்லாஹு அன்ஹுவின் பள்ளிவாசலை உடைத்து புனர் நிர்மாணம் செய்வதற்கு அனுமதித்தீர்கள். ஆனால் பழைய பள்ளிவாசல் உடைக்கப்பட்ட பின் அப்பள்ளியை புனர் நிர்மாணம் செய்யவிடாமல்



அவரை ஏன் தடுத்து விட்டீர்கள்? அத்துடன் அப்பள்ளி உடைக்கப்பட்டதைக் கண்டு சந்தோஷப்படுகிறீர்கள்.'' இதுதான் ஒரு முஸ்லிமின் முஃமினின் அடையாளமா?

''7. ஆரிபுபில்லாஹ் முஹம்மத் சுலைமான் ஜஸூலி ரஹிமஹுல்லாஹ் அவர்களால் கோர்வை செய்யப்பட்ட ஸலவாத்து நூலை ஓதுவதைத் தடுப்பதோடு, மௌலித், மீலாத் போன்ற நிகழ்ச்சிகளையும் வண்மையாக ஏன் கண்டிக்கிறீர்கள்?''

''8. நாஸிருல் அல்பானி, முக்பில் இப்னு ஹாதி போன்ற அல்லாஹ் ரஸூலின் விரோதிகளை அவர்கள் விரும்பும் கருத்துக்களைச் சொல்ல அனுமதித்தது ஏன்?''

அல்பானி அஹ்காமுல் ஜனாயிஸி வபிதயிஹாவிலும், முக்பில் இப்னு ஹாதி ஹவ்வில் அல் குப்பத்தல் மப்னிய்யத அலா கப்ரிர் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் என்பதிலும் பகிரங்கமாக நபியவர்களின் ரௌழா ஷரீபின் மீது கட்டப்பட்டுள்ள குப்பாவை பித்அத்தென்று தீர்ப்பளித்து அப்பள்ளியிலிருந்து நபியவர்களின் கப்ரை அப்புறப்படுத்த வேண்டும். குப்பாவை உடைக்க வேண்டும் எனக்கூறிய பின்னரும் அந்நூலை ஏன் பிரசுரித்துக் கொண்டிருக்கிறீர்கள்?''

அப்படியானால் நீங்களெல்லாம் முன்னொரு காலத்தில் காத்தமுன் நபியவர்களின் திருவுடலைத் திருடவந்த திருட்டுக் கூட்டத்தின் சகாக்கள் தான் என்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?

இந்த முக்பில் பின் ஹாதியின் மாணவர்களில் ஒருவரான அப்துல் அஸீஸ் பின் யஹ்யா என்பார் கவாரிவுல் அஸின்னதி பிர்ரத்தி அலா அதாயிஸ் சுன்னத்தி என்னும் நூலின் 28வது பக்கத்தில் சிலை வணங்கிகள் என்னும் தலைப்பில் எங்களுடைய காலத்தில் சிலை வணக்கங்கள் அதிகரித்து விட்டன. அச்சிலைகளில் ஒன்றுதான் நபியவர்களுடைய புனிதமிகு ரௌழாவாகும் எனக் கூறுகிறார்.

ஷைகு நஜ்தியின் குடும்பத்தார் நமது அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்ற புனிதமிகு ரௌழா ஷரீபை ஒரு சராசரி மனிதன் கூட சொல்ல முடியாத வாக்கியங்களை கொண்டு கொஞ்சங்கூட நாகூசாமல் விமர்சிக்கின்றனர். அதேநேரம் இவர்களுக்கு முழுக்க முழுக்க உதவி செய்யும் அந்நாட்டு மன்னர்களில் ஒருவரான

அமீர் பைஸல் என்பான், அந்த நாட்டின் துணை பிரதமராக இருந்த போது (1959ம் ஆண்டு) இந்தியாவுக்கு வருகை தந்தவர் மகாத்மா காந்தியின் சமாதிக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய தாக நவாயே வக்த் என்னும் பத்திரிக்கை செய்தி வெளியிட்டி ருந்தது கவனிக்கத்தக்கதாகும். நூல்: தாரீக் நஜ்தோ ஹிஜாஸ், பக்கம்-424.

ஷைகு நஜ்தி முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபுக்குப் பின் தோன்றிய வழிகேட்டுக்குரிய தலைவர்களில் அண்மைகாலத்தில் தோன்றிய அல்பானி என்பவர் குறிப்பிடத் தக்கவராவார். இவரை பற்றிய சில தகவல்களை இங்கே உங்களின் பார்வைக்கு வைப்பது மிகவும் உசிதமாக இருக்குமென நினைக்கிறோம்.

அல்பானி என்னும் இவர் 1914ம் ஆண்டு அல்போனியாவின் தலைநகரமான அஸ்கொதரா என்னும் ஊரில் ஒரு வறிய குடும்பத் தில் தோன்றி ஹிஜ்ரி 1420 ஜமாதில் ஆகிர் 22ம் நாள் சனிக்கிழமை அன்று (கி.பி. 1999ல்) இறந்து போனவராகும். அல்போனி யாவின் அதிபர் அஹ்மத் சூகே அந்நாட்டில் மதச்சார்பற்ற ஆட்சியை பிரகடனப்படுத்தியதால் மேற்கத்திய கலாச்சாரம் அம் மக்கள் மத்தியில் பரவி மார்க்கப் பற்றுள்ள பலர் அந்நாட்டை துறந்து துருக்கி, சிரியா போன்ற நாடுகளை நோக்கி இடம் பெயர்ந்தனர்.

இதில் அல்பானியின் குடும்பமும் அப்போது சிரியாவின் தலைநகரான டமாஸ்கஸை சென்றடைந்தது. திருமறை முதல் அரபி இலக்கணம், மொழி இலக்கணம், பிக்ஹ் - போன்ற மார்க்கக் கல்விகளை தமது தந்தையிடமும் நண்பர்களிடமும் கற்றார். சிரியா நாட்டுப் பெரியார் ஒருவரிடம் ஹதீதுக் கலைக்கான இஜாஸாவை - அனுமதியை பெற்றதாகச் சொல்லப்பட்டாலும் அது உண்மை யல்ல. இதுபற்றி அஸ்ஸெய்யித் ஹஸன் அலி சக்காப் என்பார் அல்பானி ஹதீதுக்கலைக்கு இஜாஸா பெற்றிருந்தால் அதைக் காட்டுமாறு அப்போதே சவால் விட்டிருந்தார் என்பது கவனிக்கப் பட வேண்டிய ஒன்றாகும்.

இவருடைய தந்தை நூஹ் நஜாத்தி என்பார் ஹனபி மத்ஹபின் அறிஞர்களில் ஒருவராக இருந்தார் என்பதாக மகாலாத்துல் அல்பானி என்னும் நூலின் 231ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள் ளது. இனி இப்னு தைமிய்யாவின் குடும்பம் முழுவதுமே ஹன்பலி மத்ஹபை பின்பற்றுபவர்களாகவும் அதன்படியே தீர்ப்பு வழங்குபவர்களாகவும் தான் இருந்துள்ளனர். இவ்வாறே



முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபின் குடும்பத்தினரும் ஹன்பலி மத்ஹபின் அடிப்படையில் தான் செயல்பட்டு வந்த தோடு அதன்படியே தீர்ப்பு வழங்குபவர்களாகவும் இருந்துள் ளனர். இந்நிலையில் தமது பெற்றோர்களை வழிகேடர்கள் என அவர்களாகவே கூறிக் கொள்கின்றனர். இந்தநிலை ஏன் இவர்க ளுக்கு ஏற்பட்டது தெரியுமா? இவர்கள் நமது நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அருமை பெற்றோர்களை தவறாக விமர்சித்ததால் அல்லாஹ் அவர்களுடைய பெற்றோர்களை அவர்களைக் கொண்டே விமர்சனம் செய்ய வைத்துள்ளான்.

இதில் ஜனாப் அல்பானி அவர்கள் நமது முன்னோர்கள் அனைவ ரையும் தவறான முறையில் குறைகண்ட ஒருவராகும். முன்னோர்க ளால் எழுதப்பட்ட எந்தவொரு கிரந்தத்திலும் இவர் தவறு காணாமல் விட்டு விடவில்லை. இமாம் சுயூத்தி, இமாம் தஹபி, இமாம் ஹாக்கிம், இமாம் முன்திர், இமாம் இப்னு ஹஜர், இமாம் சுப்கி, இமாம் மனாவி, ஸாஹித் அல்கௌதரி, ஸுவைப் அர்நாவூத், மஹ்மூத் ஸயீத் மம்தூஹ் போன்றோர் மட்டுமல்ல. ஹதீதுக்கலை யின் காற்றைக்கூட சுவாசித்திராத இவர் ஸிஹாஹ் ஸித்தாக்கள் எனப் போற்றப்படும் அனைத்து கிரந்தங்களிலும் பதிவு செய்யப் பட்டுள்ள நபிமொழிகளுடன் மேற்கண்ட நூல்களையும் சேர்த்து கிட்டத்தட்ட 6000 ஹதீதுகளுக்கு முன்னுக்குப் பின் முரணான தீர்ப்புக்களை சொன்னவராகும். இன்னும் இவர் எதற்குமே அருகதை யில்லாதவர் என்பதே நல்லடியார்களின் ஏகமனதான தீர்ப்பாகும்.

மேலும் அல்பானியை குறித்து அவருடைய மாணவர்களில் ஒருவரான இப்ராஹீம் பாஜிஸ் அப்துல் மஜீத் என்பாரால் சொல்லப் பட்டுள்ள தகவலொன்று மகாலாதுல் அல்பானி என்னும் நூலின் 233ம் பக்கத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது,...

كان الشيخ الالبانى يتحلى بصفات قل ان توجد في كثير من العلماء امثاله ومن اهمها التمسك بما يراه صوابا حقا وان خالف رأي الكثيرين ولهذا فقد عاداه من المخالفين من المذهبيين والمتصوفة والمبتدعة.

**"இவருடைய பண்புகளோடு இவரிடம் ஒத்துப்போன அறிஞர்கள் மிக மிகக்குறைவாகும். இவருடைய குணங்களில் முக்கியமானதொரு குணம் என்னவெனில் இவர் எந்தத் தகவலை உண்மையானதென்றும் சரியானதென்றும் நினைக்கிறாரோ அதையே பிடித்துக் கொள்பவராகும்.**

**இந்நிலையில் அவரால் சரிகாணப்பட்ட அத்தகவல் ஏகோபிக்கப்பட்ட தீர்ப்புக்கு மாற்றமானதாகவோ அல்லது எதிரானதாகவோ இருந்தாலும் சரியே. இதனால் பெரும்பான்மையான மத்ஹபுவாதிகளும் சூபிஸவாதிகளும் பித்அத்துக்காரர்களும் இவரை பகைத்துக் கொள்ளலாயினர்.''** என்று கூறுகிறார். இன்னும் இவருடைய பிரத்யேகமான ஆராய்ச்சியின் பலனாக சமுதாயத்திற்கு தரப்பட்ட ஒருசில மார்க்கத் தீர்ப்புக்களை பாருங்கள்.

**1. தங்க ஆபரணங்கள் ஆண்களுக்கு ஹராமாக்கப்பட்டதைப் போல பெண்களுக்கும் ஹராமாகும்.**

**2. வேண்டுமென்றே தொழுகையை விட்டாலும் அதை கழா செய்வது ஹராமாகும்.**

**3. பெருந்தொடக்குடைய பெண்கள் குர்ஆனை ஓதலாம். தொடலாம். சுமக்கலாம்.**

**4. நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் புனிதமிகு ரௌழா ஷரீபை ஸியாரத்துச் செய்வதற்காக பிரயாணம் செய்வதும், அவர்களிடம் ஷபாஅத்துத் தேடுவதும் மிகப்பெரும் வழிகேட்டுக்குரிய செயலாகும்.**

**5. தஸ்பீஹ் மணியை கையில் சுமந்துகொண்டு உலவுவது வழிகேடாகும்.**

**6. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ரௌழா ஷரீப் மஸ்ஜிதுன் நபவியின் உட்பகுதியில் இருப்பது மாபெரும் குற்றத்திற்குரிய காரியமாகுமாதலால் ரௌழா ஷரீபை பள்ளியின் உட்பகுதியிலிருந்து அகற்றுவது அவசியமாகும்.**

**7. அல்லாஹ் அர்ஷின் மீது இருக்கிறான்.**

**8. விந்தை தன்னிச்சையாக வெளியேற்றுவதால் நோன்பு முறியாது.**
என்பன போன்றவை குறிப்பிடத்தக்கவைகளாகும்.

இப்போது நாம் இந்த அல்பானியுடன் இணைந்து பல ஆண்டுகள் அவருக்கு அடிபணிந்து அவரை ஒரு மாபெரும் மார்க்க அறிஞரென்று எண்ணி அவருடன் மார்க்க விஷயத்தில் இணைந்து செயலாற்றியவர்களில் இரு நபர்களை பற்றி பார்ப்போம். இவ்விரு



வரில் முக்கியமானவர் அல் மக்தபுல் இஸ்லாமிய்யா என்னும் அச்சக உரிமையாளரான ஸுஹைர் ஷாவீஷ் என்பாராகும். இவர் அல்பானியின் சீடருமாவார். இவரை அல்பானி பலமுறை புகழ்ந்து பேசி பெருமைபடுத்தியிருக்கிறார். அவசியம் எனக்கருதுவோர் ஷரஹ் தஹாவியின் முன்னுரையை பார்க்க வேண்டுகிறோம். ஏறக்குறைய நாற்பது ஆண்டு காலமாக ஒன்றாக இணைந்திருந்தவர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரியும் நிலைவந்தபோது அல்பானி தனது பிறவிக்குணத்தை காட்டும் வண்ணம் ஷாவீஷ் உணவுக்காக தமது உருவத்தை மாற்றிக் கொள்பவர் எனத்தூற்றத் துவங்கி விட்டார்.

இன்னும் ஷாவீஷின் அச்சகத்தில் தான் அல்பானியின் நூல்களனைத்தும் அச்சிடப்பட்டு வந்தன. இதில் இவ்விருவருக்குமிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டுக்குரிய பிரச்னைகள் அனைத்தும் ஊடகங்களில் எல்லாம் வெளியானது உலகறிந்த உண்மையாகும். இந்த இடத்தில் நாம் அல்பானியால் ஷாவீஷுக்கு எழுதப்பட்ட கடிதமொன்றை நூலின் இறுதிப்பகுதியில் உங்களின் பார்வைக்காக தருகிறோம். இக்கடிதம் 8-18-1999 புதன்கிழமை அன்று வெளியான 1059ம் இதழான அல்லிவா என்னும் பத்திரிக்கையின் 15ம் பக்கத்தில் வெளியான தகவலாகும்.

அடுத்து ஷாவீஷின் அச்சகத்தில் அச்சிடப்பட்டாலும் அச்சகத்தின் பெயர் குறிப்பிடப்படாமல் வெளியான ஒரு நூல் - கிதாபுன் மஃப்தூஹுன் இலஷ் ஷெய்கி நாஸிரித்தீன் அல்பானி என்பதாகும். இந்நூலை எழுதியவர் அல்பானியின் இரண்டாவது மாணவரான உஸ்தாத் மஹ்மூத் மஹ்தி என்பாராகும். இவர் இஸ்தான்புல் நாட்டைச் சேர்ந்தவர். இவர் அல்பானியை விட இரண்டு வயது மூத்தவராக இருந்தும் அல்பானியுடன் நாற்பதாண்டு காலமாக இணைந்திருந்தவர். இதில் அல்பானியை பற்றி தெரிந்துகொள்ள விரும்புவோர் மேற்கண்ட நூலை அவசியம் படித்துப் பார்க்க வேண்டுகிறோம். மஹ்மூத் அவர்கள் அந்த நூலின் 12ம் பக்கத்தில் இவ்வாறு கூறுகிறார்,...

ومن حماقتك وسوء ادبك.

**''அல்பானியே! இது உமது தீயநடத்தை மற்றும் முட்டாள்தனத்தில் நின்றுமுள்ளதாகும்.''** எனக் கூறுகிறார். அல்பானியுடன் கரம் கோத்து நின்றவர்கள் அனைவரும் இறுதியில் அவரை தூற்றத்தான் செய்தனர்.

இன்னும் இந்த அல்பானி மிகக்கெட்ட வழிகேடரும் வழி கெடுப்பவருமாகும். இவரைத்தான் இன்றுள்ள வஹ்ஹாபிக ளெல்லாம் தங்களின் இமாமாக எண்ணி பின்பற்றுகின்றனர். இவர் தனது சுயவிருப்பப்பிரகாரம் ஹதீதுகளுக்கு தீர்ப்புக்கூறி எண்ணிலடங்காக ஹதீதுகளை ஓரங்கட்டச் செய்தவராகும். இவர் எந்த ஹதீதை ஸஹீஹானதென்று சொன்னூரோ அதைத்தான் இவருடைய சகாக்கள் ஆதாரமாகக் கொள்கின்றனர். மற்ற படித்த ரங்களை உடைய ஹதீதுகளை எல்லாம் ஓரங்கட்டி விட்டனர்.

மேலும் இந்த அல்பானி ஹதீதுகளுக்குத் தந்த தீர்ப்புக்கள் சரியானவை தானு? அல்லது ஒரு ஹதீதுக்கு பல்வேறு வகையான தீர்ப்புக்களை சொன்னூரா என்பதை தெரிந்துகொள்ள விரும்பு வோர் ''தனுகுழாத் அல்பானில் வாழிஹாத்'' என்னும் பல பாகங் களை கொண்ட நூலை பார்வையிட வேண்டுகிறோம்.

இன்னும் அல்பானி ஹதீதுக்குரிய ஆய்வுகளில் தவறுக தீர்ப்ப ளித்தவர் என்பதை அவரை அல்லாமா எனப்போற்றிப் புகழும் நாஸிர் லாஸிம் என்பார் ''அல் கௌலுல் மன்ஹூத் பி தஃபீஸீலில் பஸ்மலத்தி வல்குனூத்'' என்னும் நூலின் 18ம் பக்கத்தில்,...

قلت هذا وهم من العلامة الالباني وهو اخطأ في تخريجه هذا الحديث.

''**நான் கூறுகிறேன். இந்த ஹதீதுக்கு தரப்பட்ட தீர்ப்பு அல்பானியின் கற்பனையாகும். பின்னும் இந்த ஹதீதுடைய விஷயத்தி (தீர்ப்பி) ல் அல்பானி தவறிழைத்து விட்டார்**'' என்று கூறுகிருர்.

வாசகர்களே! இவரால் தவறுக தீர்ப்பளிக்கப்பட்ட ஹதீத் எது தெரியுமா? பஸ்மலா - அதாவது பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர் ரஹீம் பற்றிய ஹதீதாகும். இந்த ஹதீத் சுன்னு அபீதாவூதில் எண்4001லும், இமாம் அஹ்மத் அவர்கள் தமது நூலின் 6ம் பாகம், 302ம் பக்கத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளதாக ''இர்வா வுல் அலீல், 2-60ல் குறிப்பிட்டுள்ளார்.'' அல்பானியை அல்லாமா எனக்கூறுவோர் இதை நமக்குக் காட்டித் தருவார்களா? இவருக் கும் பெயர் ஷைகுதான். அதேநேரம் இவருடைய தோழர்களு டைய பட்டப்பெயரும் ஷைகுதான். தனது கற்பனைக்கேற்ற வாறும் சுயவிருப்பப்படியும் ஹதீதுக்கு தீர்ப்பளிக்கும் ஒருவரை தனது முன்னேடியாகக் கொள்ளும் சமூகத்தை விட ஒரு மோச மான கீழ்த்தரமான சமூகம் வேறு ஏதாவது இருக்க முடியுமா



என்ன? இன்னும் அல்பானி ஹதீதுகளை மோசடித்தனம் செய்பவ ராகும் என்பதோடு ஹதீதுக்கு சுயமானதோர் விளக்கம் தருபவர் கண்டிப்பாக முன்னேர்களின் விளக்கத்திற்கு மாறுன புதியதோர் விளக்கத்தை தான் கூறுவார். இப்படி சுய விளக்கம் தருவோரை குறித்து நமது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இவர்கள் பொய் தஜ்ஜால்கள் என்றும், இத்தகையோரை பின்பற் றுவதை குறித்து உங்களை நான் எச்சரிக்கிறேன் என்றும் கூறியுள்ள வார்த்தை உங்களுக்கு நினைவிருக்குமென்று எண்ணுகிறோம்.

## நஜ்திய உலமாக்களே! சுவூதிய மன்னர்களே!

எங்களின் உயிர் நாடியான உயிருக்கும் மேலான உயிருக்குள் உயிராக உறைந்துள்ள உத்தமத் திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் புனித தேகத்தை தனக்குள் கொண்டுள்ள இடமானது எங்களுக்கு ஹரமை விட என்பதல்ல. அர்ஷை விடவும் மேலான ஒன்றுகும். ஆனுல் அப்புனித இடம் உங்கள் பார்வைக்கு நீங்கள் சிலை வணங்கிகளின் அரவணைப்பில் வாழுவ தால் சிலையாகத் தென்படுகிறது. அதனுல் தான் அதை உடைக்க வேண்டும். கப்ரை அப்புறப்படுத்த வேண்டும் என்றெல்லாம் மாறி மாறி ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள் போலும். ஆம். 450 வருடங்களாக ஓலமிட்டு வரும் நீங்கள் அல்லாஹ்வின் மீதாணையாக ஒருக்காலும் செய்யவே முடியதென்பது மட்டும் திண்ணம்.

இன்னும் நீங்கள் இஸ்லாத்திற்குச் செய்த ஏன் இன்றைக்கும் செய்து கொண்டுள்ள அராஜகங்களில் இதுவும் ஒன்றுகும். அதாவது, உங்களின் கொள்கைக்கு மாற்றமான நூல்களை இல்லாமலாக்குவதும், அதனுடைய அறிவிப்பாளர்களை ஆய்வு செய்வதுபோல பாசாங்குக் காட்டி அவர் மீதுள்ள குற்றச்சாட்டை மட்டும் எடுத்துக் காட்டி ஹதீதைப் பொய்யாக்குவதும் அல்லது வசனங்களை மாற்றியமைப்பதும் தான் நீங்கள் இஸ்லாத்திற்கு செய்யும் துரோகங்களில் மாபெரும் துரோகமாகும். இதற்கு உதாரணமாக,...

''**8. அல் அத்கார் என்னும் நூல் இமாம் நவவிக்குச் சொந்தமான தாகும். இந்நூல் ஹிஜ்ரி 1409ல் ரியாதிலுள்ள தாருல் ஹுதா பதிப்பகத் தில் அச்சானபோது அந்நூலின் 295ம் பக்கத்தில் நாயகம் ஸல்லல்லாஹு**

அலைஹி வஸல்லமவர்களுடைய ரௌழா ஷரீபை தரிசிப்பது தொடர்பான பாடம் எனத் தலைப்பு இடப்பட்டிருந்த தலைப்பானது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பள்ளியை தரிசிப்பது பற்றிய பாடம் என்பதாக பெயர் மாற்றம் செய்யப்பட்டு அதில் சொல்லப்பட்டிருந்த உத்பாவுடைய சம்பவம் உட்பட பல விஷயங்கள் அகற்றப்பட்டு அச்சிடப்பட்டிருந்தது. அந்நூலின் முஹக்கிகான அப்துல் காதிர் அர்நாவூத் என்பார் அந்த அச்சகத்தாரிடம் அதுபற்றி கேட்டபோது அவர்களால் தரப்பட்ட பதிலுக்குரிய எழுத்துப் பிரதி நம்மிடம் இருக்கிறது."

"ஹனபி மத்ஹபின் சட்டக் கோர்வையான இப்னு ஆபிதீனுடைய ஹாஷியாவில் அவ்லியாக்கள் அப்தால்கள் போன்ற நல்லடியார்கள் பற்றிய பகுதி நீக்கப்பட்டுள்ளது."

"இப்னு தைமிய்யாவின் பத்வாவுடைய 10ம் பாகமான தஸவ்வுப் தொடர்பான பாகம் அகற்றப்பட்டுள்ளது." என்பன போன்றவைகளை குறிப்பிடலாம்.

# அல்லாஹ்வின் (புராதன) சின்னமும் வஹ்ஹாபிஸமும்

சுஊதுடைய குடும்பத்தாரும் ஷைகு நஜ்தியுடைய குடும்பத்தாரும் இணைந்து நடத்திய கொடுமைகளில் புராதனச் சின்னங்களை அழிப்பதும் முக்கியமான இடத்தை வகிக்கின்றது.

புராதனச் சின்னங்கள் பற்றி பேசப்பட்ட போது நம்முடைய பார்வைக்கு நமது நாட்டைச் சேர்ந்த அப்துல் ஹமீத் பக்ரி என்பவரால் மொழி பெயர்ப்பு செய்யப்பட்ட பிரதியொன்று கிடைத்தது. இவர் இலங்கை பரகஹதெனிய என்னும் இடத்தைச் சேர்ந்த வஹ்ஹாபிய ஏஜென்டுகளில் ஒருவராகும். இவரைப் பற்றி தனித் தலைப்பில் முன்னால் நாம் கூறியுள்ளோம். அந்த நூல் 50 பக்கங்களை கொண்டது. ஹிஜ்ரி 1380 ஜமாதில் ஆகிர் 24ம் நாள் அந்நத்வா இதழில் மதீனா முனவ்வராவின் புராதனச் சின்னங்கள் என்னும் தலைப்பில் முஸ்தபா அமீனின் கட்டுரைக்கும் ஹிஜ்ரி 1387ஜமாதில் அவ்வல் 24ம் நாள் அதே இதழில் இஸ்லாமிய புராதனச் சின்னங்கள் என்னும் தலைப்பில் ஸாலிஹ் முஹம்மத் ஜமாலுடைய கட்டுரைக்கு இப்னு பாஸால் எழுதப்பட்ட மறுப்புப் பிரதியின் தமிழாக்கம் தான் அது.

முஸ்தபா அமீனும் முஹம்மத் ஜமாலும் அப்போது என்ன எழுதியிருந்தார்கள் என்பது சரியாகத் தெரியாதவரை அவர்கள் சொன்னதாக இப்னு பாஸ் சொன்னதாகச் சொல்லும் அப்துல் ஹமீதின் கருத்தை நம்பமுடியாது. முன்னோர்களின் நூல்களிலிருந்தே அவர்களின் வாசகங்களைத் திருடிய திருட்டுக் கூட்டம் இது.

ஆதலால் ஒன்று மட்டும் நிச்சயம். இன்று நாமும் புண்ணிய

பூமிகளான மக்கா முகர்ரமாவிலும் மதீனா முனவ்வராவிலும் எவைகளெல்லாம் பாதுகாக்கப்பட வேண்டுமென, கௌரவப்படுத்தப்பட வேண்டுமென குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோமோ அதைத்தான் சொல்லியிருப்பார் என்பதில் ஐயமில்லை.

காரணம் புனித மதீனா முனவ்வராவைப் பற்றி அவர் சொல்வதாவது:- புனித மதீனா முனவ்வராவில் நினைவில் நிறுத்தக் கூடிய பல புராதனச் சின்னங்கள் இருக்கின்றன. அரபிகளாக இருந்தும் அவைகளைப் பற்றி நாம் கவலைப்படவில்லை. அதேநேரம் லண்டன் பாரிஸ் போன்ற நகரங்களில் உள்ள புராதனச் சின்னங்களை அந்நாட்டவர்கள் கௌரவிப்பதைக் காணும்போது அரபு முஸ்லிம்களாகிய நாம் ஏன் அவ்வாறு பழமை வாய்ந்த புராதனச் சின்னங்களை கௌரவப்படுத்தக் கூடாது? இஸ்லாம் இதை மறுக்கவில்லையே! என எழுதி நம்மையும் லண்டன் பாரசீகவாசிகளைப் போல புராதனச் சின்னங்களை கௌரவிக்கவும் அதை நினைவூட்டக் கூடிய கட்டிடங்களை அமைக்க வேண்டுமென்றும் அழைக்கிறார் என பாஸ் சொன்னதாக சொல்லும் பக்ரி,...

ஒரு முஸ்லிம் இஸ்லாத்திற்கு விரோதமான அல்லாஹ்வுடையவும் அவனுடைய தூதருடையவும் பகைவர்களைப் போன்று நடந்து கொள்ள வேண்டுமெனக் கூறுவது ஆச்சரியமானது மட்டுமல்ல. அதிசயமானதுமாகும். ஏனெனில் இன்னொரு சமுதாயத்தை பின்பற்றுபவன் அச்சமுதாயத்தையே சார்ந்தவனாவான் என்னும் நபிமொழியைக் கவனித்தல் வேண்டாமா? என்று ஆவேசப்படுகிறார்.

இவருடைய ஆவேசத்தைக் கண்டு கையால் வாயை பொத்திக் கொண்டு சிரிக்கிறோம். ஏனெனில் புராதனச் சின்னங்களை கௌரவிப்பது மாற்று சமுதாயத்தின் வேலையாதலால் நாமும் நமது புராதனச் சின்னங்களை கௌரவப்படுத்தினால் நாமும் அவர்களாகி விடுவோம் என்னும் அச்சம் இவர்களிடம் இருப்பதைக் கண்டு உண்மையாகவே ஆச்சரியப்படுகிறோம்.

ஒரு பொருளை பாதுகாப்பதற்கு கையாளப்படும் முறை மற்றும் விதம் மாற்று சமுதாயத்தைப் போல் இருக்கக் கூடாதென்று சொல்லும் இவர் மாற்று சமுதாயத்தினரின் வணக்கத்தை நாம் நம்மீது சாட்டிக்கொள்வது பற்றி என்ன சொல்வாரோ தெரியவில்லை.

ஆஷுரா நோன்பை கவனியுங்கள். இன்னும் அது சுன்னத்



தாக்கப்பட்ட விதத்தைக் கவனியுங்கள். அந்தத் தினத்தன்று யூதர்கள் நோன்பு நோற்றிருப்பதைக் கண்ணுற்ற நபியவர்கள் அது நமக்குரியது எனக் கட்டளை பிறப்பிக்கவில்லையா? இன்னொரு சமுதாயத்தைச் சார்ந்தவர் ஒன்றைச் செய்தால் அதை செய்வதற்குரிய தடை என்பது நமக்கு இல்லையாயின் நாம் அதை செய்வதில் ஆட்சேபணையில்லை. இதன் அடிப்படையில் தான் நாம் நமது புராதனச் சின்னங்களை பாதுகாப்பது என்பதானது மாற்றுச் சமுதாயத்தைப் பார்த்து செய்யப்படும் ஒன்றாகாது. இன்னும் அதைப் பாதுகாக்க வேண்டுமேயன்றி அவைகளை அழிப்பதானது மிருகத்தனமான செயலாகும்.

இனி நமது புராதனச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமா அல்லது அழிக்கப்பட வேண்டுமா என்பதைக் குறித்து அல்லாஹ்வின் திருமறை வசனங்களைக் கொண்டும் அண்ணலெங்கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அமுத வாக்குகளைக் கொண்டும் சுருக்கமாக பார்ப்போம். திருமறை கூறுவதை பாருங்கள்.

واتخذوا من مقام ابراهيم مصلى.

***"மகாமெ இப்ராஹீமை தொழும் இடமாக ஆக்கிக் கொள்ளுங்கள்"*** - குர்ஆன்.

இந்த வசனம் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் புனித கஃபாவை புனர் நிர்மாணம் செய்யும்போது நின்றுகொண்டு பணிபுரிந்த அவர்களின் பாதம்பட்ட இடத்தை கௌரவப்படுத்தும் வகையில் தொழக்கூடிய இடமாக ஆக்கிக் கொள்ளுமாறு ஆணையிடுகிறது.

நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் பாதம்பதிந்த இடம் இன்றும் ஹரம் ஷரீபில் கஃபாவின் வாயிலுக்கு எதிரே ஒரு அடி தூரத்தில் கண்ணாடிப் பெட்டி ஒன்றில் பாதுகாக்கப்பட்டு வருவதோடு அவ்விடத்தில் பரக்கத்திற்காக தொழவும் செய்கின்றனர். நபியுல்லாஹ் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் பாதம் பட்ட இடம் புராதனச் சின்னமாகும். அதை அல்லாஹ் பாதுகாப்பதோடு அதைப்பற்றி குர்ஆனிலும் பேசுகிறான் எனில் அவை போன்ற புராதனச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமா? அல்லது அழிக்கப்பட வேண்டுமா? இன்னும்,...

وبقية مما ترك آل موسى و آل هارون تحمله الملئكة.

*"அந்தப் பேழையினுள் - நபிமார்களான - மூஸா அலைஹிஸ் ஸலாமவர்களுடையவும், ஹாரூன் அலைஹிஸ்ஸலாமவர்களுடையவும் புராதனச் சின்னங்கள் இருக்கின்றன. அதனை அமரர்கள் சுமந்து வருவார்கள்."* - குர்ஆன்.

இவ்வசனத்திற்கு விளக்கமளிக்கும் வேத வியாக்யானிகள் அந்த நபிமார்களுடைய புராதனச் சின்னம் என்பதானது அவர்களது கைத்தடியும் பாதணிகளுமாகும் என்கின்றனர்.

மேலும் நபி மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் பயன்படுத்திய தடியையும் பாதணியையும் அல்லாஹ் பாதுகாத்து அதனை அமரர்கள் சுமந்து வருவதாக குர்ஆன் கூறுகிறதென்றால் புராதனச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டுமா? அல்லது அழிக்கப்பட வேண்டுமா?

ஆதலால் புராதனச் சின்னங்களை பாதுகாப்பதானது காபிர்களுடைய செயலல்ல. மாறாக அது அல்லாஹ்வுடைய சுன்னத்தாகும். ஆனால் நீங்கள் புராதனச் சின்னங்களை பாதுகாப்பதற்குப் பதிலாக அவ்விஷயத்தில் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்கிறீர்கள்.

அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பயன்படுத்திய பொருட்கள் நபியவர்களின் அருமைத் தோழர்களாலும் தாபியீன்களாலும், தபவுத் தாபியீன்களாலும் பாதுகாக்கப்பட்டதைக் குறித்து எத்தனையோ ஆதாரங்களை நம்மால் எடுத்துக் காட்ட முடியும். நூலின் விரிவஞ்சி ஒரேயொரு ஆதாரத்தை மட்டும் உங்களின் பார்வைக்கு தருகிறோம்.

ஸெய்யிதுனா ஹழ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் வானத்திற்கு உயர்த்தப்பட்ட இடம் யூதர்களால் குப்பை கூளங்கள் போடப்படும் இடமாக இழிவுபடுத்தப்பட்டது. பின்பு அந்த இடம் கிறிஸ்தவர்களால் கைப்பற்றப்பட்ட போது அவர்கள் அந்த இடத்தை வணக்கஸ்தலமாக ஆக்கிக் கொண்டனர். பின்னர்,...

حتى فتح عمر بن الخطاب بيت المقدس فكنس عنها القمامة بردائه وطهرها من الاخباث والاجناس ولم يضع المسجد وراء ها ولكن امامها حيث صلى رسول الله صلى الله عليه وآله وسلم.

*"ஹழ்ரத் ஸெய்யிதுனா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களால் பைத்துல் முகத்தஸ் கைப்பற்றப்பட்ட போது கலீபா அவர்கள் தாம் அணிந்திருந்த போர்வை யால் அந்த இடத்தை சுத்தம் செய்தார்கள். அத்துடன் அதனுடைய அமைப்பை மாற்றியமைத்து அந்த இடத்திற்கு முன்பாக நாயகம் ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தொழுத இடத்தில் பள்ளிவாசல் ஒன்றையும் அமைத்தார்கள்."* நூல்: அல் பிதாயா வந்நிஹாயா, 2-96.



ஆனால் நீங்கள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் இவ்வையகத்திற்கு வருகைதந்து வாழ்ந்த வீட்டை பாதுகாத்து கௌரவப்படுத்துவதற்குப் பதிலாக அவ்வீட்டை உடைத்துத் தரைமட்டமாக்கியது போதாதென்று,...

جعلت سوقا للبهائم.

*"மிருகங்கள் விற்கப்படும் சந்தையாக அவ்வீட்டை மாற்றி கேவலப்படுத்துகிறீர்கள்."* இன்னும்,...

அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு முதன் முதல் வஹீ இறக்கப்பட்ட இடமும், நபியவர்களுக்கு மிகவும் உகப்பான முஃமினீன்களின் தாயாரான அன்னை கதீஜா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் வீட்டையும் தரைமட்டமாக்கியதோடு,...

راضين بعد هدمه دورات مياه وبيوت خلاء وميضآت.

*"அந்த இடத்தை மலஜலம் கழிக்கும் இடங்களாகவும் ஒழு செய்யும் இடமாகவும் தண்ணீர் தொட்டிகளாகவும் ஆக்கப்பட்டதை பொருந்திக் கொண்டீர்கள்."* இப்படியெல்லாம் செய்வதற்கு உங்களுடைய உள்ளங்கள் இடமளித்ததென்றால் நீங்களெல்லாம் நிச்சயமாக முத்திரையிடப்பட்ட உள்ளங்களை கொண்டவர்கள் தானென்றே நாம் கூறுவோம். இன்னும்,...

இரு கிப்லாக்கள் என பிரபலமாக அழைக்கப்பட்ட மஸ்ஜிதில் காணப்பட்ட மஸ்ஜிதுல் அக்ஸா கிப்லா என்பதை தெளிவுபடுத்தும் அடையாளத்தை வழிகேடு எனக்கூறி அழித்தது ஈமான் என்றால்,...

உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹு அவர்களால் யூதர்களிடமிருந்து வாங்கி அல்லாஹ்வின் பாதையில் அர்ப்பணம் செய்த கிணற்றை பாதுகாப்பது பாவமான காரியம் என்பதுதான் இஸ்லாம் என்றால்,...

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் முபாரக்கான திருக்கரத்தால் நடப்பட்ட ஈச்சை மரத்தைக் கொண்ட ஹழ்ரத் ஸல்மான் பார்ஸி ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் தோப்பையே இல்லாமலாக்குவது தான் மார்க்கம் என்றால்,...

அண்மைக்காலம் வரை மதீனா முனவ்வராவில் மஸ்ஜிதுல் குபாவில் காணப்பட்ட அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் ஒட்டகத்துடைய அடையாளத்தை அழித்தது தான் அறிவுடையோரின் செயலென்றால்,...

இது உண்மையான மார்க்கமேயல்ல என்று அழுத்தமாச் சொல்லுவோம். உங்களுடைய சுயவிருப்பம் ஒருபோதும் மார்க்கமாகாது. உங்களுடைய மனோ இச்சையிலிருந்து பிறந்து வரும் விளக்கமெல்லாம் ஒருபோதும் குர்ஆன் ஹதீதுக்குரிய விளக்கமாகாது. மாறாக முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபும் இப்னு சுஊதும் பிரிட்டானிய ஏகாதிபத்தியமும் இணைந்து தோற்றுவித்த ஓர் புதிய மார்க்கமாகும். அதுதான் வஹ்ஹாபிஸம். இந்நிலையில் உங்களை நாங்கள் என்னவென்று அழைக்க வேண்டும் என்பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும். அதுசரி. எதற்குமே லாயக்கில்லாதவனை என்னவென்று அழைத்தால் தானென்ன. அதனால் குடியா முழுகி விடப்போகிறது!

மேற்கண்டவைகளில் சில கருத்துகள் அஸ்ஸெய்யித் ஹாஷிம் அர்ரிபாயி அவர்களால் சொல்லப்பட்டவைகளாகும். இதே போன்று இன்னும் பல விஷயங்களை அவர்கள் கூறியுள்ளார்கள். அவர்களுடைய உபதேசத்தோடு,நமது உள்ளத்தின் ஆக்ரோஷத்தையும் வெளிப்படுத்த வேண்டுமென்பதற்காகவே இத்தோடு போதுமாக்கிக் கொண்டோம். தேவையான நேரத்தில் இந்த நூல் நமது கரத்திற்கு வந்து சேர்ந்ததற்காக அல்லாஹ்வைப் புகழுகிறோம்.

இறுதியாக அல்லாமா ஸாவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தமது தப்ஸீரான ஸாவியில் 35ம் அத்தியாயமான சூரா ஃபாத்திரின் மூன்றும் வசனமான ***"திடனாக உங்களுக்கு ஷைத்தான் பகைவனாக இருக்கிறான். ஆதலால் நீங்களும் அவனை பகைவனாகவே எடுத்துக் கொள்ளுங்கள்"*** என்னும் பொருள் கொண்ட வசனத்திற்கு அவர்கள் தரும் விளக்கத்தை மட்டும் உங்களின் பார்வைக்கு எடுத்துக்காட்டிவிட்டுஸலவாத்துச்சொல்லலாமென்று நினைக்கிறோம். அவர்கள் கூறுகின்றனர்,...



وقيل هذه الاية نزلت فى الخوارج الذين يحرفون تأويل الكتاب والسنة ويستحلون بذلك دماء المسلمين واموالهم كما هو مشاهد الآن في نظائرهم وهم فرقة بارض الحجاز يقال لهم الوهابية يحسبون انهم على شيئ الا إنهم هم الكاذبون استحوذ عليهم الشيطان فانساهم ذكرالله اولئك حزب الشيطان الا إن حزب الشيطان هم الخاسرون. نسأل الله الكريم ان يقطع دابرهم.

***"இந்த வசனம் குர்ஆனுடைய வசனங்களுக்கும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் சுன்னாவுக்கும் தவறான அர்த்தம் செய்து முஸ்லிம்களை கொலை செய்வதும், அவர்களின் பொருட்களை சூரையாடுவதும் ஆகுமான ஒன்றெனக் கூறிய கவாரிஜிய்யீன்கள் தொடர்பாக இறக்கப்பட்டதாகும். அவர்களைச் சேர்ந்தோர் தான் ஹிஜாஸ் மாநிலமான - மக்கா முகர்ரமா, மதீனா முனவ்வரா போன்ற இடங்களில் காணப்படும் வஹ்ஹாபிகள் எனப்படும் கூட்டமாகும். அவர்கள் சத்தியத்தில் இருப்பதாக கற்பனை செய்து கொண்டு வாதிக்கின்றனர். ஆனால் அவர்கள் பொய்யர்களாகும். அவர்களை ஷைத்தான் மிகைத்து அல்லாஹ்வின் நினைப்பை அவர்களை விட்டும் மறக்கடித்து விட்டான். அவர்கள் நஷ்டமடையும் ஷைத்தானின் கூட்டாளிகளாகும். அவர்களை அடியோடு அழித்து விடுமாறு அல்லாஹ்வை பிரார்த்திக்கிறோம்"*** என்று கூறுகின்றனர்.

எனவே வஹ்ஹாபிகள் எனப்படுவோர் கவாரிஜிய்யீன்கள் தான். அவர்கள் தற்போது நமக்கு மத்தியில் இருக்கும் எந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரியே என்பதை இங்கே மீண்டுமொரு முறை உங்களுக்கு நினைவூட்டியவர்களாக இந்த உண்மையை இவ்வெளியோர்கள் மூலமாக சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்வதற்குரிய வாய்ப்பைத் தந்து அதை ஏற்றுக் கொண்ட எல்லாம் வல்ல வல்லோனாகிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் உரித்தாகுமாக. இன்னும் அவனது ஹபீபாகிய நமக்கெல்லாம் ஷஃபீஆகிய ஷஃபீவுல் முத்னிபீன் ஸர்தாரே தோ ஆலம் ஸர்வரே காயினாத் ஸாஹிபே லவ்லாக் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கே சதா ஸலாத்தும் ஸலாமும் உண்டாகட்டுமாக.

யாஅல்லாஹ்! உனது ஹபீபாகிய அருமை நாயகம் முஹம்மத்

முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் பொருட்டால்
இச்சிறிய நூலை ஏற்று சமுதாயம் பிரயோஜனம் பெறத்தக்க ஒன்றாக
ஆக்கி வைப்பாயாக. இன்னும் மேலும் மேலும் உனது
ஹபீபுடைய சிறப்புக்களை எல்லாம் எமது சக்திக்கேற்ப சொல்வ
தற்கும் எழுதுவதற்கும் உரிய வாய்ப்பை வழங்கி எம்மை உனது
நல்லடியார்கள் சென்ற பாதையில் சதாவும் செலுத்துவாயாக.
எம்மை இரு உலகிலும் எமது நாதாக்களால் பொருந்திக்
கொள்ளப்பட்ட நன்மக்களாக ஆக்கிவைப்பாயாக.

யா ரஸூலெல்லாஹ்! எங்களை உங்களின் அருட்பார்வை
கொண்டு பார்ப்பீர்களாக. ஈருலகிலும் உங்களை மட்டுமே
உயிரினும் மேலாகக் கருதுவோரில் எங்களையும் ஆக்கிவைப்பீர்
களாக. இன்னும் உங்களின் மார்க்கத்திற்காக எங்களின் உடலில்
உயிர் ஊசலாடும் வரை ஊழியம் செய்வதற்கு அருள் புரிவீர்
களாக. எங்களின் பெற்றோர்கள், உற்றார் உறவினர்களின் மண்
ணறைகளை உங்களின் திருப்பொருத்தத்தைப் பெற்ற நன்மக்கள்
வாழும் பூங்காவாக ஆக்கிவைப்பீர்களாக. இன்னும் அவர்களை
வரும் உங்களை தமதுயிரிலும் மேலாக நேசிப்பதற்கு நல்லுதவி
செய்வீர்களாக. மேலும் சகல சௌபாக்கியத்துடன் இரு
உலகிலும் எங்களை வாழவைப்பீர்களாக. ஆமீன். பிஜாஹி தாஹா
ஸல்லல்லாஹு அலைஹி வ ஆலிஹி வஸல்லிம்.

صلى الله على محمد صلى الله عليه وآله وسلم

صلى الله على محمد صلى الله عليه وآله وسلم

صلى الله على محمد يارب صل عليه وآله وسلم



# வஹ்ஹாபிஸத்திற்கு எதிராக தொகுக்கப்பட்ட நூல்கள்

1. அல் உஸூலுல் அர்பஆ ஃபீ ரத்தில் வஹ்ஹாபிய்யா

2. இழ்ஹாருல் உகூக் மிம்மன் மனஅத் தவஸ்ஸுல பிந் நபிய்யி வல் வலிய்யிஸ் ஸதூக்.

3. அல் அக்வாலுல் மர்ழிய்யா ஃபிர்ரத்தி அலல் வஹ்ஹாபிய்யா.

4. அல் இன்திஸாரு லில் அவ்லியாயில் அப்ரார்.

5. அல் அவ்ராகுல் பக்தாதிய்யது ஃபில் ஹவாதிஸின் நஜ்திய்யத்தி.

6. அல் பராஹீனுஸ் ஸாதிஅது.

7. அல் பஸாயிர் லி முன்கரித் தவஸ்ஸுல்.

8. தாரீக் ஆலி ஸஊத்.

9. தஜ்ரீது ஸைஃபில் ஜிஹாதி லி முத்தயில் இஜ்திஹாதி.

10. தஹ்ரீழுல் அங்னியாயி அலல் இஸ்திங்காததி பில் அன்பியாயி வல் அவ்லியாயி.

11. தஹக்குமுல் முவஹ்ஹிதீன பிமன் இத்தஆ தஜ்தீதத்தீன.

12. அத்தவஸ்ஸுலு பின்நபிய்யி வபிஸ் ஸாலிஹீன்.

13. ஜலாலுல் ஹக் ஃபீ கஷ்ஃபி அஹ்வாலி ஷிராரில் கல்கி.

14. அல் ஹகாயிகுல் இஸ்லாமிய்யா ஃபிர்ரத்தி அலல் மஸாயிமில் வஹ்ஹாபிய்யா பி அதில்லதில் கிதாபி வஸ்ஸுன்னத்தின் நபவிய்யா.

15. குலாஸதுல் கலாமி ஃபீ உமராயில் பலதில் ஹராம்.

16. அத்துரருஸ் ஸனிய்யா ஃபிர்ரத்தி அலல் வஹ்ஹாபிய்யா.

17. ரத்துன் அலா மஹம்மதிப்னு அப்தில் வஹ்ஹாப்.

18. அர்ரத்து அலல் வஹ்ஹாபிய்யா.

19. ரத்துன் அலல் வஹ்ஹாபிய்யா.

20. ரஸாயிலுன் ஃபிர்ரத்தி அலல் வஹ்ஹாபிய்யா.

21. ஸஆதத்துத் தாரைன் ஃபிர்ரத்தி அலல் ஃபரீகத்தைனில் வஹ்ஹாபிய்யா வ முகல்லிததிழ் ழாஹிரா.

22. அஸ்ஸைஃபுல் பாத்திர் லி உனுகில் முன்கரி அலல் அகாபிர்.

23. ஸைஃபுல் ஜப்பாருல் மஸ்லூல் அலா அஃதாயில் அப்ரார்.

24. ஸுலுஹுல் இக்வான் ஃபிர்ரத்தி அலா மன்கால பிஷ்ஷிர்கி வல் குஃப்ரான்.

25. அஸ்ஸவாயிகுல் இலாஹிய்யா ஃபிர்ரத்தி அலல் வஹ்ஹாபிய்யா.

26. ஃபித்னத்துல் வஹ்ஹாபிய்யா.

27. அல் ஃபஜ்ருஸ் ஸாதிக்.

28. ஃபஸ்லுல் கிதாப் ஃபிர்ரத்தி அலா முஹம்மதிப்னில் வஹ்ஹாப்.

29. கஷ்ஃபுல் இர்தியாப் ஃபீ இத்திபாயி முஹம்மதிப்னி அப்தில் வஹ்ஹாப்.

30. ஹாதிஹீ ஹியல் வஹ்ஹாபிய்யா.

31. தன்பீஹுல் வஹ்ஹாபிய்யீன்.




**MOULAVI FAZIL**

**A. L. M. GHOUSE [BAKAVI]**

Panchikawatta Road,
COLOMBO-10


DATE 10th August 1965.

[illegible] மவுலானா மவுலவி அல்ஹாஜ் [illegible]
[illegible]
[illegible] அவர்களின் [illegible]
பாரக்கான திருச்சமுகத்திற்கு அ
ஸ்ஸலாமு அலைக்கும். இதன் கீழ்கை
ஒப்பமிடும் மவுலவி பாஸில் ஏ. எல்.
எம். கௌஸ் (பாகவி) ஆகி
ய நான் 8. 8. 65 ல் மாத்தளையி
ல் நடந்த தப்லீக் எதிர்ப்பு மகாநா
ட்டில் உங்கள் சார்பில் இல்யாஸ்
தப்லீகை எதிர்ப்பவர்களில் ஒரு
வராக இருந்தேன். தாங்களின்
கேள்விகளுக்கு அவர்கள் பதில்
தராது இருந்ததையும் அறிந்தே
ன். அவர்களின் குழப்பங்கள் அ
வர்களின் கொள்கையும் [illegible]
மாகச் செய்து குழப்பத்துடன் அ
வர்கள் எங்களுக்கு சாபம் செய்து
வெளியேறினார்கள் அவர்களின்

780

**MOULAVI FAZIL,**

**A. L. M. GHOUSE [BAKAVI]**

[illegible] Panchikawatta Road
COLOMBO-10

(2)

DATE ________ 19

பேச்சைக் கொண்டே அவர்கள் இவ்
[illegible] என்ப
தை ஒப்புக் கொண்டார்கள் இந்த
துப்லீக் ஜமா அத்தில் சேருவதை
[illegible] இருப்பதும்
நம் வட்டாரத்து [illegible] ஜமா அத்து
மக்கள் இதில் சேராமலிருப்பது என்ப
தையும் நான் நன்றாய் உணர்கி
றேன். எனது கட்டியான அ
பிப்பிராயமும் இதுவே. இதுமட்
டுமன்றி இந்த துப்லீக் ஜமா அத்
தை எதிர்க்க எப்போதும் தயாரா
க இருக்கிறேன்.

[illegible]

A.L.M. Ghouse Bakavi

10.8.6[illegible]



786

**MOULAVI FAZIL,**

**A. L. M. GHOUSE [BAKAVI]**

[illegible] Panchikawatta Road
COLOMBO-10

DATE 20th August 1965

கனம் M. N. M. Liyaudeen Alim J.P.
அவர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும்
நான் [illegible] உங்
களுக்கு எழுதும் விஷயமாவது:-
[illegible]
[illegible] என்ற ஒருவரும் இன்னும் சி
லரும் சேர்ந்து [illegible] வந்து
என்னிடத்தில் [illegible]
கள் அதற்கு நான் அவர்களுக்கு
2ம் திகதி கல்முனை [illegible]
வந்தால் என் றிப்போர்ட்டைத்
தருவேன் [illegible]
ன் என்று சொல்லவும் போய் வி
ட்டார்கள். 2ம் திகதி [illegible]
[illegible]
இன்று [illegible] என்
னுடைய ஒரு நண்பருடன்
வந்தார்கள். [illegible]
[illegible]

MOULAVI FAZIL,
A. L. M. GHOUSE [BAKAVI]
2 BADRIYA LANE
Panchikawatta Road,
COLOMBO-10

(2)

DATE .......... 19

[illegible]



786

MOULAVI FAZIL,
A. L. M. GHOUSE [BAKAVI]
2 BADRIYA LANE
Panchikawatta Road
COLOMBO-10

(3)

DATE .......... 19

[illegible] 10.8.65 [illegible]

A.L.M. Ghouse Bakavi

20 . 8 . 65

786

**MOULAVI FAZIL**

**A. L. M. GHOUSE [BAKAVI]**

101/7, Panchikawatta Road
COLOMBO-10

DATE 23 8 1965

[illegible]

[illegible]

A.L.M. Ghouse Bakavi
22.8.65






صورة المقال المنشور في جريدة اللواء العدد (١٠٥٩)

الذي فيه رسالة الألباني إلى الشاويش